# தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்







பொ. பூலோகசிங்கம்

[illegible] ஆசிரியர்
ஆ. ராஜகோபாலனுக்கு

[illegible]
22/12/70

# தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்

பொ. பூலோகசிங்கம், B. A., D. Phil. (Oxon.)
தமிழ் விரிவுரையாளர்
இலங்கைப் பல்கலைக்கழகம்
கொழும்பு

கலைவாணி புத்தக நிலையம்
யாழ்ப்பாணம் — கண்டி

கலைவாணி வெளியீடு
முதற் பதிப்பு, டிசம்பர், 1970
பதிப்புரிமை ஆசிரியருக்கு
விலை ரூபா: 4-00

Significant Contributions
of Ceylonese in
Tamil Literature
By

**P. Poologasingham**, B. A., D. Phil. (Oxon.)
Lecturer in Tamil
University of Ceylon
Colombo

அச்சிட்டோர்:
கலைவாணி அச்சகம்
10, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

[வாழைச்சேனை ஈஸ்ரேர்ண் பேப்பர் மில்ஸ் கோப்ப ரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் அச்சிடப் பட்டது.]

# சமர்ப்பணம்

எந்தை



செட்டிகுளம் க. பொன்னையா உடையார்

(29-9-1901 — 23-12-1949)

அவர்களுக்கு

# முன்னுரை

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பிரவேசப் பரீட்சைக்குத் தமிழைப் பாடமாகக் கொண்டு பயின்ற காலத்திலே தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியிருந்தது. அக்காலத்திலே தமிழ் இலக்கிய வரலாற்றினை மாணுக்கருக்கு அறிமுகஞ் செய்து வைத்த இரு நூல்களில் ஒன்ருகிய 'இலக்கியத் தென்றல்' (1953) என்னும் நூலிலே 'ஈழநாட்டுப் பெரியார் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு' என்னும் பெயர் தாங்கிய கட்டுரையொன்று இடம்பெறுகின்றது. அக்கட்டுரையை மாணுக்கர் எழுத்தெண்ணிப் படிப்பது வழக்கம் ஆயினும் அக்கட்டுரையின் பொருளை விரிவாகப் பயிலும் வாய்ப்பு எங்களுக்குப் பல்கலைக் கழகத்திலே கிடைக்கவில்லை. ஏனெனில், ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்குப் போதிய இடம் பல்கலைக் கழகப் பாடத்திட்டத்திலே அளிக்கப்படவில்லை. பிரவேசப் பரீட்சைக்குந் தோற்றுபவர்களுக்கு 'இலக்கிய வழி', 'சங்கிலி' முதலிய ஈழத்தவரின் ஒரிரு நூல்களையும் பல்கலைக்கழகத்திலே வாசிப்பவர்களுக்குத் 'திராவிடப் பிரகாசிகை' போன்ற ஈழத்தவரின் ஓரிரு நூல்களையும் பாடத்திட்டத்திற் சேர்ப்பதோடு தமிழ்த் துறையினர் அமைதிகண்டு வந்திருக்கின்றனர்.

பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறையினரின் மனப்பாங்கினை மட்டும் ஈண்டு குறிப்பிடுவது நிலைமையை முற்ருக எடுத்துரைப்பதாகாது. பல்கலைக்கழகத்திற்கு வெளியே தமிழ்ப்பணி புரிந்த பெரியோரும் ஈழத்து இலக்கியங்களைப் பெருமளவிற் பேணினர் என்று கூறுவதற்கில்லை. புராணபடனங்களைத் தவிர்த்து நோக்கின், ஆங்காங்கே ஓரிருவர் மட்டுமே தமிழ்ப்பணி புரிந்த

ஈழத்துப் பெரியோர் சிலருடைய பெயரை, மறைந்து போக விடாமல், அடிக்கடி ஞாபகமூட்ட முயன்றனர். இந்தியத் தமிழறிஞர் ஒருவரின் பெயரோடு வெளிவந்த சில நூல்களிலே ஈழத்தறிஞர் சிலரைப் பற்றிக் கூறப் பட்ட செய்திகளிற் சில, இருபதாம் நூற்றுண்டின் நடுக்கூறில் யாழ்ப்பாணத்திலே பல மேடைகளிலும் விஷயமாக அமைந்து, சிலரைச் சிந்திக்க வைத்திருக் கின்றன.

ஈழத்துத் தமிழர் தம் நாட்டு இலக்கியங்களுக்கும் அவற்றைப் படைத்தளித்தவர்களுக்கும் முக்கியத்துவம் தாராமல், தமிழ்நாட்டு இலக்கிய பாரம்பரியத்தின் ஒரு கூருகவே ஈழத்து இலக்கியத்தை எண்ணி வந்த னர். பெருவெள்ளத்திற் சிறு துளி என்ற மனப்பான்மை பரம்பரை பரம்பரையாக வலுப்பெற்று வந்திருக்கின் றது

இந்திய உபகண்டத்திலே வடவேங்கடத்தையும் தென்குமரியையும் எல்லையாகக் கொண்டு தமிழ் பேசும் மக்கள் வாழும் நிலப்பிரிவும் ஈழத்திலே தமிழ் பேசும் மக்கள் பெருந்தொகையினராக வாழும் நிலப் பிரிவும் ஒன்றற்கொன்று மிக அண்மையில் இருப்ப தால் இரு பகுதிகளிலும் வாழும் மக்கள் நெருங்கிய தொடர்பு பூண்டனர். தமிழகத்திலே தமதாணையை நிறுவிய அரசர்களுக்கும் ஈழத்தின் வடபகுதி கடல் கடந்த பேரரசராகும் நிலையினை ஏற்படுத்த உதவு வதாக அமைந்தது. பதின்மூன்ரும் நூற்றுண்டிலே தென்பாண்டிநாட்டிலுள்ள செவ்விருக்கை என்னும் பகுதியிலிருந்து ஈழத்திற்கு வந்து, சிங்கைநகரிலே தமதாட்சியை நிறுவி, வரலாற்றறிஞரால் ஆரியச் சக்கரவர்த்திகள் என்று அழைக்கப்பட்ட அரசர்கள் தமிழகத்திற்கும் ஈழத்திலே தமிழ் பேசும் மக்கள் பெருந்தொகையினராக வாழ்ந்த பகுதிகளுக்கு மிடை யேயுள்ள தொடர்புகளை மேலும் நெருக்கம் உடைய

தாக்கினர். ஐரோப்பியர் ஈழத்தினை அடிமை கொண்டு ஆண்ட காலத்திலே, இத்தொடர்புகள் மேலும் வலுப் பெற வேண்டிய சூழல் பெருகியது. சிதம்பரமும் திரு மறைக்காடும் ஈழத்துச் சைவர்கள் தரிசிக்க வேண்டிய 'மக்கா' வாக மாறின. பத்தொன்பதாம் நூற்றுண்டிலே நாவலரவர்கள் சிதம்பரத்தைக் கேந்திர தானமாகக் கொண்டு சைவ உலகத்தை நெறிப்படுத்தக் கனவு கண்டார். தமிழகத்தோடு கலை, இலக்கியம், கலாசாரம், பண்பாடு முதலியனவற்றின் அடிப்படையிலே நெருங் கிய தொடர்பு பூண்ட ஈழத்துத் தமிழர், ஏனைய ஈழத்த வரிலிருந்து விலகி நின்றனர். ஈழத்தின் விடுதலை இயக்கம் கூட இந்நிலையை மாற்றிவிடவில்லை.

இத்தகைய சூழலில் ஈழத்திலே தமிழ் இலக்கியம் தனிப்பட்ட பண்புகளைக் கொண்டு வளரமுடியவில்லை. ஈழத்திலே எழுந்த தலபுராணங்களிலும் தலசம்பந்த மான பிரபந்தங்களிலும் தேசியப் பண்பினைத் தேடி அலைபவர்களுமுளர். அவர்களுடைய முயற்சிகளுக்குக் கிடைக்கும் பலன் பூஜ்ஜியமாகவே காணப்படுகின் றது.

சுதந்திர இலங்கையில் 1956-ம் ஆண்டு நிகழ்ந்த முக்கியமான சம்பவங்கள் சலனமற்றிருந்த தமிழரு டைய சமுதாயத்திற்குத் தமிழகத்தோடு கொண்டிருந்த மானஸீகமான உறவினதும் உரிமையினதும் பொரு ளற்ற தன்மையை ஓரளவுக்கு எடுத்துக் காட்டின. ஈழத்திலே தமிழர் சிறுபான்மையினர் என்ற நிலைமை தெளிவாக ஏற்பட்ட இக்காலகட்டத்திலே, ஈழத்துத் தமிழர் முதன் முதலாகத் தாம் இலங்கையர் என்று எண்ணத் தொடங்கினர். இவ்வெண்ணத்தினலே தமிழ கத்தோடு பூண்டிருந்த ஆத்மார்த்தத் தொடர்பு பல வீன மடையத் தொடங்கியது; தேசியப் பண்பு பொருந் திய இலக்கியம் படைக்கவேண்டும் என்ற ஆர்வமும் ஈழத்துப் பண்டைய இலக்கியங்களைப் பேண வேண்டும் என்ற உணர்வும் பிறந்தன.

இக்கால கட்டத்திலே ஈழத்திற் சிங்கள மக்களிடம் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி சிங்கள இலக்கியத்தின் பாரம்பரியத்தைப் 'புனருத்தாரணம்' செய்ய மிகவும் உதவிற்று என்பதைப் பாரபட்சமற்ற முறையிலே நோக்குபவர்கள் மறுப்பதரிது. சிங்கள இலக்கியகர்த் தாக்கள் தமது இலக்கியத்தைப் புதுவழியிலே இட்டுச் செல்ல முற்பட்ட காலத்திலே பல்கலைக்கழகத்தின் சிங்களத்துறையிலே பணிபுரிந்த விரிவுரையாளர் சில ரும் முன்னின்று வழியமைத்துக் கொடுத்தனர். சிங்கள இலக்கியத்தில் நடந்த பரிசோதனைகள் தமிழ் இலக்கிய கர்த்தாக்களையும் கவரச்செய்தன என்று கூறுவதிற் பிழையிருப்பதாகத் தெரியவில்லை. பல்கலைக்கழகத்துத் தமிழ்த் துறையினைச் சேர்ந்த மூவர் பல்கலைக்கழகத் திற்கு வெளியே பணிபுரிந்த இலக்கியகர்த்தாக்கள் சிலருடன் சேர்ந்து ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் நெறியினை வகுப்பதிலே முன்னின்று உழைத்தனர்.

சிங்கள நாடகத்துறையிலே பழைய நாடக உத்தி களைப் பேணும் முகமாக எடுக்கப்பட்ட பரிசோதனை முயற்சிகள் தமிழிலும் அவ்வகையான முயற்சிகளை மேற்கொள்ளத் தூண்டுகோலாக அமைந்தன. சுய மான — சொந்தமான சிறுகதைகளையும் நாவல்களையும் தேசியப் பண்புடன் எழுதத் தமிழ் எழுத்தாளர் முன் வந்தனர். திறனாய்வுத்துறையிலே சிலர் எடுத்துக் கொண்ட ஊக்கமும் இவற்றைச் செப்பனிட உதவிற்று. பண்டைய ஈழத்து இலக்கியத்தைப் பேணும் நோக்கு டனே அவற்றை அறிமுகஞ் செய்யும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. 'ஈழமண்டலப் புலவர் சரித் திரம்', 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்', 'இலக்கிய வழி' போன்ற முன்னைய நூல்களிலே இடம்பெறாத செய் திகளைத் தொகுக்க அறிஞர் முன்வந்தனர். 'இலங்கை யிலே இன்பத்தமிழ்', 'ஈழமும் தமிழும்' என்பன இவ் வழியிலே முன்றோன்றியவை. ஆயினும் உதிரியாக

ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்ட புது முயற்சிகளை நெறிப்படுத்தி, அவற்றைக் கல்விக்குரிய திட்டமாக்கிச் செயற்படுத்துவதில் உயர் தரக் கல்வியினைத் தீர்மானித்த தமிழறிஞர் ஈடுபடவில்லை.

இந்நிலையிலே கொழும்பில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கிளையாக இயங்கி வந்த பிரிவு 1968-ம் ஆண்டிலே தனிப் பல்கலைக்கழகமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. அவ்வாண்டிலே கொழும்புக்கு வந்த தமிழ் மாணுக்கர் தொடர்ந்து கொழும்பிலேயே பயில்வர் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனுல் மேலிடத்தினர் புதிய பாடத்திட்டம் ஒன்றினை அமைக்குமாறு சகல துறைகளையும் பணித்தனர். தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களின் தலைமையிலே தமிழ்த்துறையின் புதிய பாடத்திட்டத்தை வகுக்க முனைந்தோம். தமிழை முக்கிய பாடமாகக் கொண்டு பயில்பவர்களுக்கு ஈழத்துத் தமிழ் இலக்கியம் எனவொரு பாடத்தை முதன் முதலாக நாங்கள் அளிக்க முன்வந்தோம். அதன் பாடத்திட்டத்தை வகுக்கும் பணியிலே ஈடுபட்டபோது ஈழத்தின் பழைய தமிழ் இலக்கியத்திற்குப் பரிச்சமாயினேன். இக்காலத்தில் உருப்பெற்ற நூல்களிற் சில ஈழத்துத் தமிழ் இலக்கியம் தொடர்பாக நான் கொண்டிருந்த சொற்ப அறிவை விருத்தி செய்யவும் அவற்றில் ஈடுபாடு கொள்ளவும் உதவின. இந்நூல்களிலே இரண்டினைப் பற்றி ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினர் வெளியிட்ட மாநாட்டு மலரின் ஆசிரியருடைய வேண்டுகோளை ஏற்று நண்பர் க. கைலாசபதியும் நானும் 'நாவலர் களஞ்சியம்' தொகுத்துக் கொடுத்தோம். பின்பு சுவாமி விபுலாநந்தர் சிலை நாட்டு விழாவினை ஒட்டி வெளியிடப்பெற்ற மலருக்கும் இருவரும் சில குறிப்புக்களைத் தொகுத்தளித்தோம்.

முன்னர் கூறியனவற்றிலே நான் ஈடுபட்ட காலத்தில் எழுத எண்ணியவற்றிலே சில இன்று நூலுருவம் பெறுகின்றன. இத்தொகுப்பிலே இடம்பெறும் கட்டுரைகளிலே முதல் மூன்று கட்டுரைகளும் முன்பு பிரசுரமாகியுள்ளன; ஏனையவை இத்தொகுப்பிற்கென்றே எழுதப்பட்டவை.

'சைமன் காசிச்செட்டியவர்கள் தந்த தமிழ்ப் புலவர் சரிதம்' என்னும் கட்டுரையின் சுருக்கம் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் வெளிவந்த 'சமூகதீபம்' என்னும் சஞ்சிகையின் முதலிதழிற் பிரசுரமாகியது. 'நாவலர் களஞ்சியம்' பற்றிய வேலைகளிலீடுபட்டிருந்த காலை நண்பர் வை. அ. கைலாசநாதனின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் எழுதியது. சைமன் காசிச்செட்டி பற்றி எழுதியவர்கள் ஏக வசனத்திலே 'தமிழ் புளூராக்' என்னும் நூலின் சிறப்பைச் சுட்டிச் சென்றதைக் கண்ட போது, 'தமிழ் புளூராக்' தனக்குரிய சிறப்பிடத்தைப் பெருமை புலனாகியது. இதனால் வரலாற்றடிப்படையிலே 'தமிழ் புளூராக்' அடையும் முக்கியத்துவத்தைக் குறித்துச் சுருக்கமாகச் 'சமூகதீப' த்திலே எழுதினேன். அக்கட்டுரை பற்றி நண்பர்கள் கூறிய கருத்துக்கள் அவ்விஷயமாக மேலும் ஆராய ஊக்கமளித்தன. நண்பர் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை வசமிருந்த பழைய கையெழுத்துப் பிரதியொன்றின் மூலம் களத்தூர் வேதகிரி முதலியாரின் பிரபந்தங்களுக்குரிய பாட்டுடைத் தலைவனை இனங்காண முடிந்தது. சுருக்கத்திலே புகுந்த தவறுகள் சில இங்கு திருத்தம் பெற்றுள்ளன.

'தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்த பணி' என்னும் கட்டுரை முன்னர் கூறிய கட்டுரைக்கு முன்பு எழுதப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்ட இக் கட்டுரை, அவர்கள் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம்

வெளியிட்ட 'நாவலர் மாநாடு விழா மலர்' என்னும் பிரசுரத்தில் இடம்பெறுகின்றது. மலர்க் கட்டுரை தொகுப்பிற் சிற்சில இடங்களிலே விரிவு பெற்றிருக்கின்றது.

இத்தொகுப்பிலடங்கும் கட்டுரைகளிலே கடைசியாக எழுதப்பட்டது 'கனகி புராணம்' என்னும் கட்டுரையாகும். கொழும்பிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சங்கத்து வெளியீடாகிய 'இளந் தென்றல்' என்னும் சஞ்சிகைக்காகச் சென்ற ஜூன் மாதம் எழுதப்பட்டது. திரு. தொ. மு. சிதம்பரரகுநாதனின் 'சமுதாய இலக்கியம்' என்னும் தொகுப்பிலிடம்பெறும் 'பஞ்சலட்சணம்' என்னும் கட்டுரை கனகிபுராணம் பற்றி எழுதுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. கட்டுரையை எழுதி முடித்த பின்பு, இத்தொகுப்பின் அடிப்படையான பண்பிற்குப் பொருந்துவதாகக் காணப்பட்டதால் ஈண்டு சேர்க்கப் பட்டது. இக்கட்டுரையிலே தரப்பட்டுள்ள ஒன்பதாவது குறிப்பைப் பற்றிச் சில செய்திகள் நண்பர்கள் குல. சபாநாதன், மு. இராமலிங்கம் ஆகியோருடைய உதவியினலே கிடைக்கப்பெற்றன. விஷு வருடம் புரட்டாசி மாதம் (1881) வட்டுக்கோட்டை வே. சதாசிவம் பிள்ளை சென்னையிலிருந்த 'ஸ்காட்டிஷ் யந்திரசாலை' யிலே வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய ஐயர் பார்வையிட்ட, நெல்லைநாதருடைய சிவராத்திரி புராணத்தைப் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பினையே பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் குறிப்பிடுகிருர். இப்பதிப்பிலே பாயிரத்திலே பதினறு செய்யுள்களும் ஏனைய நான்கு அத்தியாயங்களிலே இருநூற்று எண்பத்தேழு செய்யுள்களும் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது. 'முருகரம்மான்' (மு. இராமலிங்கம்) ஈழகேசரியிலே முற்கிளந்த பதிப்பினையே சுட்டுமாறு எழுதியுள்ளார். அவர் 'அதிரிகித்து அச்சிடுவித்தார்' என்றெழுத,

பத்திரிகை 'அதிகரித்து அச்சிடுவித்தார்' என்று பதிப் பித்து விட்டதாக அறிய முடிகின்றது. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் பார்வையிட்ட சிவராத்திரி புராணத்தின் ஆசிரியர் நெல்லைநாதர் பாண்டிநாட்டைச் சேர்ந்தவர் என்பர் கா. சுப்பிரமணியபிள்ளை (இலக்கிய வரலாறு, இரண்டாம் பாகம், ஐந்தாம் பதிப்பு, 1958, பக். 419); வேறு அபிப்பிராயமும் நிலவுகின்றது. வட்டுக்கோட்டை வே. சதாசிவம்பிள்ளை 1910-ம் ஆண்டிலே யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்திலே பதிப்பித்த நா. சிவசுப் பிரமணிய சிவாசாரியருடைய சிவராத்திரி புராணத்தின் முதலாம் பதிப்பு எப்பொழுது வெளிவந்ததென்பதை அறியுமாறில்லை. ஆயினும் இரு புராணங்களினதும் உட்பிரிவுகள் வேறுபடுகின்றன என்பது தெளிவாகின் றது. 1881-ம் ஆண்டுப் பதிப்பு கிடைக்கப்பெருமை யால் மேலெதுவும் கூறமுடியவில்லை.

'கனகி புராணம்' என்னும் கட்டுரைக்கு முன்பு எழுதப்பட்டது 'பாவலர் சரித்திர தீபகம்'. நாவலர் மலருக்குக் குறிப்புக்கள் தொகுத்த காலத்துப் பேருத வியாக விளங்கிய பாவலர் சரித்திர தீபகம் என்னும் நூலினை 'தமிழ் புளூராக்' என்னும் நூலுடன் ஒப்பிட்டு நோக்கிய போது எழுந்த கருத்துக்களை ஈண்டு கூற முற்பட்டுள்ளேன். முன்பு குறிப்பிட்ட கோணத்தி லிருந்து மட்டுமே பாவலர் சரித்திர தீபகத்தை நோக் கியதால் அந்நூலின் சிறப்புகளிற் பல ஈண்டு விரித் துரைக்கப்படவில்லை. நண்பர் குல. சபாநாதன் அவர் கள் சவுந்தரநாயகம் பிள்ளை, சுதுமலை விசுவநாத பிள்ளை, ஹென்றி மாட்டின் ஆகியோரின் காலங்களை அறிய உதவியுள்ளார்.

சைமன் காசிச்செட்டியவர்களுடைய புலவர் சரிதம் பற்றிய கட்டுரையை நான் எழுதிய பின்பு 'பதிப்புப் பேராசிரியர் தாமோதரம்பிள்ளை' என்னும் கட்டுரையை எழுதினேன். இக்கட்டுரை என்னுடைய

மனத்திருப்திக்காக எழுதப்பட்டது. இக்கட்டுரையை எழுதத் தொடங்கிய காலத்திலே பலவித மனநிலைகளையும் அனுபவித்துள்ளேன்; எழுதி முடிந்த பின்பு ஓரளவாவது மனம் திருப்தியடைந்தது. பண்டிதமணி என்று போற்றப்படும் மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 'இலக்கிய வழி' யிலே தாமோதரம்பிள்ளை பற்றி எழுதிய கட்டுரையைப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சை சோதனையாளர்களிலே ஒருவராக முன்பு பணிபுரிந்த காலத்திலே பலமுறை வாசித்தேன். ஆயினும் முன்பு அக்கட்டுரை தூண்டாத உணர்ச்சிகளை எல்லாம் உ. வே. சாமிநாதையர் பெயரால் வெளிவந்த 'என் சரித்திரம்' என்னும் நூலை வாசித்த பின்பு ஏற்படுத்தியது. இதனால் தாமோதரம்பிள்ளையின் பதிப்புகளை எல்லாம் தேடி வாசிக்க முயன்றேன். தமிழ்த் துறையிலே எங்களுடன் பணிபுரியும் திருமதி ம. தியாகராசா அவர்களும் நண்பர் F. X. C. நடராசா அவர்களும் தாமோதரம்பிள்ளையின் பதிப்புகளைத் தந்துதவினர். திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் 'சூளாமணி வசன'த்தைப் பார்வையிட உதவினர்கள்.

தாமோதரம்பிள்ளை பற்றிய கட்டுரையை அடுத்து எழுதியது 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் கட்டுரை. ஏ. வி. சுப்பிரமணிய ஐயரின் 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி' என்னும் நூல் கனகசபைப்பிள்ளையின் நூலைப் பற்றி எழுதத் தூண்டுகோலாக அமைந்தது.

ஈழத்தவர் தமிழ் இலக்கியத்திற்குக் குறிப்பிடத் தக்க வேறு அரும்பணிகளையும் ஆற்றியுள்ளனர். 'மானிப்பாய் அகராதி,' அபிதானகோசம், சொற்பிறப்பு — ஒப்பியல் தமிழ் அகராதி, பத்துப்பாட்டு மொழிபெயர்ப்பு, தாயுமானவர் பாடல்களின் மொழிபெயர்ப்பு, யாழ்நூல் முதலியன இவ்வகையிலே அடங்

குவன என்பதைப் பாரபட்சமின்றி நோக்குபவர்கள் ஏற்றுக்கொள்வர். இவற்றின் தாரதம்மியங்களை ஆராய்ந்து ஈழத்தவர் வெளியிடுவார்கள் என்று நம்புகிறேன்.

இத்தொகுப்பிலே இடம் பெறும் கட்டுரைகளை நண்பர்கள் க. கைலாசபதி, F. X. C. நடராசா, குல. சபாநாதன் முதலியோர் பார்வையிட்டு உதவினர்.

எனக்குத் தேவைப்பட்ட நூல்களைத் திருமதி ம. தியாகராசா அவர்களும் நண்பர்கள் F. X. C. நடராசா, தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, குல. சபாநாதன் ஆகியோரும் தந்து ஊக்குவித்தனர்.

பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் இக்கட்டுரைகளை நூலுருவாக்கும்படி அடிக்கடி தூண்டி நின்றார்.

நண்பர் செ. கதிர்காமநாதன் நூலின் அமைப்புப் பற்றி ஆலோசனைகள் கூறி உதவினர்.

கலைவாணி அதிபர் திரு. கு. வி. தம்பித்துரை, J. P., அவர்கள் எனது கட்டுரைகளை மனமுவந்து ஏற்று, தமது பிரசுரமாக வெளியிட முன்வந்தார்.

திரு. க. முருகேசு அவர்கள் ஐயத்தோடு கட்டுரைக் கட்டோடு கலைவாணி அச்சகத்தினுள்ளே நுழைந்தவுடனேயே ஆர்வத்துடன் வரவேற்று அதிபருக்குச் சிபாரிசு செய்தார்.

செப்ரெம்பர் மாதம் பதினோராம் தேதி ஆரம்பித்த வேலையைக் குறைந்த கால எல்லைக்குள்ளே முடித்துத் தந்தனர் கலைவாணி அச்சக ஊழியர்.

இவர்களுக்கெல்லாம் அன்பு நிறைந்த நன்றிகள்.

தமிழ்த்துறை
இலங்கைப் பல்கலைக்கழகம்
கொழும்பு — 3

பொ. பூலோகசிங்கம்
23-12-70

# பொருளடக்கம்

முகவுரை

1. சைமன் காசிச்செட்டி அவர்கள் தந்த தமிழ்ப்புலவர் சரிதம் 1—47
2. தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்த பணி 48—78
3. கனகி புராணம் 79—100
4. பாவலர் சரித்திர தீபகம் 101—151
5. பதிப்புப் பேராசிரியர் தாமோதரம்பிள்ளை 152—232
6. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் 233—275
7. பிழை திருத்தம் 276

## 1. சைமன் காசிச்செட்டி அவர்கள் தந்த தமிழ்ப் புலவர் சரிதம்

தமிழ் இலக்கிய வரலாற்றிற் பத்தொன்பதாம் நூற்றுண்டு குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். இருபதாம் நூற்ருண்டிலே தமிழ் இலக்கிய நெறியிற் காணப்படும் சிறப்பியல்புகள் பலவற்றிற்குக் காலெடுத்துக் கொடுத்தது பத்தொன்பதாம் நூற்ருண்டு எனின் மிகையாகாது. இருபதாம் நூற்ருண்டுச் செய்யுளிலக்கியத்திற் சுட்டக்கூடிய பண்புகளிற் சில, காத்திரமான முறையிலே தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தொடங்கியதும் இக்காலகட்டத்திலேயாம். மேலும் இருபதாம் நூற்ருண்டிற் செல்வாக்குப் பெற்ற பிரிவாக விளங்கும் வசன இலக்கியத்தின் பரிசோதனைக் களமாகத் திகழ்ந்ததும் பத்தொன்பதாம் நூற்ருண்டேயாகும்.

ஈழவளநாட்டிற் கண்டியரசு 1815-ம் ஆண்டு வீழ்ச்சியடைந்ததோடு ஆங்கில அரசு தனியரசாக ஆணை செலுத்தத் தொடங்கிற்று. தமிழகத்திற் பத்தொன்பதாம் நூற்ருண்டின் ஆரம்ப கட்டத்தில் வலுப்பெறத் தொடங்கிய 'ஆங்கிலேய கிழக்கிந்திய கும்பினி' யாரின் ஆட்சி 1858-ம் ஆண்டிலே ஆங்கில மன்னரின் ஆட்சியாக மாறிற்று. சர்வாதிகாரத்தின் அடிப்படையில் மக்களைத் தமதாட்சியை ஆதரிப்பவர்களாக மாற்றலாம் என்ற கருத்து ஏகாதிபத்தியவாதிகளின் மனதிலே ஆட்டங்கண்ட காலம், ஆங்கிலேயர் ஈழத்தையும் தமிழகத்தையும் தம் வசமாக்கிய காலம். சமுதாய

543—2

ஒத்துழைப்பின்றித் தமதாட்சியை நிலைநிறுத்துவதரிது என்பதை ஆங்கிலேயர் உணர்ந்திருந்தார்கள். அவ் வுணர்ச்சி சமுதாய மனமாற்றத்தை ஏற்படுத்தும் அவாவினைத் தோற்றுவித்தது. பண்டைய பாரம்பரிய உணர்ச்சி அற்றுப்போகாமல் இருந்த சமுதாயத்திலே தமது பண்பாடும் கலாசாரமும் வேரூன்றின் மக்க ளாலே தமதாட்சி ஏற்றுக்கொள்ளப்பட்டவொன்றாக அமையலாம் என ஆங்கிலேயர் நம்பினார்கள். அந்த நம்பிக்கை செயற்பட வேண்டுமாயின் குருகுலக்கல்வி முறை மாற்றப்படவேண்டும். ஏனெனிற் குருகுலக் கல்விமுறை 'சுதேசி'களின் சமய அடித்தளத்தை யுடையதாக அமைந்து, அதன் வளர்ச்சியாகத் திகழ்ந்த பண்பாட்டினை வற்புறுத்தி வந்தது. இதனை நன் குணர்ந்த ஆங்கிலேயர் தம் நாட்டிலே நிலவிய கல்வி முறையைத் தமிழ் பேசு நல்லுலகத்திலும் புகுத்த விரும்பினர். புதிய கல்விமுறையை ஆங்கிலேயர் தமிழ் மக்களிடையே பரப்ப விழைந்தமைக்குப் பிறிதொரு காரணமும் கூறலாம். தம் அரசியலமைப்பையும் வர்த்தக நிறுவனங்களையும் வழிநடத்த வேண்டிய பணியாளரை ஆங்கிலேயர் 'உற்பத்தி' செய்ய வேண் டிய நிலையே அது. தமிழகத்தில் 1812-ம் ஆண்டு நிறு வப்பட்ட 'சென்னைக் கல்விச் சங்கம்' (The College of Fort. St. George) அந்நோக்கத்தைச் செயற்படுத்தவே ஆரம்பிக்கப்பட்டதென்பர்[1]. புதிய கல்விமுறையின் நலன்களை உணர்ந்த ஆங்கிலேயர், ஏலவே மத மாற்றத்தில் ஈடுபட்டிருந்த தமது சமயப் பிரசாகரர் களுக்கு ஆதரவளித்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் முற்கூறிலேயே ஈழத்திலும் தமிழகத்திலும் மேலைத்தேயங்களைச் சேர்ந்த பிரசாகரர் பலர் சமயத் தொண்டாற்றினர். ஈழத்திலே, இக்காலகட்டத்தில் வெஸ்லியன் மிசன், சேர்ச் மிசன், அமெரிக்கன் மிசன் முதலிய செல்வ வளமுள்ள சங்கங்களைச் சேர்ந்த

பாதிரிமார்கள் கல்லூரிகளை நிறுவிச் சமயத்தொண்டின் அடிப்படையிற் கல்வித்தொண்டு புரிந்தனர்.

புதிய கல்விமுறையின் பாதிப்பினை நாம் பத்தொன்பதாம் நூற்றுண்டிலேயே காணக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலக் கல்விமுறையிற் பயின்றவர்கள் அம்மொழியிலுள்ள இலக்கிய வளத்தையும் நுகர முடிந்தது. தமிழர்தம் இலக்கியப் பரப்பிலே இடம் பெருத, புதிய இலக்கியத்துறைகளை ஆங்கில இலக்கியம் அறிமுகம் செய்துவைத்தது. இப்புதிய இலக்கியத் துறைகளைத் தமிழ் இலக்கியத்திலும் இடம்பெறச் செய்யவேண்டும் என்ற ஆசை ஆங்கிலக்கல்வி கற்ற தமிழறிஞருக்கு ஏற்பட்டது. முன்சீபு ச. வேதநாயகம் பிள்ளை (1826-1889) 1876 - ம் ஆண்டிலே அளித்த 'பிரதாப முதலியார் சரித்திரம்' தமிழ் இலக்கியப் பரப்பிலே நாவலிலக்கியம் என்னும் பிரிவுக்குத் தோற்றுவாயாக அமைந்தது[2]. விளாச்சேரி கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் (1870—1903) 'ஞானபோதினி' என்னும் பத்திரிகையிற் பகுதிபகுதியாக வெளியிட்ட செய்யுள்கள் சிலவற்றின் தொகுப்பு 'தனிப்பாசுரத் தொகை' யென 1899 - ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது. இத்தொகையிலுள்ள செய்யுள்கள் 'சொனற்' (Sonnet) என்ற மேலைத்தேயப் பாவகையைப் பின்பற்றி அமைகப்பட்டுள்ளன[3]. இவர் கவிப்பொருளாகக் கொண்டனவும் புதியன. தமிழ் இலக்கியத்திலே இயற்கையை இயற்கையாகவே பாடும் வழக்குப் பிற்பட்ட காலத்திலெழுந்ததாகும். இயற்கையைக் 'கருப்பொருள்' ஆகக் கொண்டு பாடுவதே தமிழர் கண்ட புலனெறி வழக்கு. [4] இத்தகைய வழக்கில் மாற்றம் ஏற்படுத்த ஆங்கில இலக்கியம் உதவியது. பரிதிமாற்கலைஞரும் இயற்கையை இயற்கையாகவே பாடும் பரம்பரைக்கு முன்னேடியாக அமைந்தார். மறைமலையடிகள் (1876-1950) வில்லியம் மின்ரோ அவர்கள் இலக்கிய நயவுரை பற்றிக் கூறிய கருத்துக்களை முன்மாதிரியாகக்

கொண்டு 1903-ம் ஆண்டிலே முல்லைப்பாட்டிற்கு ஆராய்ச்சியுரை கண்டார்[5].

ஆங்கில இலக்கியம் வேறொரு வகையிலும் தமிழ் இலக்கியத்தைப் பாதித்தது. ஆங்கிலத்திலுள்ள இலக்கிய ஆக்கங்கள் தமிழ்மொழியிற் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இடம்பெறத் தொடங்கிவிட்டன. தழுவலாகவும் மொழிபெயர்ப்பாகவும் ஆங்கில இலக்கிய நூல்கள் தமிழறிஞராற் போற்றப்பட்டன. ஆலப்புழை பெ. சுந்தரம்பிள்ளை (1855-1897) 1891-ம் ஆண்டு வெளியிட்ட மனோன்மணீயம் என்னும் செய்யுள் நாடகம் ஆங்கிலத்தில் லிற்றன் (Edward Bulwer Lytton 1803-1873) எழுதிய 'இரகசிய வழி' (The Secret way)என்ற செய்யுட் கதையைத் தழுவி எழுதப்பட்டது.[6] இரட்டியாபட்டி ஹென்றி அல்பிறட் கிருஷ்ணபிள்ளை (1827-1900) யோன் பண்யன் (John Bunyan 1628 - 1688) எழுதிய வசனநூலை ( The Pilgrim's Progress)இரட்சணிய யாத்திரிகம் என்னும் செய்யுணூலாகப் பாடினர்.[7] வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் (1857–1946) மில்ரன் ( John Milton 1608-1674) பாடிய Paradise Lost என்னும் நூலின் முதற்பகுதியைச் சுவர்க்க நீக்கம், முதற் காண்டமென விருத்தப் பாவாற் பாடினர்[8]. இவர் மெரிக் ( J Merrick) என்பவர் ஆங்கிலத்திற் பாடிய 'ஓணன்' ( The Chameleon) என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு 1897 -ம் ஆண்டு கோம்பி விருத்தம் பாடினர். இவர் பாடிய அகலிகை வெண்பாவுக்குச் செகசிற்பியர் ((William Shakespeare 1564—1616) பாடிய பாடலொன்று (The Rape of Lucrece) உதவியிருக்கின்றது.

தமிழ் இலக்கியவாணருக்கு ஆங்கில இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் மேற்கூறிய முயற்சிகளுக்கு முன்பு, ஆங்கிலம் பேசுபவர்களுக்கும் கற்பவர்களுக்கும் தமிழ் இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் முயற்சிகள் நடை

பெற்றன. அந்நிய மொழியைக் கற்று, அதன் இலக்கியப் பரப்பைக் கண்டவர்கள், அதன் துறைகளுள்ளே தமிழ் மொழியில் இல்லாதனவற்றைத் தமிழ்மொழிக்கு அளிக்க வேண்டும் என்ற அவாவினால் அல்லது தமிழர்தம் பாரம்பரியத்தையும் அவர்தம் இலக்கியத்தையும் தாம் நலிந்து நின்ற சமயத்திலும் அந்நியருக்குக் காட்டவேண்டும் என்ற ஆசையினால் இம்முயற்சிகளில் ஈடுபட்டனர். இம்முயற்சிகளில் ஒன்றே தமிழ் இலக்கிய வரலாறு என்னும் துறையைத் தோற்றுவித்தது எனலாம்.

அறிவியல் இலக்கியக் கூறுகத் தமிழ் இலக்கிய வரலாறு இன்று எவ்வளவோ தூரம் முன்னேறிவிட்டது. கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தமிழ்ப்பாடத் திட்டத்தில் இடம்பெற்றதால் இலக்கிய வரலாற்று நூல்கள் பல்கிப்பெருகிவிட்டன[9]. தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களின் முன்னோடியாக விளங்குவது, சைமன் காசிச்செட்டி எழுதிய 'தமிழ் புளூராக்' என்னும் ஆங்கில நூலாகும். 'The Tamil Plutarch, Containing a Summary Account of the Lives of the Poets' and Poetesses of Southern India and Ceylon. From the Earliest to the Present Times, with Select Specimens of their Compositions' என்னும் ஆங்கில நூல் 1859-ம் ஆண்டு வெளிவந்தது.[10]

சுவாமி விபுலாநந்தர் (1892–1947) இந்நூலின் இரண்டாம் பதிப்பிற்கு அளித்த ஆங்கில முன்னுரையிலே, "ஆசிரியர் இந்நூலுக்கு அளித்த பெயர், இவரைப் போன்றே, பண்டைக் கிரேக்க உரோமதேசப் பெரியார்களின் சரிதங்களை எழுதிய பெயர்பெற்ற ஆசிரியருக்கு அளிக்கப்பட்ட காணிக்கை போலும்" என்பர். புளூராக் என்பவர் கிரேக்க நாட்டிலுள்ள போயசியா (Boeotia) என்னும் பகுதியைச் சேர்ந்த செரோனியா (Chaeronea) என்னும் ஊரிலே கி. பி. 45-ம் ஆண்டளவ

விற் பிறந்தவர். அதென்சு நகரிலே கல்வி பயின்று, பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்த புளூராக் உரோமாபுரியிலே சில ஆண்டுகள் வாழ்ந்துவிட்டுத் தமது சொந்தவூரிலே நீதிபதியாகவும் சமய போதகராகவும் ஆசிரியராகவும் பல்வேறு கால கட்டங்களிலே பணிபுரிந்தவர். இவர் கி. பி. 125-ம் ஆண்டளவிலே வியோகமடைந்தார் என்று கருதுவர். வாழ்க்கைச் சரிதங்களையும் வியாசங்களையும் எழுதிப் புகழ்பெற்ற புளூராக் அவர்களுடைய ஆக்கங்கள் இரு தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவருடைய சிறப்பு, இவரெழுதிய வாழ்க்கைச் சரிதங்களிலே (Parallel Lives) தங்கியிருப்பதாகக் கருதுவர். கிரேக்க மொழியிலே எழுதப்பட்ட "வாழ்க்கைச் சரிதங்கள்" இலத்தீன், பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பிரஞ்சு மொழியிலே அம்யோ (Jacques Amyot) என்பவர் மொழிபெயர்த்த இந்நூலைத் தொமஸ் நோத் (Sir Thomas North 1535–1601) ஆங்கிலத்திலே 'Lives of the Noble Grecians and Romans' என மொழிபெயர்த்துள்ளார். புளூராக் எழுதிய 'வாழ்க்கைச் சரிதங்கள்' ஆங்கில இலக்கியத்திற் செல்வாக்குப் பெற்றது; சாமுவல் ஜோன்சன் (Samuel Johnson 1709–1784) எழுதிய 'The Lives of the English Poets' என்னும் நூலுக்கு வழிகாட்டி; செகசிற்பியரின் நாடகங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது[11]. மேலைத்தேயங்களிலே செல்வாக்குப்பெற்ற 'வாழ்க்கைச்சரிதம்' என்னும் வடிவத்தை எடுத்துக்கொண்டு சைமன் காசிச் செட்டி தமிழ்ப்புலவரின் சரிதங்களைக் கூறமுற்பட்டார்.

'தமிழ் புளூராக்' என்னும் நூலே தமிழ்ப்புலவர்களின் சரிதங்களை ஒரே நூலாகக் கூற எழுந்த முதல் நூலாகும். தமிழ்ப்புலவர் பலருடைய சரிதங்களை ஒரே நூலிலமைத்து முதலில் அச்சியற்றிய பெருமை சைமன் காசிச் செட்டியவர்களையே சாரு'ᶜ

'தமிழ் நாவலர் சரிதை' எனப் பெயரிய நூலொன்று தமிழிலுண்டு. இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையைச் சேர்ந்த ச. சோமசுந்தரதேசிகர் இந்நூலைப் பற்றி மேல்வருமாறு கூறுவர்: "இது சங்க காலத்திலிருந்த சில புலவர்களது வரலாற்றோடு 14–15-ம் நூற்றுண்டு வரையில் வாழ்ந்த ஒரு சில புலவர்களது சரிதங்களையும் அவர்களுடைய சமயோசிதப் பாடல்களையும் முன்பின்னுகக்குறிப்பது"[12]. தில்லை நடேசச் செட்டியார் முதல் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை வரை சிலர் தமிழ் நாவலர் சரிதையைப் பதிப்பித்துள்ளனர். இந்நூலை நோக்குமிடத்து, சோமசுந்தரதேசிகர் கூற்றுப் பொருந்தாக் கூற்று என்பது புலனுகும். இறையனுரகப் பொருளுரையிலே இடம்பெறும் 'முச்சங்க வரலாறு' என்னும் பகுதி நீங்கலாகச் சரிதம் என்ற சொல்லுக்கே தமிழ் நாவலர் சரிதையிலே இடமில்லை. இப்பகுதியினை விட்டு நோக்கின் தமிழ் நாவலர் சரிதையும் ஒரு 'தனிப் பாடற்றிரட்டு' என்பது புலனுகும். இறையனுர் முதலாக அந்தகக்கவி வீரராகவமுதலியார் ஈருகப் பெயர் தெரிந்த புலவர்களின் பாடல்களும் பெயர் அறியாப் புலவர்களின் செய்யுள்களும் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களிற் பெரும்பாலனவற்றின் கீழ் அவை பாட நேர்ந்த சந்தர்ப்பங்களும் தரப்பட்டுள்ளன. புறநானூறு, தனிப்பாடற்றிரட்டு முதலிய தொகை நூல்களிலும் இத்தகைய சந்தர்ப்பங்கள் இடம்பெறல் மனங்கொளற்பாற்று. ஔவை துரைசாமிப்பிள்ளை, "தமிழ் நாவலர் சரிதையென்ற பெயரே இந்நூல் தமிழ் நாவலர் வரலாற்றுக்குத் துணையாகும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்டதென்பதை வலியுறுத்துகின்றது"[13] என்றுரைத்த கூற்றுக்கூட வலியற்றதாகக் காணப்படுவதைத் தமிழ் நாவலர் சரிதைப் பயிற்சியுடையாருக்குக் கூறவேண்டா[14]. 'தமிழ் புளூராக்' என்னும் நூலுடன் தமிழ் நாவலர் சரிதையை

எவ்விதத்திலும் ஒப்பிட முடியாது என்பது மேற்கூறியனவற்ருற் போதரும்.

புலவர் புராணம் பாடிய தண்டபாணி சுவாமிகள் "கலியுகம் 4941 விகாரி வருடம் (ஆங்கிலம் 1839) கார்த்திகை மாதம் 13-ந் தேதி அத்த நாளிலே இவ்வுலகில் தோன்றியருளினுர்"[15]. எனவே 'தமிழ் புளூராக்' வெளிவந்தபோது தண்டபாணி சுவாமிகளுக்கு இருபது வயதாகின்றது. இவர் துறவியாகிப் பல தலங்களையும் தரிசித்து, ஈற்றிலே திருவாமத்தூரிலே தங்கியிருந்த காலை புலவர் புராணத்தைப் பாடினுர் என்று அறிய முடிகின்றது[16]. புலவர் புராணம் 'தமிழ் புளூராக்' தோன்றிய பின்பே பாடப்பட்டது என்று கருத இடமுண்டு. புலவர் புராணத்தின் முதற்பதிப்பு 1906-ம் ஆண்டிலும் இரண்டாம் பதிப்பு 1908-ம் ஆண்டிலும் மூன்ரும் பதிப்பு 1931-ம் ஆண்டிலும் வெளிவந்தன[17]. சைமன் காசிச்செட்டியவர்கள் தமது முகவுரையிலே 'தமிழ் புளூராக்' பற்றிக் கூறுமிடத்து, "இவ்வகையில் இதுவே முதல் முயற்சி" என்று கூறுவது தற்புகழ்ச்சியல்ல: உண்மைக்கூற்ருகும்.

தமிழ்ப்புலவர் சரிதம் எழுதுவதற்கு வேண்டிய ஆதாரங்களைச் சைமன் காசிச்செட்டி ஒரு தசாப்தத்திற்கு முன்பிருந்தே சேர்த்து வந்திருக்கிருர் என்பதை அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் மூலம் நாம் அறியலாம். இவர் ஆரம்பகாலத்தில் எழுதியனவற்றுட் கோணேசர் கல்வெட்டினை ஆங்கிலத்திற் சுருக்கமாக மொழிபெயர்த்து எழுதிய கட்டுரையொன்ருகும்[18]. அல்லியரசாணி நாடகத்தில் உண்மை காண விழைந்த முயற்சியின் பயனுக 1833-ம் ஆண்டிலே கட்டுரையொன்று வெளிவந்தது[19]. வலைவீசுபுராணத்தின் சுருக்கத்தைப் பரதவர் பற்றி எழுதிய கட்டுரையிலே தந்துள்ளார்[20]. காசிச்செட்டியவர்கள் 1840-ம் ஆண்டிலே 'கொழும்பு ஒப்சேவர்' (The Colombo Observer) என்ற

பத்திரிகையிலும் 'சிலோன் மகெசின்' (The Ceylon Magazine) என்ற சஞ்சிகையிலும் எழுதிய கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. 'கொழும்பு ஒப்சேவர்' பத்திரிகையிலே தமிழர்தம் பழக்கவழக்கங்கள் பற்றியும் இலக்கியம் பற்றியும் தொடர்பாக எழுதியுள்ளார்; இலக்கியம் பற்றிய கட்டுரைகளிலே தமிழ் நீதிநூல்கள் பற்றிய கட்டுரையும் காசிகாண்டத்திலிருந்து மொழிபெயர்த்த பகுதியும் சுட்டக்கூடியன [31]. 'சிலோன் மகெசின்' என்ற சஞ்சிகையிலே 'தமிழ் புளூராக்' கருக்கொண்ட தன்மையை நாம் காணலாம். 1840-ம் ஆண்டு 'செப்ரெம்பர்' மாதம் முதல் வெளிவரத் தொடங்கிய 'சிலோன் மகெசின்' என்னும் சஞ்சிகையின் மூன்றும் இதழொழிந்த ஏனைய முதலாறு இதழ்களிலும் சைமன் காசிச்செட்டி அகத்தியர், தேரையர், திருமூலர், கொங்கணர், மச்சமுனி, அப்பர், சம்பந்தர், சுந்தரர், நக்கீரர், ஔவையார், திருவள்ளுவர், கபிலர், மாணிக்கவாசகர், அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரர், தொல்காப்பியர், பவணந்தி, அமிர்தசாகரர், கச்சியப்பர், சேந்தன் (திவாகரர்), கம்பன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, மண்டலபுருடர், பரஞ்சோதிமுனிவர், சிவவாக்கியர், அருணகிரிநாதர், பட்டணத்துப்பிள்ளையார், பத்திரகிரியார், குமரகுருபரர், தாயுமான சுவாமிகள், சீகாழி அருணசலக் கவிராயர் என்னும் முப்பத்திரண்டு தமிழறிஞர் பற்றிய செய்திகளைச் சுருக்கமாகத் தருகிருர். [22] இத்தொடரிலே ஈழத்துத் தமிழறிஞர் பற்றிக் கூறுவதையும் ஆசிரியர் நோக்காகக் கொண்டிருந்தார் என்பது கட்டுரைத் தலைப்பினுற் புலனுகும். ஆயினும் அவ்வாறு அவர் செய்யாமைக்குக் காரணம் புலப்படுமாறில்லை. இக்கட்டுரைத் தொடரை விட 'சிலோன் மகெசின்' என்னும் சஞ்சிகையிலே சீருப் புராணத்திலிருந்து ஒரு பகுதியை மொழிபெயர்த்து வழங்கியுள்ளார் [33] அடுத்து, திருவாதவூரர் புராணத்திலிருந்து ஒரு சருக்கத்தை இலங்கை 'ரேயல் ஏசியரிக்'

சங்கத்தினரின் சஞ்சிகையிலே மொழிபெயர்த்து அளித்துள்ளார்[24]. இவற்றைத் தொடர்ந்து காசிச்செட்டியவர்கள் இலங்கை 'ரேயல் ஏசியரிக்' சங்கத்திலே 1848-ம் ஆண்டு 'ஜுன்' மாதம் மூன்றும் திகதியும் 1849-ம் ஆண்டு 'பெப்ருவரி' மாதம் 24-ம் திகதியும் 'டிசம்பர்' மாதம் முதலாம் திகதியும் 'தமிழ்நூற் பட்டியல்' ஒன்றினை வாசித்தார்[25]. 'தமிழ் புளூராக்' என்னும் நூலின் ஆக்கத்திலே ஈடுபட்டிருந்த ஆசிரியர் தமிழ் நூல்களின் பட்டியலைத் தயாரிப்பதில் அக்கறையுடையவராக இருந்தார் என்பது முற்கிளந்த பட்டியலாற் புலனாகின்றது. இப்பட்டியல் முப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதற் பிரிவாகிய மொழியியற் பகுதியிலே 74 நூல்களின் பெயர்களும் சிலவற்றிற்கு அவற்றின் ஆசிரியர் பெயர்களும் தரப்பட்டுள்ளன. அகத்தியம், தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், தண்டியலங்காரம் முதலிய பழைய இலக்கண நூல்களும் சிவஞான முனிவரின் இலக்கண விளக்கச்சூறுவளி, நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரை, நன்னூல் விசாகப்பெருமாளையர் உரை, சரவணப் பெருமாளையரின் அணியியல் விளக்கம், தாண்டவராய முதலியாரின் இலக்கண வினவிடை முதலிய அண்மைக் காலத்துத் தமிழகத்தறிஞரின் இலக்கணநூல்களும் ஐரோப்பியர் எழுதிய இலக்கண நூல்களும் சிதம்பரப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், சம்பந்தப் பாட்டியல் முதலிய பாட்டில் நூல்களும் திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டு முதலிய நிகண்டுகளும் அகராதிகளும் இப்பிரிவிலே இடம்பெறுகின்றன. இரண்டாவது பிரிவு புராண இலக்கியம், வரலாறு, வாழ்க்கைச் சரிதம் பற்றிய நூல்களை உள்ளடக்கிக் கூறுகின்றது. செய்யுளிலும் வசனத்திலும் இந்துக்கள், கிறித்தவர், இசுலாமியர் ஆகியோர் இயற்றிய 82 நூல்கள் பற்றிய செய்திகளும் சிலவற்றிற்கு அவற்றின் ஆக்கியோர் பற்றிய செய்திகளும் தரப்பட்டுள்ளன.

கம்பராமாயணம், கந்தபுராணம், இரகுவம்சம், சிலப்பதிகாரம், பெரியபுராணம், சேதுபுராணம், (தட்சிண) கைலாசபுராணம், சிவராத்திரிபுராணம், கைலாசமாலை, (கோணேசர்) கல்வெட்டு, தேம்பாவணி, திருச்செல்வர் காவியம், சீருப்புராணம், முகையிதீன் புராணம் முதலிய செய்யுணூல்களும் நளன்கதை, கஞ்சன் கதை, தேவப்பிரசையின் திருக்கதை முதலிய வசன நூல்களும் இப்பிரிவிலே காணப்படுகின்றன. மூன்றுவது பிரிவாகிய சமயம், தத்துவம் பற்றிய பகுதியிலே இந்துக்கள், கிறித்தவர் ஆகியோருக்குரிய 153 நூல்களும் சிலவற்றிற்கு அவற்றின் ஆசிரியர் பெயர்களும் குறிக்கப்படுகின்றன. எனவே மூன்று பகுதிகளிலும் 309 நூல்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றண. சைமன் காசிச்செட்டி எழுதிய முற்கிளந்த கட்டுரைகளும் ஏனைய கட்டுரைகளும்[26] 'தமிழ் புளூராக்' தோன்ற வழியமைத்துக் கொடுத்தன. 'தமிழ் புளூராக்' வெளிவந்தபோது 'கொழும்பு ஒப்சேவர்' 'சிலோன் ரைம்ஸ்' என்னும் பத்திரிகைகள் சிலாகித்து விமர்சனம் செய்தன[27]. கால்ட்வெல் அவர்கள் தமது ஒப்பியலிலக்கண நூலின் பிந்திய பதிப்பிலே 'தமிழ் புளூராக்' என்னும் நூலை உசாத்துணை நூற்பட்டியலிலே சேர்த்தார்.

சைமன் காசிச்செட்டி 1807-ம் ஆண்டு 'மார்ச் மாதம் 21-ம் தேதி ஈழவளநாட்டிலே கற்பிட்டி என்னுமூரிற் கவிரியேல் காசிச்செட்டியின் புதல்வராகப் பிறந்தார். கற்பிட்டி வடமேல் மாகாணத்திலுள்ளது. புத்தளம் நீதிமன்றத்திலே மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரியத் தொடங்கிய காசிச்செட்டியவர்கள் 1828-ம் ஆண்டு முதலாகப் புத்தளம் மணியகாரராகவும் 1833-ம் ஆண்டு முதல் புத்தளம் மாவட்டத்தின் முதலியாராகவும் கடமை செய்தார். 1838-ம் ஆண்டு முதல் 1845-ம் ஆண்டுவரை இலங்கைச் சட்டநிரூபண சபை அங்கத்தினராகத் திகழ்ந்தார். பின்பு, 1848-ம் ஆண்டு முதலாகத் தற்காலிக நீதிபதியாகவும் 1852-ம் ஆண்டு

முதல் நிரந்தர தீதிபதியாகவும் சிலாபத்திலே விளங்கினர். 1860-ம் ஆண்டு 'நவம்பர்' மாதம் 5-ம் தேதி தேகவியோகமடைந்தார்[28]. அரசியலிலீடுபட்டுப் பல பணிகளில் உழைத்தபோதும் காசிச்செட்டியவர்கள் தமது மொழிக்கும் நாட்டிற்கும் தம் எழுத்துக்கள் மூலம் சிறப்புத்தேடித்தருவதை நோக்கமாகக் கொண்டிருந்தார். அவருடைய தமிழ்த் தொண்டை அவர் வாழ்ந்த காலத்துத் தமிழறிஞர் போற்றியுள்ளனர்.

துறைசை மாதவச் சிவஞானசுவாமிகள் ( –1785) மாணுக்கரிலொருவர் இராமநாதபுரம் நெல்லையப்பரின் புதல்வர் சோமசுந்தரம்பிள்ளை. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் சோமசுந்தரக் கவிராயர், சோமசுந்தரக்குரு, சோமசுந்தரகுருஸ்வாமி என்னும் பெயர்களாலும் அழைக்கப்பட்டவர்; திருக்கழுக்குன்றக்கோவை பாடியவர்; முதுகுளத்தூர் அட்டாவதானம் பெரிய சரவணப்பெருமாட்கவிராயர், முகவை இயற்றமிழாசிரியர் வி. இராமாநுசக்கவிராயர் முதலியோரின் ஆசிரியர். அட்டாவதானம் அ. வீராசாமி செட்டியார், திருத்தணிகை விசாகப்பெருமாளையர், திருத்தணிகை சரவணப்பெருமாளையர், களத்தூர் வேதகிரிமுதலியார் முதலியோரின் ஆசிரியர் இராமாநுசக்கவிராயர்.

களத்தூர் வேதகிரி முதலியார் (1795–1852) சென்னையிலும் மதுரையிலும் புதுச்சேரியிலும் தமிழ்த் தொண்டாற்றியவர்; சென்னையிலே அச்சகம் நிறுவிப் பல நூல்களை வெளியிட்டவர்; திருக்குறளைத் தமது உரையுடனும் திருவள்ளுவமாலைக்குச் சரவணப்பெருமாளையர் எழுதிய உரையுடனும் 1849-ம் ஆண்டு பதிப்பித்தவர்; யாப்பருங்கலக்காரிகையைக் குணசாகரருரையுடன் அச்சிட்டவர்; நாலடியார், நைடதம் முதலிய நூல்களுக்கு உரையெழுதியவர்; மானிப்பாயிலே 1842-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற தமிழ் அகராதிக்கு அநுபந்தம் வழங்கியவர்; அதே அச்சியந்திரசாலையிலே

1843-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதிக்குப் பல செய்யுள்களை இயற்றிக் கொடுத்தவர்; நைடதப்பாட்டொன்றினையிட்டு நல்லூர் மனப்புலி முதலியாரின் புதல்வர் சரவணமுத்துப்புலவருடன் 'உதயதாரகை'யிலே வாதஞ்செய்தவர். இவர் மநுநீதிசதகம், மநுவிக்கியானசதகம், நீதிசிந்தாமணி, சன்மார்க்கசாரம் என்னும் நூல்களைப் பாடியுள்ளார். இந்நூல்களைப் பற்றிக் கூறவந்த 'தமிழ் புளூராக்' ஆசிரியர், "இலங்கையிலுள்ள தமது நண்பர் ஒருவருக்கு இந்நூல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்நண்பரின் பெயரை அவர் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அமைத்துள்ளார்" என்று கூறுவர்[29]. சைமன் காசிச்செட்டி வேதகிரி முதலியாரின் நண்பர் யாரென்று கூறவில்லை; 1886-ம் ஆண்டு பாவலர் சரித்திர தீபகம் வெளியிட்ட அ. சதாசிவம்பிள்ளையும் (J. R. Arnold) கூறவில்லை. மயிலை. சீனி. வேங்கடசாமி இந்நூல்களைப் பற்றிக் கூறுமிடத்து, "மநுநீதிசதகம், மநுவிக்கியானசதகம், நீதிசிந்தாமணி, சன்மார்க்கசாரம் என்னும் நூல்களை இயற்றி யாழ்ப்பாணத்திலிருந்த ஒரு நண்பருக்கு அனுப்பினார். ஆனால், அவை அச்சிடப்படவில்லை" என்று கூறுவர்[30]. சைமன் காசிச்செட்டி தற்புகழ்ச்சியை விரும்பாது இப்பிரபந்தங்களின் பாட்டுடைத் தலைவனைச் சுட்டாமல் விட்டுவிட்டார். அவர் அவ்வாறு செய்யவே, பின்வந்த வாழ்க்கைச் சரிதம் கூறிய ஆசிரியர்களும் பாட்டுடைத் தலைவனைச் சுட்டமுடியவில்லைப் போலும். மேல்வரும் மூன்று பாடல்களையும் நோக்கும்போது பாட்டுடைத் தலைவன் யாரென்பது புலனாகும்:[30A]

**வானுலவு மறிவினுக்கும் மனத்தினுக்கும் வாக்கினுக்கும் வரம்பின்றேங்கித்**
**தேனுலவு சுவைபோலும் பிரியாமல் எங்குநிறை தேவைப் போற்றிக்**
**கானுலவு மலர்த்தொடைசீ மான்காசிச்செட்டிதுரை காவலோன் மேல்**
**பானுலவு படியின் மநுவிக்கியான சதகநூல் பகருவாமே.**

(மநுவிக்கியான சதகம்)

தங்கம் புடத்திலழியாது நிற்கின்ற தன்மையைப்போல்
அங்கம் பொருந்திய வாத்துமநாளு மழிவதில்லை
சங்கத்துரைகளிலோர் துரையாகத் தனித்தரசான்
சிங்கத்தை யொத்த சீமான் காசிச்செட்டி சிரோன்மணியே.

(நீதிசிந்தாமணி)

நண்டுகொழுத்தால் வளையை நாடலின்றிக் கெட்டிடல்போல்
உண்டுகொழுத்தோரிற் சிலர் ஊதியங்கெட்டேயலைவார்
செண்டுநிகர் பூமுலையார் செய்யமணிமேகலையார்
கண்டுமடல் வரைசீமான் காசிச்செட்டி கண்மணியே.

(சன்மார்க்கசாரம்)

களத்தூர் வேதகிரிமுதலியார் போற்றிய காசிச் செட்டியவர்கள் தம் காலத்தில் வாழ்ந்த குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களுடைய கண்டன நூலொன் றினை மறுத்துத் திக்காரம் செய்தவர். குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் 'கிறிஸ்து மத கண்டன வச்சிரதண்டம்' எனப் பெயரிய கண்டன நூலொன்றினை இயற்றினர். இக் கண்டனத்தை மறுத்துத் தஞ்சாவூர் வேதநாயகசாஸ்திரியாரின் புதல்வர் ஞானசிகாமணி என்பவர் 'மேசியா மகத்துவம்' எழுதி 1853-ம் ஆண்டிற் பதிப்பித்தார்[31]. காசிச்செட்டியவர்களும் மஸ்தான் சாகிபு அவர்களின் கண்டனத்தை மறுத்துக் 'குதர்க்க திக்காரம்' எழுதி 1854-ம் ஆண்டில் வெளியிட்டார்[32]. காசிச்செட்டியவர்கள் 'கத்தோலிக்க கோயிலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலையும்[33] 'ஜனன காண்ட'த்திற்குக் குறிப்புரையையும்[34] எழுதியவர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

சைமன் காசிச்செட்டி எழுதிய ஏனைய கட்டுரைகளையும் நூல்களையும் நோக்கும்போது அவர் அறிவியலுக்குட்பட்ட பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டார் என்பது தெளிவாகும். வரலாறு, சமூகவியல், மொழியியல் முதலிய துறைகளிலே காசிச்செட்டியவர்கள் ஈடுபாடு உடையவராயிருந்தார். குதிரைமலை, 'தம்மன்ன

நுவரை', கற்பிட்டியிற் கண்டெடுத்த நாணயங்கள், செப்பேட்டு மொழிபெயர்ப்பு, 'பிரமனன்கண்டல்' கல்வெட்டு முதலியனபற்றிய கட்டுரைகளும்[35] 'பண்டைக் காலம் தொட்டு ஒல்லாந்தர் காலம் வரையுமுள்ள யாழ்ப்பாண நாட்டின் வரலாறு' என்னும் கட்டுரையும்[36] இலங்கை வரலாறு பற்றிய நூலின் மொழிபெயர்ப்பும்[37] அவர் வரலாற்றிலே கொண்டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுகின்றன. தமிழ் மக்களுடைய சாதிகள், தமிழ் மக்களுடைய சாதிச் சடங்குகள், முக்குவர் வரலாறு, இலங்கை இசுலாமியரின் (Moors) பழக்கவழக்கங்கள் என்பன பற்றிக் காசிச்செட்டியவர்கள் எழுதிய நூல்கள் சமூகவியலில் அவருக்கிருந்த ஆர்வத்தைச் சுட்டுகின்றன[38]. காசிச்செட்டியவர்கள் 1834-ம் ஆண்டிலே எழுதி வெளியிட்ட 'சிலோன் கசற்றியர்' (The Ceylon Gazetteer) என்னும் நூல் சமூகவியல், வரலாறு முதலிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அருவிருந்தாகும்[39]. மாலைதீவு மொழிக்கும் சிங்களமொழிக்குமிடையேயுள்ள ஒற்றுமையைக்காட்டும் சொற்பட்டியல், ஜாவாமொழிக்கும் சங்கத மொழிக்குமிடையேயுள்ள ஒற்றுமை, 'றோடியர்' (Rodiyas), 'இலங்கைப் பாசி' முதலிய கட்டுரைகளும்[40] மலையகராதி (1840) என்னும் அகராதியும் வெளிவராத சில நூல்களும்[41] மொழியியல் பற்றிக் காசிச்செட்டியவர்கள் கொண்டிருந்த அக்கறையைச் சுட்டுவன. வரலாறு, சமூகவியல், மொழியியல் முதலியன பற்றிக் காசிச்செட்டியவர்கள் பெற்றிருந்த அறிவு, தமிழ்ப்புலவர் சரிதத்தை எழுத அவருக்குச் சிறப்பாக உதவிற்று என்பதைத் 'தமிழ் புளூராக்' என்னும் நூலைப் பயின்றோர் உணர்வர். கர்ணபரம்பரைக் கதைகளிலே உண்மையைத் தேடச் சைமன் காசிச்செட்டிக்கு முற்கிளந்த துறைகளிலே அவர் பெற்ற அறிவு பயன்பட்டது.

'உதயாதித்தன்' ஆசிரியர்[42] 'தமிழ் புளூராக்' எழுதிய காலத்திலே தமிழ் ஆராய்ச்சி ஆரம்ப தசையி

லேயே இருந்தது. இவருடைய காலத்திலே குறிப்பிடத் தக்க ஆய்வு நூலாக வெளிவந்தது கால்ட்வெல் எழுதிய 'ஒப்பியலிலக்கண' நூலாகும்[43]. இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம் முதலியனவற்றின் ஆசிரியர்கள் தமிழ்மொழியைச் சங்கதமொழியின் கிளைமொழியாகக் கருதியவர்கள். இவர்களுள் இலக்கணக் கொத்தின் ஆசிரியர், 'ஐந்தெழுத்தாலொரு பாடையென்று அறையவே நாணுவர் அறிவுடையோரே' என்று தமிழை இழிவுபடுத்தித் தம் சங்கதமொழிப் பற்றைக் காட்டியவர்[44]. கால்ட்வெல் அவர்கள் தமது நூல் மூலம் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய 'திராவிட' மொழிகள் சங்கத்திலிருந்து கிளைத்தவையல்ல வென்பதையும் 'இந்தோ ஐரோப்பிய' மொழிகளின் வளர்ச்சியில் அவை இன்றியமையாத தொண்டாற்றின என்பதையும் நிலைநாட்டினுர். இவ்வாறு தமிழ்மொழியின் தனித்தன்மை பற்றி மேனுட்டறிஞர் கருத்துத் தெரிவித்த காலகட்டத்திலும் தமிழின் சிறப்பும் அதன் பெருமையும் குன்றியே காணப்பட்டன. 1835-ம் ஆண்டு முதலாகச் 'சுதேசி' களும் அச்சியந்திரம் வைத்திருக்கச் சட்டம் இடங்கொடுத்தபோதும் பண்டைத் தமிழர்தம் இலக்கியங்களிற் பல கால்ட்வெல் நூலெழுதிய காலத்திலும் அச்சிடப்படவில்லை. தமிழ் வரிவடிவைக் கையாளாது உரோம எழுத்துக்களையே பயன்படுத்தி லிஸ்பன் மாநகரில் 1554-ம் ஆண்டு அச்சிடப்பட்ட தமிழ்நூல்[45] முதலாகப் பல நூல்கள் அச்சிடப்பெற்றபோதும் தமிழர்தம் பாரம்பரியத்தையும் அவர்தம் கலாசாரத்தையும் துல்லியமாக எடுத்துக்காட்டும் நூல்களிற் பல பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுக்கூறிலே கூட பிரசுரிக்கப்படவில்லை. இதனுலே தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு வேண்டிய அடிபடைத் தேவைகளைக் கூடப் பூர்த்திசெய்ய முடியாத சூழல் நிலவியது. கால்ட்வெல் அவர்கள் கி. பி. எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றுண்டிலே

தமிழ் இலக்கிய சரிதம் தொடங்குவதாகக் கருதினர். சமண காலம் அல்லது மதுரைத் தமிழ்ச் சங்ககாலம் என்று கால்ட்வெல் கொண்ட முதலாம் காலப்பிரிவிலே திருக்குறள், நாலடியார், சிந்தாமணி, திவாகரம், நன்னூல் முதலிய நூல்கள் முக்கிய இடம்பெறுகின்றன[46]. கால்ட்வெல் அவர்களுடைய தமிழ் இலக்கிய சரிதக் கூற்றுகளுக்கு அவரது நூல் எழுந்த காலமே காரணமாகின்றது. கால்ட்வெல் அவர்களுடைய 'ஒப்பியலிலக்கணம்' தோன்றி இருவருடங்கள் கழிந்த பின்பு 'தமிழ் புளுூராக்' வெளிவருகின்றது. இக்குறுகிய கால எல்லைக்குள் குறிப்பிடத்தக்க, தமிழ் இலக்கியம் பற்றிய ஆராய்ச்சிகள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. எனவே 'தமிழ் புளூராக்' என்னும் நூலை நோக்கும்போது அதன் ஆசிரியர் எத்தகைய சூழலிலே அதனை எழுதினர் என்பதை நாம் மனங்கொளல் வேண்டும். நூறுவருடங்களுக்கு முன்பு தமிழ் இலக்கியம் பற்றிக் கூறவந்தவர்களுக்கு இருந்த இடர்ப்பாடுகள் பற்றியும் அவற்றை நீக்க அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை என்பதையும் அறிவதற்கு இந்நூல் உதவிபுரியும். தமிழ் ஆராய்ச்சியின் ஆரம்ப கட்டத்திலே தமிழறிஞருடைய சிந்தனைப் போக்கையும் நாம் இந்நூலிலே அவதானிக்க முடியும்.

காசிச்செட்டியவர்கள் தமது நூலின் ஆங்கில முகவுரையிலே, "எங்கள் புலவர்களின் சரிதம் பற்றி ஒரு நூலை மக்களுக்கு அளிக்கவேண்டும் என்பது நெடுங்காலமாக எனது எண்ணமாயிருந்தது. ஆனல், தமிழிலே பண்டைக்காலத்திலோ அல்லது தற்காலத்திலோ எழுந்த வாழ்க்கைச் சரித நூல்கள் இன்மையால், நான் எதிர்பார்த்ததிலும் பார்க்க, நூலுக்கு வேண்டிய விஷயங்களைப் பெறுவது பெரும் வேலையாக இருந்தது. இதனல் நான் எடுத்துக்கொண்ட முயற்

சியை ஆற்ருமையாற் கைவிட்டு விடுவதாகப் பெரும்பாலும் தீர்மானித்திருந்தேன். ஆயினும் மக்களிடையே நிலவிய கர்ணபரம்பரைக் கதைகளைச் சேர்த்து, அவற்றிலிருந்து கீழைத்தேயக் கற்பனையாளர் விழையும் புனைவுச்செய்திகளையும் முருகியற் செய்திகளையும் நீக்கினுல் தேவையான செய்திகள் கிடைக்குமென்பதை அறிந்து, அம்மூலத்தை ஆராய்ந்தேன். அதன் விளைவு இப்பொழுது மக்கள் முன்னிலையிற் குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது'' என்று கூறியுள்ளார். காசிச்செட்டியவர்கள் கர்ணபரம்பரைக் கதைகளிலே உண்மையைத் தேடினுர். வேருெருவர் இக்கால கட்டத்திலே கர்ணபரம்பரைக் கதைகளையெடுத்து விநோதரசமான முறையிலே எழுதிவந்தார். பீற்றர் பேர்சிவல் அவர்கள் சென்னையிலே 1855-ம் ஆண்டு முதலாகத் தொடங்கி நடத்திவந்த 'தினவர்த்தமானி' என்ற வாரவெளியீட்டிலே அட்டாவதானம் அ. வீராசாமி செட்டியார் அவ்வாறு செய்துவந்தார்.[47] பொய்யாமொழிப்புலவர் பற்றிய தமது சரிதத்திலே காசிச்செட்டியவர்கள் 'தினவர்த்தமானி'யில் வந்த செய்திகளைத் தந்துள்ளார். ஆயினும் இருவரும் வெவ்வேறு நோக்கங்களுக்காகக் கர்ணபரம்பரைக் கதைகளின் உதவியை நாடினர். கர்ணபரம்பரைக்கதைகளிலே ஒருவர் உண்மையைத் தேடினுர்; மற்றவர் அவற்றை ரசிக்கத்தக்க முறையிற் கதையாகக் கூறினுர்.

காசிச்செட்டியவர்கள் தமிழ்ப்புலவர் சிலருடைய காலங்களை நிறுவ ஆங்காங்கே முயன்றுள்ளார். ''நூல் தோன்றிய காலத்தை அறிந்தாலன்றி அந்நூலிலுள்ள கருத்துக்களை நாம் முற்றிலும் அறிந்துகொள்ள முடியாது. இலக்கிய சரிதமும் அமைக்க முடியாது. இலக்கியச் சான்றுகளால் உணரப்படும் தேச சரித்திரமும் வரையறை எய்தமாட்டாது. தமிழ்மொழியின் சரித்திரமும் அறிதற்கு இயலாததாகும். தமிழ்நாட்டில் உல

விய கருத்துக்களின் வரலாறும் (History of Tamilian Thought) நாகரிக வரலாறும் மயக்கத்திற்கிடமாகவே இருக்கும். ஆதலால், கால ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாததாகும்''. இவ்வசனங்கள் தமிழ் நூல்களின் காலங்களை நிறுவுவதிற் பெரிதும் உழைத்த எஸ். வையாபுரிப்பிள்ளை தமது 'தமிழ்ச்சுடர் மணிகள்' என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையிலேயுள்ளவை. காசிச்செட்டியவர்கள் கால ஆராய்ச்சியில் ஈடுபட்ட முன்னோடிகளிலே ஒருவர். இவர் வழியிலே மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை, ஆலப்புழை பெ. சுந்தரம் பிள்ளை போன்றோர் பின்பு உழைத்தனர். காசிச்செட்டியவர்கள் தருகின்ற காலவரையறைகளிற் சில இன்று பிழையானவையாக இருப்பினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறிலே கால ஆராய்ச்சி என்பது 'தொட்டிற் பிள்ளை' யாக இருந்த காலத்தில், அவர் அதனைப் பேணி, பிற்சந்ததியாருக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றிக்குக் காலநிர்ணயம் இன்றியமையாதது என்பதை உணர்த்தியிருக்கிறார் என்று கூறுவதிற் பிழையில்லை. அண்மைக்காலம் வரை எழுந்த தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகளும் நூல்களும் கால ஆராய்ச்சி செய்வனவாகவே திகழ்வது ஈண்டு குறிப்பிடத்தக்கது; அவ்வாறு அவை திகழ்ந்தபோதும் இன்றும் தமிழ் இலக்கிய சரிதத்திலே முக்கியமான பல நூல்களின் காலங்கள் சித்தாந்தமாக வரையறுக்கப்படவில்லை என்பதும் சுட்டற்பாலது. காசிச்செட்டியவர்கள் தம் காலத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கருத்துக்களின் துணையுடன் கால ஆராய்ச்சி செய்தார்.

சுந்தரமூர்த்தி நாயனுர் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் இறுதியிலும் கி. பி. எட்டாம் நூற்றுண்டின் தொடக்கதிலும் வாழ்ந்தவர் எனத் தற்கால ஆய்வுகள் சுட்டுகின்றன.[48] காசிச்செட்டியவர்கள் காலத்திலே 'மக்கன்சி' தொகுத்த சுவடிகளிலே (Mackenzie Mss) [49]

'சோழ பூர்வ பட்டயம்' எனவொன்றிருந்தது. அதனை ஆதாரமாகக் கொண்டு சேரமான் பெருமாளுயனார் கலி வருடம் 3538-ல் (கி. பி. 437) அரசுகட்டிலேறினர் எனக் கொண்டனர். இச்செய்தியைத் 'தமிழ் புளூராக்' ஆசிரியர் பேணியுள்ளார். புராணங்கள் தரும் கால வரையறை பற்றிக் காசிச்செட்டியவர்கள் கொண்டிருந்த கருத்தைச் சுந்தரமூர்த்திநாயனரின் காலம் பற்றி அவர் கூறிய வார்த்தைகள் காட்டுகின்றன. அவை மேல்வருமாறு:

"In our opinion as the date given in the Cholapurva Patayam for the accession of Cheraman Peruman seems to admit of no doubt, we may therefore [place the period of the existence of Sundarer and his two fellow Champions in the fifth Century of the Christian era for a certainty and thereby clear it from the monstrous chronology of the Puranas".

அதிகமானும் சேரமான் பெருமாளும் ஒருவரே என்ற கருத்தை மறுத்துரைக்குமிடத்து 'சென்னை இலக்கிய அறிவியல் சஞ்சிகை' (Madras Journal of Literature and Science, vol. vii, p 284)சேரமான் பெருமாள் பற்றிக் கூறிய செய்தியையும் 'ஆசிய ஆய்வுகள்' (Asiatic Re searches, Vol. vii, P. 349) என்னும் சஞ்சிகை திருவள்ளுவர் பற்றிக் கூறிய செய்தியையும் ஆதாரமாகக் கொண்டு அக்கருத்தை மறுத்துரைக்கிருர். 'சென்னை இலக்கிய அறிவியில் சஞ்சிகை' சேரமான் பெருமாள் கி. பி. 437-ல் அரசுகட்டிலேறியதாகக் கூறிற்று; 'ஆசிய ஆய்வுகள்' திருவள்ளுவர் காலம் கி. பி. எட்டாம் நூற்ருண்டென உரைத்தது. குணவீரபண்டிதர் வெண்பாப் பாட்டியலை வச்சணந்திமுனிவரின் வேண்டுகோளின்படி திரிபுவனதேவர் காலத்தில் இயற்றினர் என்பது பாயிரத்தாற் பெறப்படும் செய்தியாகும். காசிச்செட்டியவர்கள் திரிபுவனதேவன் 'அனுமகொண்

டா' வில் (Anumakonda) கி. பி. பதினேராம் நூற்ருண்டில் ஆட்சிபுரிந்த திரிபுவனமல்லன் போலும் என்று கருதினர். 'சென்னை இலக்கிய அறிவியல் சஞ்சிகை' (vol x p. 20) காசிச்செட்டியவர்களை இம்முடிபினை எடுக்கத் தூண்டியது. திரிபுவனதேவன் மூன்ரும் குலோத்துங்கன் என்னும் சோழமன்னன் என்பது அண்மைக் காலத்திற் கல்வெட்டாராய்ச்சியாளர் தந்த செய்தியாகும்[50]. கம்பருடைய காலத்தைப் பற்றிக்கூறுமிடத்து பாயிரத்திலிடம்பெறும் செய்யுள் மூலம் இராமாயணம் கி. பி. 886ல் (Saka 808) இயற்றப்பட்டது என்று கருதப் பட்டபோதும் 'ஒப்பியலிலக்கணநூல்' ஆசிரியர் கால்ட்வெல் குமரிமுனையிலும் சாளுக்கிய நாட்டிலுமிருந்து கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு கம்பரை ஆதரித்த சோழ மன்னன் கி. பி. பதினேராம் நூற்ருண்டில் வாழ்ந்ததாகக் கூறி அக் கருத்தை மறுத்துரைத்துள்ளார் என்று உரைப்பர்[51]. கந்தபுராண ஆசிரியர் காலத்தைப் பரசிராமமுதலியார் எழுதிய 'கந்தபுராணவாசகம்' என்னும் நூலிலே எடுத்தாளப்பட்ட செய்யுளை ஆதாரமாகக் கொண்டு நிறுவமுயன்ருர். அச்செய்யுளிலே கந்தபுராணம் சகாப்தம் 700-ல் பாடப்பட்டது என்னும் செய்தி காணப் படுகின்றது. எனவே கி. பி. 778-ல் கந்தபுராணம் பாடப்பட்டதாகக் காசிச்செட்டியவர்கள் கருதினர்.

தமிழ் இலக்கிய வரலாற்ருசிரியர் கால நிர்ணயத் திற்குத் தாம் எடுத்துக்கொண்ட நூல்களின் அகச் சான்றுகளை முக்கிய ஆதாரமாகப் பயன்படுத்துவார்கள். காசிச்செட்டியவர்கள் இம்முறையினையும் கால ஆராய்ச் சிக்கு ஆங்காங்கு பின்பற்றியுள்ளார். சிவவாக்கியர் காலத்தை இன்று சிலர் பட்டணத்துப்பிள்ளையாருக்கு முற்பட்டது என்பர்; வேறு சிலர் சிவவாக்கியரும் திருமழிசையாழ்வாரும் ஒருவரே என்பர்.[52] ஆனல் காசிச்செட்டியவர்கள் சிவவாக்கியர் பாடலிற்

காணப்படும் செய்தியைப் பயன்படுத்தினர். "இவர் வாழ்ந்த காலத்தைப் பலவாறு கூறுவர். ஆனால் அதனைத் தக்காணத்திற்குள்ளே 'முகமதியர்' ஊடறுப்பதற்கு முற்பட்டது என்று கூறமுடியாது. ஏனெனில் அவர் 'முகமதியரை'த் தம் நூலிலே சுட்டியுள்ளார்" என்பது காசிச்செட்டியவர்களின் கூற்று. மண்டல புருடரின் காலத்தைப் பற்றிக்கூறுமிடத்து, "விசய நகரத்திலே கி. பி. 1508 முதல் கி. பி. 1530 வரை ஆட்சி புரிந்த கிருஷ்ணராயர் காலத்தில் வாழந்தவர் போலத் தெரிகின்றது; ஏனெனில் தமது நிகண்டின் ஒன்பதாம் தொகுதியிலுள்ள பத்தாம் செய்யுளிலே மண்டலபுருடர் அவரைப் போற்றுகிறார்" என்று கூறுவர். 'தமிழ் புளூராக்' இரண்டாம் பதிப்புக்குக் குறிப்புரை எழுதிய தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை காசிச்செட்டியவர்கள் கூறிய இச்செய்தியை ஏற்றுள்ளார்.

காசிச்செட்டியவர்கள் காலத்திலே புகழ்பெற்ற புலவர்கள் இயற்றியதாகச் சிறப்பில்லாத நூல்களும் அவர்கள் தலைமேல் ஏற்றப்பட்டன. இந்நிலையைக் கண்ட காசிச்செட்டியவர்கள் போன்றவர்களுக்குக் காலநிர்ணயம் செய்வதோடு ஒவ்வொரு புலவரும் இயற்றியதாக வழங்கப்படும் நூல் அவரால் இயற்றப்பட்டதுதானா என்று ஆராய்வதும் முக்கியமான வேலையாகவிருந்தது. அகத்தியர் பெயரால் வழங்கப்படும் 'இருநூற்றஞ்சு' என்னும் நூலையும் 'பூரண சூத்திரம்' என்னும் நூலையும் அகத்தியர் இயற்றவில்லை என்று கூறவந்த காசிச்செட்டியவர்கள் முன்கூறப்பட்ட நூலிலே 'பறங்கி வியாதி'யும் பின்கூறப்பட்ட நூலிலே 'பறங்கி பாஷாணமும்' கூறப்படுவதால் இவை போர்த்துக்கேயர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு இயற்றப்படவில்லை என்றுரைக்கின்றனர். 'ஞானவெட்டியான்' திருவள்ளுவர் பெயரால் வழங்கிவந்தது. காசிச்செட்டியவர்கள் 'ஞானவெட்டியான்' என்னும் நூலின் பாயிரச் செய்

யுளைத் துணைகொண்டு அந்நூல் திருவள்ளுவரால் இயற்றப்படவில்லை என்று நிறுவுகிருர். 'அல்லியரசாணிமாலை'யின் ஆசிரியர் புகழேந்தி என்று கூறல் அவ்வாசிரியருக்கு இழுக்கு என்று கருதியவர் காசிச்செட்டியவர்கள்.

'தமிழ் புளூராக்' ஆசிரியர் கால்ட்வெல், றெய்லர், பேர்சிவல், ஹைல், ருெபட்ஸ், அயின்ஸ்லி முதலியோர் எழுதிய நூல்களையும்[53] எல்லிஸ் செய்த திருக்குறள் மொழிபெயர்ப்பு, பாபிங்டன் செய்த 'வீரமாமுனிவர்' இயற்றிய செந்தமிழ் இலக்கணத்தின் மொழிபெயர்ப்பு முதலிய நூல்களையும்[54] 'சென்னை இலக்கிய அறவியல் சஞ்சிகை' (Madras Journal of Literature and Science), 'ஆசிய ஆய்வுகள்' (Asiatic Researches), 'கல்கத்தா காலாண்டு மதிப்பீடு' (Calcutta Quarterly Review), 'அமெரிக்க கீழைத்தேயச் சங்கத்தின் சஞ்சிகை' (Journal of the American Oriental Society), 'உதயதாரகை' முதலிய சஞ்சிகைகளிலுள்ள கட்டுரைகளையும் தமது நூலாக்கத்திற்குப் பயன்படுத்தியுள்ளார். வில்லியம் றெய்லர் அளித்த தொகுப்பு நூல் 'தமிழ் புளூராக்' ஆசிரியருக்குச் சிறப்பாக உதவியுள்ளது என்று கூறுவதிற் பிழையில்லை. முற்கிளந்தனவற்றுடன் வில்லிவாக்கம் தாண்டவராய முதலியார், புதுவை நயனப்பமுதலியார், திருத்தணிகை சரவணப்பெருமாளையர், களத்தூர் வேதகிரி முதலியார் முதலிய பதிப்பாசிரியர்கள் வெளியிட்ட தமிழ் நூல்களும் அச்சேருது ஏட்டுவடிவாயிருந்த தமிழ்ச்சுவடிகளும் காசிச்செட்டியவர்களுக்குத் தமிழ்ப்புலவர் செய்திகளை அறிய உதவின. சுப்பிரமணிய பண்டிதர் பதிப்பித்த பதார்த்த குணசிந்தாமணி, பரசிராமமுதலியார் எழுதிய கந்த புராண வாசகம் என்பனவும் ஆசிரியராற் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆங்கில நெடுங்கணக்கின்படி தமிழ்ப்புலவர்களைக் காசிச்செட்டியவர்கள் வரிசைப்படுத்திக் கூறும் 'தமிழ்

புலூராக்' என்னும் நூலிலே 197 பேர்களுடைய சரிதங்கள் இடம்பெறுகின்றன [55]. இவர்களுள் அரசகேசரி, நல்லூர் வி. சின்னத்தம்பிப்புலவர், சுன்னுகம் வரத கவிராயர்(அ. வரதபண்டிதர்), மாதோட்டம் லோரெஞ்சுப் புலவர், ஞானப்பிரகாசதேசிகர் (ஞானப்பிரகாச முனிவர்), கூழங்கையர் (கூழங்கைத்தம்பிரான் அல்லது கனகசபாபதியோகி), பிலிப்பு தெ மெல்லோ 1723-1790), மாதோட்டம் குமாரசிங்க முதலியார், வட்டுக்கோட்டை கணபதி ஐயர் (-1803), நெ. சேனுதிராய முதலியார் (–1840), நல்லூர் ம. சரவணமுத்துப்புலவர் (-1845), அராலி விசுவநாதசாஸ்திரியார் ஆகிய பன்னிருவரும் ஈழத்தவராவர் [56].

காசிச்செட்டியவர்கள் தம் காலத்திலே தெரியவந்த செய்திகளை ஆதாரமாகக் கொண்டு தமது நுண்ணறிவின் துணையோடு கர்ணபரம்பரைக் கதைகளிலே உண்மைகாண முற்பட்டபோதும் பலபிழைகளை விட நேர்ந்தது. தமிழ்இலக்கிய சரிதத்திலே 'சங்ககாலம்' எனவும் 'முவேந்தர் காலம்' எனவும் அழைக்கப்படும் காலப்பிரிவுக்குரியதாகக் காசிச்செட்டியவர்கள் தரும் செய்திகளை நோக்கின் நாம் பல தவறுகளைக் காணலாம். கி. மு. ஒன்பதாம் நூற்றுண்டு முதல் கி. பி. பதினுன்காம் நூற்றுண்டுவரை அரசோச்சிய பாண்டியர் முச்சங்கங்களை மூவேறு காலகட்டங்களில் நிறுவினர் என்று காசிச்செட்டியவர்கள் தமது முகவுரையிலே கூறுவர். கிறீஸ்தாப்தம் ஒன்பதாம் நூற்றுண்டில் நக்கீரர் மதுரைச் சங்கத்தின் தலைவராக இருந்தார் என்பதும் வரதுங்கராம பாண்டியனுடைய பிரமோத்தர காண்டமும் வீரகவிராயரது அரிச்சந்திர புராணமும் மதுரைத்தமிழ்ச் சங்கத்திலே அரங்கேற்றப் பட்டன என்பதும் காசிச்செட்டியவர்கள் 'சங்க' காலத்தின் கீழெல்லை பற்றிக் கொண்டிருந்த கருத்தால் எழுந்த கூற்றுகளேயாம். மு. இராகவையங்கார் தமது

'சேரன் செங்குட்டுவன்' என்னும் நூலிலே (1915) கடைச்சங்கத்தின் இறுதிக்காலம் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டென்று கொண்டார்[57]. எல். டி. சுவாமிக் கண்ணுப்பிள்ளை கடைச்சங்ககாலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டென்று கருதினுர்[58]. காசிச்செட்டியவர்களுக்குப் பின்பு இவர்களே 'சங்க' காலத்தின் கீழெல்லையைப் பொதுவாக ஏற்றுகொள்ளப்படும் காலவரையறைக்குப் பிற்பட்டதாகக் கருதியவர்களிற் குறிப்பிடத்தக்கவர். இன்று கடைச்சங்ககாலத்தின் கீழெல்லை கி. பி. மூன்ரும் நூற்றுண்டெனப் பொதுவாக நம்பப்படுகின்றது[59]. காசிச்செட்டியவர்கள் பதினுன்காம் நூற்றுண்டுவரை கொண்ட நீண்ட காலப்பிரிவு இன்று இலக்கிய வரலாற்ருசிரியரால் மூவேந்தர், களப்பிரர், பல்லவர், சோழர் காலங்களாக வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

காசிச்செட்டியவர்கள் காலத்திலே இறையனுரகப் பொருளுரை பதிப்பிக்கப்படவில்லை[60]. இறையனுர் என்னும் புலவர் 'இறையனுரகப்பொருள்' என்னும் நூலை இயற்றியிருக்கிருர் என்று கூறும் காசிச்செட்டியவர்கள் அந்நூலைப் பார்த்தவராகத் தெரியவில்லை. 'உருத்திர சன்மர்' வரலாறு கூறும் காசிச்செட்டியவர்கள் ஆங்கு 'உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திரசன்மன்' களவியலுரை கேட்ட செய்தியைக் கூறவில்லை. களவியலுரையின் முச்சங்க வரலாற்றில் இடம்பெறும் புலவர்கள் பலரையும் காசிச்செட்டியவர்கள் குறிப்பிடவில்லை. ஆயினும் இறையனுரகப்பொருளுரையில் இடம்பெற்ற 'முச்சங்க வரலாறு' பற்றிய செய்திகளிற் சில அவருக்குத் தெரிந்திருந்தன. மழவை மகாலிங்கையர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினுர்க்கினியருரையுடன் பிலவங்க வருடம் ஆவணி மாதத்திலேயே (1847) வெளியிட்டுவிட்டார். நச்சினுர்க்கினியருரையிலே 'சங்கச் செய்திகள்' சில இடம்பெற்றிருந்தன. காசிச்செட்டியவர்கள் நூலெழுதிய காலத்திலே திருத்

தணிகை சரவணப்பெருமாளையர், முகவை இராமாநுசக் கவிராயர், களத்தூர் வேதகிரி முதலியார் முதலியோர் திருக்குறளை உரையுடன் பதிப்பித்துவிட்டனர். இவர்களுடைய பதிப்புகளிலே திருவள்ளுவர் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளும் இடம்பெற்றிருந்தனபோலும். திருவள்ளுவர் தமது குறளை அரங்கேற்றச்சென்ற சங்கத்திலே நாற்பத்தொன்பதின்மர் இருந்தனர் என்றும் ஔவையார், உறுவை, உப்பை, அதிகமான், கபிலர் ஆகியோர் வள்ளுவரின் சகோதரர் என்றும் காசிச்செட்டியவர்கள் கூறுவர். ஆயினும் இறையனாரகப் பொருளுரையையும் வள்ளுவர் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளையும் ஆதாரமாகக்கொண்டு பிறர் 'சங்கம்' பற்றிக் கூறிய செய்திகளைத் தழுவ முற்பட்ட காசிச்செட்டியவர்கள் இறையனார் கடவுளல்ல மனிதரே என்று தொடக்கி வைத்த ஆட்சேப நெறியிலே வரலாற்றுணர்வுடையோர் இருபதாம் நூற்றாண்டின் விடியல் முதலாகச் செல்ல முயன்றுள்ளனர் என்பது சுட்டற்பாலது[61]. 'தமிழறியும் பெருமாள் கதை' சண்பக வடிவி சரிதம் கூறக் காசிச்செட்டியவர்களுக்கு இடமளித்தது. எனவே ஆசிரியர் இறையனாரகப்பொருளுரை பற்றிய குறிப்புக்கள், வள்ளுவர் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் என்பன தந்த செய்திகளோடு ஏனைய கதைகளையும் ஆய்ந்து உண்மைகாண முற்பட்டார் என்பது போதரும். இம்முயற்சியிலே அவர் வெற்றி காணமுடியவில்லை. ஏனெனில் இவை உண்மையின் அடிப்படையில் எழுந்தவையல்ல என்று இன்று புலப்படுமாறுபோல அன்று ஆராய்ச்சியிலீடுபட்டோருக்குத் தெரியவில்லை. இதனாலே 'தமிழ் புளூராக்' தரும் 'சங்க' காலம் பற்றிய செய்திகள் காசிச்செட்டியவர்களுக்குச் சிறப்பளிப்பனவாகவில்லை.

இந்நிலைக்குரிய முக்கிய காரணங்களிளொன்று இக்காலகட்டம் பற்றி அறிவதற்குப் போதுமான ஆதாரங்

கள் கிடையாமையேயாகும். காசிச்செட்டியவர்கள் திருவள்ளுவமாலையைக் காணுதிருந்தால் 'சங்கப்புலவர்' என்ற பிரிவினரையே குறிப்பிட்டிருக்க மாட்டார். வேதகிரி முதலியார் 1849-ம் ஆண்டு பரிமேலழகருரையைத் தழுவித் தாம் இயற்றிய உரையுடன் திருக்குறளைப் பதிப்பித்தார். இப்பதிப்பிலே திருத்தணிகை சரவணப்பெருமாளையர் திருவள்ளுவமாலைக்கு இயற்றிய உரையும் அதன் மூலமும் இணைக்கப்பட்டுள்ளன[62]. அகநானூற்றிலே இடம்பெறும் ஔவையாரது பாடலைக் (147) காணுத காசிச்செட்டியவர்கள் வெள்ளிவீதியாரை ஆணுகக் கருதினர். பழைய நூல்களிலே தொல்காப்பியம், திருமுருகாற்றுப்படை, திருக்குறள், நாலடியார், இனியவைநாற்பது, திரிகடுகம் ஆகியனவே 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலே இடம்பெறுகின்றன. எட்டுத்தொகை நூல்கள் காசிச்செட்டியவர்கள் காலத்திலே வெளிவரவில்லை. 1887-ல் கலித்தொகையும், 1894-ல் புறநானூறும், 1903-ல் ஐங்குறுநூறும் 1904-ல் பதிற்றுப்பத்தும் 1915-ல் நற்றிணையும் குறுந்தொகையும் 1918-ல் பரிபாடலும் 1920-ல் அகநானூறும் முதன்முறையாக வெளிவந்தன. பத்துப்பாட்டு 1889-ம் ஆண்டிலே முதன்முறையாக வெளிவந்தது. திருமுருகாற்றுப்படை சைவருக்குரிய பாராயண நூல்களுளொன்ருகச் சிறப்புற்றமையாற் காசிச்செட்டியவர்கள் காலத்திலேயே வெளிவந்துவிட்டது. ஆறுமுகநாவலர் நச்சினர்க்கினியருரையைத் தழுவித் திருமுருகாற்றுப்படைக்கு எழுதியவுரை பிரமாதீச வருடத்திலேயே (1853) வெளிவந்துவிட்டது[63]. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிற் சில காசிச்செட்டியவர்கள் காலத்திலேயே வெளிவந்துவிட்டன. மாணுக்கருக்குப் போதிக்கப்பட்ட அறம், நீதி பற்றிக் கூறும் கீழ்க்கணக்கு நூல்கள் தேவையையொட்டி மேற்கணக்கு நூல்களுக்கு முன்பே செல்வாக்குப்பெற்றுவிட்டன[64]. திருக்குறளிலிருந்து தெரியப்பட்ட பாடல்கள் 1794-ம் ஆண்டி

லேயே லண்டன் மாநகரத்திலே பதிப்பிக்கப்பட்டு விட்டன[65]. தொல்காப்பியம் பற்றியும் அதன் உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், சேனுவரையர், நச்சினுர்க்கினியர் பற்றியும் காசிச்செட்டியவர்கள் அறிந்திருந்தார். மழவை மகாலிங்கையர் எழுத்ததிகாரத்தை நச்சினுர்க்கினியருரையுடன் 1847-ம் ஆண்டிலேயே பதிப்பித்துவிட்டார். ஆனல் தொல்காப்பியத்தின் ஏனைய பிரிவுகளும் உரைகளும் காசிச்செட்டியவர்கள் இறையடி சேர்ந்த பின்பே வெளிவந்தன. சொல்லதிகாரம் சேனுவரையம் சி. வை. தாமோதரம்பிள்ளையால் விபவ வருடம் புரட்டாதி மாதம் (1868) பதிப்பிக்கப்பட்டது[66]. எழுத்ததிகாரம் இளம்பூரணம் விபவ வருடம் கார்த்திகை மாதம் (1868) பூவிருந்தவல்லி சு. கன்னியப்பமுதலியாராற் பிரசுரிக்கப்பட்டது. பொருளதிகாரம் நச்சினுர்க்கினியமும் பேராசிரியமும் 1885-ம் ஆண்டிலும் சொல்லதிகாரம் நச்சினுர்க்கினியம் 1892 ம் ஆண்டிலும் சி. வை தாமோதரம்பிள்ளையால் வெளியிடப்பெற்றன. பொருளதிகாரம் செய்யுளியலுக்கு நச்சினுர்க்கினியரியற்றிய உரையை ரா. ராகவையங்கார் மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடாக 1917-ம் ஆண்டு. வெளியிட்டார். காவேரிபாக்கம் நமச்சிவாய முதலியார் சொல்லதிகாரம் இளம்பூரணத்தை 1927-ம் ஆண்டு பதிப்பித்தார். கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்காக ரா. வேங்கடாசலம்பிள்ளை சொல்லதிகாரம் தெய்வச்சிலையாருரையைப் பரிசோதித்து 1929-ம் ஆண்டு அச்சிடுவித்தார். பொருளதிகாரம் இளம்பூரணம் முழுவதும் வ. உ. சிதம்பரம்பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களால் 1936-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது[67]. கல்லாடரின் சொல்லதிகாரவுரை 1964-ம் ஆண்டிலே வெளிவந்தது[67a]. மேற்கூறியனவற்றை நோக்குமிடத்து காசிச்செட்டியவர்கள் காலத்திலே பழைய தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்படாமலிருந்தமை புலனுகும்

இந்நிலையிலே பண்டைத் தமிழ் இலக்கியம் பற்றிக் கருத்துரைத்தல் கடினமாகும். மல்லாகம் வி. கனகசபைப் பிள்ளைக்கோ அல்லது ஆலப்புழை பெ. சுந்தரம் பிள்ளைக்கோ கிடைத்த வாய்ப்புகள் கூட காசிச்செட்டியவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே அவர் 'சங்க' காலம் பற்றித் தரும் செய்திகள் குறைபாடுடையனவாய் இருத்தல் தவிர்க்கமுடியாததாகும்.

காசிச்செட்டியவர்கள் பிழைபட எழுதியுள்ள ஏனைய செய்திகளிற் சிலவற்றிற்கும், அவருக்குப் போதுமான ஆதாரங்கள் கிடையாமையே காரணமாகும். அகப்பொருட் பாடல்களைக் கொண்ட 'கல்லாடம்' என்னும் நூலைக் காசிச்செட்டியவர்கள் இலக்கண நூல் என்று கருதினர். கல்லாடம் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையாற் பரிசோதிக்கப்பட்டு பூவிருந்தவல்லி சுப்பராய முதலியார் புதல்வர் கன்னியப்ப முதலியாராலும் புங்கத்தூர் கந்தசாமிமுதலியாராலும் சென்னையில் விபவ வருடம் ஐப்பசி மாதம் (1868) முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டது. திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார் என்பனவற்றை இயற்றிய மாணிக்கவாசகசுவாமிகள்[68] குவலயானந்தம் என்னும் இலக்கணநூலையும் இயற்றியதாகக் காசிச்செட்டியவர்கள் கருதுவர். சந்திராலோகம் என்னும் வடமொழி அணி இலக்கண நூலுக்கு எழுந்த வடமொழியுரைநூலே குவலயானந்தம். இதனை அப்பைய தீட்சிதர் எழுதினர். அப்பைய தீட்சிதரின் உரையை மாணிக்கவாசகர் மொழிபெயர்த்தார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்[69]. பெயரொற்றுமையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டபடியாற் காசிச்செட்டியவர்கள் பிழைவிட நேர்ந்தது. குவலயானந்தம் அவருக்குக் கிடைத்திருக்குமாயின் காசிச்செட்டியவர்கள் தவறுவிட்டிருக்கமாட்டார். கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் ஒட்டக்கூத்தர் என்று காசிச்

செட்டியவர்கள் கூறுவதற்கும் இதுவே காரணமாக லாம். ஆயினும் 'தமிழ் புளூராக்' ஆசிரியர் தமது நூலைப் பிழையற எழுத முயன்றுள்ளார் என்று கருத இடமுண்டு.

அரசகேசரி பாடிய இரகுவம்சத்திலே 2444 பாடல்களும் 26 படலங்களும் இருப்பதாகக் காசிச்செட்டியவர்கள் கூறினர். இரகுவம்சத்தை நல்லூர் வித்துவ சிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை காரைக்குடி மெய்யப்பச்செட்டியார் 'கேட்டுக்கொண்டபடி' யாழ்ப்பாணம் வித்தியாநுபாலனயந்திரசாலையிலே பதிப்பித்துச் சர்வசித்து வருடம் ஆவணி மாதம் (1887) வெளியிட்டார். இப்பதிப்பிற்கு முன்பு வேறொரு பதிப்பு வெளிவந்ததென்று கூற எவ்விதமான சான்றுகளும் கிடைத்தில. பொன்னம்பலபிள்ளையின் பதிப்பை நோக்கும்போது காசிச்செட்டியவர்கள் கூறியவாறே 26 படலங்களும் 2444 பாடல்களும் இருப்பதைக் காணலாம் [70]. இரகுவம்சம் பொதுக்காண்டம், சிறப்புக்காண்டம், பொதுச்சிறப்புக் காண்டம் என முப்பிரிவுகளையுடைத்து. பொதுக்காண்டத்திலே பதினாறு படலங்களும் சிறப்புக் காண்டத்திலே ஆறு படலங்களும் பொதுச்சிறப்புக் காண்டத்திலே நான்கு படலங்களும் இடம்பெறுகின்றன. மேற்கூறிய இருபத்தாறு படலங்களிலும் 2434 பாடல்களுள. காப்புச்செய்யுள் ஒன்றினையும் பாயிரச்செய்யுள்கள் ஒன்பதினையும் முற்கிளந்த பாடற்றொகையுடன் சேர்க்க இந்நூலின் மொத்தப் பாடலெண் 2444 என்பது புலனாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த கட்டுரையொன்றிலே ஈழத்தறிஞர் ஒருவர் மேல்வருமாறு கூறுவர் "இரகுவம்சம் என்னும் அத்தமிழ்க் காப்பியம் ஆயிரத்தைந்நூற்றெட்டுச் செய்யுள்களாலானது. அந்நூலானது முதற்கண் கடவுள் வாழ்த்து, பாயிரம் என்பவற்றையும் பின்னர் ஆற்றுப்படலம் முதலாக இந்து

மதி பிறப்பு நீங்கு படலம் இறுதியாகப் பதினறு படலங்களையுந் தன்னகத்தே கொண்டது"[71]. இரு பதாம் நூற்றண்டிலே வாழுகின்ற அறிஞர் இரகுவம்சம் பதிக்கப்பட்ட பின்பு பிழைவிடுவதை நோக்கும் போது இரகுவம்சம் பதிப்பிக்கப்படுவதற்கு ஒரு தசாப்தத்திற்கு முன்பு வாழ்ந்த காசிச்செட்டியவர்கள் (1807-1860) தமது செய்திகளைக் கூடியவரை பிழையில்லாது கூறமுற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருச்செல்வர் காவியம், வீரசோழியம், மாறனலங்காரம், சீரு (சீருப்புராணம்) முதலிய நூல்களைப் பற்றித் தமது 'தமிழ் நூற்பட்டியல்' என்னும் கட்டுரையிலே குறிப்பிட்ட காசிச் செட்டியவர்கள் அந்நூல்களின் ஆசிரியரைப்பற்றித் தமது நூலிலே கூறவில்லை. சிலப்பதிகாரமோ அல்லது சிறப்பதிகாரமோ என்று நூலின் பெயர் கூடத் தமிழறிஞர் பலருக்குத் தெரியாத காலத்திலே[72], 1848-ம் ஆண்டிலே, காசிச்செட்டியவர்கள் அந்நூலின் கதைப் போக்கையும் செய்யுளியல்பையும் அறிந்திருந்தார்; ஆனல் நூலாசிரியர் யாரென்பதை அறியவில்லை[73]. சிலப்பதிகாரத்தின் புகார்க்காண்டத்தைப் பதிப்பித்த தி. ஈ. ஸ்ரீநிவாசராகவாசாரியர் 'சேரமான் பெருமாளு யனர் இயற்றிய சிலப்பதிகாரம்' என அச்சிட்டார்[74]. ஈழ நாட்டிலே புலோலியிலுள்ள மந்திகை என்னுமிடத்திற் சிறப்புடன் விளங்கும் கண்ணகை யம்மன் கோயிலிற் பாராயணஞ் செய்யப்பட்டுவரும் 'கோவலனர் கதை'யைத் தென்புலோலி மா. சே. செல்லையா 1962-ம் ஆண்டிலே பதிப்பித்தார். மட்டக்களப்புப் பகுதியிலேயுள்ள கோவில்களில் படிக்கப்பட்டு வந்த ஏடுகளைப் பரிசோதித்து மண்டூர் வி. சீ. கந்தையா 1968-ம் ஆண்டிலே 'கண்ணகி வழக்குரை'யை வெளியிட்டார். இவ்விரு பதிப்புகளிலும் சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் என்ற செய்தியைத் தரும் பாடல்

களுள [75]. இவை 'வெள்ளிப்பாடல்கள்' அல்லவெனக் கருத முடியுமாயின் காசிச்செட்டியவர்கள் காலத்திற்கு முன்பே ஈழத்தின் சில பகுதிகளிலே சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இன்னார் என்பதை அறிந்திருந்தார்கள் என்று கூறலாம். சிந்தாமணியின் பிரிவுகளின் எண்ணிக்கை பற்றியும் பாடலெண்ணிக்கை பற்றியும் பிழையான செய்திகளைத் 'தமிழ்நூற் பட்டியல்' என்னும் கட்டுரையிலே தரும் காசிச்செட்டியவர்கள் சிந்தாமணியின் ஆசிரியரைப் பற்றியோ அல்லது அந்நூலைப் பற்றியோ அறிந்திருக்கவில்லைப்போலும். பவர் பாதிரியார் (Rev. H. Bower) முத்தையாபிள்ளையுடைய உதவியோடு பரிசோதித்து 1868 - ம் ஆண்டு பதிப்பித்த நாமகள் இலம்பகமே முதன்முதல் வெளிவந்த சிந்தாமணிப் பகுதியாகும்; முழுநூலும் நச்சினார்க்கினியருரையுடன் 1887 - ம் ஆண்டிலேயே முதன்முதலாகப் பதிப்பிக்கப் பெற்றது. திருச்செல்வர் காவியம் பற்றிக் காசிச்செட்டியவர்கள் தரும் செய்திகள் 1896 -ம் ஆண்டு அச்சுவேலி ச. தம்பிமுத்துப்பிள்ளை தமது ஞானப்பிரகாச யந்திரசாலையிற் பதிப்பித்து வெளியிட்ட நூலோடு பெருமளவிற்கு ஒத்திருக்கின்றன. காசிச்செட்டியவர்கள் 24 படலங்களும் 1948 பாடல்களும் இருப்பதாகக் கூறினார்; 1896 - ம் ஆண்டுப் பதிப்பிலே 24 படலங்களும் 1947 பாடல்களுமுள. ஆயினும் அதன் ஆசிரியர் தெல்லிப்பழை பூலோகசிங்க முதலியார் (அருளப்ப நாவலர்) என்பதை அறியவில்லைப்போலும். முற்கிளந்த சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருச்செல்வர் காவியம் என்பவற்றின் ஆசிரியர் பெயர் தெரியாமையாற் காசிச்செட்டியவர்கள் அவற்றின் ஆசிரியர் பற்றித் தமது நூலிலே கூறவில்லை. 'தமிழ் நூற்பட்டியல்' என்னும் கட்டுரையிலே இடம்பெறும் நூல்களிற் சில, 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலே இடம்பெருமைக்கு அவற்றின் ஆசிரியர் பெயர் தெரியாமை காரணமாகலாம்.

வீரசோழியம் என்னும் இலக்கணநூலை வீரசோழியன் இயற்றியதாகக் காசிச்செட்டியவர்கள் தமது கட்டுரையிலே கூறினர். இவ்வாறே மாறனலங்காரமும் மாறனால் இயற்றப்பட்டது என்றுரைத்தார். சி. வை. தாமோதரம்பிள்ளையால் வீரசோழியம் பெருந்தேவனாருரையோடு முதன் முதலாக 1881-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. மாறனலங்காரம் நாராயணையங்காரால் பரிசோதிக்கப்பட்டு 'செந்தமிழ்'ப் பிரசுரமாக 1915-ம் ஆண்டு வெளிவந்தது. இந்நூல்கள் காசிச் செட்டியவர்களுக்குக் கிடையாமையாற்போலும் தாம் நூலாசிரியர் பெயர்பற்றிக் கொண்ட ஊகத்தைத் தமது நூலிலே கூறவிரும்பவில்லை.

சீருப்புராணத்தைப்பற்றி இரு கட்டுரைகளை எழுதியவரும் அதன் ஆசிரியர் உமறுப்புலவர் என்று 'தமிழ் நூற் பட்டியலிலே' கூறியவருமான காசிச்செட்டியவர்கள் உமறுப்புலவரைப் பற்றியோ அல்லது தமது 'தமிழ்நூற் பட்டியலிலே' குறிப்பிட்ட ஏனைய இசுலாமிய புலவர்களைப்பற்றியோ 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலே யாதும் கூறவில்லை[76].

காசிச்செட்டியவர்களைத் தொடர்ந்து புலவர் சரிதம் எழுத முற்பட்ட ஆசிரியர் பலருக்குத் 'தமிழ் புளூராக்' சிறந்த வழிகாட்டியாக அமைந்தது. 'தமிழ் புளூராக்' என்னும் நூலை மொழிபெயர்க்கத் தொடங்கிய அ. சதாசிவம்பிள்ளை (J. R. Arnold) 'பாவலர் சரித்திர தீபகம்' (The Galaxy of Tamil Poets) என்னும் நூலை 1886-ம் ஆண்டிலே தந்தார்[77]. பாவலர் சரித்திர தீபகம் தமிழ் நெடுங்கணக்கின்படி புலவர்களை வரிசைப்படுத்திக் கூறுகின்றது. 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலே இடம்பெறும் செய்திகளை மொழிபெயர்ப்பதோடு தாமாகவும் சில செய்திகளைச் சேர்த்தும் புதிதாக 214 பேரு

டைய வரலாறுகளைத் தந்தும் சதாசிவம்பிள்ளை நூலை எழுதியுள்ளார். "வித்தைக்கண் விருப்புடைய பாலகர் பொருட்டு"[78] சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் எழுதி 1916-ம் ஆண்டிலே வெளியிட்ட தமிழ்ப்புலவர் சரித்திரமும் அகரவரிசைப்படி அமைந்ததேயாகும். இந்நூல்கள் 1953-ம் ஆண்டு ந. சி. கந்தையாபிள்ளையைத் 'தமிழ்ப் புலவர் அகராதி' எழுதத்தூண்டின. வித்துவான் சி. கணேசையர் முன்னையோரைபோலவே புலவர் சரித்திரம் கூறியபோதும் புலவர்களின் சரித வைப்பு முறையை அகரவரிசைப்படி அமைக்காது, "அவர்களுடைய இறந்த காலத்தின் முறையே முறையாகப் பெரிதுங்கொண்டு"[79] வைத்துள்ளார்.

அகரவரிசையையொட்டியும் அதனை மாற்றியும் தமிழ்ப்புலவர் சரிதம் கூறிய ஆசிரியருக்கு மட்டுமன்றி ஏனைய இலக்கிய வரலாற்றுசிரியருக்கும் 'தமிழ் புளூராக்' உதவியிருக்கின்றது. 'பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம்' எழுதிய மயிலை சீனி. வேங்கடசாமி அநந்தபாரதி ஐயங்கார் (1786-1846), புதுவை நயனப்பமுதலியார் (1779- 1845), இராசநல்லூர் இராமச்சந்திர கவிராயர், களத்தூர் வேதகிரி முதலியார் (1795-1852) முதலியோர் பற்றித் தரும் செய்திகளுக்குக் காசிச்செட்டியவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்[80].

## உசாத்துணை

1. மயிலை. சீனி. வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (முதலாம் பதிப்பு, 1962), பக். 20.

2. வேதநாயகம்பிள்ளை 1879 - ம் ஆண்டு வெளிவந்த பிரதாபமுதலியார் சரித்திரத்தின் இரண்டாம் பதிப்புக்கு எழுதிய ஆங்கில முகவுரையிலே "தமிழில் இம்மாதிரி உரைநடை நவீனம் பொது மக்களுக்கு இதுவரை அளிக்கப்படவில்லை. ஆகை யால் இந்தநூல் வாசகர்களுக்கு ரசமாகவும் போதனை நிறைந்ததாகவும் இருக்கலாம் எனப் பெருமை கொள்கிறேன்" என்பர்.

3. 'சொனற்' பதின்மூன்றும் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலே இத்தாலிய நாட்டிலே உருவாகி யது என்றும் ஆங்கிலத்தில் தொமஸ் வைற் (Sir Thomas Wyatt) என்பவர் 1527-ம் ஆண்டு இத்தாலி சென்று மீண்ட பின்பு பாடிய பாடல்கள் மூலம் இடம்பெறத் தொடங்கிற்று என்றும் கூறுவர். (**Dictionary of World Literature.** Edited By Jose ph T. Shipley, 1943)

4. மு. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (முத லாம் பதிப்பு, 1964) பக். 12 "பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் இயற்கையைத் தனியொரு பொரு ளாகக் கருதிப் பாடினாரல்லர் ...... மனித வாழ்க் கையின் பல்வேறு கூறுகளையும் வருணித்துத் தெளிவுபடுத்துவதற்காகவே பண்டைத் தமிழ்ச் சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தினர்".

5. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையின் முதற்பதிப் புக்கு எழுதிய ஆங்கில முகவுரையிலே மறைமலைய டிகள் மேல்வருமாறு கூறுவர்:

"In commenting on this excellent poem I have followed the main lines of literary criticism inculcated by the able and profound critic Professor William Minto; for his critical methods are authentic and help much towards a true and clear understanding of the work taken to be scrutinised"

6. லிற்றன் 'இரகசிய வழி'யின் மூலம் பற்றிக் கூறு மிடத்து மேல்வருமாறு கூறுவர்: "The very striking legend which suggests the following poem is found in ATHENAEUS, book xiii c. 35. It is there given as a Quotation from the 'History of Alexander by Chares of Mitylene".

7. இரட்சணிய யாத்திரிகம் 1894-ம் ஆண்டு பிர சுரிக்கப்பட்டது.

8. வோக்கர் பாதிரியார் (Rev. T. Walker) 29-12-1896 தேதியிட்டு எழுதிய கடிதமொன்றிலிருந்து எடுக் கப்பட்டது மேல்வரும் பகுதி:

"The explanations of Milton's poem are wonderfully accurate and show that you have expended great pains over them. Of the correctness of your poetry also, there is no doubt. Those who know Milton's Paradise Lost will be able to see for themselves how faithful your rendering is ..........."(தமிழ் வட்டம், ஆண்டுமலர், 1967, பக். 209)

9. சி. ஜேசுதாசனும் ஹெப்சிபா ஜேசுதாசனும் ஆங் கிலத்தில் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு என் னும் நூலிலே தரப்பட்டுள்ள இலக்கிய வரலாற்று நூல்களின் பட்டியலை நோக்குக. (**A History of Tamil Literature, 1961; pp. 282-284**)

10. Jaffna: Ripley and Strong - Printers; இந்நூலின் இரண்டாம் பதிப்பு சுவாமி விபுலாநந்தர் அளித்த ஆங்கில முன்னுரையுடனும் தெ. பொ. மீனுட்சி சுந்தரம்பிள்ளை எழுதிய குறிப்புரையுடனும் கொழும்பிலுள்ள General Publishers, Ltd. என்னும் நிறுவனத்தினரால் Ceylon Printers, Ltd. என்னும் அச்சகத்திலே 1946–ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது.

11. W. B. Otis and **M.** H. Needleman: **An Outline History of English Literature**. Vol. 1 **(**1962**)** p. 147.

12. **கரந்தைக் கட்டுரை** (கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 1938) பக். 121.

13. **தமிழ் நாவலர் சரிதை**, (திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு 1949) முகவுரை, பக். 10.

14. மூவேந்தர், பாண்டியன், பாண்டியன்தேவி சோழன் புலவன், பாண்டியன் புலவன், ஒரு தாதி, சோழனும் தேவியும் முதலிய தலைப்புகளிலே தொகுக்கப்பட்ட பாடல்கள் வரலாற்றுணர்வோடு தொகுக்கப்பட்டவை என்று கூறல் பொருந்தாது.

15. சு. அ. இராமசாமிப்புலவர்: **தமிழ்ப்புலவர் வரிசை: ஐந்தாம் புத்தகம்**, (முதற்பதிப்பு, 1953), பக். 108

16. **புலவர் புராணம்**, தி. மு. செந்திநாயகம்பிள்ளை பதிப்பு, சென்னை: கேசரி அச்சுக்கூடம் (மூன்றும் பதிப்பு, 1931), 'உபோத்காதம்' காண்க.

17. எஸ். அனவரதவிநாயகம்பிள்ளை: **தமிழ்ப் பெருமக்கள் வரலாறு** (மாணிக்கவாசகர், பட்டினத்துப்பிள்ளையார்), 1934, பக். 226

18. 'Translation of Kavi Raja Varotheiyen's Poem, giving an account of the origin and history of the Hindu Temple at Trincomalie'. **The Ceylon Government Gazette**, 26. 11. 1831.

19. 'History of the Queen Alliyarasany'. **The Colombo Journal**, 23. 3. 1833; **The Ceylon Magazine**, 1. 3. 95 - 100 (Nov., 1840)

20. 'Remarks on the origin and history of the Parawas' **Journal of the Royal Asiatic Society of Great Britain and Ireland**. Vol. iv (1837)

21. 'On the illustrations of the Manners, Customs and Literature of the Tamils' (1840); 'Aphorisms of the Tamils (6. 4. 1840); 'Extract from Kasi Kandam' (13. 4. 1840)

22. 'Brief Notice of the Philosophers, Poets, etc. both ancient and modern, who have flourished amongst the Tamils of the South of India and Ceylon'. **The Ceylon Magazine**, 1. 1. 8 (Sept. 1840), 1. 2. 64 - 66 (Oct. 1840), 1. 4. 144 - 147 (Dec. 1840), 1. 5. 194-195 (Jan. 1841), 1. 6. 229 - 230 (Feb. 1841).

23. 'The creation and fall of Adam, according to the traditions of the Mahomedans'. 1. 8. 346 - 347 (April, 1841).

24. 'Translation of the Sixth Chapter of Tiruvatavur Purana'. **JCBRAS**. 1. 2. 63-83 (1846-1847)

25. 'A Catalogue of Books in the Tamil Language, with the Names of the Authors, the Subjects and the dates, as far as they can be ascertained' **JCBRAS**. 2. 4. 59-80 (1848; published in 1887); 2. 5. 180-187 (1849-1850; published in 1890).

27. 'Remarks on the Language and Literature of the Tamils', **The Ceylon Magazine,** 1. 2. 51-52 (Oct, 1840); 'An Outline of the Tamil system of Natural History'. **JCBRAS,** 2. 5. 159-169 (1849-50; pub. in 1890.); 'An Analysis of the great poem of the Moors., entitled Seerah'. **JCBRAS. 2.7**

27. **Colombo Observer**, 15. 10. 1859; **Ceylon Times**, 11. 10. 1859.

28. D. P. E. Hettiaratchi, 'Some Literary Undertakings of the Late Simon Casie Chitty'. **JCBRAS,** 30, 80. 455-460 (1927); F, X. C. Nadarajah, 'The Scholarship of Simon Casie Chitty. '**Tamil Culture** 1.3&4, (Sept,1952)

29. "These Poems were inscribed by him to a friend of his in Ceylon, whose name he has introduced at the end of every stanza"

30. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (1962), பக். 197.

30A. சைமன் காசிச்செட்டி தமிழ் மொழியிலே தமது பெயரை சீமான் காசிச் செட்டி என்று வழங்கினார்.

31. அ. சதாசிவம்பிள்ளை: பாவலர் சரித்திர தீபகம் (1886), பக். 230

32. D. P. E. Hettiaratchi, 'Some Literary Undertakings of the late Simon Casie Chitty'. **JCBRAS** 30, 80. 460 (1927)

33. **Sketch of the Rise and Progress of the Catholic Church in Ceylon** (1848)

34. **Notes on the Book of Genesis** (1853)

35. 'On the Identity of Koodremale (Horse's Mountain), a promontory on the N. W. Coast of Ceylon, with the Hippurus, mentioned by Pliny' **The Madras Government Gazette** 16-9-1830; 'Remarks on the site and ruins of Tammanna Nuwara with a survey' **JRAS of Great Britain and Ireland**, Vol. vi (1841); 'An Account of some ancient coins found at Calpentyn', **JCBRAS**, Vol. 1 No. 1.; 'Translation of a Royal Grant engraved on a Copper Plate' **JCBRAS** Vol. 1, No 3; 'Rock Inscription of Piramanankandal' **JCBRAS**, Vol. 2, No. 7.

36. 'On History of Jaffna from the earliest Period to the Dutch Conquest', **JCBRAS**. 1. 3. 73-84 (1847-48)

37. ரேணர் (Turnour) எழுதிய 'Epitome of the History of Ceylon' என்னும் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பை 1839-ம் ஆண்டிற் காசிச்செட்டியவர்கள் வெளியிட்டார்; 'இலங்கையின் சரித்திரப் பொழிப்பு' எனும் பெயரினையுடைத்து.

38. 'A Correct Outline of the Classification of the Tamil Castes' (1831); An Essay on the Ceremonies observed by the Tamil Castes' (1831); 'A Summary Account of the Origin and History of the Mukwas in the District of Puttalam' (1831); 'Essay on the Manners and Customs of the Moors of Ceylon' (1832)

39. 1934-ம் ஆண்டு வெளிவந்த காசிச்செட்டியவர்களது "The Castes, Customs, Manners and Literature of the Tamils" என்னும் நூலும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

40. 'On the Affinity between the Maldivian and Singhalese Languages', **The Ceylon Government Gazette**, 11. 12. 1830; Re-pub. in **The Ceylon Magazine** 1. 1. 16 (Sept. 1840); On the Affinity between the Javanese and Sanskrit Languages', **The Ceylon Government Gazette**, 26. 2. 1831; Re-pub as 'Remarks on the Affinity between Javanese and Sanskrit Languages' in **The Ceylon Magazine**, 1. 9. 390-394 (May 1841); 'On the Rodiyas with a specimen of their Language', **The Ceylon Miscellany**, Vol. 1. (1853); 'Ceylon Moss', **The Ceylon Magazine**, 1. 6. 243-44(Feb. 1841)

41. The Sanskrit and Tamil Dictionary; An English and Tamil Lexicon; Thesaurus of Foreign Words and Phrases in Use Amongst the Tamils.

42. காசிச்செட்டியவர்கள் 1841-ம் ஆண்டு தொடங்கிப் பதின்மூன்று மாதங்கள் மட்டும் நடத்திய திங்களிதழ் உதயாதித்தனுகும்.

43. **A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages**. London: Harrison, 1856.

44. **இலக்கணக்கொத்து**. பாயிரம், 7.

45. சேவியர் எஸ். தனிநாயக அடிகள்: 'முதல் அச்சேறிய தமிழ் நூல்கள்' **கல்கி தீபாவளி மலர்** (1958)

46. M Srinivasa Aiyangar: **Tamil Studies**. **Madras**: Guardian Press (1914), pp, 201—202.

47. வீராசாமி செட்டியாரின் 'விநோதரச மஞ்சரி' அ. சதாசிவம்பிள்ளையின் 'பாவலர் சரித்திர தீபகம்' வெளிவருவதற்கு (1886) முன்பு பிரசுரமாகிவிட்டது.

48. தி. வை. சதாசிவபண்டாரத்தார்: இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுகளும் (முதற்பதிப்பு, 1961), பக். 9 - 20.

49. William Taylor: **Examination and Analysis of the Mackenzie Manuscripts Deposited in the Madras College Library**. Calcutta, 1838.

50. மு. இராகவையங்கார்: சாஸனத்தமிழ்க்கவி சரிதம் (மூன்றும் பதிப்பு, 1961), பக். 81 - 85.

51. காசிச்செட்டியவர்கள் காலத்திலே கம்பருடைய காலம் பற்றி அறிஞர் கொண்டிருந்த மாறுபட்ட கருத்துக்கள் இருபதாம் நூற்றாண்டிலும் நிலவி வருகின்றன. (எஸ் வையாபுரிப்பிள்ளை: கம்பன் காவியம், முதற்பதிப்பு 1955; பக். 145 - 150)

52. A. V. Subramanya Aiyar: **The Poetry and the Philosophy of the Siddhars** (1957) என்னும் ஆங்கில நூலைக் காண்க.

53. William Taylor: **Oriental Historical Manuscripts** in the Tamil Language (Chiefly Bearing upon the History of the Kingdom of Madura). Translated with Annotations. **2**. Vols. Madras, **1835**; Peter Percival **The Land of the Veda**, India Briefly Described in some of the Aspects: Physical, Social, Intellectual and Moral. London, **1854**; **Elizah** Hoole: **Madras, Mysore and the South of India** or A Personal Narrative of a Mission to the South of India, 1820 – 1828. Pub-in 1829, 1844; Roberts: **Oriental Illustrations of the Sacred Scriptures**; Dr. Ainslee: **Materia Indica**;.

54. **On Virtue** (Kural. Three Series of Verses on Ethical and Erotic Themes). F. W. Ellis, 1812; **A Grammar of the High Dialect of the Tamil Language**

**Termed Shen - Tamil**: To which is added an Introduction to **Tamil** Poetry. Translated by B. G Babington. **Madras**, 1822.

55. 'பெருந்தேவனுர்' என்ற தலைப்பின்கீழ் பாரதம் பாடிய பெருந்தேவனுரையும் கவிசாகரம் இயற்றிய பெருந்தேவனுரையும் காசிச்செட்டியவர்கள் அறிமுகஞ் செய்துள்ளார். இதனை நோக்காமல் சிலர் காசிச்செட்டியவர்கள் 196 பேரை அறிமுகஞ் செய்துள்ளார் என்று கூறுவர்.

56. 'யாழ்ப்பாண நாயனுர்' என்ற தலைப்பிலே ஆசிரியர் 'யாழ்பாடி'யின் கதையைக் கூறுவதோடு அமையாது அவருக்கு வீரராகவன் என்னும் பெயரையும் தந்து அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடியதாக வழங்கும் பாடலையும் தருகிருர். ஆயினும் அந்தகக்கவி வீரராகவ முதலியாரைத் தனியாக முன்பு கூறுவதால் இருவரும் ஒருவரல்ல என்பது ஆசிரியர் கருத்தெனலாம். கூழங்கைத் தம்பிரான் தமிழகத்தைச் சேர்ந்தவராயினும் ஈழத்திலே வாழ்ந்து, புகழுடலை நிறுவிப் பூதவுடலை நீத்தவராவர்.

57. 'சேரன் செங்குட்டுவன்' என்னும் நூலின் இரண்டாம் பதிப்பிலே (1929) ''செங்குட்டுவனது காலம் பற்றி யான் முதற்பதிப்பில் எழுதியவற்றைப் புதியவாகக் கண்ட செய்திகளுடன் வைத்து இப்போது சோதனை செய்து வருவதால், அதனைத் தனியே வெளியிடக் கருதி இங்கு நிறுத்திக் கொள்ளலாயிற்று'' என்பர் மு. இராகவையங்கார். 'செங்குட்டுவன் காலம்' தனியே வெளிவந்தமை அறியுமாறில்லை.

58. **An Indian Ephemeris**, Vol. 1, Part 1, pp 459–468; கே. ஜி. சங்கரையர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையின் முடிபுகளை மறுத்து எழுதியுள்ளார். (செந்தமிழ், தொகுதி, 15.)

59. தி. வை. சதாசிவபண்டாரத்தார்: தமிழ் இலக்கிய வரலாறு கி.பி. 250 - கி.பி 600 (இரண்டாம் பதிப்பு, 1957) பக்கம். 1 - 9.

60. இறையனாரகப்பொருளுரை சி. வை. தாமோதரம் பிள்ளையால் 1883-ம் ஆண்டு முதன்முதலாகப் பதிப்பிக்கப்பெற்றது. அந்நூல் வெளிவந்த காலம் முதலாகத் தற்காலம் வரை தமிழ் இலக்கிய சரித த்திலே முக்கிய இடம் வகிக்கின்றது.

61. V. Kanakasabhai Pillai: **The Tamils Eighteen Hundred Years Ago** (1904); M. Srinivasa Aiyangar: **Tamil Studies** (1914); P. T. Srinivas Iyengar: **History of the Tamils** (1929); K. N. Sivaraja Pillai: **The Chronology of the Early Tamils** (1932) etc.,

62. திருவள்ளுவர் நினைவுமலர், திருவள்ளுவர் திருநாட் கழகம், சென்னை, 1935; பக். 39.

63. திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் எழுதியவுரை முதன்முதலாக எப்பொழுது அச்சிடப் பெற்றதென்பதை அறியுமாறில்லை

64, குமரகுருபரர், சிவப்பிரகாச சுவாமிகள் முதலியோர் வாழ்ந்த காலம் முதலாக அறநீதி நூல்கள் தமிழ் இலக்கியத்திலே மீண்டும் செல்வாக்குப் பெற்றமை ஈண்டு சுட்டற்பாலது.

65. Nathaniel Edward Kindersley: **Specimens of Hindoo Literature**: Consisting of Translations from the Tamoul Language, of some Hindoo Works of Morality and Imagination, with Explanatory Notes to which are Fixed Introductory Remarks on the Mythology, Literature, etc. of the Hindus. London, Bulner, 1794.

66. தாமோதரம்பிள்ளையின் சேனாவரையப்பதிப்பினைத் தொடர்ந்து விபவ வருடம் கார்த்திகை மாதம் கோமளபுரம் இராசகோபாலபிள்ளை வெளியிட்ட

பதிப்பைப் பற்றிய செய்திகளை சி. கணபதிப்பிள்ளை எழுதிய 'தொல்காப்பியம்' என்னும் கட்டுரையிற் காண்க. (கணேசையர் நினைவுமலர் 1960)

67. பொருளதிகாரம் இளம்பூரணத்தின் முதலிரு இயல்களையும் வ. உ. சி. அவர்களே பரிசோதனைசெய்து முதலிற் பதிப்பித்தார்; எஸ். வையாபுரிப்பிள்ளை மற்றைய ஏழு இயல்களையும் பரிசோதித்தார். ஒன்பது இயல்களும் 1936–ம் ஆண்டிலே ஒரே நூலாக வெளிவந்தன. [தமிழ்ச்சுடர்மணிகள், நான்காம் பதிப்பு, 1968; பக். 380–381 காண்க.]

67A. கல்லாடருரையின் சில பகுதிகள் 'ஞானசம்பந்தம்' என்னுமிதழில் முன்பு வெளிவந்துள்ளன.

68. திருவாசகம் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் 1837-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. (மு. அருணசலம்: திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள், முதற்பதிப்பு, 1965, பக். 151). இதுவே திருவாசகத்தின் முதற் பதிப்பாகக் கருதப்படுகின்றது. திருக்கோவையார் புதுவை நயனப்ப முதலியாரால் (1779-1845) பதிப்பிக்கப்பெற்றதாகத் "தமிழ் புளூராக்" கூறுகின்றது. ஆறுமுகநாவலர் திருக்கோவையாரைப் பழையவுரையுடன் 1860-ம் ஆண்டு பதிப்பித்தார்.

69. சோம. இளவரசு: இலக்கண வரலாறு (முதற்பதிப்பு, 1963), பக். 225

70. இரகுவம்சத்திலே மேற்குறித்த எண்ணிலும் அதிகமான பாடல்கள் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப் பதிப்பாசிரியர் பொன்னம்பலபிள்ளையின் கூற்று இடமளிக்கின்றது. அக்கூற்று வருமாறு: "இந்நூலில், குலமுறைப் படலத்துக்குப் பின்னுள்ள சரித்திரங்களும் அக்காலத்தில் இவரால் மொழிபெயர்த்துப் பாடப்பட்டன என்பது கர்ண பாரம்பரியம். "நல்லோரறிவெனும் வாய்மை தன்

னுணிலைப்படாவிவன்றன் வெய்ய நீர்மையை நிகழ்த்துகிற்பாம்'' என்னுங்குலமுறைப் படலத்திறுதிச் செய்யுளானும் அஃதுண்டென்பது துணியப்படும். அகப்பட்ட பிரதிகளொன்றினுங் காணப்படாமையாற் பிற்காலத்திற் சிதைந்தன போலும்'' (முகவுரை, 2).

71. கணேசையர் நினைவுமலர், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றப் பிரசுரம் (1960), பக், 318

72. உ. வே. சாமிநாதையர்: என் சரித்திரம் (1950), பக். 936-937.

73. "This poem treats of the adventures of a Cheddi, named Kovalan, who was put to death at Madura on a false charge of having stolen a Chilampu or foot ring, belonging to the King. It is written in a very high style in illustration of the rules of Tamil prosody, but the author and the date are both unknown".

74. உ. வே. சாமிநாதையர் சிலப்பதிகாரம் முழுவதையும் அடியார்க்குநல்லாருரையுடனும் அரும்பதவுரையுடனும் சென்னையிலுள்ள வெள்ளைய நாடாரின் ஜுபிலி அச்சுக்கூடத்திலே பதிப்பித்து 1892-ம் ஆண்டு வெளியிடுவதற்கு முன்பு சிலப்பதிகாரத்தின் புகார்க்காண்டத்தை இருவர் பதிப்பித்துள்ளனர். இவ்விருவரில் யார் முதற் பதிப்பித்தார் என்பதிற் தெளிவில்லை. 'என் சரித்திரம்' எழுதியவர் "சிலப்பதிகாரத்தின் முற்பகுதியை ஸ்ரீநிவாசராகவாசாரியரும் சென்னையிலிருந்த சோடசாவதானம் சுப்பராய செட்டியாரும் பதிப்பித்திருந்தனர். முதல் வெளியீடு ஸ்ரீநிவாசராகவாசாரியருடையதே. புகார்க்காண்டத்தின் முற்பகுதியின் மூலம் மாத்திரம் இருந்தது" (பக். 715) எனவும் "சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டத்தின் மூலத்தை மாத்திரம் பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்பண்டிதராக

இருந்த ஸ்ரீனிவாசராகவாசாரியரென்பவர் முன்பு பதிப்பித்திருந்தார் ..................... 1880- ஆம் வருஷத்தில் சோடசாவதானம் சுப்பராய செட்டியார் அக்காண்டத்தின் மூலத்தை அடியார்க்குநல்லார் உரையோடு அச்சிட்டார்" (பக். 963) எனவும் கூறுவர். எஸ். வையாபுரிப்பிள்ளை, "1872-ல் திரு. சுப்பராய செட்டியாரும் 1876 – ல் திரு T. E. சீநிவாசராகவாச்சாரியாரும் புகார்க் காண்டத்தை உரையுடன் வெளியிட்டுள்ளார்கள்" என்று கூறுவர் (இலக்கிய மணிமாலை, இரண்டாம் பதிப்பு, 1957, பக். 145) மயிலை சீனி. வேங்கடசாமியும் வையாபுரிப்பிள்ளையின் கருத்தையே கூறுவர். (பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், பக். 386-87).

75. கோவலனுர் கதை, மணமாலை. 21, 22; கண்ணகி வழக்குரை, மாதவி அரங்கேற்றுகாதை, 7.

76. 'தேரையர்' எனப்படும், வைத்திய நூல்களை எழுதிய ஆசிரியரை இசுலாமியர் என்பர் சிலர் (எம். கே. செய்யிது அஹமது: முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம், 1968, பக். 48.)

77. "We commenced this work at the instance of a friend, who urged us to translate Mr. Cassie Chetty's Plutarch into Tamil. But instead of following our friend's advice, we set to work ourselves and collected the narratives of 214 poets and poetesses in addition to the 196 found in Mr C's list, thus making the total number 410" (Preface).

78. தமிழ்ப் புலவர் சரித்திரம் (1916), உபக்கிரமணிகை, பக். 9

79. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் (1939), முகவுரை, 9

80. பக். 188, 191-92, 265-66, 196-7.

## 2. தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்த பணி

தமிழையும் சைவத்தையும் பேணி வளர்த்த புரவலராகவும் புலவராகவும் விளங்கிய 'ஆரியச் சக்கரவர்த்தி' களைத் தொடர்ந்து ஈழவளநாட்டின் தமிழ்ப் பகுதிகள் வேற்றுமொழியைத் தாய்மொழியாகக் கொண்ட வேற்றுமதத்தினரின் ஆட்சிக்குட்பட்டன. பதினேழாம் நூற்றாண்டின் முற்கூறிலே போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி ஆளத்தொடங்கினர். அவர்களின் ஆட்சிக்காலம் குறுகியதாக இருந்தபோதும் தம்மதத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் வித்திட்டுச் சென்றனர். ஞானப்பள்ளின் ஆசிரியர்,

> ''பேரான பாராளும் பிடுத்துக்கால் மனுவென்றன்
> பிறதானம் வீசவே கூவாய் குயிலே''

எனப் போர்த்துக்கேய மன்னனை வாழ்த்துகின்றார்[1]. இவ்வாழ்த்துத் தமிழ் வாழ்த்தல்ல; சமயவாழ்த்து. போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டனர். பதினேழாம் நூற்றாண்டின் நடுக்கூறு முதலாகப் பதினெட்டாம் நூற்றாண்டின் கடைக்கூறு வரை தமிழ்ப் பகுதிகள் அவர்கள் ஆட்சியின் கீழ் இருந்தன. ஒரு நூற்றாண்டினும் நீண்டதாக நிலவிய ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சி வந்தது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தமதாட்சியைத் திடப்படுத்துவதிலேயே நாளைப் போக்கினர். கண்டியில் நிலவிய அரசும் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிற் பல்வேறு காலங்களிலெழுந்த விடுதலை இயக்கங்களும் அவர்களுக்கு அமைதியின்மையையே அளித்தன. இந்நிலையிலே தங்கள் சமயப் பிரசாரகருக்குப் பூரண உதவியை அவர்கள் தரமுடியவில்லை; அவர்கள் தந்தது வலாற்காரமான மதமாற்றமே.

> "ஒவ்வோர் புருஷர்க்கும் தங்கள்பேர் சூட்டினர்
> உயர்சிவ பக்தி செய்யாது தடுத்தனர்
> சைவர்களானாலும் தொம்பிலிப் பெற்ற பேர்
> சொன்ன தறியாயோ ஞானப்பெண்ணே"

என உத்தியோக லட்சணக் கும்மி ஆசிரியர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களின் சமயநிலையைப் பற்றிக் கூறியது ஈண்டு மனங்கொளற்பாலது[2]. ஒல்லாந்தரைத் தொடர்ந்த ஆங்கிலேயர் 1815-ம் ஆண்டிற் கண்டியரசினை வீழ்த்தியதோடு தமதாணை ஈழம் முழுவதும் செல்லுபடியாகச் செய்தனர். நாடு முழுவதும் ஒரே அரசின்கீழ் இயங்கியதால் ஆங்கிலேயர் ஆட்சி முன்னையவர் ஆட்சியிலும் வலுவுடையதாகத் திகழ்ந்தது. ஆட்சியை நிலைநிறுத்தச் சமுதாய ஒத்துழைப்புத் தேவைப்பட்டது. சமுதாய மனமாற்றத்தைச் சமயத்தின் மூலம் செய்யக் கருதினார்கள். தமது சமயத்தோடு தமது பண்பாடும் கலாசாரமும் வேரூன்றினால் ஆட்சி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவொன்றாக அமையலாம் என்ற கருத்தாற் 'புரோடெஸ்டாண்டு' பாதிரிமார் வருகையை ஆளுநர் ஆதரித்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மேலைத்தேயங்களிலிருந்த சமயத்தாபனங்கள் பல, 'அஞ்ஞானி' களைத் தெளிவித்து 'பரிசுத்த ஆவி' புகப்பண்ணப் பல திசைகளிலும் பிரசாரகர்களை அனுப்பின. ஈழத்திற்கும் அதன் வடபகுதிக்கும் வெஸ்லியன் மிசன், சேர்ச் மிசன், அமெரிக்கன் மிசன் முதலிய செல்வ வளமுள்ள சங்கங்களைச் சேர்ந்த பாதிரிமார் வந்தனர். அவர்கள் 'சுதேசி'களை மதமாற்றம் செய்யப் பல வழிகளையும் பின்பற்றினர். வேற்று மதங்களுக்கு எதிரே சைவத்தின் நிலை அமைந்திருந்தவாற்றை நாவலர் எழுதிய யாழ்ப்பாணச் சமய நிலை (1872), நல்லூர்க் கந்தசுவாமி கோயில் (ஆடி 1875, புரட்டாதி 1875), மித்தியாவாத நிரசனம் (1876)

முதலிய பிரசுரங்கள் தெளிவாக உணர்த்துகின்றன. சைவகுருமார் பாதிரிமாரின் முன்பு வலுவுடைய அரசை எதிர்த்து நிற்கமுடியாதிருந்த நிலையையும் சைவ சமயத்தின் பேரால் நடத்த ஊழல்கள் புறச்சமயிகளுக்கு அளித்த வாய்ப்புகளையும் இப்பிரசுரங்கள் எடுத்துரைக்கின்றன. மேற்கூறப்பட்ட நான்கு பிரசுரங்களும் தோன்றுவதற்கு முன்பே நாவலர் இத்தகைய சமய பேதநிலையைக் காட்டியுள்ளார். ரௌத்திரி வருடம் வைகாசி மாதம் (1860) எழுதிய 'விக்கியாபனம்' ஒன்றிலே நாவலர் மேல்வருமாறு கூறுவர்:[3]

> "கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமய நூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும், வருகிறபடியினாலே, அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந்தோங்கி வருகின்றது.
> நம்முடைய சைவ சமயிகள் சைவ நூல்களைக் கல்லாமையினாலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது".

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலநிலையையும் ஆங்கிலேயர் காலநிலையையும் ஒப்பிட்ட ஈழத்தறிஞர் ஒருவர் மேல்வருமாறு கூறியுள்ளமை ஈண்டு கவனிக்கற்பாலது:[4]

> "பறங்கியர் ஒல்லாந்தர் காலத்திலே சைவசமயத்துக்கு வந்த வருத்தம் சிரங்கு வருத்தம் போன்றது. அது வெளித்தோல் வருத்தம். உள்ளூறச் சமயம் உயிரைப் பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்திலே சமயத்துக்கு வந்த வருத்தம் கச

வருத்தம் போன்றது. உயிரைக் கொல்லுகின்ற வருத்தம் அது. உட்பகையான வருத்தம். புறப் பகையில் உட்பகை பொல்லாதது.''

மேன்மைபெற்ற சைவநெறியும் அதன் போக் கீடாக அமைந்த பண்பாடும் கலாசாரமும் குன்றும் சூழலிலே ''ஈழநாட்டை மூடியிருந்த மாயாவிருளைச் சீத்து ஞானப்பிரகாசம் காலுமாறு (முற்கூறிய) ஞானப் பிரகாசர் மரபிலே நல்லூரிலே ஆறுமுகநாவலர் உற்ப வித்தனர்''[5]. அவர் கூற்று மூலமே அவர் பணி வெளி யாகின்றது:

''நான் ஜய ௵ முதலாக பீற்றர் பார்சிவல் துரை யுடைய இங்கிலிஷ் வித்தியாசாலையிலே இங்கிலிஷ் கற்றேன். பிலவ ௵ பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனுயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெற வில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடை யவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப் பட்ட விருத்தியை நான் கீலக ௵ புரட்டாதி மீ பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல் துரை, 'நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன். தாங் கள் என்னை விடலாகாது' என்று பலதரம் வற் புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தி யில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலிஷிலே அற்ப விற்பத்தியாயினும்பெற்றிருந்தும் என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங் கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சக்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக் கக் கண்டும், நானும் என் சக்திக்கேற்ற உத்தி யோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்குமென்றறிந்தும், அஃதில்லாமை யால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும் உத்தி

யோகத்தை விரும்பவில்லை. தமிழ்க்கல்வித் துணை மாத்திரங்கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும் அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமேயாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. **இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராசையேயாம்.**''

நாவலரின் சுயசரிதைக் குறிப்புகள் போன்று விளங்கும் 'விக்கியாபனம்' (1868) ஒன்றிலே தமது ஆசையை நாவலர் இவ்வாறு கூறியுள்ளார்[6]. நாவலர் காலம் சமய மறுமலர்ச்சியை வேண்டி நின்றது. எனவே அவர் சமயப் பணியை உயிராகக் கொண்டார். அச்சமயத் தொண்டிற்குத் தமிழ்க்கல்வி கருவியாக அமைந்தது. ஆதலால் ஆறுமுகநாவலரின் இலக்கியப் பணியை நோக்கும்போது நாம் அது சமயத்தின் நிலைக்களத்தையுடையது என்பதை மனங்கொளல் அவசியமாகின்றது.

தமிழ் இலக்கிய கதியை நோக்கின், அது ஆரம்ப தசையில் உலகியற் பண்பு மிக்கதாகவும், பின்பு சமயப் பண்பு மேலோங்கப் பெற்றதாகவும், அண்மைக் காலத்திலே இருவகைப் பண்புகளும் முரணி நிற்கும் தன்மையையுடையதாகவிருப்பதையும் காணலாம். சேர சோழ பாண்டியராம் மூவேந்தர் ஆட்சி செலுத்திய காலப்பிரிவிலே எழுந்த இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் சமயச்சார்பற்றனவாய் விளங்குகின்றன.[7] பரிபாடல் என்னும் தொகை நூலிற் சமய நோக்கும் உலகியலும் இணைந்த பண்பினையுடைய பாடல்கள் காணப்படுவதை நாம் அறியமுடிகின்றது[8]. ஆற்றுப்படையி

ஊைத் திசைதிருப்பும் படைப்பாகத் திருமுருகாற்றுப் படை விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து சமயப் பண்பு தமிழ் இலக்கியத்தில் மேலோங்குகின்றது. சமயவுண்மைகளை இலக்கணத்திலிடம்பெறும் நூற்பாக் கள் போலக் கூறும் தன்மையையும் அதனைப் பத்தியின் அடிப்படையில் உணர்ச்சியூட்டிக் கூறும் பண்பையும் நாம் காணலாம். பத்தியிலக்கியத்தைப் பேணிப் பேரி லக்கியங்கள் கதைகூற முற்பட்டன. பேரிலக்கியத்தின் ஒடுக்கத்திலே தலபுராணங்களும் தலசம்பந்தமான பிரபந்தங்களும் பெருகின. பிரபந்தவகைகளின் பெருக் கத்திலே உலகியற் பண்பு இடம்பெற்றபோதும் இரு பதாம் நூற்றூண்டின் விடியலிலேயே அது மீட்டும் தன்னிலை அடைந்தது.

ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலத்து இலக்கிய இயல் பினை நாம் நோக்கின் நாவலர் தந்த தமிழ் எவ்வாறு அமையும் என்பதை உணரலாம். சேக்கிழார் முப்பத் தேழு செய்யுள்களிற் பாடிய திருநாளைப்போவார் நாயனர் புராணத்தை ஆனைதாண்டாபுரம் கோபால கிருஷ்ண பாரதியார் தம் காலத்துச் சமுதாய அமைப் பின் அடிப்படையிலமைத்து உயிராற்றலுடையதாக மாற்றி மக்கள் பாடி மகிழ்வதற்கேற்ற முறையில் நந் தனர் சரித்திரக் கீர்த்தனையென 1861-ம் ஆண்டிலே நூலாக அளித்தார்[9]. வடலூர் இராமலிங்க சுவாமிக ளின் (1823-1874) 'திருவருட்பா' வின் முதல் நான்கு 'திருமுறை' களும் 1867-ம் ஆண்டிலே வெளிவந்தன[10]. இவற்றிலும் இவர் பாடிய ஏனைய பாடல்களிலும் காணப்பட்ட சமயசமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள் சுப்பிரமணிய பாரதியார் போன்ற புதுமைக் கவிஞரை இருபதாம் நூற்றூண்டிலே மிகவும் கவர்ந்தன. சைதா புரம் தி. காசிவிசுவநாத முதலியார் தம் காலத்தில் வாழ்ந்த செல்வந்தரிடையே நிலவிய சீர்கேட்டையும் அவர்களைச் சார்ந்து பிழைத்து வந்தவர்களின் அலங்

கோலத்தையும் அம்பலப்படுத்துவதற்காக எழுதிய டம்பாச்சாரி விலாசத்தை 1872-ம் ஆண்டிலே பதிப்பித்துவிட்டார்[11]. முன்சீபு ச. வேதநாயகம்பிள்ளை (1826-1889) மேனாட்டு இலக்கிய வடிவமான நாவலைப் பிரதாப முதலியார் சரித்திரம் மூலம் 1876-ம் ஆண்டிலே தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியதோடு 1878-ம் ஆண்டிற் சர்வசமயசமரசக் கீர்த்தனையையும் தந்தார். ஆயினும் பேரிலக்கியங்களின் ஒடுக்கத்திலே பெரியபுராணத்தையொட்டிப் பல்கிப் பெருகிய தலசம்பந்தமான இலக்கிய வடிவங்களும் அவை பின்பற்றிய பொருளும் அலங்காரங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் செல்வாக்குடையனவாய் விளங்கின. தமிழ் இலக்கியத்தைப் பேணுவதிற் சமயத் தாபனங்கள் கொண்ட முக்கிய பங்கே இந்நிலைக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. சோழப்பேரரசின் வீழ்ச்சியினையொட்டித் தமிழ் இலக்கியம் ஆதீனங்களின் வளர்ப்புப் பிள்ளையாக மாறிற்று. மேலைத் தேயத்தினராற் பத்தொன்பதாம் நூற்றாண்டிற் புகுத்தப்பட்ட புதுமுறைக்கல்வியின் விளைவாகத் தமிழ் இலக்கியத்தின் நிலைமை மாறத் தொடங்கியதுபோதும் ஆதீனங்களின் செல்வாக்கு அந்நூற்றாண்டிலே தளர்ந்துவிட்டதெனக் கூறுவதற்கில்லை. ஆதீனக் கல்வியிலே புறச்சமயிகளின் நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலியவை மட்டுமன்றிச் சமயச்சார்பு குறைந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியனவும் இடம் பெறவில்லை. இவற்றைப் பயில்பவர் "வாணாள் வீணாள் கழிப்பர்" என்பர் இலக்கணக்கொத்தின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர்[12]. திருவாவடுதுறை ஆதீன வித்துவானின் மாணவகர் உ. வே. சாமிநாதையர் தாம் சேலம் இராமசுவாமி முதலியாரைச் சந்தித்தமையாலடைந்த பயனை மேல்வருமாறு கூறுவர்[13]:

"அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, கோவை முதலிய பிரபந்தங்களிலும் புராணங்களிலும் தமிழின் பம் கண்டு மகிழ்வதோடு நில்லாமற் பழமையும் பெருமதிப்புமுடைய தண்டமிழ் நூல்களிற் பொதிந்து கிடக்கும் இன்றமிழியற்கையின்பத்தை மாந்தி நான் மகிழ்வதோடு, பிறரும் அறிந்து இன்புறச் செய்யும் பேறு எனக்கு வாய்த்தது".

சமயத் தாபனங்கள் போற்றிய இலக்கிய நெறிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரிசிரபுரம் சி. மீனாட்சி சுந்தரம்பிள்ளை (1815-1876). இவர் அம்பர், ஆற்றூர், உறையூர், கண்டதேவி, குடந்தை, குறுக்கை, கோயிலூர், சூரைமாநகர் (சூரைக்குடி), தனியூர், திருத்துருத்தி (குற்ருலம்), திருப்பெருந்துறை, திருமயிலை, திருவரன்குளம், நாகைக்காரோணம் (நாகபட்டினம்), பட்டீச்சுரம், மண்ணிப் படிக்கரை, மாயூரம், வாளொளி புற்றூர், விளத்தொட்டி, வீரவனம் என்னும் இருபது தலங்களுக்கும் புராணங்களைப் பாடியதோடு, சங்கத மொழியிருந்த நூலை ஆதாரமாகக்கொண்டு திருவாரூர் தியாகேசரைப் பாட்டுடைத்தலைவராக வைத்துத் தியாகராசலீலை என்னும் புராணத்தையும் காசியின் தலவரலாறுகளைக் கூறும் சங்கத நூலாகிய காசிரகசியத்தின் மொழிபெயர்ப்பையும் தந்தார்.[14] 'புராணம் பாடும் புலவன்' எனக் குறிக்கப்பட்ட பிள்ளையவர்கள்[15] பாடிய பிரபந்தங்களிலும் பெரும்பாலானவை தலசம்பந்தமானவை யேயாம். மேல்வரும் பட்டியல் இக்கூற்றினை வலியுறுத்தும்:

1. பிள்ளைத்தமிழ்:-

திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்
திருத்தவத்துறை பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத் தமிழ்

உறையூர் காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்
பெருமணநல்லூர் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்
திருக்குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்
கன்னபுரம் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ்
திருவெண்காடு பிரம்மவித்தியாநாயகி பிள்ளைத்தமிழ்
திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ்

2. அந்தாதி

எறும்பீச்சரம் வெண்பாவந்தாதி
திருச்சிராமலை யமகவந்தாதி
திருவாவடுதுறை யமகவந்தாதி
தில்லையமகவந்தாதி
திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி
திருவானைக்காத் திரிபந்தாதி
குடந்தைத் திரிபந்தாதி
திருவிடைமருதூர்த்திரிபந்தாதி
திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி
பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி
பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி
தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி

3. பதிகம்

கச்சிவிநாயகர் பதிகம்
சுப்பிரமணியசுவாமி பதிகம்
திட்டகுடிப்பதிகம்
மருதவாணர் பதிகம்

4. மாலை:

திருவானைக்கா அகிலாண்டநாயகிமாலை
திருக்கற்குடி மாலை
சிதம்பரேசர் மாலை

5. வாட்போக்கிக் கலம்பகம்
6. சீகாழிக் கோவை
7. திருவிடைமருதூருலா
8. திருவிடைக்கழிக் குறவஞ்சி
9. திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா

சமயசம்பந்தமான முற்கிளந்த நூல்களுடன் சமயப் பெரியோர் மீது பாடப்பட்ட மேல்வரும் நூல்களையும் சேர்க்கப் பிள்ளையவர்கள் பாடிய உலகியலோடு தொடர்பான நூல்கள் மிகவும் சொற்பமேயாம்:

1. குருபூசை மான்மியம்
2. திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் பதிற்றுப்பத் தந்தாதி
3. திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் ஆனந்தக் களிப்பு
4. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
5. ஆதிகுமரகுருபரசுவாமிகள் சரித்திரம்
6. சிவஞானயோகிகள் சரித்திரம்
7. குருபரம்பரை அகவல்
8. அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்
9. அம்பலவாணதேசிகர் கலம்பகம்
10. சுப்பிரமணியதேசிகர் மாலை
11. சுப்பிரமணியதேசிகர் நெஞ்சுவிடுதூது
12. சச்சிதானந்ததேசிகர் மாலை

பிள்ளையவர்கள் தம் நண்பர் முன்சீபு ச. வேதநாயகம்பிள்ளை மீது பாடிய குளத்தூர் கோவையும் தம்

மாணவகர் புதுச்சேரி செ. சவராயலு நாயகர் மீது பாடிய மாலையும் வள்ளலான புதுச்சேரி தானப்பாசாரியார் மீது பாடிய தசவிடுதூதும் வள்ளலான வியாஸர்பாடி விநாயகமுதலியார் மீது பாடிய வியாசைக் கோவையும்[16] அவர் கட்டிய சத்திரத்தைப் புகழ்ந்து பாடிய சித்திரச்சத்திரப் புகழ்ச்சிமாலையுமே இவர் பாடிய நூல்களில் உலகியல் சம்பந்தமானவை. நாகபட்டினத்திலே தம்மை ஆதரித்த அப்பாத்துரை முதலியாரின் புதல்வருடைய திருமணத்தின்போது பாடிய பொன்னூசல், லாலி, கப்பற்பாட்டு, மங்களம், வாழ்த்து என்பனவும் ஞானப்பிரகாசம்பிள்ளையிடம் சாய்வுநாற்காலி வேண்டிப் பாடிய பாடல்கள் போன்ற சீட்டுக்கவிகளும் தனிப்பாடல்களும் உலகியலோடு தொடர்புடையன என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் உலகியற் பண்பு வாய்ந்த நூல்களைத் தாம் பாடுவதற்குரிய முக்கியத்துவமுடையவைகளாகப் பிள்ளையவர்கள் கருதவில்லை என்பது மனங்கொளற்பாலது.[17]

மீனாட்சிசுந்தரம்பிள்ளையைப் போன்று செய்யுளியற்றுவதில் ஆறுமுகநாவலருக்கு அதிகம் ஈடுபாடு இருக்கவில்லை. நாவலரின் சரித்திரத்தை நான்காம் முறையாக எழுதிய நல்லூர் த. கைலாசபிள்ளை[18] நாவலர் செய்யுளியற்றுவதில் ஆர்வங்காட்டாமைக்குரிய காரணங்களை மேல்வருமாறு கூறுவர்:[19]

> "பாட்டுக்கள் தோத்திரம் ஒன்றற்கேயல்லாமல் மற்றவைகளுக்கு அவ்வளவு சிறந்தன அல்ல என்பதும், பாட்டு வடிவமான நூல்களாற் சாமானிய சனங்களுக்குப் பிரயோசனம் இல்லை என்பதும், தற்காலத்தில் இங்கிலிஷ், சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளிலும் வசன நூல்களே வழங்குகின்றன என்பதும், இனித் தோத்திரத்துக்கும் தேவார திருவாசகம் முத

லிய அருட்பாக்கள் இருக்கும்போது அவற்றிற்கு மேலாக நாம் என்ன தோத்திரத்தைச் செய்யப்போகிறேம் என்பதும் இவர் கருத்துக்களாம்''.

மீனுட்சிசுந்தரம்பிள்ளை செய்யுளின் மூலம் செய்த தொண்டினை வசனம் மூலம் செய்த ஆறுமுகநாவலரும் சமயத்தாபனங்கள் போற்றிய இலக்கிய நெறியின் வழியிலே சென்றவரேயாம். ''நாட்டுக்கோட்டைச் செட்டிகள் சிலருடைய வேண்டுகோளின்படி தேவகோட்டைத் தலபுராணத்தை ஐந்நூறு செய்யுள் வரையிற் பாடினரென்றும் கேள்வி'' என்பர் அ. சதாசிவம்பிள்ளை[20]. புலோலிநகர் ஸ்ரீ பசுபதீசுவரப் பெருமானுர் திருவூஞ்சல் என்னும் பிரபந்தத்தையும் நாவலர் பாடியுள்ளார்.[21] வண்ணூர்பண்ணை சி விநாயகமூர்த்திச்செட்டியாரின் கதிரையாத்திரை விளக்கம் என்னும் நூலில் நாவலர் கதிர்காம கந்தவேள் மீது பாடிய கீர்த்தனங்களும் இடம்பெறுகின்றன. இவர் பாடியனவாக வழங்கும் ஏனைய தனிப்பாடல்களும் தெய்வ சம்பந்தமானவையேயாம். நாவலர் தம் ஆசிரியர் நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் (—1845) மீதும் மாணவகர் வி. சுப்பிரமணியபிள்ளை (—1875) மீதும் பாடிய சரமகவிகளே அவர் மானிடர் மீது பாடிய செய்யுள்களாம்.

ஆயினும் ஆறுமுகநாவலரை இலக்கிய கதியால் ஈர்த்துச் செல்லப்பட்டவர் என்று கூறல் முற்றும் பொருந்துவதன்று. தமிழகத்திலே இருந்ததைவிட ஈழத்திலே கிறித்தவர்களாற் சைவர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி தீவிரமாக இருந்தது. குறைந்த தொகையினராகத் தமிழ் மக்கள் ஈழத்தில் இருந்தமையும் மடாலயங்கள் முதலியன ஈழத்தில் இல்லாதிருந்தமையும் கிறித்தவ வளர்ச்சிக்குத் துணையாகவிருந்தன. இதனுலே கிறித்தவரின் தீவிரமான மதப்

பிரசாரம் சைவப்பிரசாரகரைத் தோற்றுவித்தது. ''பெயரளவில் திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுக நாவலரைத் தந்ததேயாயினும், உண்மையை நோக்குமிடத்துப் பதினன்கு வருடக் கிறிஸ்த சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. பதினன்கு வருடக் கிறிஸ்த சூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவலர் என்றெருருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை'' என ஈழத்தறிஞர் ஒருவர் இக்கருத்தை எடுத்துரைத்துள்ளார்.[23]

இலக்கியம் என்பதுயாது; அது எவ்வாறு அமைய வேண்டும் என்று தற்போதைய ஆய்வுக்களத்தில் நின்று நாம் நாவலரை அணுகுவது பொருந்தாது. இருபதாம் நூற்ருண்டின் ஆரம்ப கட்டம் முதலாக மேலைத்தேயக் கல்வி முறையினுல் விமர்சனப் பார்வை பல வழிகளிலும் ரசனை மரபிலிருந்து வேறுபடத் தொடங்கியது. இலக்கியம் பற்றிய கருத்துக்கள் பல இதன் பெறுபேருக வந்துள்ளன. அக்கருத்துக்களை அளவுகோலாகக் கொண்டு தமிழரின் முன்னைய இலக்கிய நோக்கை அளவிட முயறல் இடர்ப்பாடுகள் பலவற்றைத் தோற்றுவிக்கும் பெற்றியுடைத்து. மக்கட் கூட்டத்தின் ஒரு பிரிவினருடைய இலக்கிய சிந்தனை ஒரு காலப் பிரிவில் எவ்வாறு அமைந்திருந்தது; சிருஷ்டிகர்த்தாக்கள் அந்தச் சிந்தனை வழியிலே எவ்வாறு இயங்கினர் என்பதே பொருத்தமான நோக்காகும்.

சமயப்பணியே தலையாய நோக்காகக் கொண்ட நாவலர் தமிழ்ப்பணி செய்தார்; இலக்கியப்பணி புரிந்தார். நாயன்மாரும் ஆழ்வார்களும் சமயப்பணி புரிந்தனர் என்று கூறுவோர், அவர்கள் இலக்கியப்பணி ஆற்றினர் என்ற கூற்றை மறுப்பது கடினம். இலக்கியப் பணி என்ற உணர்வோடு செய்யவில்லை என்று கூறுவோருமுளர். இறைவன்மாட்டு அன்பு பூண்டு அவ

னருளாலே அவன் தாள் பாடிய அடியார்கள் தம் பண்டைய இலக்கிய மரபையும் பேணிப் புதுவழியிலே செல்லக் காலெடுத்துக் கொடுத்தவர்கள் என்பதைப் பத்தியிலக்கியப் பயிற்சியுடையாருக்குக் கூற வேண்டா. ஆறுமுகநாவலரும் சமயக்குரவர் வழியிலே சமயப்பணி செய்யப் புறப்பட்டு இலக்கியப்பணி செய்தார். தர்மாவேசத்தோடும் இலட்சிய வேட்கையோடும் அல்லும் பகலும் சமயப்பணி புரிவதற்கென்றே தம்மை அர்ப்பணித்த நாவலர் இலக்கியவுணர்வோடு அப்பணியைச் செய்தார்.

"அறம்பொரு ளின்பம்வீ டடைதல்நூற் பயனே" என்பது தமிழ் இலக்கணக் கொள்கை.[23] இதனுல் மக்கட்குறுதி பயப்பனவாகிய நாற்பொருளைப்பயக்கும் நெறியன நூல்கள் என்பது போதரும். 'கல்வி கேள்விகள் இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்ய மாட்டார்கள்'' என்பது நாவலர்கூற்று.[24] இவ்வாறு கூறிய நாவலர் தமது காலத்துத் தமிழ்க் கல்வியின் நிலையை ஆங்காங்கே கூறிச் செல்கின்ருர்:

"தமிழ் கற்றவர்களை நடுவுநிலைமையின் வழுவாது பரீஷை செய்து, அதில் வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்கும் சபையார் இக்காலத்தில் இல்லாமையால், தமிழ்க் கல்வியில் வல்லவர்களும், வல்லவர்களல்லாதவர்களும் ஒப்ப மதிக்கப்படுகிருர்கள். அதனுல், நமது தேசத்தாருக்குத் தமிழ்க் கல்வியில் விருப்பமும் முயற்சியும் சிறிதாயினும் இலவாயின."

(தமிழ்ப்புலமை)[25]

"......... இங்கிலிசுப் புத்தகங்கள் சிலநாட் கைக்கொண்டு திரிந்தோரெல்லாம், B.A, B.L , M.A முதலிய பட்டங்கள் தமக்குத் தாமே படைத்திட்டுக்

கொண்டு, இறுமாந்து திரியலாமே. பயன் என்னையோ! சிறுவரும் இகழ்தற்கிடனுமே! இங்கிலிசில் இப்படிச் செய்யத் துணிபவர் யாருமில்லையே! தமிழ்க்கல்வியொன்று பகிடிக்கிடனாயிற்று!!

(குமாரநாயகரலங்காரம்)[26]

"பாதிரிமாருடைய தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிப்பிக்கிற உபாத்தியாயர்கள் தமிழை நன்றாகக் கற்றுக்கொண்டவர்களல்லர்; அவர்களிற் பெரும் பான்மையோர் சம்பளநிமித்தம் கிறிஸ்து சமயத் திற் புகுந்தவர்கள்; கிறிஸ்து சமயத்திற் புகுந்த மையின் பொருட்டே அவர்கள் உபாத்தியாயருத்தி யோகம் பெற்றவர்கள். அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும்பாலன சுத்தத் தமிழ்நடை யின்றி இலக்கணப் பிழைகளினால் நிறைந்தவைக ளும் சைவதூஷணங்களினாற் பொதிந்தவைகளு மாய் உள்ளவைகள். அங்கே படித்தவர்கள் திருத் தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத்தினும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகின்றார்கள். அவர் கள் பேசுந் தமிழோ அன்னிய பாஷை நடை யோடு கலந்த அசுத்தத் தமிழ்"

(யாழ்ப்பாணச் சமயநிலை)[27]

"சைவசமயிகளே! ..... உங்கள் சமய குருமா ருள்ளே சிலரொழிய, மற்றவர்கள் அந்தியேட்டிப் பட்டோலைதானும், இன்னுஞ் சொல்லின் அந்தி யேட்டியென்னும் பெயர்தானும், பிழையற எழுத அறியார்களே!"

(யாழ்ப்பாணச் சமயநிலை)[28]

இத்தகைய சூழலிலே, சமயப்பணி புரியப்புறப்பட்ட நாவலர் தமிழ்ப்பணி புரிய நேர்ந்தது. "திராவிட மென்னும் வடமொழி தமிழென்றாயிற்று" எனவும் "இத்தென்னாட்டில் வழங்குதல் பற்றித் தமிழ்மொழி

தென்மொழியெனவும் படும். சமஸ்கிருதம் பொதுவாயினும், ஆதியிலே வடதிசையினின்றும் தென்திசைக்கு வந்தமையால், வடமொழியெனப்படும்'' எனவும் நாவலர்[29] கூறியிருப்பதைக்கொண்டு சிலர் நாவலருடைய தமிழுணர்ச்சியைச் சந்தேகிப்பர். இதே நாவலர் ''சமஸ்கிருதமும் தமிழும், சிவபெருமானும் இருடிகளாலும் அருளிச்செய்யப்பட்ட இலக்கண நூல்களை உடைமையாலும், ஆன்றோர்களாலே தழுவப்பட்டமையாலும் தம்முள்ளே சமத்துவமுடையனவேயாம்''[30] என்று கூறியிருப்பதை நோக்கின் அச்சந்தேகத்திற்கு இடமில்லை என்பது தெரியவரும்.

''...... நமது தமிழ்நாடெங்கும் பாடசாலைகளைத் தாபித்து, பிள்ளைகளுக்குச் சமயநூல்களையும், அவைகளுக்கு வேண்டுங் கருவி நூல்களையும், 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்' எனவும் 'வறியார் இருமையறியார்' எனவும் திருக்கோவையாரில் அருளிச்செய்தபடி இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாய் உள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகிக நூல்களையும், கற்பித்தலும், திருக்கோயில்கள் தோறும் சனங்களுக்குச் சமயநெறியைப் போதிப்பித்தலும், மிக மேலாகிய புண்ணியங்களாம்''[31] என ஆசை பற்றி அறையலுற்ருர் ஆறுமுக நாவலர். அவ்வாசையினை இன்னல்கள் மத்தியிலும் நிறைவேற்ற முயன்றவர் நாவலர். வண்ணூர்பண்ணையும் சிதம்பரமும் நாவலர் பதிப்பித்த நூல்களும், பதிப்பிக்க வேண்டி எழுதியும் திருத்தியும் முடித்த நூல்களும் பதிப்பிக்கும் பொருட்டு எழுதவும் திருத்தவும் தொடங்கிய நூல்களும் அவர் தம் லட்சியக் கனவுகளை நனவாக்கும் முயற்சியிற் குறிப்பிடத்தக்க வெற்றியீட்டியதைப் பறைசாற்றுவன. சமயப்பணியை முக்கிய நோக்காகக் கொண்ட நாவலர் சமயநூல்களை மட்டுமன்றிக் கருவி நூல்களையும் 'லௌகிக' நூல்களையும் கற்பிக்க வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டமை அவர்தம் தமிழ்ப்

பணியைக் கோடிகாட்டிவிடுகின்றது. சிதம்பரத்திலே வித்தியாசாலை நிறுவும்பொருட்டு விடுத்த 'விக்கியாபனம்' ஒன்றிலே (1860),

> "பிள்ளைகளுக்குப் பாலபாடங்கள், நிகண்டு, திருவள்ளுவர் முதலிய நீதிநூல்கள், சிவபுராணங்கள், இலக்கணம், கணிதம், தருக்கம், வெளிப்படையாகிய வசனநடையிற் செய்யப்பட்ட சைவசமய நூல்கள், பூகோளநூல், ககோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வாணிக நூல், அரச நீதி, சிற்பநூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும்"[32]

என முப்பிரிவிலும் அடங்க வேண்டிய நூல்களை வகுத்துரைத்தார். 'தமிழ்ப்புலமை' என்னும் கட்டுரையிலே தமிழ் கற்கப் புகுஞ் சைவசமயிகளுக்குக் கற்க வேண்டியனவற்றைப் படிமுறையில் வரிசைப்படுத்தித் தந்துள்ளார்[33]. பாலபாடங்கள்: இலக்கணச் சுருக்கம்: நிகண்டு: நீதிநூல்கள்: அருட்பாக்கள்: பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், உபதேசகாண்டம், கோயிற்புராணம், சேதுபுராணம், பதினோராந் திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்கள்: இலக்கணநூல்களும் உரைகளும்: பூகோளநூல்: ககோளநூல்: அங்ககணிதம்: வீச கணிதம்: க்ஷேத்திரகணிதம்: தருக்க நூல்கள் என்ற வரிசையிலமைத்துக் கூறுகின்றார். இவ்வாறு கூறுவதோடு நின்றுவிடாமல் இந்நூல்கள் தமிழ் மாணவகருக்குக் கிடைக்கக் கூடிய வழிவகைகளையும் நாவலர் செய்ய முற்பட்டார். நூல்களையும் உரைகளையும் திருத்திப் பதிப்பித்தும் தாமாகவே நூல்கள் சிலவற்றை இயற்றி அச்சிட்டும் தமிழ்க் கல்விக்கு நாவலர் தொண்டாற்றினர்.

"தமிழ்க் குருகுலத்தில் பிரமசாரிகள் படிக்கப் பாடப்புத்தகம் தேடினோம். 'நாவலர் பாலபாடத்தை விட நயமான புத்தகம் உண்டா? அதையே மாணவர் படிப்பது சிறந்தது' என்றார் வ. வே. சு. ஐயர்" எனச் சுத்தானந்தபாரதியார் கூறியுள்ளார்.[34] தற்கால விமர்சகர்கள் தமது தந்தையாகக் கொள்ளும் வ. வே. சு. ஐயரின் கூற்று ஈண்டு குறிப்பிடத்தக்கது. நாவலர் முறை வகுத்துப் பாலபாடம் எழுதிக்காட்டியவர்.[35] இவரியற்றிய மூன்று பாலபாடநூல்களும்[36] படிமுறை வளர்ச்சியிலே தமிழ்க் கல்வி போதிக்க உதவுவன. சென்னையில் நடைபெற்ற Native Public Opinion என்னும் பத்திரிகையிலிருந்து Ceylon Patriot என்னும் பத்திரிகை யெடுத்து, 1872-ம் ஆண்டு 'ஜூன்' மாதம் 8-ம் தேதி வெளியிட்ட செய்தியிலுள்ள மேல்வரும் பகுதி நாவலர் பாலபாடங்களைத் தரங்காட்டுவன:[37]

> "இச்சென்னையிலுள்ள வித்தியாசங்கத்தார் வெளியிடும் வசன பாட புத்தகங்களைக் காட்டிலும் நாவலர் பாலபாடங்கள் எவ்வாற்றானும் சிறந்தவையாகும். வித்தியாசங்கத்தார் வெளியிட்ட புத்தகங்களை நாவலரவர்கள் எழுதிய பாலபாடங்களோடு ஒப்பிட நினைத்தமைதானும் தவறெனலாம்... நாவலர் எழுதிய பாலபாடங்கள் மூலமாக அந்நிய நாட்டிலிருந்து இங்கு வருவோர் இந்நாட்டு மக்களின் பழக்க வழக்க ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் அறிதலாகும்."

மேலும் பாலபாடங்கள் தமிழ்மொழிப் பயிற்சிக்குச் சிறப்பாகப் பயன்படுவன என்பதைத் தமிழாசிரியர் உணர்வர். "முதலாம் பாலபாடத்துச் சொற்கூட்டங்களை அவதானித்தால்...... அவை பிற்காலத்தில் நாம் பிழைவிடும் சொற்களின் சரியான உருவங்களாக இருக்கும்" என்னும் கூற்றுக் காண்க.[38]

'அன்னிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத் தமிழை'ப் பரிகாரஞ்செய்ய முற்பட்ட நாவலர் பால பாடங்களோடு நின்றுவிடவில்லை. ஏலவே மொழி வளத்திற்கு ஏதுவாகிய நிகண்டில் அடங்கிய சொற்களையும் அவற்றின் பொருள்களையும் அறியும்பொருட்டு சூடாமணி நிகண்டுரையைப் பதிப்பித்தவர்[39], இயன்றளவு பிழையில்லாமல் பேசவும் எழுதவும் பழகும் பொருட்டு, யாவரும் புரிந்துகொள்ளும்படி, எளிய உரைநடையிலே இலக்கணச் சுருக்கம்[40] தந்தார்; இலக்கண வினாவிடை[41] ஈந்தார். இவற்றைப் பயின்றவர்கள் தொடர்ந்து தமிழ்மொழியைப் பயில, வழக்கிலிருந்த உரைகளில் மாணவர்களுக்கு விளங்க வேண்டுவன வற்றை மேலும் விளக்கியும், அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய குறிப்புகள் பல கூட்டியும், பகுபத முடிபு சில காட்டியும், சொல்லிலக்கண சூசி சேர்த்தும், இன்றியமையாத அப்பியாசங்களைத் தொகுத்தும் நாவலர் புதிய முறையில் நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதினர்[42]. தமிழிலே உயர்கல்வி பயில்வோர் கற்பதற்காக நன்னூல் விருத்தியுரை (1851), இலக்கணக் கொத்துரை (1866), தொல்காப்பியச் சூத்திர விருத்தி (1866), இலக்கண விளக்கச் சூறுவளி (1866), பிரயோக விவேகவுரை, இரத்தினச் சுருக்கம், உபமான சங்கிரகம் என்பனவற்றைப் பதிப்பித்தார். சி. வை. தாமோதரம்பிள்ளை சென்னையிலுள்ள ஊ. புஷ்பரதச்செட்டியாரது கலாரத்நாகரவச்சுக்கூடத்தில் விபவ வருடம் புரட்டாதி மாதம் (1868) பதிப்பித்து வெளியிட்ட தொல்காப்பியம் சேனாவரையருரையைப் பரிசோதித்துத் தந்தவரும் நாவலரவர்களேயாம். ஆரம்பக் கல்வி பயில்வோர் முதலாக உயர்கல்வி பெறுவோரீறாகத் தமிழ்மொழியின் இலக்கணத்தைக் கற்கும்பொருட்டு நாவலர் இலக்கண நூல்களைப் பதிப்பித்தார். ஆறுமுக நாவலர் ரௌத்திரி வருடம் ஐப்பசி மாதம் (1860) சென்னையிலிருந்த முத்தமிழ் விளக்கவச்சுக்கூடத்திற்

பதிப்பித்து வெளியிட்ட திருக்கோவையார் பதிப்பில் இடம்பெற்ற 'இனி அச்சிற் பதிப்பிக்கப்படும் புத்தகங் கள்' என்னும் பிரகடனப் பத்திரிகையில் இறையனரகப் பொருளுரை, தொல்காப்பியம் இளம்பூரணருரை, தொல்காப்பியம் நச்சிஞர்க்கினியருரை, அகப்பொருள் விளக்கவுரை, புறப்பொருளுரை, யாப்பருங்கலவுரை, நவநீதப்பாட்டியலுரை, சிதம்பரப்பாட்டியல், பிரபந்த தீபம், வீரசோழியவுரை, நேமிநாதவுரை என்பனவும் காணப்படுகின்றன[43]. நாவலர் எழுதத் தொடங்கிய நூல்களுள் ஐந்து மொழி பற்றியவையேயாம். அகராதி (தமிழ்), அகராதி (சமஸ்கிருதம் தமிழ்), அகராதி (இங்கிலிஷ் தமிழ்), இலக்கண வினவிடை முதற்புத்த கம், சமஸ்கிருத வியாகரணசாரம் என்பன அவர் எழுதத் தொடங்கியவைகளுளடங்குவன.

தமிழ்மொழியைப் பேணி, பல இலக்கண நூல் களைப் பதிப்பித்த நாவலர் 'எடுத்த விடயத்தை நியா யம் வழுவாமல்' எழுதிப் பழகும்பொருட்டு தருக்கசங் கிரகத்தையுரையுடன் (1861) பதிப்பித்தார். தருக்க பரிபாஷையைப் பதிப்பிக்கும்பொருட்டு அவரெடுத்த முயற்சி முற்றுப்பெறுமுன் இறையடி நீழல் சேர்ந்தார்[44].

நாவலருக்குத் தமிழ்ப்பணியில் இருந்த ஈடுபாட் டைச் சிறப்பாக வலியுறுத்துவது அவரியற்றிய இலங் கைப் பூமிசாத்திரமாகும். சமயப்பணி மட்டுமே நோக்காகக் கொண்டவர் புவியியல் பற்றிய நூலை எழுதவேண்டியதில்லை.

நாவலர் பதிப்பித்த, பதிப்பிக்க முயன்ற நூல்களுட் பாலபாடங்கள், நிகண்டு, இலக்கணநூல்கள், தருக்க நூல், பூகோள நூல் ஒழிந்தவை சமய நூல்கள் என்று கூறுவர். அவர் எந்நூல்களை இலக்கியங்களெனக் கருதினர் என்பது ஈண்டு கவனிக்கற்பாற்று. 'தமிழ்ப் புலமை' என்னும் கட்டுரையிலே "பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம்,

கந்தபுராணம், உபதேசகாண்டம், கோயிற்புராணம், காசிகாண்டம், கூர்மபுராணம், சேதுபுராணம், காஞ்சிப்புராணம், திருத்தணிகைப் புராணம், பதினோராந் திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக'' என்று அவர் கூறியுள்ளார்[45]. இக் கூற்றினால் நாவலர் இலக்கியம் பற்றிக் கொண்டிருந்த கருத்து ஓரளவு புலனாகும். நாவலர் பதிப்பித்த நூல்களிற் பல, அவர் இலக்கிய வரிசையிற் சுட்டிய நூல் வகைக்குள் அடங்குவனவாக இருக்கக் காணலாம்.

அவ்வகைக்குள் அடங்காதனவாகக் கொள்ளக் கூடியனவற்றையும் நாவலர் பதிப்பித்தார்: பதிப்பிக்க முயன்றார் என்று கூறவும் இடமுண்டு. "பிரமதேவருடைய திருவவதாரமாய் விளங்கிய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்''[46] என்று திருக்குறளாசிரியரை நாவலர் கருதியபோதும் அவருக்குக் குருபூசை செய்வது 'ஆவசியகம்' என்று கூறும்போது "தமிழ் வழங்கு நிலமெங்கும் நல்லறிவுச்சுடர் கொளுத்தியருளிய''[47] தன்மையை அடையாகக் கூறுவதைக் காணலாம்.[48] திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி வித்துவப் போட்டியில் எழுந்தது; சமயநோக்கிலல்ல. இத்தகைய அந்தாதிக்கு நாவலர் உரையெழுதித் தமது வித்துவத் தன்மையைக் காட்டியுள்ளார். நைடதம் 'புலவர்க் கௌடதம்' என்று சிறப்பிக்கப்படுவது. நைடதப் பாட்டொன்றினை இட்டு, களத்தூர் வேதகிரிமுதலியாருக்கும் நாவலரின் ஆசிரியரான நல்லூர் சரவணமுத்துப்புலவருக்குமிடையே 'உதய தாரகை' யிலே தருக்கம் நீண்டு வளர்ந்தது;[49] நாவலரும் களத்தூர் வேதகிரிமுதலியாருடன் 'உதயதாரகை' வாயிலாகச் சில வாதங்கள் செய்தார்[50]. "சைவசித்தாந்த தீபகராய், செந்தமிழ்ப் பரிபாலனராய், சிவ புண்ணியப் பேறு உடையராய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல

ராம் நம் பெருந்தகையார் ஒருரையியற்றியுள்ளார்'' நைடதத்திற்கென, நைடத மூலத்திற்கு விருத்தியுரை 'புதுக்கியும் திருத்தியும் விளக்கியுஞ் சேர்த்துக் கொடுத்த' மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை தாம் நைடதத்திற்கெழுதிய 'நாத்தியுரை' யிற் கூறுகின்றார்.[51] நாவலர் ரௌத்திரி வருடம் ஐப்பசி மாதம் (1860) பதிப்பித்த திருக்கோவையாரில் இடம்பெறும் 'இனி அச்சிற் பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்' என்னும் பிரகடனப் பத்திரிகையிலே புறநானூறுரை, கலித்தொகையுரை, கார்நாற்பதுரை, களவழிநாற்பதுரை, சிலப்பதிகார வுரை, சீவகசிந்தாமணியுரை முதலியனவும் இடம்பெறுகின்றன.[52] "வேளாளர் பெருமையையும் வண்மையையும் ஏரெழுபது, திருக்கை வழக்கம் என்னும் இரு சிறு காப்பியங்களாலும் விளக்கினவர்''[53] கம்பர். இவ்விரு நூல்களையும் நாவலர் பதிப்பித்ததாகக் கூறுவர். இவை சமயவுணர்வாலே தூண்டப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டன என்று கூறல் பொருந்துவதாகத் தெரியவில்லை; தற்பாதுகாப்பிற்காக—அந்நியர் ஊடுருவலைச் சமாளிப்பதற்காக தமிழ்ச் சமுதாயமும் தனது அன்றைய நிலையை அப்படியே கட்டிக் காக்கவிரும்பியது''[54] என்ற கூற்றே ஈண்டு பொருத்தமானது. இரகுவம்சம் அரிதுணர்தற்பாலனவாகிய கவிகள் பலவற்றையுடையது; ஈழத்தை இகழ்ந்தவருக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்த உதவுவது. எனவே நாவலர் இதனைப் பதிப்பிக்க முயன்றார்: அம்முயற்சி அவர் மருகராலேயே ஈடேறியது. எனவே நாவலர் தமிழ் வளர்க்கவும் வந்தவர் என்பதை அவர் பதிப்பித்த திருக்குறள், திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை போன்றனவும் பதிப்பிக்க முயன்ற கலித்தொகை, புறநானூறு, கார் நாற்பது, களவழி நாற்பது, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, நைடதவுரை, இரகுவம்சம் முதலியனவும் வலியுறுத்துகின்றன. நாவலர் இலக்கிய நோக்கோடு பதிப்பித்த நூல்களுக்கும் பதிப்பிக்க முயன்ற நூல்

களுக்கும் நல்லூர் வித்துவசிரோமணி ச. பொன்னம் பலபிள்ளை எவ்வகையிற் காரணமாயிருந்தனர் என்பது ஆய்வுக்குரியதாகும்.

பண்டைய நூல்களைப் பேணிப் பாதுகாக்க விழைந்த நாவலர் அந்நூல்கள் மக்களிடையே பரவ வேண்டும் எனவும் விரும்பினுர். மக்கள் விரும்பத் தக்க முறையிலே அவற்றை அறிமுகஞ் செய்தாலன்றி அவர்களிடையே அவை செல்வாக்குப் பெறமாட்டா வென்பதை உணர்ந்த நாவலருக்குக் கிறித்தவர் சூழல் வழிகாட்டிற்று. கிறித்தவர் பிரசாரத்திற்குச் செய்யுளைப் பயன்படுத்தாது வசனத்தைப் பயன்படுத்தியதையும் வசன ரூபமானவை மக்களிடையே ஏற்றுக்கொள்ளப் படும் பண்புடையதாக இருந்ததையும் கண்ட நாவலர் தாமும் இலக்கியங்களை வசனநூல்கள் மூலம் அறிமு கஞ்செய்தார். பெரியபுராண வசனம் பரிதாபி வருடத்திலேயே (1852) வெளிவந்துவிட்டது.[55] கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியனவற்றையும் நாவலர் வசனரூபமாக்கத் தொடங்கினுர்; ஆனுல், அவற்றை அவர் மாணுக்கரே முடித்தளித்தனர். பொது மக்களுக்குப் புராண இலக்கியங்களை நன்முறையில் வசனமாக்கித் தர முன்வந்த நாவலர் பண்டித வர்க் கத்திற்கும் இலக்கியத்தின் குறிப்புப் பொருளை விளக்க முயன்ருர். நாவலர் எழுதிப் பதிப்பிக்கத் தொடங்கிய பெரியபுராணசூசனம் பெரியபுராணத்தின் உட்கிடக்கை யைத் தெளிவாக உணர்த்துவதை நோக்கமாகவுடையது. சமயத் தளத்திலே நின்று நாவலர் இலக்கியப் பணி புரிந்தமைக்குப் பெரியபுராணசூசனம் சான்று பகருகின்றது.

## உசாத்துணை

1. ஞானப்பள்ளு: ஆ. சதாசிவம் பதிப்பு; அரசு வெளியீடு, கொழும்பு, 1968 : பக். 34 ; ஞானப்பள்ளு செபஸ்தியான் பொஞ்சேகா சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்கப் பாடப்பட்டதாகும் (ஞானப் பள்ளு, செய். 4). யேசு சபையைச் சேர்ந்த பொஞ்சேகா சுவாமிகள் 1644-ம் ஆண்டிற் கொழும்பிலிருந்த யேசுசபையினரின் கலாசாலையிலே தலைவராக விளங்கியவர்; 1650-ம் ஆண்டில் 'கொச்சின்' என்ற தென்னிந்திய நகரிலுள்ள கலாசாலையின் தலைவராக நியமனம் பெற்றவர். எனவேதான் மேற்றிராணியார் எட்மண் பீரிஸ் ஞானப்பள்ளு 1644-க்கும் 1650-க்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டதென்பர் (**Education in Ceylon,** Ch. 29, P. 325 : Published by the Ministry of Education and Cultural Affairs. Ceylon, 1969).

2. 'ஆரியச்சக்கரவர்த்திகள்' காலம் முதல் பொன்னம்பலம் இராமநாதனின் அரசியல் வாழ்க்கையின் ஆரம்ப கட்டம் வரையிலுள்ள யாழ்ப்பாண அரசியல் நிலையைச் சுருக்கமாக எடுத்துரைக்கும் உத்தியோக லட்சணக் கும்மியின் ஆசிரியர் இன்னர் என்று தெரியவில்லை. இந்நூலினை 1936-ம் ஆண்டிற் பதிப்பித்த கொக்குவில் கிழக்கினைச் சேர்ந்த எம். எஸ். துரை ஒட்டுமடத்தில் வசித்த தம்பிப் பரிகாரியாரின் மகனுகிய அப்பர் என்றழைக்கப் பட்ட கதிர்காமர் என்பவரே இந்நூலின் ஆசிரியரென்பது கேள்விச் செய்தி என்பர்.

3. த. கைலாசபிள்ளை : ஆறுமுகநாவலர் சரித்திரம் ; சென்னை : வித்தியாநுபாலனயந்திரசாலை (1919), பக். 36

4. சி. கணபதிப்பிள்ளை: 'உண்மை நாவலர்', மரகதம், தை 1962.

5. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை: 'ஈழமண்டலப் புலவர்', செந்தமிழ், தொகுதி 12, பகுதி 10, பக். 383 (ஆவணி, 1914).

6. வே. கனகரத்தின உபாத்தியாயர்: ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம்; நாவலர் நூற்றாண்டு விழாச் சபையினரின் பிரசுரம்; இரண்டாம் பதிப்பு (1968), பக். 94—95.

7. "பழைய சங்க காலத்தை ஆராய்ந்து பார்த்தால், அக்காலத்துத் தமிழர்களுக்கு வேதாந்த உணர்ச்சியாவது சித்தாந்த உணர்ச்சியாவது குறிப்பிடத் தக்க அளவில் இல்லையென்றே சொல்லிவிடலாம். தத்துவஞானத்தைக் காட்டிலும் உலகியல் அறிவிற்குப் பேர்போனவர்கள் பண்டைத்தமிழர்கள். அவர்களுடைய வாழ்க்கையை மலரச்செய்தவை வேத - வேதாங்க - வேதாந்தங்கள் அல்ல; சைவ வைணவ சித்தாந்தங்கள் அல்ல; ஜைன பௌத்தக் கொள்கைகளும் அல்ல; போரும் காதலுந்தான்!" (பி. ஸ்ரீ. மூவர் ஏற்றி மொழி விளக்கு ; சென்னை : கலைமகள் காரியாலயம், முதலாம் பதிப்பு (1956) பக் (10)

8. பரிபாடல், செய். 8

9. க. கைலாசபதி: அடியும் முடியும்; சென்னை: பாரி நிலையம்; முதலாம் பதிப்பு (1970), பக். 288.

10. திருவருட்பா, ஐந்து திருமுறைகள்; சென்னை: சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடு, மூன்றும் பதிப்பு (1968), பக். 58.

11. தொ. மு. சிதம்பரரகுநாதன்: சமுதாய இலக்கியம்; சென்னை; ஸ்டார் பிரசுரம், முதலாம் பதிப்பு (1964), பக். 123.

12. இலக்கணக்கொத்து, பாயிரம், 7-ம் நூற்பா உரை.

13. உ. வே. சாமிநாதையர்: என் சரித்திரம்; சென்னை: கபீர் அச்சுக்கூடம்; முதலாம் பதிப்பு (1950), பக். 726.

14. தேவராசபிள்ளையின் பெயரால் வெளிவந்த சூதசங்கிதையையும் மீனாட்சிசுந்தரம்பிள்ளையே தமிழில் மொழிபெயர்த்துப் பாடினர் என்பர் சாமிநாதையர் (மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், முதலாம் பாகம், 1933, பக். 127). சூதசங்கிதை சங்கதத்திலுள்ள ஸ்காந்தபுராணத்தின் பிரிவுகளுளொன்ருகும்.

15. உ. வே. சாமிநாதையர்: மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம் (1934), பக். 280.

16. வியாசைக்கோவையிற் பிள்ளையவர்கள் முதல் நூறு பாடல்களையும் ஏனையவற்றை பூவாளூர் தியாகராச செட்டியாரும் பாடினர்.

17. விஷ்ணுபுராணத்தைத் தமிழிற் பாட மறுத்த சைவரான பிள்ளையவர்கள் (மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், முதலாம் பாகம், பக். 278) இராமாயணத்தோடு தொடர்புடைய மயில்ராவணன் சரித்திரத்தையும் (மேற்படி நூல், பக். 26) தேவராசபிள்ளையின் பெயரால் வெளிவந்த குசேலோபாக்கியானத்தையும் (மேற்படி நூல், பக். 122-123, 129-130) பாடினர் என்பர் சாமிநாதையர். குசேலோபாக்கியானம் அதன் ஆசிரியருக்குச் சிறப்பு அளிக்கத்தக்க இலக்கியம் என்பதை மறுப்பதற்கில்லை.

18. வண்ணார்பண்ணை வே. கனகரத்தின உபாத்தியாயர் (1882), சிவகாசி இ. அருணசலக் கவிராயர் (1898), சி. செல்லையாபிள்ளை (1914) என்பவர்கள் ஏலவே நாவலர் வரலாறு எழுதியவர்கள்.

19. ஆறுமுகநாவலர் சரித்திரம், பக். 60—61.

20. பாவலர் சரித்திர தீபகம், மானிப்பாய்: ஸ்ரேங்-அஸ்பரி இயந்திரசாலை (1886), பக். 34

21. சொக்கன்: நல்லைநகர் தந்த நாவலர்: யாழ்ப்பாணம்: சண்முகநாதன் புத்தகசாலை; முதலாம் பதிப்பு (1969), பக். 73-79; த. கைலாசபிள்ளை, "இவர் தமிழிற் சிறந்த வித்துவானுயிருந்தும் பத்திய ரூபமாகச் செய்த நூல் ஒன்றுமில்லை" (ஆறுமுகநாவலர் சரித்திரம், பக். 58) என மொழிந்த கூற்று பரிசீலனைக் குரியதாகின்றது.

22. சி. கணபதிப்பிள்ளை: நாவலர்; யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை வெளியீடு; முதலாம் பதிப்பு (1968), பக். 6.

23. நன்னூல், சூ. 10

24. த. கைலாசபிள்ளை: ஆறுமுகநாவலர் சரித்திரம், பக். 36

25. ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, முதற்பாகம் (த. கைலாசபிள்ளை தொகுப்பு) மூன்றும் பதிப்பு (1954), பக். 31

26. மேற்படி நூல், பக். 26

27. மேற்படி நூல், பக். 44

28. மேற்படி நூல், பக். 65

29. ஆறுமுகநாவலர்: நான்காம் பாலபாடம்: 'தமிழ்'

30. மேற்படி நூல்: 'தமிழ்'

31. த. கைலாசபிள்ளை: ஆறுமுகநாவலர் சரித்திரம், பக். 36

32. மேற்படி நூல்: பக். 38-39.

33. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, முதற்பாகம், பக். 28–32

34. நாவலர் பெருமான்; புதுச்சேரி புதுயுக நிலைய வெளியீடு; முதற்பதிப்பு (1948), பக். 2

35. கனகரத்தின உபாத்தியாயர் தம் நாவலர் சரித்திரத்தில் முதற் பாலபாடமும் இரண்டாம் பாலபாடமும் அச்சிடப்பட்டபோது நாவலருக்கு 28 வயதாயிற்று எனவும் (பக். 31-32) மூன்றும் பாலபாடம் (நான்காம் பாலபாடம்) நாவலருக்கு 42 வயதாகிய பின்பு அச்சிடப்பட்டது எனவும் (பக்.71) கூறுவர். அருணசலக் கவிராயரின் நாவலர் சரித்திரத்தின் இரண்டாம் பதிப்பிற்கு முகவுரை தந்தவர் "முதலாம், இரண்டாம், நான்காம் பாலபாடங்கள் செய்தது 28-ம் வயசாகிய சாதாரண வருடம்" என்பர் (பக். 9). இலங்கை தேசாதிபதி வில்லியம் அன்டர்சன் பிரபுவுக்கு அனுப்பும்பொருட்டு 11-8-1852 தேதியிட்டு எழுதப்பட்ட விண்ணப்பத்திலே இம் மூன்று நூல்களும் அச்சிடப் பெற்றிருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது (ச. தனஞ்சயராசசிங்கம்: நாவலர் பணிகள்,1969: பின்னிணைப்பு). எனவே மூன்றும் பாலபாடத்தின் பதிப்பாண்டு பற்றிக் கனகரத்தின உபாத்தியாயர் தரும் செய்தி பொருந்துவதாயில்லை. சுத்தானந்த பாரதியார் பாலபாடங்கள் 1872-மே மாதம் வெளிவந்ததாக உரைப்பது (நாவலர் பெருமான், பக். 83) பின்வந்த பதிப்புகளை நோக்கிப் போலும்.

36. நாவலர் இயற்றிய மூன்றும் பாலபாடம் நான்காம் பாலபாடமாக வழங்குகின்றது; சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகரான ச. பொன்னம்பலபிள்ளை எழுதிய பாலபாடம் மூன்றும் பாலபாடமாக வழங்குகின்றது.

37. நாவலர் நினைவு மலர் (கா. பொ. இரத்தினம் தொகுத்தது); சுன்னுகம்: திருமகள் அச்சியந்திரசாலை (1938), பக். 94

38. கனக. செந்திநாதன்: 'ஆறுமுகநாவலர் வசன நடை', தினகரன் தமிழ் விழாச் சிறப்பு மலர் (1960).

39. நாவலரின் சூடாமணி நிகண்டுரைப் பதிப்பு 1849-ம் ஆண்டு வெளிவந்தது. இவர் காலத்தவரான வில்லிவாக்கம் தாண்டவராய முதலியாரும் சூடாமணி நிகண்டின் முதற் பத்துத் தொகுதிகளையும் பரிசோதித்து வெளியிட்டுள்ளார். (சைமன்காசிச் செட்டி: தமிழ் புளூராக், இரண்டாம் பதிப்பு, 1946, பக். 130). ஆயினும் அவர் சூடாமணியைப் பதிப்பித்த ஆண்டு எதுவெனத் தெரியவில்லை. சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதி புதுவை நயனப்ப முதலியாருரையுடன் சென்னையில் 1836-ம் ஆண்டும் களத்தூர் வேதகிரி முதலியார் புதிதாகப் பாடிச் சேர்த்த செய்யுள்களுடன் 1843-ம் ஆண்டில் மானிப்பாயிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன; இவற்றுட் பின்னையது வேதகிரியார் சூடாமணி எனவும் வழங்கப்பெறும். முகவை இராமநுச கவிராயரும் 1848-ம் ஆண்டிற் சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியை வெளியிட்டுள்ளார் என அறிய முடிகின்றது.

40. கனகரத்தின உபாத்தியாயர் தம் நாவலர் சரித்திரத்திலே இலக்கணச் சுருக்கம் செய்த யாண்டு 1873 என்பர் (பக். 109). முகவை இராமநுசகவிராயரின் 'இலக்கணச் சுருக்கம்' 1848-ம் ஆண்டிலே வெளிவந்துள்ளது.

41. வில்லிவாக்கம் தாண்டவராய முதலியார் எழுதிய இலக்கண வினவிடை 1828-ம் ஆண்டிலே வெளிவந்தது. (மயிலை சீனி. வேங்கடசாமி: பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், முதலாம் பதிப்பு, 1962, பக். 372).

42. முகவை இராமாநுசகவிராயர் நன்னூலுக்கியற்றிய உரை 1845-ம் ஆண்டில் வெளிவந்தது. திருத்தணிகை விசாகப் பெருமாளையர் இயற்றிய உரை 1875-ம் ஆண்டில் வெளி வந்தது(மயிலை சீனி. வேங்கடசாமி: பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், பக். 296).

43. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா புத்தகக் கண்காட்சி: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வெளியீடு, 1969.

44. தருக்க பரிபாஷையை உடுப்பிட்டி கு. கதிரைவேற்பிள்ளை பதிப்பித்தார். (பாவலர் சரித்திர தீபகம், பக். 143)

45. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, முதற்பாகம், பக். 28

46. ஆறுமுகநாவலர்: நான்காம் பாலபாடம், 'தமிழ்'.

47. ஆறுமுகநாவலர்: இரண்டாம் சைவவினாவிடை, குருசங்கம சேவையில், 361.

48. நாவலர் திருக்குறள் மூலத்தைப் பரிமேலழகருரையுடன் 1861-ம் ஆண்டிற் பதிப்பித்தார். கனகரத்தின உபாத்தியாயர் தமது நாவலர் சரித்திரத்திலே (பக். 42) திருக்கோவையார் பதிப்பித்த ஆண்டினையும் திருக்குறள் பதிப்பித்த ஆண்டினையும் மாறுபடக்கூறியுள்ளார். பரிமேலழகருரையைத் தழுவித் திருத்தணிகை சரவணப்பெருமாளையர் இயற்றிய உரை 1838-ம் ஆண்டில் வெளிவந்தது; பரிமேலழகருரையையும் பிற நூல்களையும் துணைகொண்டு களத்தூர் வேதகிரிமுதலியார் எழுதிய உரை 1849-ம் ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்றது; பரிமேலழகருரையும் முகவை இராமாநுசகவிராயரின் விருத்தியுரையும் துரு பாதிரியாரின்(Rev. H. Drew) ஆங்கில மொழிபெயர்ப்பும் கூடிய திருக்குறட் பதிப்பு இரண்டு பாகங்களாக முறையே 1840, 1852-ம் ஆண்டுகளில் வெளிவந்தது.

49. அ. சதாசிவம்பிள்ளை: பாவலர் சரித்திர தீபகம் பக். 132

50. சிவகாசி அருணாசலக் கவிராயர்: யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்; இரண்டாம் பதிப்பு (1934); பருத்தித்துறை: கலாநிதியந்திர சாலை; முகவுரை, பக். 8.

51. நைடதமூலமும் விருத்தியுரையும்; சென்னை: வித்தியாரத்நாகர அச்சுக்கூடம் (1930)

52. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா புத்தகக் கண்காட்சி, 1969.

53. அ. குமாரசுவாமிப்புலவர்: தமிழ்ப் புலவர் சரித்திரம் (1916); பக். 61

54. க. கைலாசபதி: 'பதிப்பாசிரியர் நாவலர்', மரகதம், தை 1962.

55. ம. பொ. சிவஞானகிராமணியார் தமது 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் நூலிலே "வள்ளலார், தாம் உரைநடைத் தமிழில் இயற்றிய 'மனுமுறை கண்ட வாசகம்' என்ற நூலை வெளியிட்டது 1854-ம் ஆண்டிலாகும். அதற்கும் முன்னதாக, 'ஒழிவிலொடுக்கம்' என்ற நூலை அதன் பாடலுக்குத் தாம் இயற்றிய உரையோடு 1851 - ஆம் ஆண்டில் வெளியிட்டார் வள்ளலார். ஆறுமுகநாவலர், உரைநடை நூல் வெளியிடத் தொடங்கியது. 1856–ஆம் ஆண்டுக்குப் பிறகாகும்" (நான்காம் பதிப்பு, 1967, பக். 294) என எழுதியுள்ளார். இந்திய சாகித்திய அகடெமி பரிசளித்த இந்நூலில் ஆசிரியர் வரலாற்று உண்மைகளையே திரித்துக் கூற முற்பட்டமை 'ஒருமைப்பாடு' என்னும் உணர்ச்சிக்குகந்ததல்ல. ஆறுமுகநாவலரின் பால பாடங்கள் 1852 ஆவணிக்கு முன்பே வெளிவந்துவிட்டன; பெரியபுராண வசனம் 1852-ம் ஆண்டிலே வெளிவந்தது; நாவலரின் சூடாமணி நிகண்டுரைப் பதிப்பு 1849-ம் ஆண்டிலே வெளிவந்தது.

## 3. கனகி புராணம்

ஈழத்திலே தக்ஷிணகைலாசபுராணம் முதல் திருக் கேதீச்சரப்புராணம் ஈறுகச் செய்யுளில் ஏறக்குறைய நாற்பது புராணங்கள் வரை தோன்றியுள்ளனவென அறியமுடிகின்றது. இவற்றிலே பெரும்பான்மை யானவை தலமான்மியம் கூறுவன. ஈழத்துப் புலவர் தமது நாட்டிலுள்ள தலங்களுக்கு மட்டுமன்றித் தமிழ கத்திலுள்ள தலங்களுக்கும் புராணங்கள் இயற்றி யுள்ளனர். தக்ஷிணகைலாசபுராணம் (1887)[1], திருக் கரைசைப்புராணம் (1890), திரிகோணசலபுராணம் (1909), கதிர்காமபுராணம் (1932), திருக்கேதீச்சரப் புராணம் (1966), நகுலாசல புராணம்[2], நகுலகிரிப் புராணம்[3], தென்கோயிற் புராணம்[4] முதலியவை ஈழத்துத் தலங்களின் மாண்பையுணர்த்த எழுந்தன[5]; சிதம்பரசபாநாத புராணம் (1885), இணுவைப்புராணம் (1895), திருநெல்வாயிற் புராணம் (1934), புலியூர்ப் புராணம் (1936), திருவைகற்புராணம் (1942), திருக் கழிப்பாலைப்புராணம் (1954), திருத்திலதைப்பதிப் புராணம்[6], தேவகோட்டைத்தல புராணம்[7], கோட்டாற் றுப் புராணம்[8] முதலியவை தமிழ்நாட்டுக் கோயில் களின் மான்மியம் கூறத் தோன்றின. தலபுராணங் களையடுத்து விரதமகிமை கூறும் புராணங்களும் ஈழத் திலே புனையப்பட்டன. சிவராத்திரி புராணம் (1878)[9], சீமந்தனி புராணம் (1894), கந்தசட்டி புராணம் (1895), ஏகாதசி புராணம் (1898)[10], விநாயகசட்டி புராணம்[11] என்பன இவ்வகையைச் சேர்ந்தவை. வியாக்கிரபாத புராணம்[12], யோசேப்பு புராணம்[13], முகியித்தீன் புரா ணம்[14], சிறுத்தொண்டநாயனர் புராணம்[15] என்பன சமயப் பெரியோர்மீது ஈழத்துப் புலவர்களாற் பாடப் பட்ட புராணங்களுக்கு எடுத்துக்காட்டாகும். திரு

வாக்குப் புராணமும் (1866) ஞானனந்த புராணமும் (1874) கிறித்தவ வேதாகமத்தை விளக்க ஈழத்திலெடுக்கப்பட்ட முயற்சிகளாம். வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியார் (—1928) சைவ மகாபுராணத்தை மொழிபெயர்த்துப் பாடத் தொடங்கி முற்றுவிக்காது இறையடி நீழலடைந்தார்[16]. முற்கிளந்த ஈழத்துப் புராணங்கள் சமய நெறியிலே மக்களை இட்டுச் செல்வதை நோக்கமாகவுடையன எனலாம்.

வல்லிபட்டித்துறை நா. ஏகாம்பரம் (—1873) பாடியதாகக் கூறப்படும் புரூரவச் சக்கரவர்த்தி புராணம் பாரதக்கதையிலிருந்து எடுக்கப்பட்டது போலும். "புராணம் பாடினராம் என்ற மட்டிலே, அதைப்பாட நினைத்தாரோ, தொடங்கினரோ, முடித்தாரோ அறியோம்'' என்பது பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் கூற்று. நல்லூர் சி. அப்புக்குட்டி ஐயரின் (1787-1863) சூதுபுராணமும் பாரதக்கதையிலிருந்து தோன்றியதோ அறியேம். வட்டுக்கோட்டை க. முத்துக்குமாரர் பாடியதாதக் கூறப்படும் வலைவீசுபுராணம் திருவிளையாடற் புராணத்திலிருந்து பெறப்பட்ட கதையினையுடைத்துப்போலும். புரூரவச் சக்கரவர்த்தி புராணம், சூதுபுராணம், வலைவீசுபுராணம் பற்றிய செய்திகள் கிடைக்குமாறில்லை; எனவே, அவற்றின் தன்மை பற்றி யாதும் கூறுவதற்கில்லை.

வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்தியலிங்கபிள்ளை (1843—1900) சாதிநிர்ணயபுராணம் எனவொரு நூலை இயற்றியுள்ளார். உலகநீதி ஆசிரியர் உலகநாதன் இயற்றிய சாதிபேத விளக்கம் போன்று இந்நூலும் சாதிநிர்ணயத்திலீடுபடும் 'சாதிபேத' நூலாகும். எண்பத்தெட்டுச் செய்யுள்களையுடைய சாதிநிர்ணயபுராணம் என்னும் நூல் புராண இலக்கணங்களில்லாத நூலாகும். மாபுராணம், பூதபுராணம் எவ்வாறு புராணங்களாகாவோ அவ்வாறே சாதிநிர்ணயபுராணமுமாகும்.

தமிழ்மொழியிற் புராணமென வழங்கும் பெயரும் அதனாற் சுட்டப்படும் இலக்கிய வடிவமும் சங்கத மொழியிலிருந்து பெறப்பட்டவை. புராண இலக்கணம் தமிழிலெழுந்த 'பாட்டியல்' நூல்களில் விரித்துரைக்கப்படவில்லை. வெண்பாப்பாட்டியல்,

"குலவரவு காரிகை, யாப்பிற் புராணமேயாம்"

(செய்யுளியல், 43)

என்று கூறுகின்றது; "குலவரவு முதலாயினவற்றைக் காட்டுவது புராணகதையாம்" என்பது அதன் பழைய வுரை; "குலவரவு முதலாயினவற்றை என்றதனால் உலகத்தோற்ற ஒடுக்கங்களும், மனுவந்தரமும், முனிவர் வரலாறும், அரசர் மரபும், அவர் சரிதமும் கொள்க" என்பது அதன் விளக்கவுரை. இவ்வுரை சங்கத நூலார் கூற்றைப் பின்பற்றியதாகும். "புராணம் பஞ்சலக்ஷணம்" என்பது அமரம். பஞ்சலக்ஷணம் சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மந்வந்தரம், வம்சாநுசரிதம், என்பனவாம். சர்க்கம் உலகத்தின் தோற்றத்தை உணர்த்துவது; பிரதிசர்க்கம் உயிர்த் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் குறிப்பது; வம்சம் மன்னர் பரம்பரையைக் கூறுவது; மந்வந்தரம் காலவரையறையினையும் மநுக்களது ஆட்சிக்காலங்களையும் உரைப்பது; வம்சாநு சரிதம் மன்னர் பரம்பரையோடு தொடர்புடைய கிளைக்கதைகளைச் சுட்டுவது. இப்பஞ்சலக்ஷணம்,

"மச்சமே கூர்மஞ் சைவம் வைணவம் வராகம் லிங்கம்
பத்மம் வாமனமே காந்தம் பவிடிய மாக்கினேயம்
கற்புள பிரமங் கைவர்த்தம்மே நாரத மார்க்கண்டம்
உற்ற பாகவதமே கருடம் பிரமாண்டந் தொன்னூல்."

(சூடாமணி நிகண்டு, 12. 120)

என்னும் விருத்தத்திற் சுட்டப்படும் பதினெண் புராணங்களிலே காணப்படுவதாகக் கூறுவர். முதலிற்

பதினெண் புராணங்களைக் குறித்த புராணம் என்பது பிற்பட்ட காலங்களிற் பொருள் விரிந்து பக்தர்கள் சரித்திரம், தலமகிமை முதலியவற்றின் சரித்திரமெல்லாம் அடங்கிய வரலாற்று நூலினைக் குறிப்பதாக முடிந்தது. தமிழிற் புராணம் இலக்கிய வடிவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டபோது மேற்கூறிய விரிந்த நிலையிலேயே இருந்தது. ஈழத்திற் புலவர்கள் புராணத்தைப் பயன்படுத்த முற்பட்டபோது அந்நிலைமை உதவியாக அமைந்தது. தலமான்மியம், தெய்வ அடியார் வரலாறு, விரதமகிமை முதலியனவற்றைக் கூறுவதற்கு ஏற்றவகையில் அது விரிவடைந்திருந்தது. பஞ்சலட்சணமுடைமையைச் சிறப்பாகக் கொண்ட புராணம் வரலாறு கூறுவதைப் பொதுப் பண்பாகக் கொண்ட நிலையில் ஈழத்தவர் தமிழகத்துச் சகோதரர் போலப் புராணம் பாடினர்.

கம்பனுக்குப் பின்வந்த இலக்கிய கதியை மதிப்பிட்ட தமிழறிஞர் ஒருவர் மேல்வருமாறு கூறுவர்: "இனி, புராணங்களை நாம் எடுத்துக்கொண்டால் அவற்றாலும் தமிழும் தமிழ்நாட்டு மக்களும் சீர்கேடுற்ற நிலைமைதான் நமக்குத் தெரிகின்றது. வடமொழியிலுள்ள பதினெண் புராணங்களின் மொழிபெயர்ப்புக்கள் சில தமிழில் உள்ளன. இவை போதா என்று தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் புராணம் எழுதத் தொடங்கிவிட்டனர். இப்புராணங்களைக் காவிய லக்ஷணமுள்ளன போல இயற்றி இவற்றில் பலவகையான பொய் வரலாறுகளையும் புனைந்துரைத்து எழுதிவந்தனர். சூரியன், சந்திரன், இந்திரன், மஹரிஷிகள், பிரமவிஷ்ணுருத்ரர்கள், உமாதேவியார், அரசர்கள் முதலானவர்களுக்கெல்லாம் ஒரே கடமை ஏற்பட்டுவிட்டது! அவர்கள் தினந்தோறும் பல தலங்களுக்கும் சென்று இறைவனைப் பூசித்து, தங்களுக்கு முன்பு ஏற்பட்டுள்ள சாபத்தினின்றும்

விமோசனம் பெறுதலே அவர்கள் வேலை. இவ்வகை யான கதைகளை எழுதிவைத்துச் சமயத்தின் பேரி லேயே அருவருப்பு உண்டாகும்படியாகச் செய்து விட்டனர் இப்புராண ஆசிரியர்கள். இவர்கள் சில இடங்களிலுள்ள கட்டுக்கிடை நீரைத் தீர்த்தமெனக் கொண்டு, மோக்ஷதாயினி, பாபநாசினி என்பன முதலாகப் பெயரிட்டு மகிழ்ந்து, தங்களுடைய பக்தியை வெளியிட்டிருக்கிறார்கள். இக்கட்டுக் கிடை நீர் நாற்றம் எடுப்பது போலுள்ளதுதான் இப் புலவர்களது தமிழும். உண்மையான தெய்வப்பற்றும், உண்மையான தமிழ்ப்பற்றும், உண்மையான நாட்டுப் பற்றும் நமக்கு உண்டாகாதபடி செய்துவிட்டது இவ் வகைப் புராணம் என்றே சொல்லலாம். நேர்மாறாக, இவர்கள் செய்துள்ள கட்டுக்கதைகளின் மீது அரு வருப்பும், இவர்கள் எழுதியுள்ள தமிழின்மீது அரு வருப்பும் உண்டாகும்படி செய்துவிட்டனர்'' [17]. தல புராணங்களின் நூற்பொருளைப்பற்றிய இக்கருத்துக் கள் கவனிக்கத்தக்கவை.

ஈழத்துப்புலவரில் மூவர் புராணமென்னும் இலக் கிய வடிவத்தின் பொருளை மாற்றியமைக்கும் முயற்சி யிலும் ஈடுபட்டுள்ளனர்[18]. புராணநெறியினைப் புதுவழி யில் இட்டுச்செல்ல அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி காத்திரமானதாக அமையவில்லை என்று கரு தியவிடத்தும் தமிழ் இலக்கிய சரிதத்தில் அவர்களுக் குக் குறிப்பிடத்தக்க இடமுண்டு என்பதனை மறுப் பதற்கில்லை. அவர்கள் அச்சுவேலி நீ. காசிநாதப் புலவர் (1796 - 1854), கோப்பாய் வே. இராமலிங்கம்[19], வண்ணார்பண்ணை சுப்பையர் என்பவராவர்.

நீலகண்டர் என்பவரின் புதல்வராகிய காசி நாதப்புலவர் சோதிடராகப் பேர்பெற்றதோடமையாது இலக்கிய ஆற்றலுடையவராகவும் திகழ்ந்தார். இவர் பாடிய நூல் தாலபுராணமாகும்[20]. இந்நூல் 'பனங்

காய்ப்பாரதம்' எனவும் அழைக்கப்பட்டது. பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் தாலபுராணத்தைப் பற்றி மேல்வருமாறு கூறுவர்: "யாம் அதனைக் கண்ணுற்றி ராமையால் அதனது நயநட்டங் கூறுதல் கூடாதே னும், கற்பக விருட்சம் எனப் பெயரிய தெய்வ விருட் சத்திற்கு இலக்காய் எம்மூரிலிருக்கும் பனைமரப் பெரு மையும் அவற்றின் பிரயோசன நயங்களுமே அப்பாடற் பொருளாம் எனத் துணிகின்றோம். பனைப்பெருமை கூறினும், ஓர் போது ஒருவகைக் கேலிப்பாடலாகவும் இருக் கலாம்"[21]. அ. சதாசிவம்பிள்ளை தாலபுராணத்திற்குரிய விருத்தங்கள் சில கிடைக்கப்பெற்றும் அவற்றிற் காணப்பெற்ற தவறுகளினுலே மேற்கோளாக ஒரு பாடலேனும் தராதொழிந்தார். எனவே தாலபுராணத் தைப்பற்றி யாதும் கூறமுடியாத நிலையிலுள்ளோம்.

கோப்பாயில் வசித்த வேலுப்பிள்ளையின் புதல்வ ராகிய இராமலிங்கம் கோட்டுப்புராணமென ஒரு நூலை இயற்றியுள்ளார். இப் புராணத்தைப் பற்றிப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் மேல்வருமாறு கூறு வர்: "இவர், நீதித்தலஞ்சென்று வியாச்சியம் நடத் தும் வாதி பிரதிவாதிகளுக்கு நேரிடும் பணநஷ்டம், கஷ்டம், அல்லல், தொல்லைகளையும், அந்நீதி ஸ்தலங்க ளில், 'உதரநிமித்தம் வெகு கிருதுவேடம்' எனப் பிழைப்பின் பொருட்டுத் தந்திரவேடம் போட்டுத் தமனகனைப்போல் இருதிறத்தவரையும் மூட்டிவிட்டுப் பணம் பறிக்குங் கோட்டுப் புருக்களையும், வாதி பிரதி வாதிகளுக்காகத் தனித்தனி ஏற்பட்டும் இருபுறமும் கைநீட்டும் நியாயதுரந்தரர்களையும், இழித்தும் பழித் தும், கோட்டுப்புராணம் எனும் பெயர்சூட்டி, ஒரு பாடல் இயற்றினர். காண்டம், சருக்கம் எனும் பகுப்பு வைத்துப் பாடினரோ அல்லது மொத்தமொரு கோவை யாய்ப் பாடினரோ, யாம் அதனைக் கண்டிலம். ஆத லிற், தீர்ப்பாய் ஒன்றுஞ் சொல்லமாட்டோம்"[22]. மேல்

வரும் விருத்தம் பாவலர் சரித்திர தீபகத்திலிடம் பெறுவதாகும்:

"கோடொருகளரி யதிலுறுந்துரையோ கூத்துப்பார்த்திருந்திடு முப்பு
ஆடுறுங்குரங்கோ வழக்கர்களாவாரவையி டை ய வை க ளை க் கொண்டு
நாடொறுமாட்டுங் கயிறுதான் வழக்குகட்டுவப்பனிக்கனோ தரணி
வாடிடுவயிறு வளர்ப்பதற் கெடுத்தவஞ்சனை வேடமென்றுணரே"

தாலபுராணமும் கோட்டுப்புராணமும் அழிந்து விட்ட போதும் கனகிபுராணத்திற்குரியதாகச் சில செய்யுள்கள் வழங்கி வருகின்றன[23]. பாவலர் சரித்திர தீபகத்திலே மேல்வரும் செய்யுள் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளது:

காட்டுக்குயிலைக் கடிதோட்டிக் கனத்த நாவினெய் தடவி
மாட்டுமினிய சொல்லாளே மானே தேனே கனகமின்னே
ஓட்டைக் காதினுடனிருந்திங்கு வந்தே புடைவை விற்கின்ற
நாட்டுக்கோட்டைச் செட்டிகளினல்லாண்டப் பனிவன் காணே[24].

நவாலி சி. கந்தையாபிள்ளை நீர்வேலி வாசராகிய சி. சிற்சபேசன் தமது ஞாபகத்திலிருந்து எழுதியளித்த செய்யுள்களைத் தொகுத்துக் 'கனகிபுராணம் (தெரிகவிகள்)' என 1937-ம் ஆண்டு சென்னையில் அச்சிட்டார். கந்தையாபிள்ளை காப்புச் செய்யுளையடுத்து நாட்டுப் படலம், சுயம்வரபடலம், வெட்டைகாண்படலம் என உட்பிரிவுகளை அமைத்துத் தந்துள்ளார். இவ்வமைப்பு நூலாசிரியருடையதா அல்லது பதிப்பாசிரியருடையதா என்பது தெளிவாகவில்லை. பாவலர் சரித்திர தீபகம் கனகிபுராணத்தின் உட்பிரிவுகள் பற்றி எதுவும் கூறவில்லை. வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் பதிப்பித்த கனகிபுராணத்திற்கு முன்னுரை வழங்கிய க. ச. அருள்நந்தி, கந்தையாபிள்ளையின் பதிப்பில் நாட்

டுப் படலத்திலுள்ள பதினாறு செய்யுள்களும் சுப்பையர் பாடியவையல்ல என்றும் அவற்றின் ஆசிரியர் நீர்வேலி சி. சிற்சபேசனே என்றும் கூறுவர். எனவே கந்தையா பிள்ளையின் பதிப்பிலிடம்பெறும் இருபத்தொன்பது பாடல்களிற் பதின்மூன்று பாடல்களே சுப்பையருடை யன என்பது போதரும். கந்தையாபிள்ளையின் பதிப் பிலே சுயம்வர படலத்திற் பதினொரு பாடல்களுள. இவற்றிற் பதினொராவது பாடல் பாதிச் செய்யுளாகவே காணப்படுகின்றது. கனக. செந்திநாதன் எழுதிய 'கனகிபுராணத்தில் சில பாடல்கள்' என்னும் கட்டுரை யில் இப்பாடல் முழு உருவத்துடன் காணப்படுகின் றது[25]:

தாமரைகுமுதம் மலையுடன் அகிலும் தண்முகம்வாய்தனம் கூந்த
லாமென வுவமை படைத்திடு கனகே அனநடைவாய் மொழிக்குயிலே
பாமருமாலை பாடிட வல்லோன் பகர்ந்திடு மதனநூல் படித்தோன்[26]
காமரு கோப்பாயுறையு மூத்தப்பு கன்னி நீ காணுதி யென்றாள்.

வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் 'கனகி புராண' த்தைச் சிவங். கருணாலய பாண்டியனாருரை யுடன் 1961-ம் ஆண்டிற் கொழும்பில் அச்சிட்டார். இப்பதிப்பிலும் பிள்ளையார் காப்பினையடுத்து முன்னைய பதிப்பிலுள்ள உட்பிரிவுகளே காணப்படுகின்றன. நாட்டுப்படலத்திற்குரியதாக இரு பாடல்கள் தரப் பட்டுள்ளன. இவை கந்தையாபிள்ளையின் பதிப்பில் முகவுரையில் இடம்பெற்றவை என்பது குறிப்பிடத்தக் கது. இவற்றில் முதற்பாடல் நாட்டுப் படலத்திற்குரிய தெனக் கூறுதல் கடினமாகும்; கனகி பற்றியதாயின் வேறொரு படலத்திற்குரியதாகலாம்; மற்றைய பாடல்

'தனிப்பாடற்றிரட்டு' என்னும் தொகுப்பு நூலிற் காணப்படுவதாகும். அப்பாடல் இந்நூலுக்குரியதெனத் திடமாகக் கூற முடியாது. எனவே கனகிபுராணத்திற் குரிய செய்யுள்களைத் தாங்கிவந்த இரு பதிப்புகளை யும் ஆதாரமாகக் கொண்டு நாம் நாட்டுப்படலமென வொரு உட்பிரிவு ஆங்கிருந்ததெனச் சித்தாந்தமாகக் கூறமுடியாது. இராமலிங்கம் பதிப்பிலே சுயம்வரபட லத்திலே முன்னைய பதிப்பிற் காணப்பட்டனவற்றுட் பத்துப்பாடல்களும் புதிதாக மேலும் ஒன்பது பாடல் களும் இடம்பெறுகின்றன[27]. வெட்டைகாண்படலத்திற் கந்தையாபிள்ளை பதிப்பிற் கண்ட பாடலுடன் புதிதாக மேலும் இருபாடல்கள் இடம்பெறுகின்றன. இவ்விரு பாடல்களிற் பின்னையது வெண்பாவாயமைவதோடு 'தனிப்பாடற்றிரட்டு' என்னும் தொகை நூலில் வேத நாயகம்பிள்ளை பாடலாகத் தரப்பட்டுள்ளது. எனவே இராமலிங்கம் பதிப்பு மூலம் சுயம்வரபடலத்திலும் வெட்டைகாண் படலத்திலும் பத்துப்பாடல்கள் புதி தாக வெளிப்பட்டுள்ளன எனலாம். கந்தையாபிள்ளை, இராமலிங்கம் ஆகியோர் பதிப்புகள் மூலம் தெரிய வரும் கனகிபுராணத்திற்குரியதாகக் கொள்ளத்தக்க இருபத்துமூன்று பாடல்களுடன் வேறு சில பாடல் களும் அந்நூலுக்குரியதாக வழங்கி வருகின்றன. கனக. செந்திநாதனின் முற்கிளந்த கட்டுரையில் இவ்விரு பதிப்புகளிலுமில்லாத ஐந்து செய்யுள்கள் தரப்பட் டுள்ளன; இவை ஆய்வுக்குரியன. பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் கனகிபுராணத்தின் பாடலெண்ணிக்கை பற்றிக் கூறுமிடத்து, "அப்பாடலில் முன்பின் நானூறு விருத்தங்கள் உண்டென்று கேள்விப்பட்டோம்" என் பர். ஏறக்குறைய நானூறு பாடல்களைக் கொண்டிருந்த நூலின் எஞ்சியுள்ள பாடல்கள் மூலமே அதன் சிறப்பை நோக்க வேண்டியுள்ளது.

கனகிபுராணத்தின் பாட்டுடைத் தலைவியாகிய கனகி என்பவள் கற்பனைப் பிறவியல்ல; புராண, இதிகாச, கர்ணபரம்பரை, நாடோடிக் கதைகள் மூலம் பெறப்பட்ட பாத்திரமல்ல; "வண்ணார்பண்ணைச் சிவன்கோயிற் தாசிகளுள் ஒருத்தியும் இற்றைக்குச் சில நாட்களின் முன் இறந்தவளுமாகிய கனகி" என்பது பாவலர் சரித்திர தீபகத்தின் கூற்று. நூலாசிரியர் தம் காலத்திலே வாழ்ந்த பெண்ணையே கதாநாயகியாகக் கொண்டு நூலை இயற்றியுள்ளார். இதனாலே கனகிபுராணம் ஏனைய புராணங்களிலிருந்து வேறுபட்டுச் சிறப்படைகின்றது.

கனகிபுராணத்திற்குப் பிறதொரு சிறப்புமுண்டு. தமிழிற் காலத்தால் முற்பட்ட இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில்,

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்."

"அங்கதந் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே"

"செம்பொருள் ஆயின வசையெனப் படுமே"

"மொழிகரந்து மொழியினது பழிகரப் பாகும்."

என அங்கதத்திற்கு இலக்கணங் கூறப்பட்டுள்ளது. அங்கதத்திற்கு இலக்கியமாகப் பண்டைத் தமிழ்நூல்களிற் சில பாடல்கள் காணப்படுகின்றன.

"இவ்வே,
பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணும்

இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே''
(புறநானூறு, 95)

என்னும் ஔவையார் பாடலையும்

''தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்''

என்னும் திருக்குறள் வெண்பாவையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம். அங்கதத்தின் பாற்படும் இத்தகைய பாடல்களுக்குப் பின்பும் ஆங்காங்கே புலவர்கள் இவ்வகையான பாடல்களைப் பாடியபோதும் தமிழ் இலக்கியத்தில் அங்கதம் ஓர் இலக்கியத் துறையாக முற்காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்திருந்தது என்று கூறுதல் கடினமாகும். வீரமாமுனிவரின் பரமார்த்தகுரு கதை அங்கத இலக்கியத்துறையிற் குறிப்பிடத்தக்க முயற்சியாகக் கருதப்படுகின்றது. ஆயினும் பிரமனூர் வில்லியப்பபிள்ளையின் பஞ்சலட்சணத் திருமுக விலாசமும் சி தேசிகவிநாயகம்பிள்ளையின் நாஞ்சினாட்டு மருமக்கள் வழி மான்மியமுமே தமிழ் இலக்கியத்தின் நையாண்டி (அங்கத) இலக்கியத்துறையில் ஈடிணையற்றனவாகக் கருதப்படுகின்றன. பிரமனூர் வில்லியப்பபிள்ளை தமது பஞ்சலட்சணத்தை விகாரி வருடம் தைமாதம் 26-ம் தேதி (1900) அரங்கேற்றினார். சி. தேசிகவிநாயகம்பிள்ளையின் மருமக்கள் வழி மான்மியம் திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்த 'தமிழன்' என்னும் பத்திரிகையில் 1917-ம் ஆண்டு 'மார்ச்' மாதம் முதல் 1918-ம் ஆண்டு 'பெப்ருவரி' மாதம் வரை வெளிவந்தது. கனகிபுராண ஆசிரியர் 1886-ம் ஆண்டிற்கு முன்பே தேகவியோகமடைந்துவிட்டார். எனவே கனகிபுராணம் பஞ்சலட்சணத்திற்கும் மருமக்கள் வழி மான்மியத்திற்கும் முன்பு இயற்றப்பட்டது என்பது கூறுமலே போதரும். கனகிபுராணத்தையும் நையாண்டி (அங்கத) இலக்கியமாகவே கொள்ளவேண்டியுள்ளது.

'கனகி புராணம்' என்ற பெயர் நூலாசிரியர் அளித்த பெயராயின்,[28] அப்பெயரிலேயே ஆசிரியர் தமது நையாண்டி செய்யும் நோக்கத்தைக் காட்டி விடுகிருர் எனலாம். கனகி ஒரு தாசி. அவளைப் பற்றியொரு புராணமா? மும்மூர்த்திகளையும் ஏனைய தெய்வங்களை யும் சான்ருேரையும் பாடப் பயன்படுத்தப்பட்டு வந்த இலக்கிய வடிவத்திஞலா ஒரு தாசியைப் பாடுவது? கனகிக்கும் புராணத்திற்குமுள்ள உடன்பாடின்மையே இகழ்ச்சியை நன்கு புலப்படுத்துகின்றது. இழிவுபடுத் திக் கூறப்படுவதை அதற்குரிய சாதாரண முறையிற் சொன்ஞற் சுவையிருக்காது; அதைப் பெருமை வாய்ந்த வகையிற் கூறிஞற்ருன் இகழ்ச்சி சிறந்து விளங்கும் என்பதைச் சுப்பையர் நன்குணர்ந்திருந்தார். புராணம் என்ற இலக்கிய வடிவத்தையே சுப்பையாப்புலவர் கேலி செய்கிருர் என்றும் கூறலாம். 'புதுமைப்பித்தன்' காளான்குடை நிழலிற் கரப்பாளை அரசிருத்திக் காவி யம் என்னும் இலக்கிய வடிவத்தைக் கேலிசெய்து 'மாகாவியம்' படைத்தார். மேலும்

"வேதம் படித்திடுவோம் வெறுங்கை முழம் போட்டிடுவோம்
சாதத்துக் காகச் சங்கரனை விற்றிடுவோம்!
அத்தனைக்கும் மேலல்லோ அஹிம்சைக் கதைபேசி
வித்தகஞம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்ருேம்!

இந்தியா தேசம் – அது
இணையற்ற தேசம்!"

என்று கேலி செய்த 'புதுமைப்பித்தன்' தமது 'நாரத ராமாயணம்' மூலம் 'ராமராஜ்ய' த்தை நையாண்டி செய்கிருர். 'நாரதராமாயாண' மும் 'கீமாயண' மும் வெவ்வேறு நோக்கங்களையுடையனவேஞும் ராமா யணத்தை நையாண்டி செய்வதைப் பொது இலக்காக வுடையன.[29] மேலைத்தேயங்களிலும் இலக்கிய வடிவங் களை நையாண்டி செய்வதை நோக்கமாகக் கொண்ட படைப்புகள் தோன்றியுள்ளன. 'வீரகாவிய' த்தை

நையாண்டி முறையிற் பாடிய புலவர்களும் அங்குளர். சாமுவல் பட்லர் (Samuel Butler 1612-1680) இயற்றிய முற்றுப்பெருத 'ஹி யூ டி பி ரு ஸ்' (Hudibras), அலெக்ஸாண்டர் போப் (Alexander Pope - 1688-1744) இயற்றிய 'குழல் அழிம்பு'(The Rape of the Lock)என்பன எடுத்துக்காட்டு.

கனகிபுராணத்தின் உட்பிரிவுகளைப்பற்றி அறிய இன்று நமக்குக் கிடைக்கும் பாடல்கள் உதவவில்லை. ஆயினும் கிடைக்கும் உதிரிப்பாடல்களுட் பெரும்பாலானவை 'சுயம்வர' த்தோடு தொடர்பானவை. தமயந்திக்குத் தோழியும் திரௌபதிக்குச் செவிலித் தாயரும் சுயம்வரமண்டபத்திற் கூடியிருந்தவர்களை அறிமுகஞ் செய்வது போலச் சுப்பையரும் கனகிக்குத் தோழி மூலம் கூடியிருந்தவர்களை அறிமுகஞ் செய்து வைக்கிருர். குலமகளாகப் பிறந்து, கன்னி மாடத்தில் வளர்ந்து, மணமகளாக மாறும்போது புகழேந்திப் புலவரும் வில்லிபுத்தூராழ்வாரும் தமயந்தியையும் திரௌபதியையும் சுயம்வரமண்டபத்திற்கு இட்டுச் செல்ல வைத்தனர். சுப்பையாப்புலவர் விலைமகள் ஆடவனைத் தெரிவதைச் சுயம்வரமென ஏளனம் செய்கிருர். விலைமகளுக்குச் சுயம்வரமென நையாண்டி செய்யும் புலவர் அங்கு எழுந்துள்ளோரை அறிமுகஞ் செய்யும் போது வசைக் கவியாக மாறிவிடுகிருர்.

தாலக் கனி யொன்றினுக்காகத்
தரைமேல் மாந்தர் பலர் திரண்டு,
வேல் கத்திகள் கொண்டெறிந்து, மிக
விசயம் பொருதும் வள நாடன்,
மால் பற்றிய நெஞ்சினனுகி
வந்தான், கனகே, மன்றலுக்கு,
நீலக் கருங் கார்மேக நிற
நியூற்றனிவன் காண், நேரிழையே.

நூற்பெயரிலும் சுயம்வரம் என்னும் நிகழ்ச்சியிலும் 'பழிகரந்த' அமைப்பினைக் காட்டும் கனகிபுராண ஆசிரியர் 'செம்மொழி' யாக அறிமுகஞ்செய்தல் நோக்கற்பாலது. ஆசிரியர் தமது சொந்த வெறுப்பை, கசப்பை அல்லது விரக்தியை அறிமுகஞ்செய்தலிற் காட்டுகின்ருர் என்று கொள்ள வேண்டும் அல்லது இவ்வாறு பட்டவர்த்தனமாகக் கூறுவதன் மூலம் தாசிப்பிரியர்களை அவ்வழியிற் செல்லாமல் தடுப்பதை நோக்கமாகக்கொண்டிருந்தார் என்று கருதவேண்டும்.

அங்கத இலக்கியம் சமூகத்திலுள்ள ஊழல்களை எடுத்துக்காட்டி அவற்றைத் திருத்துவதை நோக்கமாகக் கொண்டதென்பர். இந்நோக்கத்திற்கு மருமக்கள் வழி மான்மியம் சிறந்த எடுத்துக்காட்டு. நாஞ்சிஞட்டு மக்களிடையே வழங்கிய மருமக்கள் தாயமுறையிஞல் ஏற்பட்ட சீர்கேடுகளை நூற்பொருளாகக் கொண்டு தேசிகவிநாயகம்பிள்ளையின் 'பிரகசனம்' தோன்றியது; பலனும் தந்தது. கனகி புராணமும் யாழ்ப்பாணத்துச் சமூகத்திலிருந்த சீர்கேட்டை நகையாடித் திருத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்ததென்று கருதலாம்.

ஆறுமுகநாவலர் 1822-ம் ஆண்டிலே பிறந்து 1879-ம் ஆண்டிலே தேகவியோகமடைந்தார். கனகி புராண ஆசிரியர் சிறுவயதிலே தெல்லிப்பழை 'அமெரிக்கன் மிஷன்' பாதிரிமாரையடைந்து கிறித்தவராஞரென்றும் பின்பு அம்மதத்தைவிட்டு நீங்கிஞர் என்றும் பாவலர் சரித்திர தீபகம் கூறுகின்றது. தெல்லிப்பழையிலே 'அமெரிக்கன் மிஷன்' 1816-ம் ஆண்டிலேயே நிறுவப்பட்டது. 1820-ம் ஆண்டிலே பிறந்த பாவலர் சரித்திர தீபகத்தின் ஆசிரியர் அ. சதாசிவம்பிள்ளை கனகிபுராண ஆசிரியரைக் கண்டிருக்கிருர். எனவே கனகிபுராண ஆசிரியர் ஆறுமுகநாவலர் காலத்திலே வாழ்ந்தவர் எனலாம்.

ஆறுமுகநாவலர் தம் சுப்பிரபோதம், யாழ்ப்பாணச் சமயநிலை (1872), நல்லூர்க் கந்தசுவாமி கோயில் (ஆடி 1875, புரட்டாதி 1875), மித்தியாவாத நிரசனம் (1876) என்னும் பிரசுரங்களிலே யாழ்ப்பாணத்துச் சமய நிலையையும் சமூகநிலையையும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். சமயத்தையும் சமூகத்தையும் பாதித்த 'உருத்திர கணிகையர்' பற்றியவை மேல்வரும் நாவலர் பெருமானின் கூற்றுகள்:

(1) "உருத்திரகணிகையர் வியபிசாரம் மதுமாமிச பக்ஷணம் முதலிய பாதகங்களின்றி, சிவவேடம் பூண்டு, சிவபத்தியிற் சிறந்தவர்களென்று சைவாகமங்கள் சொல்லுகின்றன. இதற்கு மாருக இக்காலத்தார் கோயில்களெங்கும் மதுமாமிச பக்ஷணமுடையவர்களாய் வரைவின்றி யாவரையும் புணரும் ஸ்திரீகளை உருத்திரகணிகையரென்று நியோகிக்கின்ருர்கள்".

(சுப்பிரபோதம்).

(2) "யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளே!... கோயிலிலே பூசை திருவிழா முதலியவைகளில் வேதமுந் தேவார முதலிய அருட்பாவுந் தவருமல் ஓதப்படல் வேண்டும் என்பது சாத்திர சம்மதமேயாகவும், இக்கோயிலாரும் இங்குள்ள மற்றை எக்கோயிலாருந் தங்கள் தங்கள் கோயிலிலே அப்படிச் செய்வித்துப் பத்தியை ஒருசிறிதும் வளர்க்காது, ஆகமத்திலே பேசப்படுந் தேவதாசி யிலக்கணம் ஒருசிறிதும் இல்லாதவர்களாய், மதுமாமிச பக்ஷணம் வியபிசாரம் முதலிய தீயொழுக்கங்களே உடையவர்களாய், நித்தியாசௌசிகளாய் உள்ள பொதுப்பெண்களைத் தேவதாசிகள் என நியோகித்துக் கோயிற்றிரவியங்களை அவர்களுக்கு உபயோகித்துக் காமம், கோபம், பொருமை, மதுபானம், கலகம், சண்டை, வழக்கு, மேகவியாதி,

சந்ததிநாசம், வறுமை முதலிய தீமைகளையே வளர்க்கின்றூர்கள் ''

(நல்லூர்க் கந்தசுவாமி கோயில், முதலாம் பத்திரிகை)

(3) '' நல்லூர்க் கந்தசுவாமி கோயிலார்களே!... வசந்த மண்டபத்தினெதிரே மதுமாமிச பட்சணம் வியபிசாரம் முதலிய தீமைகளெல்லாம் நிறைந்த பரத்தையர்களுடைய நடன சங்கீதங்களுக்கு ஐந்தாறு நாழிகை நேரம் மிக்க உவப்போடு கொடுக்கும் நீங்கள், திருவிழாச் செலவிறுக்குங் கொடையாளருடைய வேண்டுகோளின்படியே அவ்வசந்த மண்டபத்தினெதிரே ஓதுவார்கள் சாரங்கி வாசிக்கவுந் தேவாரம் ஓதவுந்தொடங்கியவுடனே தானே, தங்கள் நேரத்தைத் தேவாரம் கொள்ளைகொள்ளத் தொடங்குகின்றது என்று பொருமை கொண்ட பரத்தையர்கள் இட்ட கட்டளையை உங்கள் சிரமேற் கொண்டு நைவேத்தியமெடுக்கும்படி வாத்தியத்தை முழக்குவித்துத் தேவாரத்துக்கு இடையூறு ஒரு சிறிதேனும் அஞ்சாது விளைத்த உங்கள் துர்ப்புத்தி எப்படி வந்து முடிந்தது?''

(நல்லூர்க் கந்தசுவாமி கோயில், இரண்டாம் பத்திரிகை)

சமயவாழ்க்கையிற் கால்கொண்டு சமுதாயத்திலே புரையோடிவிட்டிருந்த சீர்கேட்டை ஆறுமுகநாவலர் கூறிய வார்த்தைகள் எடுத்துக்காட்டுகின்றன. இறையெண்ணம் கொண்ட மக்களின் உயிர்நாடிபோல விளங்கிய கோயில்களைப் பீடித்த மாசினைத் துடைக்கப் புறப்பட்ட நாவலர் கண்டனங்கள் மூலம் அப்பணியைச் செய்ய முயன்ருர். ஆரியசமாசத்தின் தாபகரான தயானந்த சரஸ்வதியும் (1824 – 1883) நாவலர் காலத்திலே இத்தகைய பணியை வடஇந்தியாவிலாற்றி வந்தார் என்பதும் ஈண்டு நினைவுகூரப்பாலது. நாவலர் கண்டனந்திற்குப் பொருளாகக் கொண்ட

சமுதாயச்சீர்கேட்டைச் சுப்பையாப்புலவர் இலக்கியப் பொருளாகக் கொண்டார்.

> "நடந்தா ளொருகன்னி மாராசகேசரி நாட்டிற்கொங்கைக்
> குடந்தா னசைய வொயிலா யதுகண்டு கொற்றவரும்
> தொடர்ந்தார் சந்நியாசிகள் யோகம்விட்டார் சுத்தசைவ
> ரெல்லாம்
> மடந்தா னடைத்துச் சிவபூசை யுங்கட்டி வைத்தனரே"

என்றவாறு கேலிசெய்யப்பட்ட சூழலிலே 'ஐந்தாம் குரவர்' ஆத்திரங்கொண்டார்; சுப்பையாப் புலவர் நையாண்டி செய்தார்.

கனகிபுராணம் முழுவடிவத்திலே கிடையாமை தமிழிலக்கியத்திற்குப் பேரிழப்பாகும்; கிடைத்திருப்பின் 'தமிழ் இலக்கியத்திலேயே இன்று வரையிலும் பஞ்சலட்சணத்துக்கு ஈடுஜோடான எந்தவொரு நையாண்டி (அங்கத) இலக்கியமும் தோன்றியதில்லை என்றே சொல்லலாம்'' [30] என்ற கூற்று எழுந்திருக்காது.

## உசாத்துணை

1. நூல்களைத் தொடரும் அடைப்புக் குறிகளுக்கிடையேயுள்ள ஆண்டு பதிப்பிக்கப்பட்ட ஆண்டினைக் குறிக்கும்.
2. மாதகல் சு. ஏரம்பையர் (1848-1914) இயற்றியது (ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், முதலாம் பதிப்பு, 1966, பக். 266).
3. கா. அப்பாசாமி ஐயர் பாடியது (ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், பக். 505-507)
4. வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணியசிவாசாரியர் இயற்றிய தென்கோயிற் புராணம் ஈழத்துத் தலம் பற்றியது போலும் (ஈழகேசரி, 12-7-1936).

5. வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் நல்லூர் கைலாசநாதர் பேரிற் புராணமொன்று புனைந்துள்ளார் என்பர் (ஈழகேசரி, 12-7-1936); மன்னம்பாடியார் இயற்றிய தோன்றித் தலபுராணம் (மு.கணபதிப்பிள்ளை:ஈழநாட்டின் தமிழ்ச்சுடர்மணிகள், முதலாம் பதிப்பு, 1967, பக். 184) பற்றி யாதும் அறியுமாறில்லை.

6. வதிரி சி. நாகலிங்கம்பிள்ளை இயற்றிய திருத்திலதைப்பதிப் புராணம் அச்சிடப்பெற்றதாக அறிகிறோம்.

7. ஆறுமுகநாவலர் "நாட்டுக்கோட்டைச் செட்டிகள் சிலருடைய வேண்டுகோளின்படி தேவகோட்டைத் தலபுராணத்தை ஐந்நூறு செய்யுள் வரையிற்பாடினரென்றும் கேள்வி" என்பர் அ. சதாசிவம்பிள்ளை (பாவலர் சரித்திர தீபகம், முதலாம் பதிப்பு,1886,பக்.34)

8. 'அருள்வாக்கி' ஆ. பி. அப்துல்காதிறுப்புலவர் இயற்றிய கோட்டாற்றுப் புராணம் அச்சிடப்பெற்றமை அறியுமாறில்லை.

9. ஈண்டு குறிக்கப்பட்ட சிவராத்திரி புராணம் சுன்னாகம் அ. வரதபண்டிதர் பாடியதாகும். வே. சதாசிவம்பிள்ளை யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் 1910-ம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாகச் சிவராத்திரி புராணமொன்றினைப் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பிலே வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் நூலாசிரியராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். வே. சதாசிவம்பிள்ளையின் பதிப்பிற்குரிய முதற்பதிப்பு கிடைக்கவில்லை. ஆயினும் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் நெல்லைநாதர் பாடிய சிவராத்திரி புராணத்தைச் சிவசுப்பிரமணிய சிவாசாரியர் "பல ஏட்டுப்பிரதிகளை ஆதார

மாய்க் கொண்டு திருத்திச் சென்னபட்டணத்தில் அச்சிடுவித்தனர்'' (பக்.201) என்று கூறுவதிலிருந்து வே. சதாசிவம்பிள்ளையின் பதிப்பிற்குரிய நூலாசிரியர் யார் என்ற கேள்வி யெழுகின்றது. மேலும் ஆக்கியோன் பெயர் கூறும் செய்யுளாகப் பாவலர் சரித்திர தீபகத்திலிடம்பெறும் செய்யுளும் நூலிலிருந்து மேற்கோளாகத் தரப்பட்ட செய்யுளும் சதாசிவம்பிள்ளை பதிப்பிற் காணப்பெருமையும் ஐயத்திற்கிடமளிக்கின்றது. வட்டுக்கோட்டை க. குருமூர்த்தி ஐயர் தமது 'சிவராத்திரி புராணம்' (1939) என்னும் வசனநூலிலே சிவராத்திரி விரத மகிமை கூறும் நூல்களுடன் 'நெல்லை நாதநாவலர்' இயற்றிய சிவராத்திரி புராணத்தைக் குறிப்பிடுகின்றாரேயொழிய தமது ஊரினர் சிவசுப்பிரமணிய சிவாசாரியர் இயற்றியதாக வே. சதாசிவம்பிள்ளை கூறும் சிவராத்திரிபுராணத்தைக் கூறவில்லை என்பது நினைவுகூரத்தக்கது. இந்நிலையிலே சதாசிவம்பிள்ளை பதிப்பிற்குச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அளித்த சாற்றுகவி சிவசுப்பிரமணிய சிவாசாரியரை நூலாசிரியராகக் கூறுவது பொருத்தமா என்பது சிந்திக்கத்தக்கது. 'முருகரம்மான்' ஈழகேசரியில் (12-7-1936) சிவசுப்பிரமணிய சிவாசாரியர் ''நெல்லைநாதர் சிவராத்திரி புரணத்தை (இவர்)அதிகரித்து அச்சிடுவித்தார்'' என்று கூறியுள்ளார். அ. சதாசிவம்பிள்ளை பாயிர அத்தியாயம் உட்படவுள்ள ஐந்து அத்தியாயங்களில் 303 விருத்தங்களுள என்றார். வே. சதாசிவம்பிள்ளை பதிப்பிலே பாயிரம் நீங்கலாக ஆறு சருக்கங்களுள; பாயிரத்தில் ஏழு செய்யுள்களும் ஆறு சருக்கங்களிலே 294 செய்யுள்களுமுள. எனவே 'முருகரம்மான்' கூற்று பாடலெண்ணிக்கையைப் பொறுத்தவளவிற் பொருந்தாது.

10. ஈண்டு குறிப்பிடப்பட்டது சுன்னுகம் அ. வரத பண்டிதர் பாடிய புராணமாகும். வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியரும் ஏகாதசி புராணமொன்று பாடியுள்ளார் எனவும் அஃது அச்சிடப்பெற்றுள்ளதாகவும் 'முருகரம்மான்' கூறுகிருர் (ஈழகேசரி, 12-7-1936).

11. வட்டுகோட்டை நா. சிவசுப்பிரமணியசிவாசாரியர் பாடியதாகக் கூறப்படும் விநாயகசட்டிபுராணம் அச்சுவாகனம் ஏறவில்லை என்பர் (ஈழகேசரி, 12-7-1936).

12. வைத்தியநாதமுனிவர் இயற்றிய வியாக்கிரபாத புராணத்திற்குரியதாக இரு செய்யுள்களை அ. குமாரசுவாமிப்புலவர் தந்துள்ளார் (தமிழ்ப்புலவர் சரிதம், முதலாம் பதிப்பு, 1916, பக் 189).

13. சைமன் காசிச்செட்டி யோசேப்பு புராணத்திற்குரிய ஐந்து செய்யுள்களைத் தந்துள்ளார் ('தமிழ் புளூராக்' இரண்டாம் பதிப்பு, 1946, பக். 56).

14. தமிழகத்திற் பிறந்து யாழ்ப்பாணம் சென்று வாழ்ந்து மறைந்தவராகக் கருதப்படும் பதுறுத்தீன்புலவர் பாடிய முகியித்தீன்புராணம் 1881-ம் ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்றதாகக் கூறுவர்.

15. வட்டுக்கோட்டை மு. ஆறுமுகம்பிள்ளை இயற்றிய இப்புராணத்தின் மூன்றும் பதிப்பு சங்கானை சச்சிதானந்தயந்திரசாலையிலிருந்து 1927-ம் ஆண்டு வெளிவந்தது. செய்யுளாலும் வசனத்தாலுமியன்ற இந்நூல் அளவில் மிகச் சுருங்கியதாகும்.

16. ஈழகேசரி, 12-7-1936

17. எஸ். வையாபுரிப்பிள்ளை: தமிழின் மறுமலர்ச்சி, இரண்டாம் பதிப்பு, 1953, பக். 46-47.

18. இணுவில் சி. சின்னத்தம்பிப்புலவர் ''இளந்தாரி புராணம் என ஒரு நூல் செய்ததாகவும் அறிய வருகின்றது'' என்பர் நவாலி சி. கந்தையாபிள்ளை (தமிழ்ப்புலவர் அகராதி, இரண்டாம் பதிப்பு, 1960, பக். 180). இந்நூலினைப்பற்றி யாதும் அறியமுடியவில்லை.

19. ''இப்புலவர் இற்றைக்கு ஏழெட்டு வருஷங்களின் முன் தேகவியோகமாயினர்'' (பாவலர் சரித்திரதீபகம், 1886, பக். 41).

20. தமிழ்ப்புலவர் அகராதி ஆசிரியர் கும்பகோணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட காசிநாதப்புலவர் தாலபுராணம் செய்தனர் என்பர் (பக். 113). ஆயினும் அவர் கூறும் தாலபுராணம் கலிவெண்பா யாப்பிலமைந்தது; பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் கூறும் தாலபுராணம் விருத்தப்பாவாலியன்றது. நவாலி சோமசுந்தரப்புலவர் பாடிய தால விலாசமுமுண்டு.

21. பக். 96

22. பக். 41

23. யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள காரைதீவிலே 'சின்னாச்சிபுராணம்' எனப் பெயரிய நூலொன்றிற் குரியதாகச் சில பாடல்கள் வழங்கிவருகின்றன.

24. இப்பாடலைப் பிரதி பேதங்களுடன் கந்தையாபிள்ளையும் இராமலிங்கமும் 'சுயம்வரபடல'த்திற் குரியதாகக் கொண்டனர்.

25. கலைச்செல்வி, ஆனி, 1960.

26. பி. பே. 'கற்றேன்'.

27. இவ்வொன்பது செய்யுள்களில் இரண்டொழிந்தவை (16, 21) கனக. செந்திநாதனின் 'கனகிபுராணத்தில் சில பாடல்கள்' என்ற கட்டுரையிற் பிரதிபேதங் களுடன் காணப்படுகின்றன.

28. பாவலர் சரித்திர தீபகம் இந்நூலினைக் 'கனகி சயமரம்' என்றே குறிப்பிடுகின்றது.

29. குழந்தையின் 'இராவணகாவியம்' (1946) ''முன் னுள் கவி, தம் நோக்கத்துக்காக, இராவணன் மீது ஏற்றிய இழிகுணங்களையும், கொடுஞ் செயல் களையும் களைந்தெறியவும், இராவணனுடைய தூய் மைக்கு ஆதாரமான பல புகலவும், அஃதே போல, இராமனுடைய குணம், செயல் ஆகியவற்றிலே காணக்கிடைக்கும் தவறுகளைத் தெளிவுபடுத்தவும் தோன்றிய நூலாகும்'' (இராவண காவியம், முன் னுரை: சி. என். அண்ணாத்துரை).

30. தொ. மு. சிதம்பரரகுநாதன்: சமுதாய இலக்கியம் (1964), பக். 210.

## 4. பாவலர் சரித்திர தீபகம்

சைமன் காசிச்செட்டியின் 'தமிழ் புளூராக்' என்னும் தமிழ்ப் புலவர் சரிதம் கூறும் ஆங்கில நூல் (Tamil Plutarch) 1859-ம் ஆண்டில் வெளிவந்தது. சி. வை. தாமோதரம்பிள்ளை 1881-ம் ஆண்டில் வெளியிட்ட வீரசோழிய மூலமும் பெருந்தேவனாருரையும் என்னும் நூலுக்குத் தாமெழுதிய பதிப்புரையிலே 'தமிழ்ப் பாஷையின் கால வருத்தமானம்' என்ற பெயரிலே தமிழ்மொழி, இலக்கியப் பரப்பை எட்டுப் பிரிவுகளாக வகுத்து இலக்கிய சரிதத்திற்குக் 'கால் கோள்' எடுத்தனர்.[1] சங்கதப் பேராசிரியராக விளங்கிய எம். சேஷகிரி சாஸ்திரியார் தாம் ஆங்கிலத்திலெழுதிய 'தமிழ் இலக்கியம் பற்றிய வியாசம்' (Essay on Tamil Literature) என்னும் சிறுநூலை, இறையனாரகப்பொருளுரை வெளிவந்த காலத்தினையடுத்து, 1884-ம் ஆண்டில் வெளியிட்டார்[2]. தமிழ் இலக்கிய சரித வரலாற்றிற் குறிப்பிடத்தக்க அடுத்த வெளியீடு பாவலர் சரித்திர தீபகமாகும். பாவலர் சரித்திர தீபகம் அல்லது The Galaxy of Tamil Poets என்னும் தமிழ் நூல் மானிப்பாயிலுள்ள 'ஸ்திருங், அஸ்ப்ரி என்பவர்களின் இயந்திரசாலையில்' (Strong and Asbury, Printers) அச்சிடப்பெற்று 1886-ம் ஆண்டில் வெளியிடப்பெற்றது. இந்நூலே நம் தாய்மொழியில் வெளிவந்த முதலாவது தமிழ்ப்புலவர் சரிதநூலாகும்.

பாவலர் சரித்திர தீபகத்தின் ஆசிரியர் சதாசிவம் பிள்ளை யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மானிப்பாயைச் சார்ந்த நவாலி என்னுமூரிற் கதிரித்தம்பிச் சட்டம்பியார் புதல்வர் அருணாசலத்திற்கும் காசிநாதக் கணக்கர் புதல்வி ஆனந்தப்பிள்ளைக்கும் மகனாகச் சைவக்குடும்பத்திலே 1820-ம் ஆண்டு 'ஒக்ரோபர்'

மாதம் பதினோராம் தேதி பிறந்தார். நவாலியிலும் மானிப்பாயிலும் ஆரம்பக் கல்வி பயின்ற சதாசிவம் பிள்ளை 1832-ம் ஆண்டு 'வட்டுக்கோட்டை செமினறி' என்னும் கலாசாலையிற் சேர்ந்தார். அங்கு, மாணவக ராக இருந்தகாலை, 1835 - ம் ஆண்டு கிறித்தவரானார்; ஜே. ஆர். ஆனோல்ட் (J. R. Arnold) என்னும் பெயரையும் பெற்றார். 1840-ம் ஆண்டு 'வட்டுக்கோட்டை செமினறி' யிலிருந்து தேறி வெளியேறிய சதாசிவம்பிள்ளை மானிப் பாய், சாவகச்சேரி, உடுவில் ஆகிய இடங்களிலே ஆசிரியராகப் பணிபுரிந்தார். சதாசிவம்பிள்ளை 1848-ம் ஆண்டிற் பேர்சிவல் பாதிரியார் (Rev. Peter Percival), ஸ்போல்டிங் பாதிரியார் (Rev. L. Spaulding), ஆறுமுக நாவலர், அ. சந்திரசேகர பண்டிதர் ஆகியோருடன் சென்னைக்கு 'வேதாகமத்திருப்புதல்' பற்றிய கூட்டத் திற் கலந்துகொள்ளச் சென்றவர். 1854-ம் ஆண்டிலே உடுவில் பெண்பாடசாலைத் தலைமையாசிரியரான சதாசிவம்பிள்ளை 1857-ம் ஆண்டு ஆனி மாதம் 'உதயதாரகை' ஆசிரியர் பொறுப்பையேற்றார். உதய தாரகைப் பத்திராதிபர் 1881-ம் ஆண்டு முதல் 1891ம் ஆண்டுவரை 'யாழ்ப்பாணக் கல்லூரி'யின் தமிழாசிரி யராகவும் பணிபுரிந்தார். சதாசிவம்பிள்ளை 1895-ம் ஆண்டு இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.[3]

ஈழநாட்டிலிருந்து வெளிவந்த இரண்டாவது தமிழ்ப்புலவர் சரிதமும் தமிழ்மொழியிலெழுந்த முதலா வது தமிழ்ப்புலவர் சரிதமுமாகிய பாவலர் சரித்திரதீப கம் தோன்றுவதற்குச் சைமன் காசிச்செட்டியின் 'தமிழ் புளூராக்' முக்கிய காரணமாயிருந்தது. நண்பரொருவர் சதாசிவம்பிள்ளையைத் 'தமிழ்புளூராக்' என்னும்ஆங்கில நூலைத் தமிழிலே மொழிபெயர்க்கும்படி தூண்டினார். அவர் தூண்டுதலின்பேரிற் புலவர் சரித மொழிபெயர்ப் பிலிறங்கிய சதாசிவம்பிள்ளை[4], அந்நூலை அடிப்படை யாகக் கொண்டு விரித்தெழுதக் கூடிய வாய்ப்பு இருப்

பதனையுணர்ந்து, அவ்வழியிலே சென்று, புதியதொரு நூலினைத் தந்தார்.

சதாசிவம்பிள்ளை பாவலர் சரித்திர தீபகம் எழுதியமைக்குப் பிறிதொரு காரணமும் கூறலாம். திருச்சதகம், மெய்வேதசாரம், நன்னெறிக்கொத்து முதலிய நூல்களைப் பாடிய பாவலர் சதாசிவம்பிள்ளை, பாவாணராகத் திகழ்ந்து, பூதவுடலை நீத்துப் புகழுடம்பை நிறுவிய அறிஞர் பலரின் தொண்டும் ஆக்கங்களும் மறைந்துபோகும் நிலையிலிருப்பதை நன்கறிந்தார். ஈழத்தவரான காசிச்செட்டியவர்களின் தமிழ்ப்புலவர் சரிதத்திலேயே ஈழத்தில் அவருக்கு முன்பு வாழ்ந்த முப்பதிற்கு மேற்பட்ட தமிழ்ப் புலவரின் சரிதங்கள் இடம்பெறவில்லை என்பதைக் கண்டார். எனவே காசிச்செட்டியவர்களுக்குக் கிடைக்காத புலவர் செய்திகளையும் தொகுத்துக் கூறக் கிறித்தவப் புலவராகிய சதாசிவம்பிள்ளை விழைந்தார்.

சதாசிவம்பிள்ளை புரிந்து வந்த பணியும், காசிச்செட்டியவர்களின் தொண்டை அவர் தொடர்ந்து செய்ய விழைந்தமைக்குக் காலாக அமைந்தது. தமிழாசிரியர் பணி சதாசிவம்பிள்ளையைத் தமிழிலக்கியத்தில் ஆர்வமுள்ளவராகவும் அவ்விலக்கிய கர்த்தாக்கள் மீது மதிப்புள்ளவராகவும் ஆக்கவுதவியிருக்கும். பத்திராதிபர் பதவி தமிழிலக்கியவுலகோடு சதாசிவம்பிள்ளைக்கு நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும். 'உதயதாரகை' ஆரம்ப காலத்திலிருந்து இலக்கியம், இலக்கணம் சம்பந்தமான விடயங்களுக்கும் இடங்கொடுத்து வந்தது. களத்தூர் வேதகிரி முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் ஆகியோர் நளவெண்பாப் பாட்டொன்றினையிட்டுச் செய்த தர்க்கம் உதயதாரகையிலே, அதன் ஆரம்ப காலத்தில் நீண்டு வளர்ந்தது'. தமிழ்ப் புலவர் வியோகமடைந்தகாலை உதயதாரகை அவர்கள் தொண்டிற்கு

அஞ்சலி செய்தது[6]; நூல்களின் மதிப்புரைகளும் உதய தாரகையில் இடம்பெற்றன[7]; கிடைத்தற்கரிய பழைய நூல்களின் பகுதிகளும் உதயதாரகையிற் பிரசுரமாயின.[8] இத்தகைய பத்திரிகையின் ஆசிரியர் காசிச்செட்டியவர்களுக்குக் கிடைக்காத முற்பட்ட புலவர் சரிதங்களையும் 'தமிழ் புளூராக்' தோன்றிய காலத்திற்குப் பின்பு வியோகமடைந்த புலவரின் சரிதங்களையும் தொகுத்துக் கூற விழைந்தமை வியப்பல்ல.

காசிச்செட்டியவர்களின் 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலே 197 புலவரின் செய்திகள் இடம்பெறுகின்றன. இத்தொகையினரிலொருவரான சண்முகதாசன் என்பவரைப் பாவலர் சரித்திர தீபகத்தின் ஆசிரியர் தமது நூலிற் சேர்க்காது விட்டுவிட்டார். அச்செயல் தவறுதலாக நிகழ்ந்தது போலும். எனவேதான் தமது நூலின் 'பாயிர'த்திலும் ஆங்கில முன்னுரையிலும் காசிச்செட்டியவர்களின் நூலிலே 196 பேருடைய சரிதங்களே இடம்பெறுகின்றன என்று சதாசிவம்பிள்ளை கூறினர். 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலிடம்பெறுபவர்களிலே 196 பேருடைய சரிதங்களையும் தாம் புதிதாகச் சேர்த்த 214 பேருடைய சரிதங்களையும் கூட்டி, சதாசிவம்பிள்ளை 410 பேருடைய சரிதக் குறிப்புக்களைத் தருகிருர்.

காசிச்செட்டியவர்களின் புலவர் சரிதத்திலே 'யாழ்ப்பாண நாயனர்' நீங்கலாக, மேல்வரும் ஈழத்துப் புலவர் பன்னிருவரே இடம்பெறுகின்றனர்:[9]

1. அரசகேசரி
2. நல்லூர் வி. சின்னத்தம்பிப்புலவர்
3. சுன்ஞகம் வரதகவிராயர் (சுன்ஞகம் அ. வரதபண்டிதர்)
4. மாதோட்டம் லோரெஞ்சுப்புலவர்

5. திருநெல்வேலி ஞானப்பிரகாச தேசிகர் (ஞானப்பிரகாச முனிவர்)
6. கூழங்கையர் (கூழங்கைத் தம்பிரான்)
7. பிலிப்பு தெ மெல்லோ (1723-1790)
8. மாதோட்டம் குமாரசிங்க முதலியார்
9. வட்டுக்கோட்டை கணபதி ஐயர் (-1803)
10. தெல்லிப்பழை (இருபாலை) நெ. சேனாதிராயமுதலியார் (-1840)
11. நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் (-1845)
12. அராலி விசுவநாத சாஸ்திரியார்

பாவலர் சரித்திர தீபகத்திற் புதிதாக இடம்பெறும் 214 பேரில் அறுபத்தொன்பதின்மரை ஈழத்தவர் என்று கூறலாம்.[10] இவ்வறுபத்தொன்பதின்மருள் மேல்வருபவர் 'தமிழ் புளூராக்' தோன்றிய பின்பு வியோகமடைந்தவராவர்:-

1. நல்லூர் சி. அப்புக்குட்டி ஐயர் (1788-1863)
2. கோப்பாய் அ. அம்பலவாண பண்டிதர்[11]
3. ஆறுமுகநாவலர் (1822-1879)
4. கோப்பாய் வே. இராமலிங்கம்[12]
5. சுதுமலை வ. இராமலிங்கம் (—1885)
6. வல்லிபட்டித்துறை நா. ஏகாம்பரம் (—1873)[13]
7. அளவெட்டி வே. கனகசபைப்புலவர் (1816—1873)[14]
8. தெல்லிப்பழை குமாரகுலசிங்க முதலியார் (1826-1883)
9. வல்லிபட்டி க. குமாரசுவாமிமுதலியார் (1792—1874)
10. நீர்வேலி சி. சங்கரபண்டிதர் (1829—1870)
11. உடுவில் அ. சந்திரசேகர பண்டிதர் (—1879)
12. கா. தி. சவுந்தரநாயகம்பிள்ளை[15]
13. உடுப்பிட்டி தா. சின்னத்தம்பி (1831—1876)[16]
14. சுன்னாகம் அ. நாகநாதபண்டிதர் (—1884)

15. வட்டுக்கோட்டை இ. நாகேசையர் (—1862)
16. சுதுமலை வ. விசுவநாதபிள்ளை [17]
17. வண்ணார்பண்ணை சி. விநாயகமூர்த்திச் செட்டியார் (—1876)
18. நல்லூர் வே. கார்த்திகேய ஐயர் [18]
19 நல்லூர் வே. சம்பந்தப்புலவர் [19]
20. மானிப்பாய் க. சுப்பையர் [20]
21. ஹென்றி மாட்டின் [21]

எனவே இவர்கள் காசிச்செட்டியவர்களின் தமிழ்ப் புலவர் சரிதத்திலே இடம்பெறவில்லை. சைமன் காசிச் செட்டி, அ. சதாசிவம்பிள்ளை, சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர், புன்னாலைக்கட்டுவன் சி. கணேசையர் முதலியோர் தத்தம் புலவர் சரித நூல்களிலே அவை எழுந்த காலத்தில் வாழ்ந்தவர்களை விடுத்தே புலவர் சரிதம் கூறமுற்பட்டனர் [22]. சுதுமலை வ. இராமலிங்கம் பற்றிக் கூறவந்த சதாசிவம்பிள்ளை, "நாம் இச்சரித்திரத்தை எழுதி முடிக்கிறவரையில் எம் நேசராகிய இவர் நாமமும் சரிதமும் இதனோடு சேருமென்று கனவிலுங் கருதாதிருக்கவே, சென்ற வருடம் மாசிமாதம் 16-ம் தேதி கொழும்பிலே சில தினச் சுரத்தாற் தேக வியோகமாயினர் என்ற சத்தங் காதில் விழப்பெற்ரேம்" என்று கூறுவது ஈண்டு கவனிக்கத்தக்கது.

மேல்வரும் ஈழத்தவர் 1859-ம் ஆண்டிற்குப் பின்போ அல்லது முன்போ வியோகமடைந்தனர் என்பதை அறிவதற்குச் சான்றுகள் எமக்குக் கிடைத்தில:-

1. நீர்வேலி ச. பீதாம்பரப்புலவர் [23]
2. நல்லூர் க. பரமானந்தர் [24]
3. சுப்பிரமணிய தம்பிரான் [25]
4. நவாலி கா. முத்துக்குமாரர் [26]
5. வல்லிபட்டித்துறை க. ஏகாம்பரம் [27]

6. வல்லிபட்டி ச. குமாரசுவாமிப்புலவர் [28]
7. வல்லிபட்டி ச. முத்துக்குமாரமுதலியார்
8. மறவன்புலம் சயம்பர் [29]
9. வண்ணார்பண்ணை அநந்தசுப்பையர்
10. கனகிபுராண ஆசிரியர் சுப்பையனார்
11. சண்டிருப்பாய் நீக்கிலாஸ்பிள்ளை
12. நவாலி வி. வயிரமுத்துப்பிள்ளை [30]
13 வண்ணார்பண்ணை மா. காசிநாதர் [31]
14. சுன்னாகம் சிதம்பரப்பிள்ளை (சித்துப்புலவர்) [32]

இவர்கள் 1859-ம் ஆண்டிற்குப் பின்பு வியோகமடைந்தனரெனிற் காசிச்செட்டியவர்கள் இவர்களைப் பற்றித் தமது நூலிலே குறிப்பிடாமல் விட்டமை. அவர் கொள்கைப்படி, பொருத்தமாகலாம். இவர்கள் 'தமிழ் புளூராக்' தோன்றுவதற்கு முன்பு வியோகமடைந்தனரெனிற் காசிச்செட்டியவர்களுக்கு இவர்களைப்பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை என்று கருத இடமேற்படும்.

மேல்வரும் ஈழத்தவர் 'தமிழ் புளூராக்' தோன்றுவதற்கு முன்பே வியோகமடைந்துவிட்டனர் எனலாம்:-

1. வட்டுக்கோட்டை சு. இராமசாமி ஐயர் [33]
2. அராலி ச. இராமலிங்க ஐயர் [34]
3. அச்சுவேலி வி. இன்னாசித்தம்பி (1783—1845)
4. அச்சுவேலி மு. கதிரேசுப்புலவர் (—1844)
5. நல்லூர் ப. கந்தப்பிள்ளை (1766—1842)
6. அச்சுவேலி நீ. காசிநாதப்புலவர் (1796—1854)
7. வல்லிபட்டி சந்திரசேகர முதலியார் [35]
8. வட்டுக்கோட்டை க. முத்துக்குமாரர் [36]
9. வட்டுக்கோட்டை மு. சுவாமிநாதர் [37]

10. வட்டுக்கோட்டை சு. சண்முகச்சட்டம்பியார்(-1849)
11. மாதகல் சிற்றம்பலப்புலவர் [38]
12. மாவிட்டபுரம் சின்னக்குட்டிப்புலவர் [39]
13. அராலி அருணுசலம்
14. இணுவில் சி. சின்னத்தம்பி [40]
15. மானிப்பாய் அ. சுவாமிநாதர் [41]
16. விளான் பே. சுவாம்பிள்ளைப்புலவர் (1784—1844)
17. செகராச சேகரன் [42]
18. அச்சுவேலி சு. நமச்சிவாயப்புலவர் (1749—1814)
19. அராலி ந. நாராயணஐயர் [43]
20. வயாவிளான் பிரான்ஸிஸ்பிள்ளை [44]
21. சுதுமலை புலவர் விநாயகர் [45]
22. புவனேகவாகு [46]
23. மாதகல் மயில்வாகனப்புலவர்
24. எழுதுமட்டுவாள் மாப்பாண முதலியார் ( -1827) [47]
25. மீசாலை மா. வெற்றிவேலர்
26. அராலி முத்துக்குமாரப்புலவர் [48]
27. சுன்ஞகம் அ. முத்துக்குமார கவிராசர் (1780-1851)
28. காரைதீவு மே. சுப்பையர் [49]
29. காரைதீவு கா. முருகேசையர் [50]
30. அச்சுவேலி அ. வைத்தியநாதச் செட்டியார் (1759-1844)
31. வைத்தியநாத தம்பிரான் (வைத்தியநாதமுனிவர்) [51]
32. முத்துராசர்
33. தெல்லிப்பழை பூலோகசிங்கமுதலியார் [52]
34. தொம் பிலிப்பு [53]

எனவே 'தமிழ் புளூராக்' என்னும் ஈழத்து நூலில், அந்நூல் தோன்றுவதற்கு முன்னர் வாழ்ந்து மறைந்த,

முப்பதிற்கு மேற்பட்ட ஈழத்துப்புலவர் இடம்பெற வில்லையென்பது தெளிவாகின்றது. நீர்வேலி பீதாம்பரப் புலவர், நல்லூர் பரமானந்தப்புலவர் முதலிய பதினால் வர் பட்டியலையும் சேர்ப்பின் நாற்பதிற்கு மேற்பட்ட ஈழத்தவர் 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலிடம்பெருமை புலனாகும்.

காசிச்செட்டியவர்கள் புத்தளம், சிலாபம், கொழும்பு ஆகிய இடங்களிலே வாழ்ந்தவர். அவர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வாழ்ந்தமை பற்றி அறியச் சான்றுகள் கிடைத்தில. நீதிமன்ற மொழி பெயர்ப்பாளர், மணியகாரர், முதலியார், சட்டநிரூபண சபை அங்கத்தவர், நீதிபதி முதலிய பதவிகளை வகித்த காசிச்செட்டியவர்கள் யாழ்ப்பாணம் சென்று தங்கி, அங்குள்ள தமிழறிஞரைச் சந்தித்து விபரங்களைச் சேர்க்கக் கூடிய அவகாசம் உடையவராக இருந்தார் என்று கருதுவதற்கில்லை. மேலும் காசிச்செட்டியவர் கள் காலத்தில் ஈழத்தில் நிலவிய பிரயாண வசதிகளை யும் கவனித்தல் வேண்டும். இவர் காலத்திலே ஈழத்தில் இரும்புப்பாதை இடப்படவில்லை என்பது நோக்கற் பாலது. 1841-ம் ஆண்டிலிருந்து வெளிவந்த 'உதய தாரகை' என்னும் பத்திரிகை மூலம் காசிச்செட்டியவர் கள் சில செய்திகளைப் பெற்றிருக்கிறார். ஆயினும் அப் பத்திரிகைகூட காசிச்செட்டியவர்களின் தமிழ்ப்புலவர் சரிதம் தோன்றுவதற்கு முன்பு வாழ்ந்து மறைந்த ஈழத்துத் தமிழ்ப்புலவர்களைத் தமிழ் பேசு நல்லுலகிற்கு நன்முறையில் அறிமுகஞ் செய்திருந்தது என்று கூறு வதற்கில்லை. மேலும் ஈழத்தவர் இயற்றிய பாடல்களும் நூல்களும் காசிச்செட்டியவர்கள் காலத்திலே அருகியே பதிப்பிக்கப்பெற்றன. எனவே யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு வெளியே வாழ்ந்த காசிச்செட்டியவர்களுக்கு அப்பகுதியில் எழுந்த நூல்களைப்பற்றியும் பாடல்களைப் பற்றியும் அவற்றை ஆக்கியோரைப் பற்றியும் அறிந்து

கொள்ளும் வாய்ப்புகள் அருகியே கிடைத்தன என்று கொள்வதிற் பிழையில்லை. அவர் பன்னிருவரை மட்டுமே சுட்டக்கூடியதாக இருந்தமை வியப்பிற்குரியதல்ல.

சதாசிவம்பிள்ளை யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பிறந்து வாழ்ந்து மறைந்தவர். குருகுலக் கல்வி முறையில் வந்த பெரியோரின் தொடர்பும் புதிய கல்விமுறையிற் பயின்ற சான்றோரின் தொடர்புமுடையவராக இருந்தவர். சதாசிவம்பிள்ளைக்குக் காரிகை, காந்தபுராணம், சங்கதம் என்பனவற்றை அறிவுறுத்திய மானிப்பாய் க. சுப்பையர் அவர்கள் மாதகல் சிற்றம்பலப்புலவரின் மாணுக்கர் பரம்பரையிலே வந்தவர். வட்டுக்கோட்டை சர்வசாத்திர கலாசாலையிற் சதாசிவம்பிள்ளைக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் போதித்த வட்டுக்கோட்டை சு. சண்முகச்சட்டம்பியார் தம் தந்தையாரிடத்தும் மாதகல் சிற்றம்பலப்புலவரின் மாணவகரான இருபாலை சேனுதிராயமுதலியார், அராலி அருணுசலம் என்பவரிடம் பயின்றவர். எனவே இருவகைக் கல்வி முறையினரதும் தொடர்புடைய சதாசிவம்பிள்ளை இருவழியிலும் வந்த தமிழ்ப்புலவரின் சரிதங்களையும் தொகுத்தளிக்கும் வாய்ப்புடையவராக இருந்தார் எனலாம். மானிப்பாய் க. சுப்பையர் மூலம் மாதகல் சிற்றம்பலப்புலவர், மாவை சின்னக்குட்டிப்புலவர், அராலி அருணுசலம், நவாலி கா. முத்துக்குமாரர் பற்றிய செய்திகளைச் சதாசிவம்பிள்ளை அறிந்திருக்கலாம்; சண்முகச் சட்டம்பியாரிடமிருந்து அவர் தந்தை மு. சுவாமிநாதர், அவர் பாட்டனுர் க. முத்துக்குமாரர் பற்றிய விபரங்களைத் தெரிந்திருக்கலாம்; தாம் பயின்ற வட்டுக்கோட்டை சர்வசாத்திரகலாசாலையிற் கற்ற அளவெட்டி வே. கனகசபைப்புலவரிடமிருந்து சுப்பிரமணியதம்பிரான், வைத்தியநாத தம்பிரான் பற்றியும்[54] வல்லிபட்டி கு. கதிரைவேற்பிள்ளையிடமிருந்து அவர்

முன்னோர் சந்திரசேகர முதலியார், குமாரசுவாமிப்புல வர், முத்துக்குமார முதலியார் பற்றியும்[55] கேள்விப் பட்டிருக்கலாம். சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர்[56], காரைதீவு மு. கார்த்திகேயையர்[57], வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர்[58], 'பாலியர் நேசன்' பத்திராதிபர் சி. வி. சின்னத்தம்பி[59] முதலியோருடனும் சதாசிவம்பிள்ளை தொடர்புடையவராக இருந்தார். இவர் களும் சுன்னாகம் அ. முத்துக்குமாரகவிராசர், காரை தீவு கா. முருகேசையர், வட்டுக்கோட்டை சு. இராம சாமி ஐயர், உடுப்பிட்டி தா. சின்னத்தம்பி முதலிய வர்கள் பற்றிய விபரங்களைக் கொடுத்துதவியிருப்பர்.

சதாசிவம்பிள்ளை மானிப்பாய், சாவகச்சேரி, உடு வில் முதலிய இடங்களிலே ஆசிரியராகப் பணிபுரிய வதிந்த காலத்தில் ஏற்பட்ட தொடர்புகளும் சேகரித்த செய்திகளும் 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலும் பாவலர் சரித்திர தீபகத்தில் மேலதிகமான ஈழத்தவர் சரிதங்கள் இடம்பெறக் காரணமாயிருந்தன என்று கொள்ள இடமுண்டு. உதாரணமாக, சதாசிவம்பிள்ளை சாவகச்சேரியிற் பணிபுரிந்தமையால் மாப்பாணமுதலி யார், மா. வெற்றிவேலர், சயம்பர் ஆகியோர் சரிதங் களைத் தரக்கூடியவராக இருந்தார். ஆசிரியராக இருந்த காலத்து ஏற்பட்ட தொடர்புகள் பத்திரிகாசிரியர் பொறுப்பை ஏற்ற பின்பு அதிகரித்திருக்கும். பாவலர் சரித்திர தீபகம் வெளிவந்தபோது சதாசிவம்பிள்ளை பத்திரிகாசிரியர் பதவியிலே இருபத்தைந்து வருடங் களுக்கு மேல் இருந்துவிட்டார். நீண்ட காலமாக அவர் வகித்த பத்திரிகாசிரியர் பதவி பாவலர் சரித்திர தீப கத்திற்கு வேண்டிய ஈழம் பற்றிய செய்திகளைச் சேர்க்க நன்குதவியிருக்கும். காசிச்செட்டியவர்களைப் போலன்றி பாவலர் சரித்திரதீபகத்தின் ஆசிரியர் யாழ்ப் பாணக் குடாநாட்டில் வாழ்ந்தமை நூலுக்கு வேண்டிய ஈழம் பற்றிய செய்திகளைச் சேர்க்கும் வாய்ப்புகளை

அதிகரிக்கக் காரணமாயிருந்தது என்று கூறுவதிற் பிழையில்லை.

பாவலர் சரித்திர தீபகத்திற் புதிதாக இடம்பெறும் 214 தமிழ்ப்பெரியோரில் 145 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களிலே ஐவரைக் காசிச்செட்டியவர்கள் தமது தமிழ்ப்புலவர் சரித நூலிலே குறிப்பிட்டிருந்த போதும் தனித்தனித் தலைப்புகளிலே கூறவில்லை. 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலே அதங்கோட்டாசிரியர், சேனாவரையர், இளம்பூரணர் என்பவர்கள் தொல்காப்பியர் பற்றிக் கூறுமிடத்தும் குணசாகரர் என்னும் உரைகாரர் அமிர்தசாகரர் பற்றிக்கூறுமிடத்தும் அம்பிகாபதி என்பவர் கம்பர் பற்றிக் கூறுமிடத்தும் குறிக்கப்பட்டுள்ளனர். எனவே சதாசிவம்பிள்ளை தமது நூலிலே தமிழகத்திலிருந்த 140 பேருடைய செய்திகளைப் புதிதாகத் தந்துள்ளார் எனவும் கூறலாம்.

பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் புதிதாகத் தரும் சரித புருடர்களிற் சிலர் 'தமிழ் புளூராக்' தோன்றிய பின்பு வியோகமடைந்தவர்கள். உதாரணமாக, மேல் வருபவர் 'தமிழ் புளூராக்' வெளிவந்த காலத்து வாழ்ந்து கொண்டிருந்தனர் என்று கருத இடமுண்டு:

1. ஆதிமூலமுதலியார் [60]
2. திருவெண்காடு ஆறுமுகசுவாமிகள் [61]
3. கருவூர் ஆறுமுகத்தம்பிரான் (Wesley Abraham) [62]
4. கருங்குழி இராமலிங்கபிள்ளை (இராமலிங்கசுவாமிகள்) (1823-1874)
5. சைதாபுரம் தி. காசிவிசுவநாத முதலியார் [63]
6. ஆனைதாண்டாபுரம் கோபாலகிருஷ்ணையர் (கோபால கிருஷ்ணபாரதியார்) [64]
7. தில்லையம்பூர் சந்திரசேகர கவிராச பண்டிதர் (—1883) [65]
8. காஞ்சிபுரம் சபாபதிமுதலியார் [66]
9. சாஸ்திரம் ஐயர் (—1866)

10. மு. சுப்பிரமணிய பண்டிதர்[67]
11. புரசை பரசுராம கவிராயர்[68]
12. மழவை மகாலிங்கையர்[69]
13. திரிசிரபுரம் சி. மீனுட்சிசுந்தரம்பிள்ளை (1815-1876)
14. திருத்தணிகை க. விசாகப்பெருமாளையர்[70]
15. அட்டாவதானம் வீராசாமி செட்டியார்[71]
16. திருநெல்வேலி தே. வேதநாயகசாஸ்திரியார் (1775-1865)

இறந்தும் இறவாப் புகழடைந்தோரையே சேர்த்த காசிச்செட்டியவர்களின் புலவர் சரித நூலின் தோற்றத்திற்குப் பின்பு வியோகமடைந்த பாவலர் சிலரின் சரிதங்களைத் தந்த சதாசிவம்பிள்ளை தனிப்பாடற்றிரட்டு, விநோதரசமஞ்சரி முதலிய நூல்களிலிருந்தும் சிலருடைய செய்திகளைப் பெற்றுள்ளார். தில்லையம்பூர் சத்திரசேகர கவிராச பண்டிதர் தொகுத்த 'தனிப்பாடற்றிரட்டு'1862-ம் ஆண்டிலே வெளிவந்தது[72]. இராமசாமிக்கவிராயர், ஒப்பிலாமணிப்புலவர், காளிமுத்துப் புலவர், சத்திமுத்தப்புலவர், சுந்தரகவிராயர், சொக்கநாதப்புலவர், நமச்சிவாயப்புலவர், நாகூர்முத்துப் புலவர், நையாண்டிப் புலவர், பலபட்டடைச் சொக்கநாதப்புலவர், மதுரகவி முதலியோர் பற்றிச் சதாசிவம் பிள்ளை தரும் செய்திகளுக்குத் தனிப்பாடற்றிரட்டு மூலாதாரமாகும். அட்டாவதானம் வீராசாமி செட்டியாரின் விநோதரசமஞ்சரியின் உதவியினுல் அஞ்சனட்சி அதிமதுரகவி, ஏகம்பவாணன் மனைவியார் என்பவரின் செய்திகளைச் சதாசிவம்பிள்ளை புதிதாகக் கூறமுடிந்தது. கம்பர், காளமேகப்புலவர், ஒட்டக்கூத்தர், ஔவையார் பற்றிச் சதாசிவம்பிள்ளை தந்த விபரங்களுக்கும் விநோதரசமஞ்சரி உதவியிருக்கின்றது. இதனுலேயே சதாசிவம்பிள்ளை, ''கம்பர், ஒட்டக்கூத்தராதிய சில பாவலர் சரிதங்களுக்கு விநோதரசமஞ்சரி ஆக்கியோராதியாம் சில வித்துவாமிசர்க்குக் கடமைப்

பட்டிருக்கின்றேம்'' எனத் தமது நூற்பாயிரத்திற் கூறினர்.

காசிச்செட்டியவர்கள் புலவர் சரிதமெழுதிய காலத்திலே அச்சுவாகனமேறுத நூல்களிற் பல பாவலர் சரித்திர தீபகம் தோன்றுவதற்கு முன்பு வெளிவந்துள்ளன. இந்நூற் பதிப்புகளின் துணைகொண்டு சதாசிவம்பிள்ளை பாவலர் சிலரின் சரிதங்களைத் தந்துள்ளார். கோமளபுரம் இராசகோபாலபிள்ளை பாகவதத்தை அச்சிட்டார். அவர் நூலாசிரியர் பெயரை ஆரியப்பபுலவர் என்று குறித்திருந்தார். பாகவதத்தின் ஆசிரியர் வேம்பத்தூர் செவ்வைச்சூடுவார் என்றுணராது சதாசிவம்பிள்ளையும் பதிப்பாசிரியர் கூற்றையே ஏற்று ஆரியப்பபுலவர் பற்றிக் கூறினர்[73]. திருக்கோவலூர் ஆறுமுகசுவாமிகளின் நிஷ்டானுபூதி என்னும் நூலுக்கு முத்துக்கிருஷ்ணபிரமம் என்பவர் உரையியற்றி 1875-ம் ஆண்டிலே சென்னையிலச்சிட்டார்[74]; சதாசிவம்பிள்ளையும் ஆறுமுகசுவாமிகள் பற்றிக் கூற முடிந்தது. சைவசித்தாந்த சாத்திரங்களின் மூலம் மட்டும் முதன்முதலாக 1866-ம் ஆண்டு திரிசிரபுரம் மதுரைநாயகம்பிள்ளையால் வெளியிடப்பெற்றது. கொன்றைமாநகரம் சண்முகசுந்தரமுதலியார் சைவசித்தாந்த சாத்திரங்களுக்கு எழுதப்பட்ட உரைகள் பலவற்றையும் தொகுத்து, 1876-ம் ஆண்டுக்கு முன்பிருந்து பகுதி பகுதியாக வெளியிட்டார்[75]. 1849-ம் ஆண்டு 'ரேயல் ஏசியரிக்' சங்கத்தின் இலங்கைக் கிளையின் கூட்டத்திலே தாம் வாசித்த 'தமிழ்நூற் பட்டியல்' என்னும் கட்டுரையிலே பதினன்கு சைவ சாத்திரங்களையும் குறிப்பிட்ட காசிச்செட்டியவர்கள் தமது புலவர் சரித நூலிலே மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியர், உமாபதிசிவாசாரியர் என்பவரை மட்டுமே குறிக்கக்கூடியவராக இருந்தார். மதுரைநாயகம்பிள்ளையின் மூலப்பதிப்பிற்குப் பின்பு பாவலர் சரித்

திர தீபகம் எழுதிய சதாசிவம்பிள்ளை 'தமிழ் புளூராக்' ஆசிரியர் குறிப்பிடாமல் விட்ட திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார், திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார், மனவாசகங்கடந்தார் என்பவர்களைப் பற்றியும் எழுத முடிந்தது. சிவாக்கிரயோகியார், தத்துவப்பிரகாசர், நமச்சிவாயதம்பிரான் என்னும் சித்தாந்த உரையாசிரியர் பற்றிய செய்திகளைச் சதாசிவம்பிள்ளை அவர்கள் சண்முகசுந்தரமுதலியாரின் உரைப்பதிப்பிலிருந்து பெற்றிருக்கலாம். சி. வை. தாமோதரம்பிள்ளை தணிகைப்புராணத்தை 1883-ம் ஆண்டிலும் வீரசோழியத்தை உரையுடன் 1881-ஆண்டிலும் பதிப்பித்தார். இப்பதிப்புகள் மூலம் சதாசிவம்பிள்ளை கச்சியப்ப முனிவர், புத்தமித்திரர், வீரசோழிய உரைகாரர் பெருந்தேவனார் ஆகியோர் செய்திகளைப் பெறக்கூடியதாயிருந்தது. கண்ணுடைய வள்ளலின் ஒழிவிலொடுக்கம் திருப்போரூர் சிதம்பரசுவாமிகளின் உரையோடும் கருங்குழி இராமலிங்கசுவாமிகளின் பாயிர விருத்தியுரையோடும் சதாசிவம்பிள்ளை நூலெழுதிய காலத்திற்கு முன்பு, 1851-ம்ஆண்டு, பதிப்பிக்கப்பட்டு விட்டது. எனவே 'தமிழ் நூற்பட்டியல்' என்னும் கட்டுரையிலே ஒழிவிலொடுக்கத்தைக் குறிப்பிட்டபோதும் அதன் ஆசிரியர் பற்றி யாதும் கூறமுடியாமல் விட்டு விட்ட காசிச்செட்டியவர்களின் நிலையிற் சதாசிவம்பிள்ளை இருக்கவில்லை. வீரவநல்லூர் குமாரசுவாமிதேசிகரியற்றிய குமாரசுவாமீயம் என்னும் சோதிடநூல் 1869-ம் ஆண்டிலே வெளிவந்தது[76]; எனவே குமாரசுவாமி தேசிகரும் பாவலர் சரித்திர தீபகத்திலிடம்பெற்றார். தருமபுர ஆதீனத்தைச்சேர்ந்த சிவஞானதேசிகர் பாடிய காசித்துண்டி விநாயகர் திருவருட்பாவை நல்லூர் க. சதாசிவம்பிள்ளை பதிப்பித்தார்[77]. இதனை நோக்கிய சதாசிவம்பிள்ளை 'தமிழ் புளூராக்' தந்த திருவாவடுதுறையாதீன சிவஞான தேசிகரோடு அப்பெயர் தாங்கிய வேறொருவரையும்

குறிப்பிடமுடிந்தது. சைதாபுரம் ஐ. சிற்றம்பலமுத லியாரின் ஐயாசுவாமீயம் என்னும் சோதிடநூல் 1883-ம் ஆண்டிலே வெளிவந்ததென்பர்[78]; பாவலர் சரித்திர தீபகத்திலும் சிற்றம்பல முதலியார் இடம் பெற்ருர். தில்லையம்பூர் சந்திரசேகர கவிராசபண்டி தர் 1858-ம் ஆண்டு பதிப்பித்த தண்டியலங்கார வுரையைச் சுப்பிரமணியதேசிகருரையெனக் குறித்து வெளியிட்டார்[79]. இதனை நோக்கிய சதாசிவம்பிள்ளை யவர்கள் சுப்பிரமணியதேசிகரையும் தமது நூலிற் சேர்த்துக்கொண்டார். சிந்தாமணியைத் தமது 'தமிழ் நூற் பட்டியல்' என்னும் கட்டுரையிலே குறிப்பிட்ட காசிச்செட்டியவர்கள் 'தமிழ் புளூராக்' என்னும்நூலிலே அந்நூலின் ஆசிரியரைக் குறிப்பிடவில்லை. ஆசிரியர் பெயர் தெரியாமலே காசிச்செட்டியவர்கள் அவ்வாறு செய்தார் என்று கருத இடமுண்டு. பவர் பாதிரியார் (Rev. H. Bower) 1868-ம் ஆண்டிலே வெளியிட்ட நாம கள் இலம்பகப் பதிப்பும் பனையஞ்சேரி அரங்கசாமிப் பிள்ளை 1883-ம் ஆண்டிலே வெளியிட்ட பதுமையார் இலம்பகம் வரையுள்ள சீவகசிந்தாமணிப்பதிப்பும் திருத்தேவர் அல்லது திருத்தக்கதேவர் பற்றிக் கூறச் சதாசிவம்பிள்ளைக்கு உதவின. காரைதீவு மு. கார்த்தி கேயையரின் விதானமாலைப் பதிப்பு நாராயணசுவா மிக்குப் பாவலர் சரித்திர தீபகத்தில் இடமளிக்க உத வியது[80]. ஆறுமுகநாவலர் சேதுபுராணத்தை 1866-ம் ஆண்டிலே வெளியிட்டார்; எனவே நிரம்பவழகிய தேசிகரும் பாவலர் சரித்திர தீபகத்திலிடம் பெற்ருர். நெல்லைநாதர் பாடிய சிவராத்திரி புராணத்தை வட் டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணியசிவாசாரியர் சென்னையிற் பதிப்பித்தார்[81]. இதனை நோக்கிய சதா சிவம்பிள்ளை நெல்லைநாதரையும் தீபகத்திற் சேர்த்தார்[82]. சிவதருமோத்தரம் என்னும் நூலை "மூலமும் உரையு மாய்த் திருநெல்வேலிச் சாலீவாடீசர ஓதுவாமூர்த்திகள் கரலிகித அபத்தங்கள் போக்கி அச்சுப் பதிப்பித்த

னர்''[83]; எனவே மறைஞானசம்பந்தரும் பாவலர் சரித்திர தீபகத்திலிடம் பெற்ருர். வட்டுக்கோட்டை வே. சதாசிவம்பிள்ளையவர்கள் தில்லைவிடங்கன் மாரி முத்துப்பிள்ளையின் சிதம்பரேசுரர் விறலிவிடுதூதினைப் பதிப்பித்தார்[84]; சதாசிவம்பிள்ளை தமது நூலிலே மாரிமுத்துப்பிள்ளையின் சரிதத்தையும் சேர்த்துக் கொண்டார். பாவலர் சரித்திரதீபகம் வெளிவருவதற்கு முன்பு அச்சிடப்பெற்ற நூல்களின் மூலம் தெரியவந்த முற்கிளந்த இருபத்திரண்டுபேர் மட்டுமன்றி ஏனைய சிலரும் சதாசிவம்பிள்ளையால் நூற்பதிப்புகள் மூலம் அறியப்பட்டனர் என்று கருத இடமுண்டு.

திருவள்ளுவமாலையில் அசரீரியாகவெழுந்த பாடல் முதல் ஆலங்குடிவங்கனுர் பாடிய பாடலீருக ஐம்பத்து மூன்று பாடல்களுள. இவற்றிலே அசரீரியையும் நாமகள் பாடலையும் நீக்க, இறையனுர் பாடல் உட்பட ஐம்பத்தொரு பேருடைய பாடல்கள் எஞ்சுவன. கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன் பதின்மர் என்ப. ஐம்பத்தொரு பேரிலிருந்து இரு வரை நீக்க, அத்தொகை பெறப்படும். காசிச்செட்டி யவர்கள் முகையலூர் சிறுகருந்தும்பியாரையும் இழி கட்பெருங்கண்ணனுரையும் நீக்கி அமைதி கண்டார். சதாசிவம்பிள்ளை 'தமிழ்புளூராக்' ஆசிரியரின் செயலை ஏற்கவில்லை; அவர் இறையனுரை நாற்பத்தொன்ப தின்மரிலிருந்து விலக்கினுர். அவ்வாறு செய்தமை யால் ஐம்பதின்மரை வள்ளுவமாலையிலிருந்து பெற்ற சதாசிவம்பிள்ளை தமது பட்டியலிலே ஒருவர் கூடி விட்டார் என்பதை மறந்து, நாற்பத்தொன்பதின் மருள் ஒருவராக ஐம்பதின்மரையும் கூறிச்செல்கிருர். இவ்வைம்பதின்மருள் ஒருவரான உருத்திரசன்மகண் ணர் என்பவரை உருத்திரசன்மர் என்று காசிச் செட்டியவர்கள் கருதினுர். சதாசிவம்பிள்ளை இருவர் பெயரும் வேறுவேருக இருப்பதால் இருவரையும்

தனித் தனியே கூறினுர். திருவள்ளுவர் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளிலிருந்தும் சங்கம் பற்றிப் பிறர் கூறிய செய்திகளிலிருந்தும் உருத்திரசன்மர் சரிதத் தைக் கூறிய காசிச்செட்டியவர்கள் 'உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திரசன்மன்' களவியலுரை கேட்ட செய்தியை அறியவில்லை. களவியலுரை பதிப்பிக்கப் பட்ட பின்பு பாவலர் சரித்திர தீபகம் எழுதிய சதா சிவம்பிள்ளை 'உருத்திரசன்மர்' வேருவார் என ஐயுற் ருர். திருவள்ளுவரின் சகோதரராகக் கபிலர், அதிக மான், ஔவையார், உப்பை, உறுவை என்பவரே 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலே குறிப்பிடப்படுகின்றனர். சதாசிவம்பிள்ளை கபிலரகவலை ஆதாரமாகக்கொண்டு வள்ளி என்பவரையும் சகோதரியாகக் கொண்டு இடம் அளிக்கிருர்.

காசிச்செட்டியவர்கள் காலத்திற்குப் பின்பு 1883-ம் ஆண்டிலே சி. வை. தாமோதரம்பிள்ளை இறையனுரகப் பொருளுரையைப் பதிப்பித்தார். களவியலுரை மூலம் சதாசிவம்பிள்ளை 'முச்சங்க வரலாறு' பற்றி அறிய முடிந்தது. ஆயினும் இலக்கிய ஆதாரங்கள் கிடை. யாமையாற் சதாசிவம்பிள்ளை 'சங்கப்புலவர்' பட்டியலை அதிகரிக்க முயலவில்லை. திருமுருகாற்றுப்படை[85] ஒழிந்த பத்துப்பாட்டிற்குரிய ஏனையநூல்களும் எட்டுத் தொகையிலிடம்பெறும் நூல்களும் 1887-ம் ஆண்டி லிருந்தே வெளிவரத்தொடங்கின. எனவே மூவேந்தர் காலத்தைப் பொறுத்தவளவிலே சதாசிவம்பிள்ளையும் 'தமிழ் புளூராக்' ஆசிரியரின் நிலையிலேயே இருந்தார்.

கபிலதேவரைக் (கபிலதேவநாயனுரை) கபிலரிலும் வேருனவராகக் கொண்ட சதாசிவம்பிள்ளை[86] நக்கீரரை யும் நக்கீரதேவநாயனுரையும் ஒருவராகக் கொண்டு, நக்கீரதேவநாயனுர் பாடியனவாகப் பதினேராம் திரு முறையிலிடம்பெறும் நூல்களை[87] நக்கீரரியற்றியதாகக் கூறுவர்[88]. நக்கீரதேவநாயனுர் கயிலைபாதி காளத்தி

பாதியந்தாதியிற் கோச்செங்கணுன் வரலாறு கூறுவர்[89]. கோச்செங்கணுன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் இடைப்பகுதி என்பர்[90]. யாப்பருங்கலவிருத்தியில் நக்கீரதேவநாயனுரியற்றிய திருவெழுகூற்றிருக்கை எடுத்தாளப்படுதலின் இவரது காலம் கி. பி. பதினேராம் நூற்றுண்டிற்கு முற்பட்டது என்பர்[91]. கோச்செங் கணுன் காலம், யாப்பருங்கலவிருத்தியின் காலம் பற்றிய முடிபுகளை ஏற்பின் நக்கீரதேவநாயனுர் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிற்கும் கி. பி. பதினேராம் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். மூவேந்தர் காலம் கி. பி. மூன்றும் நூற்றுண்டிற்கு முற்பட்டது என்பதே பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படும் கருத்தாகும். எனவே மூவேந்தர் காலத்திற்குரிய நக்கீரர் வேறு நக்கீரதேவநாயனுர் வேறு என்று கொள்ளவேண்டியுள்ளது.

'தமிழ் புளூராக்' ஆசிரியர் வரதுங்கராமபாண்டிய னின் பிரமோத்தர காண்டமும் வீரகவிராயரது அரிச் சந்திரபுராணமும் மதுரைத் தமிழ்ச்சங்கத்திலே அரங் கேற்றப்பட்டன என்ருர். சதாசிவம்பிள்ளை பிரமோத்தர காண்டம் ''மதுரைச்சங்கத்தவரால் மெய்ச்சப்பட்டு அவ ரது சபையில் அரங்கேறியது'' என்ருர். காசிச்செட்டி யவர்களும் சதாசிவம்பிள்ளையும் அவ்வாறு கொள்வதற் குக் காரணமாயமைந்தது மேல்வரும் செய்யுள்:-

கறங்கு திரைப்பெருங்கடல்சூழ வனி புரந்திகல் கடிந்து கலியை மாற்றி
மறந்திகழ விலங்கிலைவேல் வரதுங்கராமனியல் மதுரைச்சங்கம்
சிறந்தவறுகாற் பீடந்தனிற் பிரமோத்தர காண்டந்தென் சொல் லாக்கி
அறந்தழைக்குங் கவிஞர்செவிக் காரமுதமாகவரங் கேற்றினனே

பிரமோத்தரகாண்டம் காஞ்சிபுரம் சபாபதி முதலி யார் இயற்றிய பொழிப்புரையோடு தில்லையம்பூர்

சந்திரசேகர கவிராசபண்டிதர் முன்னிலையிற் பரிசோதிக்கப்பட்டு வெகுதானிய வருடம் ஆடி மாதம் (1878) அச்சிடப்பெற்றது [92]. அரிச்சந்திரபுராணம் பற்றிக் கூறுமிடத்துச் சதாசிவம்பிள்ளை, அந்நூல் மதுரைத் தமிழ்ச்சங்கத்திலே அரங்கேறியதாகக்கூறவில்லை. ஏனெனில் அரிச்சந்திரபுராணத்தின் பாயிரச்செய்யுள் சாலிவாகன சகாப்தம் 1446-ல் (கி. பி. 1524) திருப்புல்லாணித் திருமாலின் சந்நிதியிலே அந்நூல் அரங்கேற்றப்பட்டதெனக் கூறிற்று. அச்செய்யுளிற்றரப்பட்ட அரங்கேற்றத்தின் காலத்தை அறிந்திருந்த காசிச்செட்டியவர்கள் விட்ட தவறைச் சதாசிவம்பிள்ளை செய்யாவிடினும் "மதுரையிலிருந்த வித்துவ சபையாரால் நன்கு மதிக்கப்பட்டு மேம்பாடுற்ற புலவர்" வீரகவிராயர் என்று கூறுவர். 'சங்ககாலம்' பதினாறும் நூற்றுண்டு வரை நீண்டு செல்வதைப் பாவலர் சரித்திர தீபகத்தில் நோக்கும்போது, அக்காலம் சதாசிவம் பிள்ளை போன்றவர்களுக்கு இருண்டகாலமாகவே இருந்தமை புலனாகின்றது.

சதாசிவம்பிள்ளையும் காசிச்செட்டியவர்களைப் போலவே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலே திருக்குறள், நாலடியார், இனியவைநாற்பது, திரிகடுகம் என்பனவற்றையே குறிப்பிடுகிறார். ஆயினும் பாவலர் சரித்திர தீபகத்திற்கு முன்பு ஏனைய கீழ்க்கணக்கு நூல்களிற் சில பதிப்பிக்கப்பட்டுள்ளன என்று கருத இடமுண்டு. சோடசாவதானம் சுப்பராய செட்டியார் 1874-ம் ஆண்டிற் பழமொழி நானூற்றையும் [93] 1877-ம் ஆண்டிற் களவழிநாற்பதையும் [94] பதிப்பித்துள்ளார். கோமளபுரம் இராசகோபாலபிள்ளையின் உரையோடு வாசுதேவமுதலியார் நான்மணிக்கடிகையை 1879-ம் ஆண்டிலே பதிப்பித்துள்ளார் [95]. திருத்தணிகை விசாகப்பெருமாளையர் ஆசாரக்கோவையை 1883-ம் ஆண்டிலே வெளியிட்டார் [96]. முதுமொழிக்காஞ்சி 1876-ம்

ஆண்டிலே பதிப்பிக்கப்பட்டுள்ளது[97]. ஆயினும் முன்றுறை அரையனுர், பொய்கையார், விளம்பிநாகனுர், கயத்தூர்ப்பெருவாயின் முள்ளியார், மதுரைக்கூடலூர் கிழார் ஆகியோர் பாவலர் சரித்திர தீபகத்திலிடம் பெறவில்லை.

மாணிக்கவாசகசுவாமிகளை குவலயானந்தம் என்னும் நூலின் ஆசிரியராகவும் ஒட்டக்கூத்தரைக் கலிங்கத்துப்பரணியின் ஆசிரியராகவும் காசிச்செட்டியவர்களைப் பின்பற்றிச் சதாசிவம்பிள்ளை கூறுவதற்கு, அந்நூல்கள் பாவலர் சரித்திர தீபக ஆசிரியருக்கும் கிடையாமையே காரணம் போலும். இதே காரணத்தினுற் போலும் யாப்பருங்கலக்காரிகையின் உரையாசிரியர் குணசாகரரை யாப்பருங்கலத்தின் ஆசிரியராகச் சதாசிவம்பிள்ளை கூறினுர். யாப்பருங்கலவிருத்தியுரை சரவணபவானந்தம்பிள்ளையாற் பாவலர் சரித்திர தீபகம் தோன்றிச் சில ஆண்டுகள் கழிந்த பின்பே (1916) பதிப்பிக்கப்பட்டது. கூளப்பநாயக்கன் விறலிவிடுதூதின் ஆசிரியரை அஷ்டாவதானியார் என்றும் கூளப்பநாயக்கன் காதலின் ஆசிரியரை சுப்பிரதீபக்கவிராயர் என்றும் வேறுபடுத்திச் சதாசிவம்பிள்ளை கூறுவதற்கு ஆதாரம் யாதென்பது தெளிவாகவில்லை. முற்கிளந்த இருநூல்களின் ஆசிரியரும் ஒருவரே என்பது தற்காலத்தினர் கருத்தாகும். பிள்ளைலோகாசாரியர் இயற்றியனவாகப் பதினெரு நூல்களின் பெயர்களைச் சதாசிவம்பிள்ளை தருகிருர். இவற்றிலே திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்துமாலை, திருவரங்கப்பதிற்றுப்பத்தந்தாதி, திருவேங்கடமாலை, திருவேங்கடவந்தாதி என்பன வடக்குத்திருவீதிப்பிள்ளையின் புதல்வர் பிள்ளைலோகாசாரியரால் இயற்றப்படவில்லை. பிள்ளைலோகாசாரியர் இயற்றிய பதினெண் நூல்களும் 'அஷ்டாதசரஹஸ்யம்' என்றபெயரால் அழைக்கப்படுவன. அவையாவன ஸ்ரீவசனபூஷணம், தத்

துவசேகரம், தத்வத்ரயம், தனிப்பிரணவம், தனித்து வயம், தனிசரமம், நவிதசம்பந்தம், நவரத்தினமாலை, பரந்தபடி, முமூட்சுப்படி, யாத்ருச்சிகப்படி, சீயப் பதிப்படி, பிரபந்த பரித்திராணம், பிரயோகசேகரம், சாரசங்கிரகம், அர்ச்சிராதி, அர்த்தபஞ்சகம், சம்சார சாம்பிராச்சியம் என்னுமிவை.

முற்கிளந்தவாறு நூலாசிரியர் சிலரைப் பற்றியும் அவர்தம் நூல்கள் சிலவற்றைப் பற்றியும் பிழைபடக் கூறிய சதாசிவம்பிள்ளை போற்றக்கூடிய முறையிற் சில கருத்துக்களை ஆங்காங்கு கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'அஷ்டப்பிரபந்தம்' என்ற நூல்கள் எட்டடங்கிய தொகுதியிலிடம்பெறும் நூல்கள் நான் கின் ஆசிரியர் பற்றிக் கூறவந்த சதாசிவம்பிள்ளை [98] அவற்றின் ஆசிரியர் ஒருவரா அல்லது மூவரா என்ப தைத் துணிந்து கூறவில்லை. "இவரும் (பிள்ளைப்பெரு மாளையங்காரும்)பின் சொல்லப்படும் மணவாளதாசரும் ஒருவர்தாம் என்று சந்தேகிக்க இடமிருந்தும் இரு நாமங்களையும் வெவ்வேறு தந்தோம்" என்று பிள்ளைப் பெருமாளையங்கார் சரிதம் கூறியவிடத்திலுரைத்த சதாசிவம்பிள்ளை மணவாளதாசர் பற்றிச் சொல்லு மிடத்து, "முன் சொல்லிய மாலையும் (திருவேங்கட மாலையும்) இக்கலம்பகமும் (திருவரங்கக்கலம்பகமும்) ஒன்றென்போமோ, அது வேறு இது வேறு என் போமோ, ஆக்கியோர் இருவர் என்போமோ, முன் சொல்லிய பிள்ளைப்பெருமாளையங்கார் என்றதும் இவர் தாம் என்போமோ, அன்றி அவர் வேறு இவர் வேறு என்போமோ, மணவாளதாசர் வேறு அழகியமணவாள தாசர் வேறு என்போமோ, இந்நேரம் ஏதும் ஒருதலை துணியப்பின்னிடுகின்றேம்" என்பர். அஷ்டப்பிரபந் தத்திலிடம் பெறும் நூல்களை ஒருசேர வைத்து, அத் தொகைக்கு அஷ்டப்பிரபந்தம் என்று பெயரும்தந்து, வெளியிட்ட திரிசிரபுரம் கோவிந்தபிள்ளை அந்நூல்

களின் ஆசிரியரொருவரென்றனர்; இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை ச. சோமசுந்தரதேசிகர் நால்வர் என்ருர்[99]; 'தமிழ் புளூராக்' என்னும் நூலுக்குக் குறிப்புரை எழுதிய தெ. பொ. மீனுட்சிசுந்தரம்பிள்ளை ஐவராக இருக்கலாம் என்று ஊகித்தார்[100]. ஆயினும் இக்காலம்வரை அஷ்டப் பிரபந்தத்தின் ஆசிரியர் பற்றிய விவகாரம் தெளிவாகவில்லை[101]. திருவள்ளுவமாலையிலிடம்பெறும் குலபதிநாயனுரும், பெரியபுராணத்திலிடம்பெறும் குலச்சிறைநாயனுருமொருவரேயெனத் 'தமிழ் புளூராக்' ஆசிரியர் கொண்ட கருத்தினைச் சதாசிவம்பிள்ளை ஐயுறுதலும் கவனிக்கத்தக்கது. 1858-ம் ஆண்டு மானிப்பாயிலிருந்த அச்சியந்திரசாலையில் உரிச்சொல்நிகண்டினைப் பதிப்பித்த சதாசிவம் பிள்ளை[102], சேந்தன் திவாகரத்தின் ஆசிரியர் இன்னுரெனக் கூறவந்த காசிச்செட்டியவர்கள் சேந்தனுர் என்று கூறியது பிழையெனவும் அவர் திவாகரர் என்பவரேயெனவும் கூறியுள்ளார்.

'தமிழ் புளூராக்' என்னும் நூலிலே இசுலாமியப் புலவரின் சரிதங்கள் இடம்பெறவில்லை. பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் அத்தவறையுணர்ந்துள்ளார். உமாறுப்புலவர் (உமறுப்புலவர்), அலியார்புலவர் (பூவைமாநகரம் அசனலிப்புலவர்), சவாதுப்புலவர், (ஜவாதுப்புலவர்), சர்க்கரைப்புலவர், ஐயன்பேட்டை மதாறு சாகிப்புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு, வண்ணக்களஞ்சியப்புலவர், பாசிப்பட்டணம் நயினுமுகமதுப் புலவர், அதிவீரராமபட்டணம் முகமதுசைன் என்பவர்களைச் சதாசிவம்பிள்ளை தமது நூலிலே சேர்த்துள்ளார்[103].

காசிச்செட்டியவர்கள் விட்ட குறையைப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் சிற்சில இடங்களிலே நீக்கியுள்ளபோதும் சில இடங்களிலே அவசரப்பட்டுவிட்டார் என்று கூற இடந்தருகிருர். இரகுவம்சம்,

யோசேப்பு புராணம், திருவாக்குப் புராணம், திருச்செல்வர் காவியம் என்பன பற்றிச் சதாசிவம்பிள்ளையவர்கள் கூறுவனவற்றை நோக்கும்போது இக்கருத்து வலியுறுகின்றது. நல்லூர் வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளையின் இரகுவம்சப் பதிப்பிலே (1887) 26 படலங்களும் 2444 பாடல்களுமுள; 'தமிழ் புளூராக்' ஆசிரியர் 1887-ம் ஆண்டுப்பதிப்பிற் காணப்படுமாறே 1859-ம் ஆண்டிலே உரைத்தார்; ஆயினும் சதாசிவம்பிள்ளை 2404 பாடல்களும் 26 படலங்களுமுளதாகக் கூறியுள்ளார். திருச்செல்வர் காவியப் பதிப்பிலே (1896) 24 படலங்களும் 1947 பாடல்களுமுள; காசிச்செட்டியவர்கள் தமது 'தமிழ் நூற்பட்டியல்' என்னும் கட்டுரையிலே 24 படலங்களும் 1948 பாடல்களுமுளவென்று உரைத்தார்; பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் 25 படலங்களும் 1900 பாடல்களும் இருப்பதாகக் கூறியுள்ளார். யோசேப்புபுராணத்தின் உட்பிரிவாகிய படலங்களைக் காசிச்செட்டியவர்கள் ஆங்கிலமுறைப்படி 'காண்டம்' (Canto) என்று கூறியபோதும் ஆற்றுப்படலத்தை 'இரண்டாம் காண்டம்' (Second Canto) என்று கூறுவதிலிருந்து அவர் கருத்து யாதெனப்புலனாகின்றது. இதனை நோக்காது சதாசிவம்பிள்ளை யோசேப்பு புராணத்தில் இருபத்தொரு காண்டங்களுளவென எழுதிவிட்டார். 'தமிழ் புளூராக்' என்னும் நூலோடு பாவலர் சரித்திர தீபகத்தை ஒப்பிடாது யோசேப்பு புராணம் பற்றிக் கூற முயல்பவர்கள் இடர்ப்பட வேண்டிய நிலையைச் சதாசிவம்பிள்ளை ஏற்படுத்தக் காரணமாகிவிட்டார். பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் திருவாக்குப்புராணத்தின் பதிகத்திலே 111 செய்யுள்களும் சனனகாண்டம், யாத்திரைகாண்டம் என்பனவற்றிலே 54 வருணனை பாக்கள் நீங்கலாக 1573 பாடல்களும் சுவிசேச காண்டப்பிரிவிலே 67 செய்யுள்களும் இருப்பதாகக் கூறுவர். எனவே சதாசிவம்பிள்ளை கருத்துப்படி திருவாக்குப்புராணத்திலே 1805 செய்யுள்கள் இடம்

பெறுகின்றன. பதிகத்திற்கு முன்னர் காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம் என்பனவற்றிற்குரியதாக இடம் பெற்றுள்ள எட்டுப்பாக்களைக் கூருதொழிந்த சதாசிவம்பிள்ளை திருவாக்குப்புராணப்பதிப்பிலே பாடலெண் சுட்டும் தானங்கள் சிற்சில இடங்களிலே பிழைபடப் பதிப்பிக்கப்பெற்றிருந்ததைக் கவனிக்கவில்லை. சனன காண்டத்திலும் யாத்திரைக் காண்டத்திலும் 63 வருணனைப் பாக்கள் நீங்கலாக 1453 செய்யுள்களேயுள. எனவே திருவாக்குப்புராணத்தின் மொத்தப்பாடலெண் 1702 ஆகும். ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் தந்த கணேசையர் திருவாக்குப்புராணத்திலே 1751 பாக்களுள என்பர். சதாசிவம்பிள்ளை வருணனைப்பாக்களை நீக்கி 1751 செய்யுள்களுள என்று கூறியதனைப் பின்பற்றியே கணேசையர் அவ்வாறு கூறினர். கனகசபைப் புலவர் பாடிய திருவாக்குப்புராணம் வேதாகம வரலாறு மட்டுமல்ல; இலக்கியப்படைப்புமாகும். ஆனல் அதன் இலக்கியத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்பாமற் போலும் அதன் பதிப்பாசிரியர் மெக்காதர் பாதிரியார் (Rev. C. C. Macarthur) புலவரின் கற்பனை மிளிரும் பாடல்களையெல்லாம் தனித்தனியே அடிக்குறிப்புப் போலத் தந்துள்ளார். இதனை நோக்காமற் போலும் கணேசையர் அவ்வாறு கூறினர்.

'பாவலர் சரித்திர தீபத்தை ஏற்றி, அந்தகாரக் குப்பாயம் போர்த்து அஞ்ஞாத வாசஞ்செய்த பாவலர் நாமங்களைத் தனித் தனி ஒன்ருென்ருய்த் துருவிப் பொறுக்கி, அரிவரிப்படுத்தித்...' தந்த சதாசிவம்பிள்ளையின் நூலிற் காணப்படும் தவறுகளை நோக்கும் அதே நேரத்தில் அதன் சிறப்புகளையும் நாம் கவனித்தல் வேண்டும். சதாசிவம்பிள்ளை தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்ந்து பூதவுடலை நீத்துப் புகழுடம்பை நிறுவியவர்களிற் பலருடைய சரிதங்களைக் கூறமுடியாமல் விட்டிருந்தார். "இதிலே சேராது தப்பிய சரிதங்கள்

ஒன்று இரண்டு அல்ல என்பது யாம் அறிந்த விஷயமே'' என்பது பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் கூற்றும். சதாசிவம்பிள்ளை குறிப்பிடாமல் விட்ட தமிழகத்தவர் பட்டியல் நீண்டதாகக் காணப்படினும் ஈழத்தவர் பட்டியல் அத்தகைய நீட்சியுடையதல்ல என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத்துப் பூதன்றேவனார்[104], போசராச பண்டிதர்[105], சோமசன்மா[106], கவிராஜர்[107], வையா[108], தெல்லிப்பழை பேதுருப்புலவர்[109], தம்பலகமம் ஐ. வீரக்கோன் முதலியார்[110], நல்லூர் நா. சந்திரசேகர பண்டிதர்[111], மாதோட்டம் கீத்தாம்பிள்ளை[112], 'கெலக்' விசுவநாதபிள்ளை முதலியோரும்[113], தட்சிண கைலாசபுராண ஆசிரியர்[114] போன்றவர்களும் பாவலர் சரித்திர தீபகத்திலிடம் பெறவில்லை.

பாவலர் சரித்திர தீபகம் மூலம் 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' பலவற்றை நாம் அறிய முடிகின்றது. உதாரணமாக, தமிழ்மொழியிலுள்ள இலக்கிய வடிவங்களில் இரண்டினை மட்டும் எடுத்து நோக்கின் இவ்வுண்மை புலனாகும். மேல்வரும் புராணங்கள் மறைந்துவிட்டன:-

1. வியாக்கிரபாதபுராணம்
   — வைத்தியநாத தம்பிரான்[115]
2. யோசேப்பு புராணம்
   — கூழங்கைத் தம்பிரான்[116]
3. தாலபுராணம்
   — அச்சுவேலி நீ. காசிநாதப்புலவர்[117]
4. கோட்டுப்புராணம்
   — வே. இராமலிங்கம்[118]
5. வலைவீசுபுராணம்
   — வட்டுக்கோட்டை க. முத்துக்குமாரர்[119]
6. சூதுபுராணம்
   — நல்லூர் சி. அப்புகுட்டிஐயர்

7. புரூரவச்சக்கரவர்த்திபுராணம்
— வல்லிபட்டித்துறை நா. ஏகாம்பரம்
8. தேவகோட்டைத்தலபுராணம்
— ஆறுமுகநாவலர் [120]
9. கனகிபுராணம் —சுப்பையனர்[121]

மேல்வரும் குறவஞ்சிப்பிரபந்தங்களும் அதே நிலையை அடைந்துள்ளன:-

1. கதிரைமலைக்குறவஞ்சி
— சுதுமலைப்புலவர் விநாயகர்
2. மருதப்பக்குறவஞ்சி — பிலிப்பு தெ மெல்லோ
3. காரைக்குறவஞ்சி
— காரைதீவு மே. சுப்பையர்
4. மல்வில் குறவஞ்சி — வெற்றிவேலர்
5. நல்லைக்குறவஞ்சி
— இருபாலை நெ. சேனதிராயமுதலியார்[122]
6. நல்லைநகர்க் குறவஞ்சி
— நல்லூர் ப. கந்தப்பிள்ளை
7. அனலைதீவு ஐயனர் குறவஞ்சி
— அராலிமுத்துக்குமாரப்புலவர்
8. வண்ணைவைத்திலிங்க குறவஞ்சி
— வட்டுக்கோட்டைகணபதிஐயர்
9. வண்ணைக்குறவஞ்சி
— அராலி நா விசுவநாதசாஸ்திரியார் [123].
10. திருக்கோணேசர் மலைக்குறவஞ்சி
— நல்லூர் சரவணமுத்துப்புலவர்[124]
11. குறவஞ்சி — மாப்பாண முதலியார்[125]
12. குறவஞ்சி — வெற்றிவேலர்[126]
13. சந்திரசேகரக் குறவஞ்சி [127]
14. முத்துக்கிருஷ்ணர் குறவஞ்சி [128]

இவ்வாறே பாவலர் சரித்திர தீபகம் மூலம் மறைந்து போன கோவை, அந்தாதி, பிள்ளைத்தமிழ், தூது, மடல், நான்மணிமாலை முதலிய பிரபந்தங்களும் நாடகங்களும் விலாசங்களும் பல தெரியவருகின்றன. இந்நூல்கள் அழிந்துவிட்ட போதும் அவற்றின் பெயரையும் ஆங்காங்கு அவற்றிலிருந்து மேற்கோள்களையும் தந்த சதாசிவம்பிள்ளை போற்றப்பட வேண்டியவர். மேலும் தமிழ்ப்பணி புரிந்த பாவலர் பலருடைய நாமங்கள் கூடப் பாவலர் சரித்திர தீபகம் இன்றேல் மறைந்து போயிருக்கும் என்பதும் கவனிக்கத்தக்கது.

## உசாத்துணை

1. ச. பவாநந்தம்பிள்ளை வேப்பேரியிலுள்ள எஸ். பி. சி. கே. பிரஸ்ஸிற் பதிப்பித்து 1912-ம் ஆண்டு வெளியிட்ட 'பேரகத்தியத்திரட்டு மூலமும் உரையும்' என்னும் தொகுப்பிலிடம்பெறும் 'பேரிசைச்சூத்திரம்' என்னும் நூலிலுள்ள முதலெட்டு நூற்பாக்கள் தாமோதரம்பிள்ளையின் பாகுபாட்டிற்கு உதவியிருக்கின்றன. தாமோதரம்பிள்ளைக்கு முன்பு கால்ட்வெல் (Rev. R. Caldwell) தமது ஒப்பியலிலக்கண நூலிலே தமிழ் இலக்கியப்பரப்பை ஏழு காலப் பிரிவுகளாக வகுத்த போதும் அவருடைய முயற்சி, தாமோதரம்பிள்ளை தந்த பகுப்புக்கு முற்பட்டதனாற் சிறப்படைகிறதே யொழிய வேறு வழிகளாலல்ல.

2. பி. ரி. ஸ்ரீநிவாஸ் ஐயங்கார் தமது 'தமிழ் வரலாறு' என்னும் ஆங்கில நூலிலே எம். சேஷகிரி சாஸ்திரியாரின் நூல் 1884-ம் ஆண்டு வெளிவந்ததெனக் கூறுவர் (**History of the Tamils**. 1929, P. 372). வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் இந்நூலின் 1897-ம் ஆண்டுப் பதிப்பினைச் சுட்டுகிறார் (**Studies in Tamil Literature and History**. 1930, P. 8) ; ஆயி

னும் அப்பதிப்பு முதலாம் பதிப்பா அல்லது இரண்டாம் பதிப்பா என்று குறிப்பிடவில்லை.

3. குல. சபாநாதன்: 'ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை', ஸ்ரீலங்கா, செப்ரெம்பர், 1958.

4. "We commenced this work at the instance of a friend who urged us to translate Mr. Cassie Chetty's Plutarch into Tamil" (Preface to **The Galaxy of Tamil Poets**)

5. பாவலர் சரித்திர தீபகம் (1886), பக். 132.

6. அளவெட்டி வே. கனகசபைப்புலவர் 1873-ம் ஆண்டு வியோகமடைந்தபோது அவ்வாண்டு தை மாதம் 16-ம் தேதி பிரசுரமான உதயதாரகையிற் சதாசிவம்பிள்ளை அநுதாபச் செய்தி வெளியிட்டார். (பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 93).

7. உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவர் இயற்றிய மறைசையந்தாதியுரையைப் பற்றிய மதிப்புரை உதயதாரகையில் வெளிவந்தது (பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 149).

8. யாழ்ப்பாண வைபவமாலை உதயதாரகையிற் பிரசுரமாகியது (பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 232).

9. 'ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்' தந்தோர் தமிழகத்திற் பிறந்த கூழங்கைத் தம்பிரானை ஈழத்தவராகக் கருதாதபோதும் ஈழத்திலே மிக்க சிறப்புப் பெற்ற வித்துவ பரம்பரையொன்றிற்கு முதல்வராக விளங்கி, ஈழத்திலே வாழ்ந்து, ஈழத்திலே மறைந்த அப்பெரியாரை நாம் ஈழநாட்டுப் புலவர் பட்டியலிற் சேர்த்துக் கொள்வதே பொருத்தமெனஎண்ணுகிறோம்.

10 கைலாயமாலை பாடிய முத்துராசர் சோணுட்டு உறையூரினராக இருந்தபோதும் ஈழத்தில் வாழ்ந்தவர் என்று கருத இடமுண்டு. அதனுல் அவரை ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் பட்டியலிலே சேர்த்துக் கொள்வதிற் பிழையிருப்பதாகத் தெரியவில்லை.

11. அம்பலவாணபண்டிதர் தம் ஆசிரியராம் இருபாலை நெ. சேனுதிராயமுதலியார் பாடிய நல்லை வெண்பாவையும் நீராவிப் பிள்ளையார் கலிவெண்பாவையும் ஒரே நூலாகச் சென்னையிலிருந்த 'ஸ்கொட்டிஸ்' அச்சியந்திரசாலையில் 1878-ம் ஆண்டு பதிப்பித்தார்.

12. "இப்புலவர் இற்றைக்கு ஏழெட்டு வருஷங்களின் முன் தேகவியோகமாயினர்" ( பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 41).

13. தம் மாணவகர் நா. ஏகாம்பரம் பிறந்த தேதி பற்றிச் சதாசிவம்பிள்ளை தரும் விபரம் பிழையாகத் தெரிகிறது. "கிறிஸ்தாப்தம் 1844-ம் வருஷத்திற்குச் சரியான பிலபவ வருஷம் பங்குனி மாதம் 23-ம் தேதி" பிறந்ததாகப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் கூறுவர். கிறிஸ்தாப்தம் 1844-ம் ஆண்டிற்குச் சரியான வருடங்கள் சோபகிருது வருடமும் குரோதி வருடமுமாகும். பிலவ வருடம் பங்குனி மாதமெனில், அது கிறிஸ்தாப்தம் 1842-ம் ஆண்டாகும். எனவே ஏகாம்பரம் எந்த ஆண்டில் பிறந்தவர் என்பது தெளிவாகவில்லை. ஏகாம்பரம் 33 வயதிலோ அல்லது 36 வயதிலோ தேகவியோகமடைந்தார் என்றறியப் பாவலர் சரித்திர தீபகத்தின் பதிப்பு உதவவில்லை. 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' தந்த புன்னலைக்கட்டுவன் சி. கணேசையர் 33 வயதிலே ஏகாம்பரம் தேகவியோகமாயினுர் என்பர். அவர் அவ்வாறு கொள்வதற்கு, சதாசிவம்பிள்ளை அவர்கள் ஏகாம்பரம்

1877-ம் ஆண்டு வியோகமடைந்தார் என்று கூறியதே காரணமாகும். ஏகாம்பரம் சிறீமுக வருடம் ஐப்பசி மாதம் 27-ம் தேதி வியோகமடைந்தார் என்றும் அவ்வாண்டிற்குச் சரியான ஆங்கில வருடம் 1877-ம் ஆண்டென்றும் சதாசிவம்பிள்ளை கூறுவர். சிறீமுக வருடம் ஐப்பசி மாதத்திற்குச் சரியான ஆங்கில வருடம் 1873-ம் ஆண்டாகும். ஏகாம்பரத்தின் வியோகம் பற்றிய 'தமிழ்த்தேதி' பிழையல்ல என்ற ஊகத்தின் பேரில் 1873-ம் ஆண்டிலே ஏகாம்பரம் வியோகமடைந்தார் என்று குறித்துள்ளோம்.

14. கனகசபைப்புலவர் 'உவ வருடம் மாசி மாதம் 12-ம் தேதி பிறந்தவர்' என்பர் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் (பக். 92). அவர் உவ வருடம் மாசி மாதம் என்று கூறுவதை, யுவ வருடம் மாசி மாதம் என்று ஏற்றுக்கொள்ளின் கனகசபைப்புலவர் 1816-ம் ஆண்டிலே பிறந்தவராதல் வேண்டும். ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் (1939) தந்த கணேசையர் "ஏறக்குறைய நூற்றுப் பத்து வருடங்களுக்கு முன்னே பிறந்தவர்" என்றுர் (பக். 61). கணேசையரின் கூற்றைக் கண்ட சுன்ஞகம் கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை தம் தந்தையாம் அ. குமாரசுவாமிப்புலவரின் 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்னும் நூலின் இரண்டாம் பதிப்பிலே (1951) கனகசபைப்புலவர் 1829-ம் ஆண்டு பிறந்தவர் என்று குறித்துச் சென்றுர். ஒருவரின் ஊகம் மற்றவருக்கு வரலாற்றுண்மையாகிவிட்டதை ஈண்டு காணலாம். குமாரசுவாமிப் புலவரின் 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' என்னும் நூலின் இரண்டாம் பதிப்பை நோக்கிப் போலும் 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' (1966) தொகுத்தோரும் கனகசபைப்புலவர் 1829-ம் ஆண்டு பிறந்தார் எனக் கருதினுர்.

15. "ஏறக்குறைய இரண்டு வருடங்களின் முன் வட கரையில் இருக்கும்போது சடுதியில் நோய்வாய்ப் பட்டுப் பரமபதமடைந்தனர்" (பாவலர் சரித்திர தீப கம், 1886, பக். 133); சவுந்தரநாயகம்பிள்ளை 1882-ல் வியோகமடைந்தார்.

16. கர வருடம் சித்திரை மாதத்திற்குச் சரியான ஆங்கில வருடம் 1831-ம் ஆண்டாகும். உவ வருடம் பங்குனி மாதமெனச் சதாசிவம்பிள்ளை கூறுவது யுவ வருடம் பங்குனி மாதமாயின் அதற்குச் சரியான ஆங்கில வருடம் 1876-ம் ஆண்டாகும். 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' தந்தோரும் சதாசிவம்பிள்ளை கூறிய வார்த்தைகளைப் பொன்னே போற் போற்றியுள்ளார். 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' தொகுத்தோரும் கணேசையர் வழியிலேயே சென்றுள்ளனர்.

17. "இவர் பிறகிட்ட 1880-ம் வருஷத்திற்கு முன்பின் 61 வயசிற் தேகவியோகமானார்" (பாவலர் சரித்திர தீபகம், பக். 255); சுதுமலை விசுவநாதபிள்ளை வியோகமடைந்த தேதி 21.11.1880

18. 1847-ம் ஆண்டிற் பிறந்த மட்டுவில் க. வேற்பிள்ளை இயற்றிய புலியூரந்தாதியுரைக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியோருள் நல்லூர் வே. கார்த்திகேயோபாத்தியாயரும் ஒருவராவர். புலியூரந்தாதியுரை எப்பொழுது இயற்றப்பட்டது என்பது தெரியாத போதும் வேற்பிள்ளை உபாத்தியாயர் அதனைத் தமது பன்னிரண்டாவது வயதில் ('தமிழ் புளூராக்' வெளிவந்த வருடத்தில்) இயற்றினாரெனல் பொருந்தாது. எனவே புலியூரந்தாதியுரைக்குச் சிறப்புக்கவி வழங்கிய கார்த்திகேய ஐயர் 1859-ம் ஆண்டிற்குப் பின்பு தேகவியோகமடைந்தார் என்பது போதரும்.

19. 1857-ம் ஆண்டிற் பிறந்த நல்லூர் சிற். கைலாச பிள்ளைக்குச் சம்பந்தப்புலவர் ஆசிரியராக இருந் தவர். நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர் தாம் பாடிய திருக்கழிப்பாலைப் புராணத்திலே தமது தந்தையின் வியோகத்திற்குப் பின்பு (1870-ம் ஆண்டிற்குப் பிறகு) தமக்குத் தமிழிலேற்பட்ட ஐயங்களைத் தீர்த்துவைத்தவர்களாகச் சம்பந் தப் புலவரையும் ஆறுமுகநாவலரையும் குறிப்பிடு கிறார்.

20. பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் மானிப்பாய் சுப்பையர் 1820-ம் ஆண்டுக்கு முன் பிறந்து, ஐம் பது வயதிலே தேகவியோகமடைந்தார் என்று கூறுவர். 1859-ம் ஆண்டு சதாசிவம்பிள்ளை பதிப் பித்த 'நன்னெறிக் கொத்து' என்னும் செய்யு ளூலுக்குச் சாற்றுகவி வழங்கியவர்களிலே சுப்பை யருமொருவராவர்.

21. "1862-ம் வருஷம் வரையில் அச்சியந்திரம் கொடு வரும் கருத்தோடு சென்னபட்டணம் போய்த் திரும் பிச் சிலநாட்களுட் தேகவியோகமாயினர்" (பாவ லர் சரித்திர தீபகம், பக். 268); 1811-ல் பிறந்த மாட்டின் 1861ம் ஆண்டு தை மாதம் இந்தியா சென்றவர்; அதே ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வியோகமடைந்தார்.

22. அண்மைக் காலத்திலெழுந்த இலக்கிய வரலாற்று நூல்கள் சிலவற்றிலேயே வாழும் அறிஞர்களுக் கும் ஆசிரியர் இடங்கொடுத்துள்ளனர்.

23. பீதாம்பரப்புலவர் தெல்லிப்பழை அமெரிக்கன் மிசன் பாடசாலையிற் பயின்றவர். இப்பாடசாலை 1816-ம் ஆண்டிலேயே நிறுவப்பட்டது. இருபாலை நெ. சேனாதிராய முதலியாரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றவர். சேனாதிராய முதலி யார் 1840-ம் ஆண்டு வியோகமடைந்தார். ஆறுமுக

நாவலரின் (1822—1879) தமையன்மாரிலொருவரான நொத்தாரிசு தியாகராசரின் புதல்வியாம் தையலம்மையைப் பீதாம்பரப்புலவர் திருமணஞ் செய்தவர். எனவே பீதாம்பரப்புலவர் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராகத் தெரிகிறது. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் (1939) தந்தோர், "இவர் ஏறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன்னே நீர்வேலியிலே வேளாண்குலத்திற் பிறந்தவர்" என்று கூறல் பொருத்தமற்றது. அ. குமாரசுவாமிப்புலவரின் தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலின் இரண்டாம் பதிப்பிலே (1951) பீதாம்பரப்புலவர் 1819-ம் ஆண்டில் வாழ்ந்தவராகக் கூறப்பட்டுள்ளது.

24. பரமானந்தப்புலவர் அவர்கள் ஆறுமுகநாவலரின் (1822-1879) தமையன்மாருள் ஒருவராவர். குமாரசுவாமிப்புலவரின் 'தமிழ்ப்புலவர் சரித்திரம்', கணேசையரின் 'ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்' முதலிய நூல்களில் இடம்பெருத பரமானந்தர் பாடிய சிறப்புப்பாயிரமும் கீர்த்தனங்களும் விநாயகமூர்த்திச் செட்டியாரின் 'கதிரையாத்திரை விளக்கம்' என்னும் நூலிலிடம்பெறுகின்றன.

25. அளவெட்டி வே. கனகசபைப்புலவர் (1816-1873) அவர்களின் தாய்மாமனுனவர் சுப்பிரமணிய தம்பிரான்.

26. நவாலி காசி உடையார் மகன் முத்துக்குமாரர் அல்லது தம்பையர் சதாசிவம்பிள்ளையின் ஆசிரியராகிய மானிப்பாய் க. சுப்பையரின் ஆசிரியராவர்; மாதகல் சிற்றம்பலப்புலவரின் மாணவகரான அராலி அருணுசலம் என்பவரின் மாணவகராம்.

27. இருபாலை சேனுதிராய முதலியாரின் மாணவகரான க. ஏகாம்பரம் அவர்கள் நா. ஏகாம்பரத்தின் மாம

ஞராவர். இவரைச் சதாசிவம்பிள்ளை ஒருமுறை கண்டிருப்பதாகக் கூறுவர். வண்ணூர்பண்ணை திருமலைச்செட்டியாரின் புதல்வர் இராமசாமிச் செட்டியார் பேரில் இவர் பாடிய சரமகவி மூலம், இவர் 1850-ம் ஆண்டிற்குப் பின்பும் இருந்தவர் என்பது புலனாகும் (பாவலர் சரித்திர தீபகம், பக். 56). 'ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித'த்திலே 17, 73 என்னும் எண்களின் கீழ்த் தரப்பட்டுள்ள செய்திகள் ஒரே நபரைப் பற்றியனவே என்பது கவனிக்கத்தக்கது.

28. வைமன் கதிரைவேற்பிள்ளையின் (1829–1904) தந்தையாம் க. குமாரசுவாமி முதலியாரின் (1792–1874) தாயார் வள்ளியம்மையின் சகோதரரே வல்லிபட்டி ச. குமாரசுவாமிப்புலவரும் வல்லிபட்டி ச. முத்துக்குமாரமுதலியாருமாவர். பாவலர் சரித்திர தீபகம் குமாரசுவாமிப்புலவரின் காலம் பற்றி, "சுமார் நூறு வருடங்களின் முன்னிருந்த வித்துவான்" என்றுகூறும் (பக். 110); அவ்வாறாயின் குமாரசுவாமிப்புலவரின் காலம் கி. பி. 1786-க்கு முற்பட்டதாதல் வேண்டும். முத்துக்குமாரமுதலியார் காலம் பற்றிப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர், "இற்றைக்கு முன்பின் நூறு வருடங்களின் முன் பிறந்தவர்" என்பர் (பக். 242); அவ்வாறாயின் கி.பி . 1786-ம் ஆண்டளவிற் பிறந்தவராதல் வேண்டும். 1786-ம் ஆண்டளவிற் பிறந்த முத்துக்குமார முதலியார்1792-ம் ஆண்டிற் பிறந்த குமாரசுவாமி முதலியாருக்கு ஆசிரியராக இருந்தார் என்று கூறுவது (பாவலர் சரித்திர தீபகம், பக். 110) பொருந்தாது. சதாசிவம்பிள்ளை வல்லிபட்டி சந்திரசேகர முதலியாரின் புதல்வரின் காலம் பற்றித் தரும் செய்திகள் ஐயத்திற்கிடமளிக்கின்றன.

29. மறவன்புலம் சயம்பர், வண்ணார்பண்ணை அநந்த சுப்பையர், கனகிபுராண ஆசிரியர் சுப்பையர், சண்டிருப்பாய் நீக்கிலாஸ்பிள்ளை ஆகிய நால்வரையும் சதாசிவம்பிள்ளை கண்டிருக்கிறார். நீக்கிலாஸ் பிள்ளை வட்டுக்கோட்டை சர்வசாத்திர கலாசாலையிற் சதாசிவம்பிள்ளைக்குச் சிறிதுகாலம் ஆங்கில இலக்கணம் கற்பித்தவர். சேனாதிராயமுதலியாரின் மாணவகராகிய சயம்பர் என்பவரை 1844-ம் ஆண்டு தாம் சந்தித்ததாகச் சதாசிவம்பிள்ளை கூறுவர். வண்ணார்பண்ணையில் வசித்த கொச்சிக் கணேசையர் என்பவரின் பௌத்திரமுறையினர் அநந்த சுப்பையர். கொச்சிக்கணேசையர் மீது நல்லூர் வி. சின்னத்தம்பிப்புலவர் பாடியதாகச் செய்யுளொன்று வழங்குகின்றது. 1707-ம் ஆண்டு தொகுத்து முடிக்கப்பட்ட 'தேசவழமை' என்னும் சட்டங்களுக்குக் கைச்சாத்திட்ட தொன்பிலிப் வில்லவராச முதலியார் என்பவர் சின்னத்தம்பிப் புலவரின் தந்தையாம்.

30. நவாலி வி. வயிரமுத்துப்பிள்ளை (Jonathan Homer) 1842-ம் ஆண்டு வெளியிடப்பெற்ற 'மானிப்பாய் அகராதி'க்கு (Manual Dictionary of the Tamil Language) உதவியவர்களிலொருவர்; சதாசிவம் பிள்ளை 1859-ம் ஆண்டு வெளியிட்ட 'நன்னெறிக் கொத்து' என்னும் செய்யுணூலுக்குச் சாற்றுகவி வழங்கியவர்களிலொருவர்.

31. வண்ணார்பண்ணை மா. காசிநாதர் (Stansbury Kasinathar), "இற்றைக்குச் சில வருஷங்களின் முன் தேகவியோகமாயினர்" என்பர் பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் (பக். 268).

32. சுன்னாகம் சிதம்பரப்பிள்ளை (சித்துப்புலவர்) "சுமார் நூறு வருடங்களின் முன் பிறந்தவர்." என்பர் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் (பக். 137).

33. ''இவர் இற்றைக்கு எழுபது எண்பது வருடங்களின் முன் இருந்தவர்'' (பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 38).

34. இவர் 1667-ம் ஆண்டிற்குச் சரியான பிலவங்க வருடத்திலே வாக்கிய பஞ்சாங்கம் கணித்து வெளிப்படுத்தினர் (ஈழகேசரி, 26-4-1936).

35. இவர் மகள் வள்ளியம்மையின் புதல்வர் வல்லிபட்டி க. குமாரசுவாமி முதலியார் 1792-ம் ஆண்டிற் பிறந்தார்.

36. இவர் பௌத்திரர் சு. சண்முகச்சட்டம்பியார் தமது 55-ம் வயதிலே 1849-ம் ஆண்டு வியோகமடைந்தார்.

37. இவர் புதல்வர் சு. சண்முகச்சட்டம்பியார் தமது 55-ம் வயதிலே 1849-ம் ஆண்டு வியோகமடைந்தார்.

38. இவர் மாணவகர் இருபாலை நெ. சேனாதிராயமுதலியார் 1840-ம் ஆண்டிலே வியோகமடைந்தனர். கண்டியரசினைக் கடைசியாக ஆட்சிபுரிந்த மன்னன் மீது சிற்றம்பலப்புலவர் கிள்ளைவிடுதூது பாடி, அதனை மன்னன் அவையிலே அரங்கேற்றச் சென்றகாலை, மன்னன் ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட்டான் என்று கேள்வியுற்றுத் திரும்பினர் என்பர் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர். ஆங்கிலேயர் கண்டியரசனைக் கைப்பற்றிய காலம் 1815-ம் ஆண்டாகும். மாதகல் மயில்வாகனப்புலவர் இவரின் மருகராவர்.

39. மாவை சின்னக்குட்டிப்புலவரும் அராலி அருணாசலமும் மாதகல் சிற்றம்பலப் புலவரின் மாணவகராவர்.

40. ''இவர் காலம் நூறு வருடங்களுக்கு மேற்பட்டது என்று கேள்வி. யாழ்ப்பாணத்தை உலாந்தர் அரசாண்ட கடைசிக் காலத்து இவரிருந்தார் என்னலாம்'' (பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 148).

41. ''இற்றைக்கு முன்பின் 120 வருடங்களின் முன் பிறந்தவர்'' என்பர் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் (பக். 158). 1939-ம் ஆண்டில் வெளிவந்த 'ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்' எழுதிய கணேசையரும், ''இவர் ஏறக்குறைய நூற்றிருபது வருடங்களுக்கு முன்னே ... பிறந்தவர்" (பக். 37) என்றூர். சுவாமிநாதர் கொழும்பு முத்துவிநாயக சுவாமி மீது பாடிய கலிவெண்பாவிலே தமது சகோதரர் மேற்படி கோயிலுக்குக் கர வருடம் கார்த்திகை மாதம் (1831) செய்த திருப்பணியைச் சுட்டுவதால், அவ்வாண்டிலும் வாழ்ந்தவராதல் வேண்டும்.

42. யாழ்ப்பாண வைபமாலை ஆசிரியர் பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் பெயர்கள் சிங்காசனப் பெயர்கள் என்பதையுணராது, தனிப்பட்ட இருவருடைய பெயர்கள் என்று கூறிச்சென்றூர். பாவலர் சரித்திர தீபக ஆசிரியரும் அவர் கூற்றையே பின்பற்றியுள்ளார். இக்கூற்றை சுவாமி ஞானப்பிரகாசர் போன்றூர் மறுத்துள்ளனர் (யாழ்ப்பாண வைபவ விமர்சனம், 1929, பார்க்க). யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியர் செகராசசேகரன் ''சோதிடம் செகராசசேகரம் முதலிய சில நூல்களைச் செய்தான்'' என்று கூறுவர். இக்கூற்றினையே சதாசிவம்பிள்ளை ஈண்டு பேணியமைத்துள்ளார். செகராசசேகரம் என்னும் வைத்திய நூலின் ஆசிரியர் இன்னூர் என்று துணியச் சான்றுகள் கிடைத்தில. செகராசசேகரமாலை என்னும் சோதிடநூல் சோமசன்மா என்பவரால் இயற்றப்பட்டது என்பர்.

இவ்விரு நூல்களும் சயவீரசிங்கையாரியன் எனப் படும் ஐந்தாம் செகராசசேகரன் காலத்திலே இயற்றப்பட்டன என்பர் சுவாமி ஞானப்பிரகாசர் (யாழ்ப்பாண வைபவ விமர்சனம், 1929, பக். 110). தட்சிண கைலாச புராணமும் இவன் காலத்திலேயே இயற்றப்பட்டது என்பர்.

43. இவர் 'தமிழ் புளூராக்' என்னும் நூலிலிடம்பெறும் அராலி விசுவநாத சாஸ்திரியாரின் தந்தையாவர்.

44. "இவர் ... இற்றைக்கு எண்பத்து நான்கு வருடங் களின் முன் இருந்தவர்" (பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 212).

45. "இவர் ... ஏறக்குறைய 100 வருஷங்களுக்கு முன் சீவித்தார்" (பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 219).

46. புவனேகவாகு மதுராபுரியிலிருந்து வந்த மந்திரி என்பர் கைலாயமாலை ஆசிரியர். புவனேகவாகு ஆறும் பராக்கிரமவாகுவின் தத்த புத்திரனுகிய சப்புமல் குமாரயா என்றழைக்கப்பட்ட செண்ப கப்பெருமாளே என்பது முதலியார் செ. இராச நாயகம் போன்றவர்களின் கருத்தாகும்.

47. பாவலர் சரித்திர தீபகம் சேனுதிராயர் 1840-ம் ஆண்டிலே தேகவியோகமடைந்தகாலை அவருக்கு தொண்ணூறு வயது என்று கூறுகின்றது (பக். 165). அவ்வாருயின் சேனுதிராயர் 1750-ம் ஆண்டளவிற் பிறந்தவராதல் வேண்டும். இவர் பிறந்த காலத் தில் நெல்லைநாதமுதலியாருக்கு இருபது வயது என்று எடுத்துக்கொண்டால் நெல்லைநாதமுதலி யார் 1730-ம் ஆண்டளவிற் பிறந்தவர் எனலாம். நெல்லைநாதமுதலியார் "ஏறக்குறைய நூற்றறுபது வருடங்களுக்கு முன்னே ... இருந்தவர்" என்பர் கணேசையர் (ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம், 1939, பக். 29); அதாவது 1779-ம் ஆண்டிற்கு முன்பிருந் தவர்.

நெல்லைநாதமுதலியார் 1779-ம் ஆண்டு வரையும் இருந்தார் என்று கொண்டாலும் அவர் மா. வெற்றி வேலருக்கு நண்பராகமுடியாது; ஏனெனில் அவர் அப்போது பிறக்கவில்லை; வெற்றிவேலரின் தந்தை மாப்பாணமுதலியாருக்கு அப்பொழுது வயது இரண்டாகும். பாவலர் சரித்திர தீபகம் வெற்றி வேலரின் தந்தை மாப்பாணமுதலியார் 1827-ம் ஆண்டிலே வியோகமடைந்தபோது அவருக்கு வயது ஐம்பது என்று கூறுகின்றது; அவ்வாறுயின் மாப்பாணமுதலியார் 1777-ம் ஆண்டளவில் பிறந்தவராதல் வேண்டும். கணேசையர் தரும் நெல்லை நாதரின் இறுதிக்காலம்பற்றிய செய்தியைவிடுத்து, நெல்லைநாதர் தம் புதல்வர்போல தொண்ணூறு வருடங்கள் வாழ்ந்தார் என்று கொண்டால், அவர் 1820-ம் ஆண்டு வரை வாழ்ந்தார் எனலாம். மாப் பாணமுதலியார் இருபது வயதிலே திருமணஞ் செய்துவெற்றிவேலரைப் பெற்றுர் எனின், நெல்லை நாதருக்கு வயது தொண்ணூறு நடக்கும்போது, வெற்றிவேலருக்கு இருபத்துமூன்று வயதாகும். அவ்வாறுயின் "சேனுதிராய முதலியாருக்குத் தந்தையாகிய நெல்லைநாத முதலியார் இவர்க்கு நண்பராம்" என்று பாவலர் சரித்திர தீபகம் கூறுவது பொருத்தமற்றதாகத்தெரிகிறது. எனவே சேனுதிராயர் தொண்ணூறு வயதிலே வியோக மடைந்தார் என்பது பொருந்தாது. மாப்பாண முதலியார் 1827-ம் ஆண்டிற்ருன் இறந்தார் என்று சித்தாந்தமாகக் கொள்ளமுடியாமலிருக்கின்றது. ஏனெனில் அவர் புதல்வர் வெற்றிவேலர் தம் நண் பர் நெல்லைநாதமுதலியாரின் புதல்வர் சேனுதி ராயர் வியோகமடைந்து முப்பத்தேழு வருடங்க ளின் பின்பு வியோகமடைந்தார் என்று கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். சதாசிவம்பிள்ளை

அவர்கள் வெற்றிவேலருக்கு எண்பது வயது ஆயுள் தந்துள்ளார். இந்நிலையில் வெற்றிவேலரையும் அவர் தந்தை மாப்பாண முதலியாரையும் சேனாதிராயர் காலத்திற்குப்பின்பு கொண்டு செல்லுதல் பொருத்தமாகத் தெரியவில்லை.

48. "1827-ம் வருடம் வரையில் அராலியில் இறந்தனர்" (பாவலர் சரித்திர தீபகம், பக். 241). அராலி நா. விசுவநாத சாஸ்திரியாரின் காலத்தவர் முத்துக்குமாரப் புலவர்.

49. ''இவர் காலம் கி. பி. 1795 ம் வருஷம்''(பாவலர் சரித்திர தீபகம், பக். 267).

50. ''1830-ம் வருஷம்வரையில் இறந்துவிட்டார்'' (பாவலர் சரித்திர தீபகம், பக். 244).

51. ''இவர் யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச தம்பிரான் காலத்தவர்'' (பாவலர் சரித்திர தீபகம், பக். 266).

52. அருளப்ப நாவலர் என்ற மறுபெயரையுடைய இவருடைய 'திருச்செல்வர் காவியம்' என்னும் நூலைக் காசிச்செட்டியவர்கள் தமது 'தமிழ்நூற்பட்டியல்' என்னும் ஆங்கிலக் கட்டுரையிலே குறிப்பிட்டிருக்கிறார். இவருடைய காலம் தெளிவாகவில்லை.

53. ''ஆக்கியோனது செனன மரணகாலம் தெரிந்தில'' என்பர் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர்.

54. கனகசபைப்புலவர் அவர்கள் சதாசிவம்பிள்ளை பாடிய மெய்வேதசாரம், நன்நெறிக்கொத்து என்னும் நூல்களுக்குச் சாற்றுகவி வழங்கியவர்.

55. பாவலர் சரித்திர தீபகத்திற்குச் சாற்றுகவி வழங்கியோருட் கதிரைவேற்பிள்ளையும் ஒருவராவர்.

56. இவர் பாவலர் சரித்திர தீபகத்திற்குச் சாற்றுகவி அளித்துள்ளார்.

57. 'விதானமாலை'யின் பதிப்பாசிரியர் கார்த்திகே யையரை அவர் தந்தையைப் பற்றிக் கூறுமிடத்து சிறப்பாகக் கூறுவதிலிருந்து அவருடன் தொடர் புடையவராக இருந்தார் என்று ஊகிக்கலாம்.

58. வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவா சாரியரைப் பற்றி, அவர் தந்தை இ. நாகேசையர் பற்றிக் கூறுமிடத்து சிறப்பாகக் கூறுவதிலிருந்து அவருடன் தொடர்புடையவராக இருந்தார் என்று ஊகிக்கலாம்.

59. பாலியர்நேசன் பத்திராதிபர் சி. வி. சின்னத் தம்பி பாவலர் சரித்திர தீபகம் பற்றி எழுதிய உரை பதிப்பிலிடம்பெறுகின்றது.

60. வின்ஸ்லோ பாதிரியார் (Rev. M. Winslow) 1862-ம் ஆண்டில் வெளியிட்ட 'A Comprehensive Tamil and English Dictionary of High and Low Tamil' என்னும் அகராதி வேலையில் உதவியவர் களில் ஆதிமூல முதலியார் ஒருவராவர்.

61. ''இவர் இற்றைக்குப் பத்து வருஷங்களின் முன் தேகவியோகமாயினர்'' (பாவலர் சரித்திர தீபகம், 1886 பக். 31).

62. ''இவர் பாடிய அஞ்ஞானக்கும்மி 1878-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது'' (பாவலர் சரித்திர தீபகம், பக். 32).

63. இவருடைய 'டம்பாச்சாரி விலாசம்' 1872-ம் ஆண்டிலே வெளிவந்தது.

64, 1871-ம் ஆண்டு உ. வே. சாமிநாதையர் மாயூரத் திற் கோபாலகிருஷ்ணபாரதியாரிடம் சிறிதுகாலம் 'சங்கீத அப்பியாசம்' செய்தவர் (என் சரித்திரம், 1950, பக். 246).

65. ந. சி. கந்தையாபிள்ளை: தமிழ்ப்புலவர் அகராதி. (இரண்டாம் பதிப்பு, 1960), பக். 153.

66. இவர் திருவிரிஞ்சைப் புராணத்துக்குப் பொழிப் புரையெழுதி 1863-ம் ஆண்டில் வெளியிட்டவர்.

67. தமிழ்ப்புலவர் அகராதி ஆசிரியர் ந. சி. கந் தையாபிள்ளையும் (இரண்டாம் பதிப்பு, 1960, பக். 187) பத்தொன்பதாம் நூற்ருண்டில் தமிழ் இலக் கியம் (முதலாம் பதிப்பு , 1962, பக். 279) எழுதிய மயிலை சீனி. வேங்கடசாமியும் 'பதார்த்தகுணசிந் தாமணி' என்னும் நூல் 1867-ம் ஆண்டில் அச்சி டப் பெற்றதாகக் கூறுவர். 'தமிழ் புளூராக்' ஆசி ரியர் இந்நூற் பதிப்பைத் தேரையர் பற்றிக் கூறு மிடத்துச் சுட்டுவதாற் பதார்த்தகுண சிந்தாமணி காசிச்செட்டியவர்களின் தமிழ்ப் புலவர் சரிதம் வெளிவருவதற்கு முன்பே பதிப்பிக்கப்பட்டு விட் டது என்பது போதரும்.

68. இவருடைய 'சிறுத்தொண்ட நாயனுர் விலாசம்' 1881-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது (மயிலை சீனி. வேங்கடசாமி: பத்தொன்பதாம் நூற்ருண்டில் தமிழ் இலக்கியம், பக். 409).

69. இவருடைய 'இலக்கணச் சுருக்கம்' 1879-ம் ஆண்டு வெளிவந்தது. (மயிலை சீனி. வேங்கடசாமி: பத் தொன்பதாம் நூற்ருண்டில் தமிழ் இலக்கியம், பக். 152)

70. "நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதி 1875-இல் அச்சிட்டார்" (பத்தொன்பதாம் நூற்ருண்டில் தமிழ் இலக்கியம், பக். 296).

71. 1875-ம் ஆண்டு முத்துகிருஷ்ணபிரமம் பதிப்பித்த நிஷ்டானுபூதியுரைக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கி யவர் வீராசாமி செட்டியார்.

72. உ. வே. சாமிநாதையர்: என்சரித்திரம்(1950), பக். 205
73. உ. வே. சாமிநாதையர்: என்சரித்திரம் (1950) பக். 831.
74. மயிலை சீனி. வேங்கடசாமி: பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம்(1962), பக். 291.
75. மு. அருணுசலம் (பதிப்பாசிரியர்): திருக்களிற்றுப் படியார் மூலமும் பழைய அனுபூதி உரையும் (1962), முன்னுரை பார்க்கவும்
76. ந. சி. கந்தையாபிள்ளை: தமிழ்ப்புலவர் அகராதி (1960), பக். 131.
77. பாவலர் சரித்திர தீபகம (1886), பக். 138.
78. ந. சி. கந்தையாபிள்ளை: தமிழ்ப்புலவர் அகராதி (1960), பக். 179.
79. மயிலை சீனி. வேங்கடசாமி: பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம் (1962), பக். .219; உ. வே. சாமிநாதையர் தண்டியலங்காரத்தின் உரையாசிரியர் இன்னுர் என்பது தெரியவில்லை என்பர். (சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும், 1957, பக். 162).
80. பாவலர் சரித்திர தீபகம் (1886), பக். 198.
81. வே. சதாசிவம்பிள்ளை யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் 1910-ம் ஆண்டு இரண்டாம் பதிப்பாகச் சிவராத்திரி புராணமொன்றினைப் பதிப்பித்துள்ளார். அதன் ஆசிரியர் நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் என்று பதிப்பாசிரியர் கூறுவர். இப்பதிப்பிற்குரிய முதலாம் பதிப்பு கிடைக்குமாறில்லை. கிடைக்கப்பெறின் சிவசுப்பிரமணிய சிவாசாரியர் பதிப்பாசிரியரா அல்லது நூலாசிரியரா என்பது துலக்கமுறும்.
82. பாவலர் சரித்திர தீபகம் (1886) பக். 201.

83. பாவலர் சரித்திர தீபகம் (1886), பக். 233; த. கைலாச பிள்ளை தமது 'ஆறுமுகநாவலர் சரித்திரம்' என்னும் நூலிலே (1919, பக். 64) ஆறுமுகநாவலர் சிவதருமோத்தரத்திற்கு உரையெழுதியதாகக் கூறுவர்.

84. பாவலர் சரித்திர தீபகம் (1886) பக். 237..

85. திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் இயற்றியவுரை முதன்முதலாக எப்பொழுது அச்சிடப்பெற்றது என்பதை அறியுமாறில்லை. நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி ஆறுமுகநாவலர் இயற்றியவுரை பிரமாதீச வருடம் (1853) வெளிவந்தது (திருமுருகாற்றுப்படை மூலமும் ஆறுமுகநாவலர் புத்துரையும், 18-ம் பதிப்பு, 1960, பதிப்புரை காண்க). தி. சண்முகம்பிள்ளை பார்த்திப வருடம் மேடரவியில் (1885) திருமுருகாற்றுப்படைக்குப் பரிமேலழகருரையெனவொரு உரையினை வெளியிட்டார் (எஸ். வையாபுரிப்பிள்ளை: இலக்கிய தீபம், 1955, பக். 41). எஸ். வையாபுரிப்பிள்ளை மதுரைத் தமிழ்ச்சங்கப் பிரசுரமாக 'உரையாசிரியருரை' என ஏட்டுப்பிரதியில் எழுதப்பெற்றிருந்த ஒருரையை 1943-ம் ஆண்டிலே பதிப்பித்துள்ளார்.

86 கபிலதேவர் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்தவர் என்று சதாசிவம்பிள்ளை கூறுவது பொருந்தாது. இளம்பூரணர் 'அடிநிமிர் கிளவி ஈராறாகும்' எனத் தொடங்கும் நூற்பாவின் உரையில் மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலையிலிருந்து பாடல்கள் இரண்டினை மேற்கோள் காட்டுவதால், கபிலதேவநாயனார் காலம் இளம்பூரணரின் காலத்திற்கு முற்பட்டதாகும். இளம்பூரணர் காலம் பவணந்தி முனிவரின் காலத்திற்கு முற்பட்ட

தென்பர். பவணந்திமுனிவரின் காலம் கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டாகும்.

87. காரெட்டு என்னும் நூலினைக் 'காலாட்டு'எனவும் போற்றித்திருக்கலிவெண்பாவினைப் 'போற்றித்திரு வகவல்' எனவும் சதாசிவம்பிள்ளை பிழைபடக் கூறுவர்.

88. ஆறுமுகநாவலர் 1869-ம் ஆண்டிற் பதிஞேராம் திருமுறையை வெளியிட்டார். மயிலை சீனி. வேங் கடசாமி 'பத்தொன்பதாம் நூற்ருண்டில் தமிழ் இலக் கியம்' என்னும் நூலிலே (பக். 261) "பதிஞேராந் திருமுறை முழுவதையும் பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து முதன்முதலாக அச்சிட்டார் (1869)" என்று சோடசாவதானம் சுப்பராய செட்டியார் பற்றிக் கூறியவர் பின்பு அதே நூலிலே (பக். 388) சுப்பராயசெட்டியாரின் பதிப்பு 1877-ம் ஆண்டினது என்பர். பதிஞேராம் திருமுறை பாவலர் சரித்திர தீபகத்திற்கு முன்பே வெளிவந்துவிட்டபோதும் சதாசிவம்பிள்ளை கல்லாடதேவநாயஞர், பரண தேவநாயஞர், இளம்பெருமானடிகள், அதிராவடி கள், பதிஞேராம் திருமுறையிலிடம்பெறும் பட்டி னத்துப்பிள்ளையார் என்பவர்களைச் சேர்க்கவில்லை.

89. செய்யுள், 32.

90. மா. இராசமாணிக்கஞர்: பெரியபுராண ஆராய்ச்சி (இரண்டாம் பதிப்பு, 1960) பக். 91-93.

91. எஸ். வையாபுரிப்பிள்ளை: இலக்கிய தீபம் (1955), பக். 26.

92. 1897-ம் ஆண்டிலே அச்சிடப்பட்ட பதிப்பில் இவ் வுரை சந்திரசேகர கவிராச பண்டிதர் இயற்றிய தாகக் குறிக்கப்பட்டது.

93. எஸ். வையாபுரிப்பிள்ளை: இலக்கிய மணிமாலை (இரண் டாம் பதிப்பு, 1957) பக். 120

94. மயிலை சீனி. வேங்கடசாமி: பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம் (1962) பக். 388

95. பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம் (1962), பக். 388

96. மு. வை. அரவிந்தன்: உரையாசிரியர்கள் (1968), பக் 240

97. பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம் (1962), பக். 387

98. பிள்ளைப்பெருமாளையங்காரின் சரிதத்திலே தரப்பட்ட வேங்கடமாலையும் மணவாளதாசர் வரலாற்றிலே சுட்டப்பட்ட திருவேங்கடமாலையும் ஒரே நூலாகும்.

99. தமிழ்ப்புலவர்கள் வரலாறு, பதினேழாம் நூற்றுண்டு (மூன்றும் பதிப்பு, 1951), பக். 65

100. **Tamil Plutarch** (1946), P. 59 – 60

101. 1957-ம் ஆண்டு 'மர்ரே அண்டு கம்பெனி'யார் வெளியிட்ட பதிப்பிலும் ஆசிரியரொருவராகவே கொள்ளப்பட்டிருக்கின்றது.

102. பாவலர் சரித்திர தீபகம் (1886), பக். 95; உரிச்சொல் நிகண்டு ஏலவே 1840-ம் ஆண்டு புதுச்சேரி அரசாங்க அச்சியந்திரசாலையில் சிற்றம்பலவுபாத்தியாயருரையோடு அச்சகத்தலைவர் துத்தென் என்பவராற் பதிப்பிக்கப்பட்டது.

103. ஈழத்துப் பாவலர்களிலே நூற்றுவரைப் பற்றிய வரலாறுகளைத் தரும் 'ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்' தந்த கணேசையர், ஈழத்திலே தமிழ்த் தொண்டாற்றிய இசுலாமியப் புலவர்களில் ஒருவரையாவது குறிப்பிடவில்லை. சித்திலெப்பை, சு. மு. அசனுலெப்பை, அருள்வாக்கி ஆ. பி. அப்துல்காதிறுப்புலவர், மு. சுலைமான்லெப்பை, பதுறுத்தீன் புலவர் போன்றவர்கள் கணேசைய

ரின் புலவர் சரிதம் வெளிவருவதற்கு முன்பே வியோக மடைந்தவராவர்.

104. குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்னும் தொகை நூல்களில் இவருடைய பாடல்கள் இடம் பெறுகின்றன. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை முரஞ்சியூர் என்பது மன்னர் மாவட்டத்திலுள்ள முசலி என்று கருதி, முரஞ்சியூர் முடிநாகராயரையும் ஈழத்தவராகக் கருதியுள்ளார் (ஈழமண்டலப்புலவர் சரித்திரம், 1922, பக்.2).

105. இவர் தேனுவரைப்பெருமாள் எனவும் வழங்கப் பட்டார். இவருடைய சரசோதிமாலை என்னும் சோதிடநூல் கி. பி. 1310-ம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டது; 1891- ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்றது.

106. சோமஐயர் என்பர் கணேசையர். இவருடைய செகராசசேகரமாலை என்னும் நூல் சோதிடம் பற்றியது: 1902—ம் ஆண்டில் வண்ணை வி.சபாபதிஐயராற் பதிப்பிக்கப்பெற்றது.

107. கோணேசர் கல்வெட்டின் ஆசிரியரைச் சைமன் காசிச்செட்டியும் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும் கவிராஜவரோதயன் என்பர்.

108. வையாபுரிஐயர் எனவும் அழைக்கப்படுவர். வையா பாடல் J. W. அருட்பிரகாசம் என்பவரால் 1921-ம் ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்றது.

109. இவருடைய சந்தியாகுமையோர் அம்மானை அல்லது அர்ச். யாகப்பர் அம்மானை 1647-ம் ஆண்டிற் புனையப்பட்டது; 1894-ம் ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்றது.

110. இவருடைய வெருகல் சித்திரவேலாயுதர் காதல் திரிகோணமலை வே. அகிலேசபிள்ளையாற் சென்னையில் 1906-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது.

111. இவருடைய நல்லூர் கந்தசுவாமி கிள்ளைவிடுதூது 1786-ம் ஆண்டு இயற்றப்பட்டது; 1924-ம் ஆண்டு கரணவாய்கை. நமசிவாயதேசிகராற் பதிப்பிக்கப்பெற்றது.

112. இவருடைய எம்பரதோர் நாடகம் 1798-ம் ஆண்டில் இயற்றப்பட்டது. (ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், 1966, பக். 139)

113. ஈழமண்டலப்புலவர் சரித்திரம் தந்த ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை வரணியைப்பிறந்தகமாகக்கொண்ட, சித்தாந்த சரபம் எனும் பட்டம்பெற்ற, வேதாரண்யாதீன வித்துவான் சொக்கலிங்கதேசிகர் என்பவர் சின்னத்தம்பிப்புலவரின் மறைசையந்தாதிக்குப் பாயிரஞ் சொன்னவர் என்பர். திரிகோணசலபுராணம் பாடிய திரிகோணமலை முத்துக்குமாரப் புலவர் பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலே வாழ்ந்தவர்; அவர் வியோகமடைந்த காலம் அறியுமாறில்லை. திரிகோணசல புராணத்தை 1909-ம் ஆண்டிற் பதிப்பித்த வண்ணை ஆ. சண்முகரத்தினையர் நூலாசிரியரின் பெயரையோ அன்றி வரலாற்றையோ சுட்டவில்லை. மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை 1897-ம் ஆண்டு பதிப்பித்த கதிர்காமக் கலம்பகத்தின் ஆசிரியர் சரஸ்வதிபீடம் கந்தப்பசுவாமிகளின் காலம் அறியுமாறில்லை.

114. தட்சிணகைலாசபுராணத்தை முதன் முதலாகப் பதிப்பித்த காரைதீவு கா. சிவசிதம்பரஐயர் (1887) "இஃது யாழ்ப்பாணத்து மஹாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன் இயற்றியது" என்ருர். 1916-ம் ஆண்டு தட்சிணகைலாச புராணத்தைப் பதிப்பித்த புலோலி பொ. வைத்தியலிங்க தேசிகர் "பிரமஸ்ரீ பண்டிதராசரருளிச் செய்த ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம்" என்று கூறினர்.

இவ்விருவர் கருத்துக்களில் முன்னவர் கருத்தை அ. குமாரசுவாமிப்புலவரும் பின்னவர் கருத்தை சி. கணேசையரும் ஏற்றுள்ளனர். செகராச சேகரம், கண்ணகி வழக்குரை, ஞானப்பள்ளு என்பனவற்றின் ஆசிரியர் இன்னர் என்பதும் துணியுமாறில்லை.

115. வியாக்கிரபாதபுராணத்திற்குரிய செய்யுள்கள் இரண்டு குமாரசுவாமிப்புலவரின் 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' என்னும் நூலில் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன (1916, பக்.189).

116. 'தமிழ் புளூராக்' ஆசிரியர் யோசேப்பு புராணத்தின் ஆற்றுப்படலத்திலிருந்து ஐந்து செய்யுள் களைத் தந்துள்ளார்.

117. தாலபுராணத்திற்குரிய செய்யுள்கள் சில வழக்கிலுள்ளன.

118. பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் கோட்டுப்புராணத்திலிருந்து ஒரு செய்யுளை மேற்கோளாகத் தந்துள்ளார்.

119. சைமன் காசிச்செட்டி தாம் எழுதிய 'Remarks on the Origin and History of the Parawas' என்னும் டுரையிலே வலைவீசு புராணத்தின் சுருக்கத்தைத் தந்துள்ளார்.

120. "தேவகோட்டைத் தலபுராணத்தை ஐந்நூறு செய்யுள்வரையிற் பாடினரென்றுங் கேள்வி" (பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 34)

121. ந. சி. கந்தையாபிள்ளை 1937-ம் ஆண்டில் 'கனகி புராணம் (தெரிகவிகள்)' என்னும் நூலை வெளியிட்டார்; மு. இராமலிங்கம் 1961-ம் ஆண்டு 'கனகி புராணம்' என்ற தலைப்பிலே ஒருநூலை வெளியிட்டார்; கனக. செந்திநாதன் 'கனகிபுராணத்தில் சில

பாடல்கள்' என்ற தலைப்பிலே 'கலைச்செல்வி' என்ற சஞ்சிகையிலே (ஆனி, 1960) சில பாடல்களை வெளியிட்டார்.

122. சேனாதிராயரின் நல்லைக்குறவஞ்சிக்குரியதாகச் சதாசிவம்பிள்ளை செய்யுளொன்றை மேற்கோளாகத் தருகிறார்; அச்செய்யுளைத் தனிச் செய்யுளென்பர் கணேசையர். தமிழ்ப்புலவர் சரித்திரத்தின் ஆசிரியர் குமாரசுவாமிப்புலவர் பிறிதொரு செய்யுளைக் குறவஞ்சிக்குரியதாகத் தந்துள்ளார்.

123. வண்ணைக்குறவஞ்சியின் காப்புச்செய்யுள் பாவலர் சரித்திர தீபகத்திலே தரப்பட்டுள்ளது.

124. "திருக்கோணேசர்மலைக் குறவஞ்சி யொன்று பாடத் தொடங்கியும் முற்றுப்பெற்றதில்லை எனக் கேள்வி" (பாவலர் சரித்திர தீபகம், பக். 132).

125. மாப்பாண முதலியார் பாடிய குறவஞ்சியின் பெயர் தெரியவில்லை; "கச்சாய்க்கு மேற்கேயுள்ள பல நாட்டுவளங்களை எடுத்துச்சொல்வது" (பாவலர் சரித்திர தீபகம், பக். 236).

126. மல்வில்குறவஞ்சி பாடிய வெற்றிவேலர் வன்னியிலுள்ள செல்வந்தர் ஒருவர் கேள்விப்படி பாடிய குறவஞ்சியின் பெயர் தெரியவில்லை.

127. வல்லிபட்டி சந்திரசேகர முதலியார் மீது தமிழ் நாட்டுப் புலவரொருவர் பாடியது.

128. மணப்பாறை இன்பகவியால் யாழ்ப்பாணம் கச்சேரி முதலியார் பிலிப்பு ரொட்ரிக்கோ முத்துக் கிருஷ்ணர் மீது பாடப்பட்டது.

## 5. பதிப்புப் பேராசிரியர் தாமோதரம்பிள்ளை

"இலக்கணக்கொத்துடையார் நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியரென வகுத்த மூவகை ஆசிரியரோடு யான் பரிசோதனுசிரியரென இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில் முன் மூவர் தொழிலினும் பார்க்க மிகக் கடியதென்றும் அவர் அறிவுமுழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன். தூக்கிஞலன்ரே தெரியுந் தலைச்சுமை? பரிசோதனுசிரியர் படுங் கஷ்டமும் ஒரு அரியபழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவத்தாலன்றி அறியப்படாப் பொருள்கள்". இவ்வசனங்கள் தொல்காப்பியம் சேனாவரையம் (1868), வீரசோழியம் மூலமும் பெருந்தேவனார் உரையும் (1881), இறையனாரகப்பொருள் மூலமும் நக்கீரர் உரையும் (1883), தணிகைப்புராணம் (1883), தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியமும் பேராசிரியமும் (1885)[1] என்பனவற்றைப் பதிப்பித்த பின்பு கலித்தொகைப் பதிப்புரையிலே[2] சி. வை. தாமோதரம்பிள்ளை எழுதியனவாம்.

ஏதாவதொரு நூலை அச்சிட விழையின், முதலில் அந்நூலின் ஏட்டுப் பிரதிகள் பலவற்றைப் பெற்றுப் பரிசோதனை செய்யவேண்டும். ஏட்டுப் பிரதி ஒன்றினை மட்டுமே வைத்துக்கொண்டு பரிசோதனை செய்யமுடியாது; ஏனெனில், அப்பிரதியிலுள்ள உருவம் நூலாசிரியருடையதுதானு என்பதைக் கணிப்பது கடினமாகும். மேலும் ஏட்டுப் பிரதியின் வழுக்களைக் களைவது பெரும் பிரயத்தனமாகும்.

தாமோதரம்பிள்ளை கலித்தொகையைத் திருவாவடு துறையாதீனப் பிரதியையும் ஆறுமுக நாவலர், மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை, மயிலை இராமலிங்கப் பிள்ளை ஆகியோர் பிரதிகளையும் கொண்டு பரிசோதித்து அச்சிட ஆரம்பித்தார். ஆனால் "போகப்போக ஒன் றொன்றாக ஆங்காங்கு முடிவுபெற்று நான்காவது முல்லைக்கலி முடியுமுன்னந் திருவாவடுதுறைப்பிரதி ஒன்றொழிய ஏனைய அனைத்துந் தலைகட்டிக்கொண் டன."[8] இந்நிலையிற் பிள்ளையவர்கள் திருவாவடுதுறைப் பிரதியை மட்டும் வைத்துக்கொண்டு பதிப்பு வேலையை நிறுத்தாமலே தொடர்ந்திருக்கலாம் ஆனால் அவர் மனச்சாட்சிக்கு அவ்வாறு செய்தல் விரோதமான தாகப்பட்டது. எனவே பதிப்பு வேலையை நிறுத்தி விட்டு மீண்டும் ஏட்டுப் பிரதிகள் தேடினார். புதுச்சேரி சொக்கலிங்கபிள்ளை பிரதி, திண்டிவனப் பிரதி, சென்னைப் பிராசிய கிரந்த மண்டபப் பிரதிகள் இரண்டு என்பனவற்றை அலைந்து தேடிப் பெற்றுப் பரிசோதனை செய்த பின்பே பதிப்பு வேலை தடையின்றி நடந்தது. எனவே பல ஏட்டுப் பிரதிகளைப் பெற்றுப் பரிசோதனை செய்தாலொழியப் பதிப்பாசிரியர் தமது மனச்சாட் சிக்கு ஏற்ப நடத்தல் கடினமாகும்.

ஒரே இடத்துப் பிரதிகள் பலவற்றை நூற் பரி சோதனைக்குப் பெறுவதிலும் பல்வேறு இடத்துப் பிர திகளைப் பெறுவதே நூலின் உண்மையான உருவத்தை அறிவதற்கு உதவியாகும். ஓரிடத்துப் பிரதிகள் ஏட்டுப் பிரதியொன்றினையே பார்த்தெழுதியதாக இருக்கலாம். இதனாற் பார்த்தெழுதிய பிரதிகளிலே பார்த்தெழுதப் பயன்பட்ட ஏட்டுப் பிரதியின் வழுக்கள் திருத்தமுறா மலே இடம்பெற்றிருக்கலாம். வீரசோழியப் பதிப்பு ரையிலே, "மதுரைப்பிரதி திருநெல்வேலிப் பிரதிக்கு வேறு. யாழ்ப்பாணத்துப்பிரதி இவ்விருதேசப் பிரதி கட்கும் வேறு. தஞ்சாவூர்ப்பிரதி முதன் மூன்றற்கும் வேறு. சென்னபட்டணப் பிரதிகள் இவையெல்லா

வற்றிற்கும் வேறு'' என்பர் தமோதரம்பிள்ளை[4]. இட வேற்றுமை ஏட்டுப் பிரதிகளின் உருவத்தை வேறு படுத்தியபோதும் ஆக்கியோன் படைத்தளித்த நூலின் உருவத்தை அணுகுவதற்கு இவையே உதவுவன என் பதில் ஐயமில்லை.

ஏட்டுப் பிரதிகள் பலவற்றைப் பெற்றுப் பரிசோதனை செய்வதையே பதிப்பாசிரியர் பொதுவாக விரும்பினும் அவற்றைச் சம்பாதிப்பது பிரயாசையும் செலவும் மிகுந்த நீண்ட கால வேலையாகவிருந்தது. ''அதிலும் ஒரு நூல் பழையதும் இலேசில் விளங்காததுமானல் எழுதுவாரும் ஓதுவாருமில்லாமல் இருக்கிற இடமுந் தெரியாமற் போய்விடுகின்றது''. [5] வீரசோழியப் பதிப் புரையிலே, ''நல்ல வித்துவான்களுள்ளும் அனேகர் தாம் வீரசோழியமென்னும் பெயரைக் கேட்டதன்றி நூலைப் பார்த்தறியேமெனப் பலபல சமயங்களில் நமக்கு நேரே சொல்லினர்'' என்பர் தாமோதரம்பிள்ளை திருவாவடுதுறையாதீனகர்த்தர் கொடுத்த சென்னை மகாலிங்கையரின் சூளாமணிப் பிரதியைப் பற்றிக் கூறுமிடத்து, ''அதனை வாங்கி வாசித்துப் பார்த்த போது, காரிகையில் இலக்கியமாகக் காட்டப்பட்டுள் ளனவுஞ் சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்தன வாயினும் யாது நூலகத்திருந்து எடுக்கப்பட்டன வென இக்காலத்து அதனை ஓதுவார்க்குத் தெரியாதன வுமாகிய விருத்தங்கள் ஆங்காங்குக் கிடத்தல் கண்டு, அஃதோர் அரிய இலக்கியமேயெனத் தேறிச் சுவாமிகள் கட்டளையைச் சிரமேற்றுங்கி, வேறு பிரதிகள் தேட ஆரம்பித்தனன்'' எனப் பிள்ளையவர்கள் எழுதியுள்ள வசனங்களையும் காண்க.[7] படிப்பாரில்லாதபோது பேணப்படாமற் சுவடிகள் எழுதப்படாமல் அருகிவிடு கின்றன. சிற்றிலக்கணநூல்களைக் கற்பதோடு இலக்க ணக் கல்வியை மாணக்கர் நிறுத்திவிடுவதாலே தொல் காப்பியப் பொருளதிகாரப் பயிற்சி பெற்ரேர் பத்

தொன்பதாம் நூற்றுண்டிற்குப் முன்பதாகவே அருகி விட்டனர். பிள்ளையவர்கள் தமது தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புரையிலே பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்ப தசாப்தங்களிலே தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பூரணமாகத் தெரிந்திருந்தவர் திருவாரூர் வடுகநாததேசிகர் ஒருவரேயென்றும் சென்னை வேங்கடாசல முதலியார் மிகுந்த சிரமப்பட்டு அவரிடம் சென்று அப்பகுதியைக் கற்று வந்ததாகவும் அவரிடமிருந்து அவர் புதல்வர் வரதப்பமுதலியார் ஒருவரே கற்றுத் தேர்ந்திருந்ததாகவும் இதனால் அவருக்குத் தொல்காப்பியம் வரதப்பமுதலியார் என்னும் பெயரிருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். பிள்ளையவர்களின் கூற்று அக்காலத்து நிலையைச் சற்று மிகைபடுத்திக் கூறுவது போன்றிருப்பினும் ஊன்றி நோக்கற்பாலது. தெல்காப்பியப் பொருளதிகாரப் பயிற்சி அருகியிருந்தமையால் அதன் ஏட்டுப் பிரதிகள் அருகியே வழங்கின. "தமிழ்நாடனைத்திலுமுள்ள தொல்காப்பியப் பொருளதிகாரப் பிரதிகள் இப்போது இருபது இருபத்தைந்துக்கு மேற்படா" என்பது பொருளதிகாரப் பதிப்பாசிரியரின் கூற்று. இலக்கணவிளக்கப் பதிப்புரையிலே, "சொற்ப காலத்திற்கு முன்னர் உதித்த இந்நூலின் கடைசி இயல்களுக்குத் தமிழ்நாட்டிலே பிரதிகள் அகப்படாமையும் எங்கெங்குந்தேடியும் யாது முயற்சி செய்தும் பாட்டியலுக்கு இரண்டு பிரதி மாத்திரம் அகப்பட்டதும் .........."[8] என்பதும் பயிற்சி குன்றியமையால் ஏற்பட்ட நிலையையே சுட்டுகின்றது.

ஏட்டுப் பிரதிகள் அருகியிருந்த காலத்திலும் அவற்றை மனமொப்பி, பயன்படுத்தக்கூடியவர்களுக்குக் கொடுத்து தமிழுலகிற்கு உதவிசெய்யக்கூடப் பிரதிகளையுடையார் தயங்கினர். கலித்தொகைப் பதிப்பு வேலையை இடையே நிறுத்திவிட்டு மீண்டும் பிரதிகள் தேடிய தாமோதரம்பிள்ளை, "........ திருத்தணிகைக்

குருசாமி ஐயர் கிரகத்திற் சென்று, சென்னையில் மிகப் பெயர் பெற்றிருந்த வித்துவானாகிய அவரது பிதா மகன் ஸ்ரீ சரவணப்பெருமாளையருடைய புத்தக நாமாவலியைப் பார்வையிட்டதில், அவரது கலித்தொகைச் சுவடி கோயமுத்தூரில் ஒருவர் கையிற் போயிருப்பதாகத்தெரியவந்தது. அதனைச் சின்னாள் இரவலாக வாங்கி யனுப்பும்படி அவ்வூரிற் பெரியமனுஷர் சிலருக்குக் கடிதம் விடுத்தேன். அவர்கள் அரவின் சுடிகை அரதனத்திற்கும் ஆழிவாய் இப்பியுண் முத்திற்கும் அவை உயிரோடிருக்குங்காறும் ஆசைகொளல் வேண்டாவாறு போல, இம்மஹானுடைய சீவதிசையில் இவர் கைப்பட்ட புஸ்தகங்களைக் கண்ணுற் பார்க்கும் அவாவினை ஒழிகவென்று பதிலெழுதினர். சிவனே! சிவனே! இதுவுங் கலித்தொகையைப் பிடித்ததோர் கலித்தொகையோ ..........'' என்று எண்ணி உள்ளம் நொந்ததாகக் கூறுவர்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியமும் பேராசிரியமும் தொல்காப்பியம் வரதப்பமுதலியார் பிரதி, திருத்தணிகை சரவணப்பெருமாளையர் பௌத்திரர் துரைசாமி ஐயர் பிரதி, புரசபாக்கம் சாமுவேற் பண்டிதர் பிரதி முதலிய பன்னிரு பிரதிகள் கொண்டு பரிசோதிக்கப்பட்டது. கலித்தொகை ஆறுமுகநாவலர் பிரதி, திருவாவடுதுறையாதீனப் பிரதி, மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை பிரதி, மயிலை இராமலிங்கப்பிள்ளை பிரதி, புதுச்சேரி சொக்கலிங்கபிள்ளை பிரதி முதலிய குறைப்பிரதிகளாகவும் முழுப் பிரதிகளாகவுமுள்ள பத்துப்பிரதிகளைக் கொண்டு பரிசோதனை செய்யப்பட்டது. சூளாமணி சென்னை மகாலிங்கையர், வீடூர் அப்பாசாமி சாஸ்திரிகள், மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை ஆகியோர் பிரதிகளையும் பெருமண்டூர் பிரதி, காஞ்சிபுரப்பிரதி ஆகிய பிரதிகளையும் கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது. வீர

சோழியம், இலக்கணவிளக்கம் முதலியனவும் இவ்வாறே பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெற்றனவாம்.

தாமோதரம்பிள்ளைக்கு ஏட்டுப் பிரதிகளைத் தேடும் முயற்சியிற் தமிழன்பர்கள் சிலர் உதவியிருக்கின்றனர். அவர்கள் செய்த உதவியைப் பொற்காசாகக் கருதிய பிள்ளையவர்கள், நன்றியறிதலுடன் அவர்கள் பெயர்களைத் தமது பதிப்புரைகளிலே பொறித்துவைத்திருக்கிறார். பிள்ளையவர்களுக்குச் சிற்சில ஏட்டுப் பிரதிகளைக் கொடுத்துதவிய தமிழபிமானிகளிலே குறிப்பிடத்தக்கவர்கள் திருநெல்வேலித் தாசில்தார் கணிதசிங்கம் வை. சின்னத்தம்பிப்பிள்ளை, திருமணம் கேசவசுப்பராய முதலியார், கருவூர் பண்டிதர் வெங்கட்டராமையங்கார், விழுப்புரம் முன்சீபு இராமச்சந்திரையர், கும்பகோணம் கிருஷ்ணசாமி நாயுடு, நல்லூர் க. சதாசிவப்பிள்ளை, மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை முதலியோராவர். திருவாவடுதுறையாதீனத்துப் பண்டார சந்நிதிகளாக வீற்றிருந்த மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரும் நீதிபதியாகப் பணிபுரிந்த கனகசபை முதலியாரும் பிள்ளையவர்களுக்குப் பல ஏட்டுப் பிரதிகளை எடுத்தளித்துத் தமிழ்ப்பணியிலே ஊக்குவித்தவர்களிலே குறிப்பிடத்தக்கவராவர்.

கலித்தொகைப் பதிப்புரையிலே கனகசபைமுதலியாரைப் பற்றிப் பிள்ளையவர்கள், ''தஞ்சாவூர் சப்கோர்ட்டு நீதிபதி ஸ்ரீ திரு. கனகசபை முதலியாரவர்கள் எனக்கு இம்முயற்சியிற் பணத்திலும் பார்க்கப் பிராசீன நூல்கள் தேடித்தருவதே மிக்க உபயோகமாமென உணர்ந்து மதுரையிலிருந்து ௩௫ பூர்வக்கிரந்த ஏட்டுப் பிரதிகள் அழைப்பித்துத் தந்தார்கள். இவற்றை யான் அத்துணைப் பொன் மொகராவாக மதித்து அவர்களுக்கு வந்தனஞ் செய்கின்றேன்''[10] என்பர். இலக்கணவிளக்கப் பதிப்புரையிலும் சூளா

மணிப் பதிப்புரையிலும் கனகசபைமுதலியார் செய்த உதவிகளை மீண்டும் நன்றியறிதலுடன் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

'நிலவில் மலர்ந்த முல்லை' எனப் பெயரிய கட்டுரை யொன்று உ. வே. சாமிநாதையர் பெயராற் 'கலைமகள்' என்னுஞ் சஞ்சிகையில் வெளிவந்தது; அக்கட்டுரை 'நல்லுரைக்கோவை' இரண்டாம் பாகத்திலும் இடம் பெறுகின்றது. இக்கட்டுரையிலே தாமோதரம்பிள்ளை யாற் போற்றப்பட்ட கனகசபைமுதலியார் பற்றியும் சில செய்திகள் இடம்பெறுகின்றன பதிப்பாசிரியர் ஒருவராற் போற்றப்பட்டவர் வேறொருவரால் மறை முகமாக எவ்வாறு இழித்துரைக்கப்படலாம் என்ப தற்கு இக்கட்டுரை எடுத்துக்காட்டாகும்.

மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் (-1888) திருவாவடுதுறையாதீனத்தின் சின்னப்பட்டமாக இருந்த காலத்திலே, ஆறுமுகநாவலர் 1849-ம் ஆண்டு 'நாவலர்' எனத் திருவாவடுதுறையாதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகராற் கௌரவிக்கப்பட்டார்; ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் 1869-ம் ஆண்டு இறையடி நீழல் சேர்ந்தபின்பு ஆதீனத்தின் பதினொருவது பட்டத் திற் பண்டாரசந்நிதிகளாக வீற்றிருந்தார். தேசிக மூர்த்திகள் பிள்ளையவர்களின் பரிசோதனைக்குத் தேவை யான சுவடிகளை அவர் கடிதம் மூலம் வேண்டி விண்ணப் பித்தபோதெல்லாம் அனுப்பியுதவியவர். வீரசோழியம், இறையனாரகப்பொருள், தொல்காப்பியம்பொருள திகாரம், இலக்கண விளக்கம், சூளாமணி முதலிய நூல் களின் ஏட்டுப்பிரதிகளைத் தேசிகமூர்த்திகள் பிள்ளைய வர்களுக்குத் தமிழ்த்தொண்டு புரிய மனமுவந்தளித் தவர். 'காருண்ணியமுங் கலாபரிபாலனமுமே தமது திருமேனியாகக் கொண்டு' விளங்கிய திருவாவடு துறைச் சற்குருநாதசுவாமிகள் மீது பிள்ளையவர்கள்,

விண்ணுடுகைலைவழித்தேசிகர் வெவ்வினைக்குநெற்றிக்
கண்ணனசுப்ர மண்யசுவாமிகள் கான்மலரை
நண்ணத் தலையினசைதீரத்தாங்க நற்கோகழிவாய்
மண்ணைப்பிறந்திலேன் ஐயகோ! இந்த வையகத்தே.

சிரமாலையாகவுஞ் சின்முடியாகவுஞ் செய்யகண்ட
சரமாலையாகவும் யானடியேனினையேன் றருவாய்
பரமார்கயிலைப் பரம்பரைக் கோகழிச் சுப்ரமண்யா
மரமாய் நின்பாதகுறடாய் வருதற்கொருவரமே.

என்னும் பாமாலையைக் கலித்தொகைப் பதிப்புரையிலே சூட்டியுள்ளார்.[11]

உ. வே. சாமிநாதையர் பெயரால் வெளிவந்த 'என் சரித்திரம்' என்னும் நூலிலே, தாமோதரம்பிள்ளை "தாம் பல தமிழ் நூல்களைப் பதிப்பிக்க எண்ணியிருப்பதாகத் தெரிவித்ததோடு திருவாவடுதுறை சென்று ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசிக்க வேண்டுமென்று விரும்பினர். அங்ஙனமே நான் அவரை அழைத்துச் சென்று தேசிகருக்குப் பழக்கம் செய்வித்தேன்" என்றெழுதப்பட்டுள்ளது.[12]

தினவர்த்தமானியின் ஆசிரியராகவும்[13] சென்னையிலுள்ள ஆங்கிலேய அதிகாரிகளின் தமிழாசிரியராகவும் சென்னை இராசதானிக் கல்லூரியின் ஆசிரியராகவும் திகழ்ந்து, சென்னைப் பல்கலைக்கழகம் 1857-ம் ஆண்டிலே முதன்முதலாக நடாத்திய பி. ஏ. தேர்வில் முதல்வராகத் தேறிச் சிறப்புற்று, கள்ளிக்கோட்டை அரசாங்க உயர்தரப்பாடசாலை ஆசிரியராகவும் பின்பு சென்னை அரசாங்க வரவுசெலவுக் கணக்குப்பகுதியிலே அதிகாரியாகவும் விளங்கி, தொல்காப்பியம் சேனவரையத்தைப் பதிப்பித்ததின் மூலம் அருட்பா மருட்பா விவகாரம் சூடுபெறக் காரணமாக இருந்த தாமோதரம் பிள்ளையைக் க லா ப ரி பா ல ன நோக்குடையவராய்த்

திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீசுப்பிரமணியதேசிகர் அறியாமலிருக்க, திருவாவடுதுறை வித்துவான், கும்பகோணம் காலேஜ் பண்டிதர் உ. வே. சாமிநாதையர் பிள்ளையவர்களைத் தேசிகமூர்த்திகளுக்கு அறிமுகஞ்செய்து வைத்ததாகக் கூறும் 'என்சரித்திர' த்தின் செய்தியைப் பிள்ளையவர்களுடைய சூளாமணிப் பதிப்புரையும் வீரசோழியப் பதிப்புரையும் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. சூளாமணிப் பதிப்புரையிலே, "நாலைந்து வருஷத்தின் முன் யான் ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச் சற்குருநாத சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகளைத் தரிசிக்கப் போயிருந்தபோது சுவாமிகள் சூளாமணி ஓர் அருமையான நூலென்றும் அஃது இப்பொழுது மரணதசை அடைந்திருப்பதால் அதனை அச்சிட்டுக் காப்பாற்றுதல் தக்கதென்றுந் தமிழ்ப் புராதன நூல்களை என்னால் இயன்றமட்டுந் தேடிப் பரிசோதித்து வெளியிடும் முயற்சியிற் கைகயிட்டிருப்பதால் யானே அதனைச் செய்தல் வேண்டுமென்றுங், கட்டளையிட்டதுமன்றிச், சென்னை மகாலிங்கையர் பிரதியொன்று தமது ஆதீனத்திலிருந்ததை எடுத்து என்வசம் அனுப்பியுமருளியது" என்று பிள்ளையவர்கள் கூறுவர்.[14] 'என்சரித்திர' ஆசிரியர் தாம் பிள்ளையவர்களைத் தேசிகமூர்த்திகளுக்குப் 'பழக்கஞ்செய்வித்தது' பிள்ளையவர்கள் கும்பகோணத்தில் வசித்த காலத்தில் என்று கூறுகிறார்.[15] 1882-ம் ஆண்டு அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பிள்ளையவர்கள் தமது ஐம்பத்துமூன்றும் வயதிலே குடந்தையில் வக்கீலாகப் பணிபுரியத் தொடங்கினர்.[16] தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்குப் பார்த்திப வருடம் ஐப்பசி மாதம் (1885) எழுதிய பதிப்புரை கும்பகோணத்திலிருந்து எழுதியது. எனவே 1885-ம் ஆண்டிலே பிள்ளையவர்கள் கும்பகோணவாசியாகிவிட்டார். சூளாமணிப்பதிப்புரையிற் குறிப்பிட்டபடி, பிள்ளையவர்கள் 1885-ம் அல்லது 1884-ம் ஆண்டு திருவாவடுதுறையா

தீனகர்த்தரைச் சந்தித்தார். கும்பகோணத்திலே வாழத்தொடங்கிய பின்புதான் தேசிகமூர்த்திகளைச் சந்தித்தாரெனில், அந்நிகழ்ச்சி 1885-ம் ஆண்டிற்குரியதாகலாம். தேசிகமூர்த்திகளுக்குத் தம்மைச் சாமிநாதையர் பழக்கம் செய்வித்ததாகப் பிள்ளையவர்கள் கூறவில்லை. பிள்ளையவர்கள் கூற்றை நோக்கும்போது அவர்மீது சுப்பிரமணியதேசிகர் வைத்திருந்த அபிமானம் புலப்படுகின்றது. அதற்குக் காரணமில்லாமலில்லை. தொல்காப்பியம் சேனாவரையம், வீரசோழியம், இறையனாரகப்பொருள், தணிகைப்புராணம் ஆகியனவற்றைச் சுபானு வருடம் (1883) முடிவதற்கு முன்பதாகவே பிள்ளையவர்கள் பதிப்பித்துவிட்டார். விசுவருடம் (1881) ஆரம்பித்த தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் பதிப்புவேலை,[17] சுப்பிரமணியதேசிகரைப் பார்த்திப வருடம் (1885) சந்தித்தபோது, முடிவுபெற்றுவிட்டது அல்லது அந்நிலையை அடைந்துகொண்டிருந்தது. எனவே சுப்பிரமணியதேசிகர் சூளாமணியைப் பிள்ளையவர்களே பதிப்பிக்க வேண்டும் என்று கட்டளையிட்டதாகப் பிள்ளையவர்கள் கூறுவது புனைந்துரையாகாது. அவ்வாறாயின் பிள்ளையவர்களை வேறொருவர் தேசிகமூர்த்திகளுக்குப் பழக்கஞ்செய்து வைக்க வேண்டியநிலையில் அவர் இருக்கவில்லை. கும்பகோணத்திலிருந்து பிள்ளையவர்கள் திருவாவடுதுறை சென்றபோது ஐயரும் உடன்சென்றனர் போலும். வீரசோழியப் பதிப்புரையிலே, "பழம்பிரதிகளுள் ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறைப் பெரிய சற்குருநாதசுவாமிகள் தயைகூர்ந்து கட்டளையிட்டருளியது நெடுங்காலத்தது. கைவிட்டுக் கடன்கொடுத்த கைப்பிரதிகள் திரும்பி உடையார்பால் மீள்வதரிதாகிய இயல்பினையுடைய இக்காலத்தில், முன் நம்மை அறியாதவர்களாயினும் நமது பிரார்த்தனையை மறுது கிருபைபுரிந்ததுமன்றி,

ஆதீனத்துப் பழம் பிரதிகளுட் பலநாளாகத் தமது பரிசனத்தைக் கொண்டு தேடுவித்து எடுத்தனுப்பிய பரிபூரண கிருபைக்காக மிக்க கடமைப்பட்டிருக்கின்ருேம்'' என்பர் பிள்ளையவர்கள்.[18] இப்பதிப்புரை விசு வருடம் சித்திரை மாதம் (1881) எழுதப்பட்டது. பிள்ளையவர்களுக்கும் தேசிகமூர்த்திகளுக்கும் இடையே யுண்டான தொடர்பு பார்த்திப வருடத்திற்கு முன்பே, சுப்பிரமணியதேசிகர் கட்டளையிடப் பிள்ளைய வர்களுக்காகச் சாமிநாதையர் மடத்திலே இறையனுரகப்பொருளுரைப்பிரதி தேடுவதற்கு முன்பே,[19] அதாவது நான்கு வருடங்களுக்கு முன்பே ஏற்பட்டுவிட்டது. எனவே தேசிகமூர்த்திகளைப் பிள்ளையவர்கள் சந்திப்பதற்கு வேருெருவரின் துணையை நாடவேண்டியதில்லை.

ஏட்டுப் பிரதிகளைத் தேடிச் சேர்ப்பதாகிய அரிய முயற்சியைத் தொடர்ந்து அவற்றை வரிசைப்படுத்த வேண்டும். ஏட்டுப் பிரதிகளிற் சில குறைப்பிரதிகளாக அகப்பட்டிருக்கலாம். தாமோதரம்பிள்ளை முதன்முதலாகப் பார்வையிட்ட கலித்தொகைப்பிரதியாகிய புதுவை நயனப்பமுதலியாரது மூலபாடப் பிரதி தலையும் கடையுமற்ற குறைப்பிரதியாகும். குறைப்பிரதிகளையும் முழுப்பிரதிகளையும் வகுத்துக்கொண்ட பின்பு, ஏடுகளை ஒவ்வொன்ருக வரிசைக்கிரமப்படி தொடர்பு நோக்கி ஒழுங்குபடுத்த வேண்டும். ஏட்டுப்பிரதிகளை வைத்திருந்தோர் அவற்றிற் பயிற்சியில்லாதவர்களாயின், ஏடுகள் முறையாக வரிசைப்படி தொகுத்துக் கட்டப்பெற்றிருக்கும் வாய்ப்பு அருகியே இருக்கலாம். தொல்காப்பியத்தின் பொருளாதிகாரச் சூத்திரங்கள், பல இடங்களிலே மாறுபட்டுக் கிடப்பதைப் பொருளதிகாரப் பயிற்சியுடையோருக்குக் கூறவேண்டா. இம் மாறுபாடுகள் உரையாசிரியர் காலத்திலேயே ஏற்பட்டு விட்டமை இளம்பூரணர், நச்சினுர்க்கினியர் முதலி

யோர்தம் உரைகளாற் புலனாகும். ஏடுகள் மாறுபட்டுக் கிடப்பதுடன் இடைச்செருகல்களாகவும் பல ஏடுகள் புகுந்திருக்கலாம். தொல்காப்பியத்தின் கால ஆராய்ச்சியிலீடுபட்டோர் பொருளதிகாரத்திலிடம் பெறும் சூத்திரங்கள் சிலவற்றை இடைச்செருகல் என்று தட்டிக்கழித்து விடுகின்றனர்.[20] கம்பராமாயணத்தில் எவ்வளவு 'வெள்ளிப்பாடல்' கள் இடம்பெற்றிருக்கின்றன என்ற ஆ ரா ய் ச் சி இன்னமும் முடியவில்லை.[21] ஒரு வாசகத்திற்கும் உருகாதோர் உருகும் திருவாசகத்திலும் 'வெள்ளிப்பாடல்'கள் உள என்பர்.[22] தாமோதரம்பிள்ளைக்கோ அல்லது பின்பு எஸ். வையாபுரிப்பிள்ளைக்கோ கிடைக்காத 'பெருங்கடுங்கோன் பாலை' எனத் தொடங்கும் வெண்பா த. மு. சொர்ணம் பிள்ளைக்குக் கிடைத்தது.[23]

பரிசோதனை செய்யப்படும் நூல் மூலத்தை மட்டுமே உடையதாகவிருப்பின் வரிசைப்படுத்துவதிற் சிரமம் சற்றுக் குறைவாக இருக்கலாம். தாமோதரம் பிள்ளை பதிப்பித்த தணிகைப்புராணமும் சூளாமணியும் மூலத்தை மட்டும் கொண்டவை. ஆனால் மூலமும் உரையும் உதாரணமுமுடைய நூல்களை ஏட்டுப் பிரதிகளிலிருந்து வரிசைப்படுத்தி, ஒப்புநோக்கி, தக்க பாடத்தைத் தேர்ந்து வெளியிடுவது சிரமம் மிக்க செயலாகும். பிள்ளையவர்கள் வீரசோழியத்தின் பின் மூன்று அதிகாரங்களைப் பற்றிக் கூறுமிடத்து, "அப்பால் மூன்றதிகாரங்களிலும் பிற்காலத்தோராற் செய்யுள் உரை உதாரணமென்றிவையெல்லாந் தங்கடங்கள் மனம் போனவழியே மாற்றப்பட்டன. சில செய்யுளும் உரையும் ஒருங்கே தள்ளப்பட்டன. பழைய உதாரணங்களை நீக்கிப் புது உதாரணங்கள் பின்னூல்களிலிருந்தெடுத்துப் பதிலாகச் சேர்க்கப்பட்டன. தென்தேசப் பிரதிகளில் அலங்காரத்தின் பிற்பகுதி முழுவதும் யாப்பிற் சில பகுதியும் மூலமும் உரையும்

ஒருங்கு பிறழ்ந்து செய்யுட்டொகையோடு மாறிப் போயின'' என்று கூறியமை காண்க[24]. பிள்ளையவர்கள் பதிப்பித்து வெளியிட்ட ஏனைய நூல்கள் இவ் வகையின என்பது குறிப்பிடத்தக்கது.

ஏட்டுப் பிரதிகளின் தன்மையை நோக்குமிடத்துப் பரிசோதனை எவ்வளவு கடினமான தொழில் என்பது புலப்படும். ''கரலிகிதங்களால் ஏட்டுப்பிரதிகளிற் காலந்தோறும் புக்க அக்ஷரவழுவுஞ் சொற்சிதைவும் வாக்கியப் பிறழ்வும் இத்துணைய வென்று சொல்லற்பாலதன்று''[25]. ஏட்டுப் பிரதிகளை மீண்டும் மீண்டும் எழுத எழுத வழுக்கள் அதிகரிக்க நேர்கின்றது. முன்பு எழுதிய ஏட்டுப் பிரதியை ஒருவர் மீண்டும் எழுதும்போது, சில இடங்களிலே நூலின் பாடம் என்ற மயக்கத்திலே தமது பாடத்தையும் புகுத்தி விடலாம். சிலவேளைகளிற் கவனக்குறைவாலும் எழுத்தாணியால் எழுதுவதால் ஏற்படும் அசதியாலும் வழுக்கள் புகலாம். மேலும் ஏடெழுதுவோருடைய தகைமையும் வழுக்கள் அதிகரிக்க ஏதுவாகின்றது. சம்பளத்திற்காக ஏடெழுதுவோரது சாதாரண கல்வித் திறமை பிரதிகளின் வழுக்களை அதிகரிக்கும் பெற்றி வாய்ந்தது.

ஏட்டுப் பிரதி எத்துணைப் பழையதோ அத்துணை அதன் மாறுபாடுகள் குறைவாக இருக்கலாம். ஆனால் பழைய பிரதிகள் 'செல்துளைத்த புள்ளியன்றி மெய்ப் புள்ளி விரவாத சென்னுளேட்டிற், பல்துளைத்த வண்டு மணலுழுத வரியெழுத்து' உடையவாய்ச் செல்லினுல் அரிக்கப்பட்டும் பாணங்களாலே துளைக்கப்பெற்றும் காணப்பட்டன. தாமோதரம்பிள்ளை பழைய ஏட்டுப் பிரதிகளின் நிலையை, ''ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது, கட்டுஅவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோவென்றுல் வாலுந் தலையு

மின்றி நாலு புறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது'' என்பர்[26].

இத்தகைய ஏடுகளை வைத்துக்கொண்டு தாமோதரம்பிள்ளை முன்பு யாரும் அச்சிடாத நூல்களை முதன் முதலாகப் பரிசோதனை செய்து பதிப்பிக்க விழைந்தார்[27]. ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துத் தக்க பாடம் காண்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைப் பிள்ளையவர்கள் தமது பதிப்புரைகளிலே ஆங்காங்கு கூறியுள்ளார். வீரசோழியப் பதிப்புரையிலே, "மூன்று விரலைக்காட்டிக் கட்டிலிற்கால் போலப் பஞ்சபாண்டவரையும் ஆறுகோணத்திலும் நிறுத்துக என்பான் தொகை விபரீதத்தோடு விரலை வாலென்றுங் கட்டிலைக் கடலென்றும் பஞ்சபாண்டவரைப் பிஞ்சுப்பாகற் காயென்று மாற்றி எழுதிவைத்தால் அம்மொழியைச் சரிப்படுத்தல் இலேசாகுமா? அதுபோலவே 'விலாசம் பரிசர்ப்பம் விதூதம் சமம் நாபம் நமதூதி பிரகமம் நிரோதம் பரியுபாசனம் வச்சிரம் புட்பம் உபநியாசம் வருணசங்காரம் இவை பயிர்முகத்தில் அங்கம் பதின்மூன்று' என்பது 'பிவாசம் விருத்தியபம் விவாசம் தாவனபம் சயதூரகம் மரிசோதம் பரியானம் பாவைச்சிரம் செல்வம் வருணசங்கரம் இவை பிரதி முகத்திலங்கும் பதின்மூன்று' எனக் கிடந்த ஏட்டுப் பிரதிகளோடு பட்ட பிரயாசைக்குப் பிரயாசை என்னுஞ் சொல் போதுமா?''[28] என்று வினவுவர். உரையாசிரியர் உதாரணச் செய்யுள்கள் தரும்போது முழுச் செய்யுள்களாக எல்லாவிடத்தும் தரமாட்டார்கள். உதாரணமாக, 'விண்டு தாங்கு கைம்மேலையோன் மால் வரை சென்றான்' என்னும் தொடரும் 'வாம் பெருந் திரை வளாகமென்மொழிய செவ்வழியாழ்' என்னும் தொடரும் தொல்காப்பியம் பொருளதிகாரத்திலே உரையாசிரியரால் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. கந்தபுராணத்தையும் பெரியபுராணத்தையும் கண்ட

றிந்தோரன்றி ஏனையோர் அவை இரு செய்யுள்களின் முதலும் ஈறும் இணைக்கப்பட்ட தொடர்கள் என்பதை அறியமாட்டார். முழுச்செய்யுளாகத் தரப்பட்டவிடத்தும் அது இன்ன பா, இன்ன பாவினம் என்று துணிதல் அருமையானதாகும். பொருட்சுவையே பெரிதெனக்கொண்டு மோனை எதுகை ஆகிய சிறப்புகளைப் பாராட்டாத எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியனவற்றிலிடம்பெறும் பாடல்கள் மேற்கோளாக வரும்போது அடி வகுத்தறிவதே பெரும் பிரயாசையாகும். மூலமுமுரையுமுள்ள ஏட்டுப் பிரதிகள் சிலவற்றிலே மூலம் தனியாக, உரை தனியாகத் தொடர்ந்து வாரா; எடுத்துக்கொண்ட உரைக்கு வேண்டிய அளவாய்ப் பிளவுபட்டே மூலம் அமைந்திருக்கும். பின்னம் பின்னமாய்ப் பிளவுபட்டுக் கிடந்த மூலத்தைத் தொடராக்கி, அடிவகுத்து அமைக்க யாப்பிலக்கண அறிவு வேண்டும்.[29] இத்தகைய இடர்ப்பாடுகளை நீக்க எடுத்துக்கொண்ட முயற்சியும் காலமும் சிலவேளைகளிற் பயனற்றதாகவும் பொருள் நட்டத்தைக்கூட அளிப்பதாகவும் அமையலாம். பிள்ளையவர்கள் சூளாமணியைச் சென்னை மகாலிங்கையர் பிரதி, வீடூர் அப்பாசாமி சாஸ்திரிகள் பிரதி, பெருமண்டூர் பிரதி ஆகிய மூன்று பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து அச்சிட ஆரம்பித்தார். ஆனால் நூறு பக்கம் அளவு அச்சான பின்பு கிடைத்த மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை பிரதியைத் தாம் பயன்படுத்திய மூன்று பிரதிகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது அநேக வேறுபாடுகள் இருப்பதைக் கண்டு, தாம் கொண்ட பாடத்தை ஐயமுற்று, மேலும் பிரதிகள் தேட முயன்றார். காஞ்சிபுரத்தில் மாத்திரம் ஒரு பழம்பிரதி கிடைத்தது. இவ்விரு பிரதிகளையும் தாம் பதிப்பித்த பகுதியோடு ஒப்பிட்டு நோக்கியபோது அப்பகுதியையும் திருத்தி அச்சிட வேண்டும் என்பதை உணர்ந்தார். பரிசோதனை

முடிந்துவிட்டதாகக் கருதப்பட்ட நூலைப் பிள்ளையவர்கள் மீண்டும் பரிசோதனை செய்தார். பிள்ளையவர்கள் வீரசோழியப் பதிப்புரையிலே "முதலினின்று முடிவுவரைக்கும் ஒரொருவரி ஒரொரு நொடியாகவே கொண்டுழைத்தோம்" என்று கூறுவது நினைவுகூரற்பாலது. தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புரையிலே அதனைப் பதிப்பித்ததில் அச்சிற்கும் காகிதத்திற்கும் வந்த செலவினும் பரிசோதனைச் செலவு இருமடங்கிற்கு மேலே சென்றதாகப் பிள்ளையவர்கள் கூறுவதை நோக்கும்போது சொந்தப் பிரயாசை மிகவும் தேவைப்பட்ட பதிப்புத்தொழிலிலே பணச்செலவும் பரிசோதனசிரியரைப் பாதிப்பதைக் காணலாம்.

தாமோதரம்பிள்ளை தாம் பதிப்பித்த நூல்கள் வழுக்கள்முற்றும் நீங்கிய பதிப்புகள் என்று கருதவில்லை. வீரசோழியப் பதிப்புரையிலே, "தற்காலத்திற் தமிழ்நாடுகளில் வழங்கும் பிரதிகள் அனைத்தினும் இப்பொழுது யாம் அச்சிட்டு வெளிப்படுத்தும் ரூபம் மேலானதென்று கொள்வதேயன்றி ......... இதுதான் ஆசிரியரெழுதிய சுத்தரூபமென்று கொள்ளற்க. அனைத்து மாறுபாடுந் திருத்தி ஆதிரூபங் காட்டுதல் இனி எத்துணை வல்லார்க்கும் அரிது" என்பர்.[30] தொல்காப்பியம் பொருளதிகாரம், கலித்தொகை முதலியனவற்றின் பதிப்புரைகளிலும் தமது பதிப்புகள் மாறுபாடுகள் இல்லாதன என்று அவர் கூறவில்லை. எனவேதான் வீரசோழியப் பதிப்புரையிலே 'உலோகோபகார சிந்தையுள்ள உத்தம வித்துவான்களை' நோக்கி வீரசோழியப் பதிப்பிலேயுள்ள வழுக்களைத் தமக்கு அறிவிக்கும்படியும் அநேக வழுக்களுளவென்று கண்டால் உடனே அவற்றைத் திருத்தி இரண்டாம் பதிப்பு வெளியிடுவதாகவும் கூறினர். அவர் 'பிரார்த்தனை'க்கு வித்துவான்கள் செவிசாய்க்கவில்லைப் போலும். அதனாலே தொல்காப்பியப் பொருள

திகாரப் பதிப்புரையிலே வேருேர் உபாயத்தைப் பயன் படுத்துகிருர். இலக்கிய இலக்கணங்களில் வல்ல பெரி யோர் அறிவிக்கும் திருத்தங்களைத் திரட்டி, இன்ன இன்ன வழு இன்ன இன்ன வித்துவான்களால் உணர்த் தப்பட்டனவெனக் குறிப்பிட்டுத் தொல்காப்பியத் திருத்தமென்றென்று உடனே அச்சிடுவதாகவும் ஐம்பது புதுத்திருத்தங்களுக்கு ஒருபிரதி தம் நன்றியறிவுக்கோர் அடையாளமாக அனுப்புவதாகவும் எழுதினர். ஆசை வார்த்தைகளுக்கும் பயன்கிட்டாமற் போகவே கலித்தொகைப் பதிப்புரையிலே, பாணியை மாற்றி, தன்மானவுணர்ச்சியைச் சீண்ட முற்படுகிருர். ஆங்கு, "இந்நூற் பதிப்பில் யாவர்க்காயினுங் குற்றங் கூற இஷ்டமுளதாயின், அன்னேர் இன்னும் அச்சிற் தோற்ருத நற்றிணை பரிபாடல் அகம்புறமென்றிவற்றி னென்றைத் தாமாகப் பரிசோதித்து அச்சிடுவித்து அதன்மேற் குறைகூறும்படி வேண்டிக்கொள்கின றேன்"[31] என்பர்.

தாமோதரம்பிள்ளை ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதனை செய்த காலத்துத் தாம் பட்ட இடர்களைக் கூறுமிடத் துத் தம் காலத்து வித்துவான்களின் இயல்பையும் சுட்டியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப் புரையிலே தமக்கு நேர்ந்த ஐயங்களைக் கேட்டறிய அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அவற்றின் பெறுபேறும் இடம்பெறுகின்றன. "விடியலவெஙகதி காயுமவெயமலகலஃறை' என்னும் வாக்கியத்தையும் ஒரு பரிபாடற் செய்யுளையுஞ் சரியாய்ப் பிரித்துணர்தற்கு எத்தனை புலவரிடங் கொண்டு திரிந்தேன்? எத்தனை வித்துவான்கட்குக் கடிதமெழுதிக் கைசலித்தேன்? எனக்கு வந்த மறுமொழிகளை வெளியிட்டுச் சொன்னல் மிகவும் வெட்கக்கேடென்றறிக" என்ருேரிடத்திலே கூறுவர். வேருேரிடத்திலே, "ஏடு கையிற் பிடித்தவுடன் அதன் எழுத்துத் தேகவியோகமான தந்தை

கையெழுத்துபோற் தோன்றிற்றென்று கண்ணீர் பெருக அழுத கதையுமுண்டன்றே?'' என்று கேலி செய்கிருர். தம்மைக் குறைகூறித் திரிந்த பரம் பரையை நோக்கி இரண்டொரு ஏட்டையாயினும் எழுத்துப் பிழையற மாத்திரம் வாசித்துக் காட்டுவாரா யின் அவர்கள் கால்களை உச்சிமேற் சூடி அவர்களுக் குத் தொண்டு பூண்டு ஒழுகுவேன் என்று சவால் கூட விடுக்கிருர்.

முற்கிளந்தவாறு பிள்ளையவர்கள் தம் காலத்து வித்துவான்களின் தமிழறிவைப் பற்றிக் கூறியபோதும் அக்கூற்று அவருடைய பொதுவான மதிப்பீடாக இருந்ததே யொழிய, அவர் மதித்துப் போற்றிய தமிழ் அறிஞர் இல்லாமலில்லை. பிள்ளையவர்கள் தமிழறிஞர் பலருக்குச் சாற்று கவி அல்லது சிறப்புக்கவி வழங்கி, அவர்கள் செய்த தமிழ்த்தொண்டை வாழ்த்தியுள்ளார். மேலும் இலக்கண இலக்கியங்களில் வல்ல பெரியோர் சிலரின் மாண்பினை உணர்ந்து, அவர்கள் உதவியைப் பெற்றுள்ளார். தமக்கு உதவிய அறிஞரைப் பிள்ளைய வர்கள் நன்றியறிதலுடன் போற்றியுள்ளார்.

தமிழ் பேசு நல்லுலகத்திற்குத் தாமோதரம்பிள்ளை யைப் பதிப்பாசிரியராகப் பிரபல்யமாக்கிய முதற் பதிப்பு தொல்காப்பியம் சேனாவரையமாகும். சேனா வரையம் சென்னையிலுள்ள ஊ. புஷ்பரதச்செட்டி யாரது கலாரத்நாகரவச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்று, விபவ வருடம் புரட்டாதி மாதம் (1868) வெளி யிடப்பட்டது. ஆனல் சேனாவரையம் பதிப்பிப்பதற்குப் பதினன்கு வருடங்களுக்கு முன்பதாகவே பிள்ளையவர் கள் பதிப்பாசிரியரும் உரையாசிரியருமாகிவிட்டார். பிள்ளையவர்கள் 1844-ம் ஆண்டு முதல் 1852-ம் ஆண்டு வரை தாம் கல்விபயின்ற வட்டுக்கோட்டை சர்வசாத் திரக் கலாசாலையை (Batticotta Seminary) விட்டு நீங்கிய பின்பு, சென்னை சென்று 'தினவர்த்தமானி' ஆசிரியர்

பொறுப்பை ஏற்குமுன்பே, 'யாழ்ப்பாணம் சேட்ச் மிசன் வித்தியாசாலை' உபாத்தியாயராக இருந்த காலத்திலே,[32] 1854-ம் ஆண்டு மானிப்பாய் அமெரிக்கன் மிசன் அச்சுக்கூடத்திலே நீதிநெறி விளக்கத்தைத் தாமெழுதிய உரையுடன் பதிப்பித்தார்.[33] நீதிநெறி விளக்கத்தின் முதற் பதிப்பாசிரியர் யார் என்பது அறியுமாறில்லை. பாவலர் சரித்திர தீபகத்தின் ஆசிரியர், "நூற்றிரண்டு வெண்பாக்களுள்ள இப்பாடலைச் சென்னை அரசாட்சியைச் சார்ந்த ஸ்தோக்ஸ் (Mr Stokes) துரை இங்கிலீஷிலே மொழிபெயர்த்துப் பல குறிப்புரைகளோடு பிரசுரித்தனர். அம்பலவாணக் கவிராயர், முத்துக்குமாரசுவாமிக் கவிராயர் முதலிய பலர் அம்மொழிபெயர்ப்புக்கு உபயோகிகளாய் இருந்தார்கள். இந்நீதிநெறி விளக்கத்திற்கு யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம்பிள்ளை, வீ. ஏ. வீ. எல்., காஞ்சிபுரம் சபாபதிமுதலியார் என்பவர்கள் உரை இயற்றி அச்சிடுவித்திருக்கிறார்கள். ஸ்ரீமத். இராசகோபால பிள்ளை என்பவரும் இதில் ஐம்பது செய்யுள்களுக்கு விரிவான இலக்கண விளக்க உரை எழுதிப் பாடசாலை மாணக்கருக்கு உபயோகப்படுத்தற்பொருட்டு அச்சிடுவித்தார். முத்தையாபிள்ளை என்பவரும் இலக்கணம் விரித்து எழுதினர்" என்பர்.[34]

தாமோதரம்பிள்ளை பதிப்பித்த நீதிநெறிவிளக்கம் மூலமும் உரையும் வட்டுக்கோட்டை முத்துக்குமாரர் புதல்வர் சிதம்பரப்பிள்ளை, குமாரசுவாமி முதலியார் புதல்வர் கதிரைவேற்பிள்ளை என்பவராற் பார்வையிடப்பட்டது. மு. சிதம்பரப்பிள்ளை அவர்களே வில்லியம் நெவின்ஸ் (William Nevins) என்பவராவர். இவர் வட்டுக்கோட்டை சர்வசாத்திரக்கலாசாலையில் ஆசிரியராக இருந்தகாலை, இவரிடம் பயின்றவர்களிலே தாமோதரம்பிள்ளையும் ஒருவராவர். பிள்ளையவர்களிடமிருந்த தமிழ்ப் பாண்டித்தியத்தை அறிந்து, சிதம்பரப்

பிள்ளை ஆசிரியர், பிள்ளையவர்களுக்குப் 'பண்டிதர்' என்னும் பட்டம் சூட்டி, இவராலே தமிழ்க்கல்வி உயர் நிலையை அடையுமென்று கூறி வாழ்த்தியதாக உரைப்பர்.[35] சிதம்பரப்பிள்ளை பின்பு வேம்படி ஆங்கிலக் கல்லூரியிலே தலைமையாசிரியராக இருந்தவர். நியாய லக்கணம் என்னும் நூலை ஆக்கிய சிதம்பரப்பிள்ளை இலக்கிய சங்கிரகம் ,தமிழ் வியாகரணம் என்பனவற்றின் தொகுப்பாசிரியருமாவர். வின்ஸ்லோ பாதிரியாருக்கு (Rev. M. Winslow) அகராதி வேலையிலுதவிய நெவின்ஸ் அவர்கள் தாமுமோர் ஆங்கிலமும் தமிழு மாகிய அகராதி செய்தவர். உடுப்பிட்டி க. குமாரசுவாமி முதலியாரின் (1792-1874) புதல்வர் கதிரைவேற்பிள்ளை வைமன் (Wyman) கதிரைவேற்பிள்ளை எனவும் அழைக்கப்படுவர். 'பேர்சிவல் திருப்புதல்' என்றழைக்கப்படும் தமிழ் வேதாகம நூலின் திருப்புதற் பணியிலீடுபட்ட குழுவில் வைமன் அவர்களும் ஒருவராவர். ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கிய கதிரைவேற்பிள்ளை (1829-1908) ஊர்காவற்றுறை நீதிபதியாகப் பிற்காலத்திலே விளங்கினர். தர்க்க பரிபாஷையின் பதிப்பாசிரியராகிய கதிரைவேற்பிள்ளை தொகுத்த தமிழ்ச்சொல்லகராதியை மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டது. அவ்வகராதியே 'சங்க அகராதி' என்றழைக்கப்படுவதாகும்.

மாணுக்கருக்கு உதவும் பொருட்டு பிள்ளையவர்கள் நீதிநெறிவிளக்கத்தினை உரையுடன் பதிப்பித்த போதும், அதனைப் பதிப்பிக்கும் முன்பே பண்டைய நூல்களைப் பதிப்பிக்க வேண்டும் என்னும் ஆசை பிள்ளையவர்களுக்குத் தோன்றி விட்டது என்று கருத இடமுண்டு. கலித்தொகைப் பதிப்புரையிலே, "யான் முப்பத்தைந்து வருஷத்தின்முன் பிரமாதீச வருஷம் ஒரு தரம் அருமையான தமிழ் நூல்கள் தேடி யாழ்ப்பாணத்தினின்று இக்கண்டத்தில் வந்து நடமாடிய

போது ......"[36] என்று கூறுவதைக் காண்க. 1853-ம் ஆண்டிலேயே பிள்ளையவர்கள் ஏட்டுப்பிரதிகளைத் தேடத் தொடங்கிவிட்டார் என்பதை இக்கூற்று மூலம் அறியலாம்.

நீதிநெறிவிளக்கவுரையினைத் தொடர்ந்து பிள்ளையவர்கள் தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனவரையத்தைப் பதிப்பித்தார். சேனவரையத்தை 'நல்லூர் ஆறுமுகநாவலர்' பரிசோதித்துக் கொடுத்தார். அண்மையில் வெளிவந்த கட்டுரையொன்றிலே மேல்வருமாறு காணப்படுகிறது: "......பிள்ளையவர்கள் சொல்லதிகாரத்தை எடுத்து ஸ்ரீமான் ஆறுமுகநாவலரிடம் கொடுத்துத் தமக்குத் தம்முடைய உத்தியோக வேலைகளினால் சாவகாசமில்லாதிருந்தது பற்றி, நாவலர் அவர்களையே அதைப் பரிசோதிக்கும்படி கேட்டுக் கொண்டார். நாவலர் பெருமான் சந்தோஷத்துடன் பெரும் பாகத்தைப் பரிசோதித்த பின் மீதியைப் பிள்ளையவர்களே செய்யும்படி விட்டு விட்டார். ஏனெனில் அம்மகான் அநேக வேலைகளைச் செய்யத் தொடங்கி விட்டமையால் அவருக்கு நேரம் கிடைக்கவே இல்லை. பிள்ளையவர்கள் மீதி வேலையைத் தாமே செய்து சொல்லதிகாரத்தை அச்சிட்டு வெளியிட்டார்."[37] இக்கூற்றினை ஆதாரமாகக் கொண்டு நோக்கின் சேனவரையத்தின் பரிசோதனையிற் பிள்ளையவர்களுக்கும் பங்குண்டு என்பது போதரும். சேனவரையப் பதிப்புப் பற்றிய விளம்பரம் 'தினவர்த்தமானி' யில் 1868-ம் ஆண்டு 'ஒக்ரோபர்' மாதம் 31-ம் திகதி முதல் வெளிவந்தது.[38] இவ்விளம்பரத்திலே பிள்ளையவர்கள் நாவலரைத் 'தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர்' எனப் போற்றினர். திருவருட்பிரகாச வள்ளலார் என்றழைக்கப்பட்ட இராமலிங்க பிள்ளையின் (1823-1874) பாடல்களையும் வசனங்களை

யும் நான்கு 'திருமுறை'களாக வகுத்துத் தொழுவூர் வேலாயுத முதலியார் (1832-1889) 1867-ம் ஆண்டிலேயே வெளியிட்டுவிட்டார். அப்பாடல்கள் சில கோயில்களிலே திருப்பாடல்களுக்குப் பதிலாக ஓதப்பட்டு வந்தன. இதனைக் கண்ட நாவலரவர்கள் தமது பிரசங்கங்களிலே அருட்பாக்கள் யாவை என்று கூறிவந்தார். இதனாற் கோபங்கொண்ட வள்ளலார் கட்சியினருக்குத் தினவர்த்தமானி விளம்பரம் தமது ஆத்திரத்தைத் தீர்க்க வாயிலாக அமைந்தது. நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் 'விஞ்ஞாபனப் பத்திரிகை' எனப்பெயரிட்டு 1869-ம் ஆண்டு மாசி மாதத்திலே கண்டனமொன்றினை வெளியிட்டார். அக்கண்டனத்தை மறுத்துச் சென்னை சிவபாதநேசப்பிள்ளை என்பவர் 'நல்லறிவுச்சுடர் கொளுத்தல்' என்னும் கண்டனத்தை எழுதி, நாவலரவர்களுக்குக்காட்டி, அவர்கள் சம்மதத்தோடு அதே மாதத்தில் வெளியிட்டார். நல்லறிவுச்சுடர் கொளுத்தல் 'போம்பலப் பிரசங்க'த்திற்கு இட்டுச்சென்றது; போம்பலப்பிரசங்கம் வழக்கு மன்றத்திலேறியது. தினவர்த்தமானி விளம்பரம் அருட்பா மருட்பா விவகாரம் சூடு பெறுவதற்கு ஒரு காரணமாக இருந்தது என்பது முற்கிளந்தனவற்றாற் போதரும். ஆறுமுகநாவலர் பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 21-ம் தேதி(5.12-1879) தேகவியோகமடைந்தகாலை, பிள்ளையவர்கள்

"நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே- எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை"

என்றிரங்கினர். 1869-ம் ஆண்டு நடந்த அருட்பா வழக்குக்குப் பின்பு, விசு வருடம் சித்திரை மாதம் (1881) பிள்ளையவர்கள் பதிப்பித்த வீரசோழியத்திற்குத் 'துரைத்தன வித்தியசாலைத் தமிழ்ப் புலவர்' தொழுவூர் வேலாயுத முதலியார்,

புனனுடென்றுரைக்கு முரைபோயடங்கவொருகோழிப் பூழி
யின் வீ
றினநாடாவகைபடைத்த வீரசோழியமெங்கேயெங்கேயென்
னத்
தினநாடுபுலவர் மனங்களிதூங்கவெளிப்படுத்ததிறத்தை
நோக்கிக்
கனநாடியெவர்தாமோதரமிவர்க்கென்றியற்பெயராற் கருதி
னுரே

என்னும் சிறப்புக் கவியை வழங்கியுள்ளார். ஆயி னும் பிள்ளையவர்கள் ஆறுமுகநாவலரை, அவர்கள் பெருமையை மறந்துவிடவில்லை. தொல்காப்பியப்பொருளதிகாரப் பதிப்புரையிலே, "' விடியலவெஙகதிாகாயுமவெயமலகலறை' என்னும் வாக்கியத்தையும் ஒரு பரிபாடற் செய்யுளையுஞ் சரியாய்ப் பிரித்துணர்தற்கு எத்தனை புலவரிடங் கொண்டு திரிந்தேன்? எத்தனை வித்துவான்கட்குக் கடிதமெழுதிக் கைசலித்தேன்? எனக்கு வந்த மறுமொழிகளை வெளியிட்டுச் சொன்னுல் மிகவும் வெட்கக்கேடென்றறிக. அவை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் மகத்துவத்தை நன்கு விளக்கின"என 1885- ம் ஆண்டு எழுதியுள்ளார்.

வேதாரணியாதீனம் சற்குருநாதசுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ கைலாசநாததேசிகரைத் தாமோதரம்பிள்ளை தமது ஞானகுருவாகக் கொண்டவர். வீரசோழியம், தொல்காப்பியம் பொருளதிகாரம், கலித்தொகை, இலக்கண விளக்கம் முதலியனவற்றின் பதிப்புரைகளிலே பிள்ளையவர்கள் அவருக்கு வணக்கம் கூறியே பதிப்புரையை ஆரம்பிக்கிருர். சூளாமணிப் பதிப்புரையிலே இடம் பெறும்,

இறைவனே ருருவுகொண் டெழுந்தாங்கு வீற்று
மறைசையா தீனத்து மன்னுபு வதிந்த
கரணை யம்பதிக் கைலாச நாத
குரவன திருபத மருமலர்
சிரமிசை யிருத்திவெங் கருமுதல் களைவாம்

என்னும் செய்யுளிலே கைலாசநாததேசிகரைக் 'கரணை யம்பதிக் கைலாசநாத குரவன்' என்று கூறப்பட்டுள் ளது. கரணை யென்பது கரணவாய் போலும். இவ்வூர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ளது. கைலாசநாததேசி கர் இளம் வயதிலேயே சிவபதமடைந்து விட்டார். இவர் சர்வசித்து வருடம் ஆவணி மாதத்திற்கு (1887) முன்புவியோகமடைந்தார். ஏனெனில், பிள்ளையவர்கள் தமது கலித்தொகைப் பதிப்புரையில் அச்செய்தியைத் தந்துள்ளார். வீரசோழியப் பதிப்பின் போது சங்கத மொழியிலேயுள்ள இலக்கண விதிகளைப் பிள்ளையவர் களுக்கு விளக்கியுதவிய மூவருள்ளே தேசிகமூர்த்திக ளும் ஒருவராவர்; ஏனைய இருவருள் ஒருவர் சென்னை பச்சையப்ப முதலியார் பாடசாலையிலே சங்கதமொழிப் பண்டிதராக இருந்த மண்டைக்குளத்தூர் கிருஷ்ண சாஸ்திரி; மூன்றுமவர் நீர்வேலி சி. சங்கரபண்டிதரின் (1829-1870) சிரேட்ட புதல்வராகிய சிவப்பிரகாச பண் டிதர்.

சிவப்பிரகாச பண்டிதர் (-1914) தமது தந்தையாரி டம் சங்கதமும் தமிழும் பயின்றவர்; தந்தையின் வியோகத்திற்குப் பின்பு நல்லூர் வே. சம்பந்தப் புலவர், ஆறுமுகநாவலர் ஆகியோரிடம் தமது ஐயங் களைக் கேட்டுத் தெளிந்தவர்; திருவாவடுதுறையாதீ னத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகராற் 'பண்டிதர்' எனக் கௌரவிக்கப்பட்டவர்; உடுப்பிட்டி கு. கதிரை வேற்பிள்ளை தொகுத்த அகராதி வேலைக்குச் சில காலம் துணைபுரிந்தவர்; வண்ணார்பண்ணை சி. சுவாமி நாத பண்டிதர்(-1937)பதிப்பித்த தேவாரத் திருமுறைப் பரிசோதனையில் உதவியவர்; வண்ணார்பண்ணையிலே நிறுவப்பட்ட காவியப்பாடசாலையிற் சங்கதமொழிப் பண்டிதராகப் பணியாற்றியவர்; திருச்செந் தூர்ப்புராணவுரை, கிருஷ்ணன் தூதுச் சருக்கவுரை சிவானந்தலகரித்தமிழுரை, நகுலேசுரமான்மியத் தமி

முரை, சைவாசௌசதீபிகைத் தமிழுரை முதலியன வற்றின் உரையாசிரியர்; பாலாமிர்தம் (1903) எனப் பெயரிய வசனநூலின் ஆசிரியர்; திருக்கழிப்பாலைப் புராணம் (1954) பாடினவர்; தமது தந்தை இயற்றிய நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்தவர்.

தாமோதரம்பிள்ளைக்குக் கலித்தொகைப் பரிசோதனையில் உதவியவர்களிலொருவர் நல்லூர் சிற். கைலாசபிள்ளை (1857-1916). 'நல்ல பரம்பரைத் தமிழ் விற்பத்தியுங் கூரிய விவேகமுமுடையவர்' என்று பிள்ளையவர்களாற் கலித்தொகைப் பதிப்புரையிற் போற்றப்பட்டவர். நல்லூர் மனைப்புலி முதலியாரின் புதல்வர் சரவணமுத்துப் புலவரின் பேரனாகிய சிற். கைலாசபிள்ளை திருச்சிற்றம்பலம் என்பவரின் புதல்வராவர். இளமையில் நல்லூர் வே. சம்பந்தப்புலவரிடமும் பின்பு தாமாகவும் தமிழ் பயின்ற கைலாசபிள்ளை திருவாவடுதுறையாதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரால் வித்துவான் எனக் கௌரவிக்கப்பட்டவர். அகவல் பாடுவதில் வல்லவராகிய கைலாசபிள்ளை 'செந்தமிழ்' என்னும் சஞ்சிகைக்கு 'வெள்ளியந்திருமலைக் கிழார்' என்னும் பெயரில் விடயதானம் செய்தவர். இவரே சுவாமி விபுலாநந்தரின் (1892-1947) சிலப்பதிகார ஆசிரியர்.

கலித்தொகைப் பரிசோதனையில் உதவியவர்களுள் வேறொருவர் திருகோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை (1863-1922). கலித்தொகைப்பதிப்புரையிற் பிள்ளையவர்கள் ஆரம்பித்த கீழ்க்கணக்கு நூலாராய்ச்சி இலக்கண விளக்கப் பதிப்புரையிலே திருத்தமுறக் காரணமாயிருந்தவர். திரிகோணமலை தம்பிமுத்து அவர்களின் புதல்வராகிய கனகசுந்தரம்பிள்ளை சென்னை சென்று, பட்டதாரியாகி, தமிழகத்திலே அரசாங்கத்திலும் கலாசாலைகளிலும் தமிழ்ப்பணி புரிந்தவர்; தொல்காப்

பியம் எழுத்ததிகாரம் நச்சிஞர்க்கினியம், சொல்லதிகாரம் சேஞவரையம் என்பனவற்றைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிடும்பொருட்டு, அவற்றைப் பரிசோதனை செய்து குறிப்புரையுடன் வழங்கியவர்; பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் நற்றிணையுரையை அவர் வியோகமடைந்த பின்பு பரிசோதித்துக் கொடுத்தவர்; சுன்ஞகம் அ. குமாரசுவாமிப் புலவருடன் சேர்ந்து நம்பியகப் பொருளுக்குப் புத்துரையும் கம்பராமாயணம் பாலகாண்டத்திற்கு அரும்பதவுரையும் செய்தவர்; வான்மீகி இராமாயணத்தின் கிட்கிந்தாகாண்டம் (பகுதி), சுந்தரகாண்டம் என்பனவற்றை மொழிபெயர்த்தளித்தவர்; தமிழ் நாவலர் சரிதை பதிப்பித்தவர்.

தாமோதரம்பிள்ளை கலித்தொகை ,இலக்கணவிளக்கம் என்பனவற்றிற்குத் தாமெழுதிய பதிப்புரைகளில் நல்லூர் க. சதாசிவப்பிள்ளை (-1910) பரிசோதனைக்கு ஒத்தாசை செய்ததைப் போற்றியுள்ளார். நல்லூர் கனகசபாபதிப்பிள்ளையுடைய புதல்வராகிய சதாசிவப்பிள்ளை ஆறுமுகநாவலர் விசுவாவசு வருடம் தை மாதம் (1846) சைவசமயப் பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றத் தொடங்கியபோது அவரை நாடிப் பயன் பெற்றவர்களுள் ஒருவர்; நாவலரவர்களை விட்டுப் பிரியாது, அவர்கள் முயற்சிகளுக்கு உதவியாக இருந்தவர்; அநேக நூல்களை நாவலரவர்கள் முன்னிலையிலும் தாமாகவும் பரிசோதித்துப் பதிப்பித்தவர்; நாவலரவர்கள் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலைகளுக்கு அதிபதியாக இருந்தவர்.

சூளாமணிப் பரிசோதனையிலே பிள்ளையவர்களுக்கு உதவியாக இருந்தவர் வீடூர் வித்துவான் அப்பாசாமி சாஸ்திரிகள். சமணசமயக் கோட்பாடுகள், தத்துவ பேதங்கள், புராணக்கதைகள் முதலியனவற்றில் ஏற்

பட்ட ஐயங்களைப் போக்குவதற்காக அப்பாசாமி சாஸ்திரிகளை வரவழைத்து மூன்றுமாத காலம் அவர்களை உடன் வைத்திருந்தமையாலும் பின்பு அவர்களோடு கொண்ட கடிதத் தொடர்பாலும் பெரும்பான்மையான ஐயங்களைத் தீர்த்துக் கொண்டதாகப் பிள்ளையவர்கள் கூறுவர்.

கலித்தொகைப் பதிப்புரையிற் பரிசோதனையில் உதவியவர்களுள் யாழ்ப்பாணம் சிந்தாமணி உபாத்தியாயர் வேலுப்பிள்ளை என்பவரும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

'என் சரித்திர'த்தின் ஆசிரியர் தம்மைப் பிள்ளையவர்கள் கலித்தொகைக்குப் 'புரூப்' பார்த்துத்தர வேண்டும் என எழுதியதாகவும் தாம் தமக்கு நேரமில்லை என்றறிவித்தபோதும், ''..... அவர் விடாமல் கடிதம் எழுதிக் கொண்டும் கலித்தொகையின் புரூப்களை அனுப்பிக் கொண்டும் வந்தார். தளர்ச்சியில்லாமல் அவர் செய்த முயற்சிகளால் நான் ஈடுபட்டு அவ்வப்போது சிலசில பகுதிகளை மட்டும் பார்த்து எனக்குத் தோற்றிய திருத்தங்களை எழுதியனுப்பினேன். அவற்றை அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்'' என்றெழுதியுள்ளார்.[39] கலித்தொகைப் பதிப்புரையிலே வேறோரிடத்திலே[40] உ. வே. சாமிநாதையரைப் போற்றிய பிள்ளையவர்கள் தமக்குப் பரிசோதனையில் உதவிய அறிஞரைக் குறிப்பிடுமிடத்திற் சாமிநாதையரைச் சுட்டவில்லை. 'புரூப்' திருத்துவதைச் சாதாரணவேலை என்றெண்ணிப் பிள்ளையவர்கள் குறிப்பிடவில்லை எனக் கூறுவது பொருந்தாது. ''சித்தாம்பூர் முதலிய இடங்களிலுள்ள சமணர் வசம் இருக்கும் நூல்கள் வேண்டிய காலங்களில் வாங்கி அனுப்புவதாக வாக்களித்த காஞ்சிபுரம் பச்சையப்ப பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ வ. கணபதிப்பிள்ளையவர்களுக்கு''[41] 'வந்தனம்' சொல்லிய பிள்ளையவர்கள்

சிற்சில பகுதிகளைப் பார்த்துத் திருத்தங்களும் கூறிய 'என்சரித்திர' ஆசிரியரைக் குறிப்பிடாமல் விட்டது வியப்பிற்குரியது.

பிள்ளையவர்கள் தமது நூற்பரிசோதனையில் உதவிய அறிஞரைப் போற்றுவதோடு அமைந்துவிடவில்லை. இத்தகைய அரும்பணியைத் தமிழ்த்தாய்க்குத் தாம் செய்வதற்குக் காரணமாயிருந்த தமது தமிழாசிரியரையும் பதிப்புரைகளிலே போற்றி வணங்குகிருர்.

தெள்ளுதமிழ்க் கடல்கடந்து செழியகலைத் துறைப்படிந்து
திரிபில் ஞானக்

கொள்ளைகொண்டு நுகர்ந்தமுத்துக் குமாரகவி மேகமிதைக்
கொடிச்சுன் ஞக

வள்ளலெனத் துள்ளமதி கொள்ளநறை விள்ளுதமிழ்
மணஞ்சற் றேறி

வெள்ளறிவின் முடைநாற்றம் வீவித்தான் விரைமலர்த்தாள்
மிலைவன் மாதோ

என்பது சூளாமணிப் பதிப்புரையிலிடம்பெறும் தமிழாசிரியர் வணக்கமாகும். பிள்ளையவர்களின் தமிழாசிரியர் சுன்ஞகம் அ. முத்துக்குமார கவிராசர் (1780-1851). இவர் உடுவில் அம்பலவாணர் அவர்களின் புதல்வர்; ஞானக்கும்மி[42], யேசுமத பரிகாரம் என்னும் புறச் சமய கண்டன நூல்களைப் பாடியவர்; சுன்ஞகம் ஐயனூருஞ்சல், சிதம்பரம் நடராசர் பதிகம் என்பனவற்றையும் தனிநிலைக்கவிகள் பலவற்றையும் பாடியவர்; சகத்திரானிக நாடகம் எனப் பெயரிய நாடகமொன்றினையும் இயற்றியுள்ளார் எனப் பாவலர் சரித்திர தீபகம் மூலம் அறிகிருேம்.

தாமோதரம்பிள்ளை மிக்க பிரயாசைப்பட்டுத் தாம் தேடியெடுத்த ஏட்டுப் பிரதிகளைத் தாமாகவும் ஏனைய

அறிஞர் சிலர் உதவியோடும் பரிசோதனை செய்து பதிப்பிக்கும் பொருட்டு கையெழுத்துப் பிரதிகளை அமைத்துக்கொண்டபோது சில வரையறைகளை வைத்துக்கொண்டு பதிப்பித்தார். இவ்வரையறைகளிற் சில அவர் பதிப்புத்தொழிலிற் பெற்ற அநுபவத்தையொட்டிப் பின்னைய நூற்பதிப்புகளிலே மாற்றமுற்றிருக்கின்றன. ஏட்டுப் பிரதியின் ஆதாரமில்லாது வீரசோழியத்தில் எவ்வித மாற்றமும் செய்யப் பிள்ளையவர்கள் விரும்பவில்லை. ஏனெனில் மாறுபாடுகளைத் தம் மதத்தின்படி திருத்துதல் அறிவுடையோர்க்கு இயல்பன்று என்று அவர் கருதினர். இதனாலே, "பிற நூற்துணிவிற்கு மாறுபட்டுந் தற்கால வழக்கத்தை விரோதித்துஞ் சரியான அர்த்தம் புலப்படாமலுஞ் சமுசயம் நிகழ்ந்த இடத்தும் எல்லாத் தேசத்துப் பிரதியும் ஒத்திருந்தனவற்றை"[43] அவர் திருத்திப் பதிப்பிக்கவில்லை. எட்டாரைச் சக்கரத்திற்கு மேற்கோளாகச் சில ஏட்டுப் பிரதிகளிலிருந்த 'மாலவன முதலிய' என்னும் செய்யுளையும் அதன்கீழ் உரைக்கப்பட்ட சித்திரத் தொகுதியையும் மூன்று பிரதிகளிற் கண்ட உருவமாகப் பதிப்பிக்கும்போது "கவியின் பிரத்தார விலக்கணத்தால் அஃதோர் பேரருஞ் செய்யுளென்று தோன்றுவதானும், ஏதாவதொரு வகையாய் நாம் அதனைத் திருத்தி அச்சிடுவது தகுதியன்றாதலானும், அதன் நிச்சயரூபங் கண்டு சக்கரத்தமைத்துக் காட்டவல்ல சித்திரக்கவிகள் எவ்விடத்தாயினு மிருத்தல் கூடுமாதலானும், சித்திரக்கவிகளுட் தனக்கிணையில்லாத பெருமாற்றலுடையதோர் நூதனக் கவியை இறந்துபோகவிட மனமொவ்வாமையானும்"[44] என அச்செய்கைக்குக் காரணம் கூறுவர்.

மாற்றுதல் போலக் குறைத்தலும் ஒருவர் நூலைப் பதிப்பிப்போருக்குப் பெருங்குற்றமென்பது பிள்ளையவர்கள் கருத்து. இதனால் பொருள் தெரியாதனவற்றை

அச்சிட்டும் பயனில்லை என்று கருதிச் சில வித்துவான்கள் வீரசோழியத்தின் யாப்புப் படலத்திலுள்ள 33-ம் காரிகையில் வரும் மேற்கோட் சூத்திரங்களை நீக்கிவிடும்படி கூறவும் பிள்ளையவர்கள் பிரதிகளிலிருந்தவண்ணமே அச்சிடுவித்தார்.[45]

வீரசோழியப் பதிப்பிலே மாற்றலும் குறைத்தலும் குற்றமென்று கருதிய பிள்ளையவர்கள் அதே பதிப்பிலேயே உதாரணச்செய்யுளொன்றை நீக்கி வேறு உதாரணச்செய்யுளொன்று சேர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. யாப்புப்படலவுரையிலே அபிகிருதிக்கு, "ஆசிரியர் உதாரணமாகக் காட்டிய தொழுதவ முனிவரு மருளுறு மலருறை யென்னுஞ் செய்யுள் காலாந்தரத்திற் பாடாந்தரந் தாறுமாருகி ஓரடிக் கோரடி மிக விகாரப்பட்டுக் கிடந்தமையானும் பல தேசத்துப் பிரதிகளைக் கொண்டு பரிசோதித்தும் யதார்த்த ரூபம் நிச்சயப்படாமையானும் மூலகிரந்தத்தைப் பார்ப்பதற்குப் புராணகவி யாவரென்பது வெளிப்படாமையானும் அதனை ஒழித்துப் பாரத விருத்தத்திலொன்றை அதற்குப் பதிலாகச் சேர்த்தனன்" என்பர் பிள்ளைவர்கள்.[46]

வீரசோழியப் பதிப்பிற் பின்பற்றிய நெறிகளையே நாம் பார்த்திப வருடம் (1885) சென்னையிலுள்ள 'ஸ்கொட்டிஷ் பிரஸ்' என்னும் அச்சுக்கூடத்திலே பதிப்பிக்கப்பெற்று வெளிவந்த தொல்காப்பியம் பொருளதிகாரப் பதிப்பிலும் காண்கிறோம். "துடங்கல் கலிழ்தலாதியவற்றின் ரூபத்தை மாத்திரம் இக்காலத்ததாகத் தொடங்கல் கலுழ்தலென மாற்றியிருக்கிறேன்" என்பர் பொருளதிகாரப் பதிப்பாசிரியர்.

தாமோதரம்பிள்ளை முன்னைய பதிப்புகளிற் பெற்ற அநுபவத்தால், 1887-ம் ஆண்டிலே, தாம் மேற்கொண்டிருந்த பதிப்பு நெறியிலே சிற்சில மாற்றங்கள் செய்

துள்ளார். இக் கருத்தைக் கலித்தொகைப் பதிப்புரை ஆதரிக்கின்றது. 'பிறநூற் றுணிவிற்கு மாறுபட்டும் ...... சமுசயம் நிகழ்ந்தவிடத்தும் எல்லாத் தேசத்துப் பிரதியும் ஒத்திருந்தனவற்றை'த் திருத்த விரும்பாத பிள்ளையவர்கள், ''இலக்கிய இலக்கண ஆதாரமாக ஒன்றனைத் தவறென்று ஒருதலையாக நிச்சயித்துழி யன்றி ஏட்டுப் பிரதிகள் யாவும் ஒத்திருந்தனவற்றை யான் மாற்றகில்லேன்''[47] என்பர். 'முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுதல்' என்னும் கருத்தைத் தமது கொள்கை யாகக் கொண்ட பிள்ளையவர்கள் கலித்தொகையிலே 'அல்குல்' என்ற சொல் இடம்பெற்ற பதினோரிடத்தி லும் அதனை ஒழித்து, செய்யுள் ஊனமுறாதிருத்தற் பொருட்டு, அதற்குப் பதிலாக அவ்வவ் விடத்திற்கு இசைந்த பிற உறுப்புப்பெயரைச் சந்தத்திற்கு வேண்டிய அளவு அடையோடு புணர்த்தி வழங்கி யுள்ளார். மாற்றிவைத்த மொழியின் பொருளை உரை யகத்தும் இயைபு நோக்கி மாற்றியுள்ளார். இவ்வாறு செய்வது தவறு என்பதை உணர்ந்திருந்தும் பிள்ளை யவர்கள் ''இந்நூல் துரைத்தன வித்தியாசாலைகளிலும் பிற கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் பயிலல் வேண் மென்னும் அவாவினால்''[48] இம்மாற்றத்தைச் செய்தார். ''பற்பல சிரேஷ்ட கனவான்கள் அச்செய்கையை மிக வுங் கண்டித்து எனக்குக் கடிதம் எழுதினார்கள். அத னால் அஃதன்ன இடக்கர்மொழிகளைச் சிதைத்து அச் சிடுதல் தர்மமல்ல'' என்று தாம் தெளிந்ததாகச் சூளா மணிப் பதிப்புரையிலே பிள்ளையவர்கள் கூறுவர்.[49]

கலித்தொகையை நச்சினார்க்கினியருரையுடன் பதிப்பித்த பிள்ளையவர்கள் ஏட்டுப் பிரதிகளிலிருந்த முறையை மாற்றித் தெளிவான வகையிலே வகுத்த மைத்துள்ளார்.[50] பொதுவாக, ஏட்டுப் பிரதிகளிலே செய்யுட்டோறும் முதலில் அதன் முதற் குறிப்பைத்

தந்து, பின்னர் துறை கூறி, அதன் பின்பு செய்யுள் தரப்பட்டிருக்கும். செய்யுள் முழுவதும் ஒருங்கே தொடராமல் எடுத்துக்கொண்ட உரைக்கு வேண்டிய அளவாய்ப் பிளவுபட்டிருக்கும். விசேடவுரை சிற்சில இடங்களிலே உரையைத் தொடர்ந்து அமையாது முன்னும் பின்னும் இடையினும் மாறிமாறிக் காணப் படும். சில சந்தர்ப்பங்களிலே தரவு, தாழிசை, தனிச் சொல், சுரிதகம் என்பனவற்றின் மூலம் ஓரிடத்தும் உரை வேறிடத்தும் பிறழ்ந்து இடம்பெற்றிருக்கும். பிள்ளையவர்கள் செய்யுளை முதலில் அச்சிட்டு, அதன் கீழ் கிளவி கூறும் கருத்துரையைப் பதிப்பித்துள்ளார்; முழுவடிவமாகப் பாட்டைத் தந்த பின்பே எடுத்துக் கொண்ட உரைக்கு வேண்டிய அளவாய் அதனை மீண்டும் பகுத்துள்ளார்; விசேடவுரை எல்லாவிடத்தும் உரையைத் தொடர்ந்து வருமாறு செய்துள்ளார்; உரையிடத்தை மாற்றி மூலமும் உரையும் ஓரிடத் தாம்படி அமைத்துள்ளார்.

பிள்ளையவர்கள் சூளாமணிப் பதிப்பிலே தாம் முன்னைய பதிப்புகளிலே பொதுவாகப் பின்பற்றிய நெறிகளை மாற்றிக்கொண்டுள்ளார். ஏடெழுதுவோராற் பெருகிப் பெருகி வந்த பிழைகளினால் நூல்கள் மாறு பட்டு மிகவும் விகாரமடைந்திருந்தமை பிள்ளைய வர்கள் தமது முன்னைய பதிப்புரைகளிற் சுட்டிய பண் பேயாகும். ஆயினும் ஏட்டுப் பிரதியின் ஆதாரமின்றி மாறுபாடுகளைத் திருத்த விரும்பாதவர் கலித்தொகைப் பதிப்பிலே (1887) ஒருதலையாக இலக்கண இலக்கிய ஆதாரம் மூலம் தவறெனக் கண்டதை மாற்ற முந் பட்டார். சூளாமணிப் பதிப்புரையிலே, "இம்மாறு பாடுகளைக் குறித்து இந்நூற்பதிப்பில் அடியேனுக் கோர் துணிவு புதிதாகப் பிறந்தது. இதுகாறும் அச் சிட்ட பழைய நூல்களில், ஒரு பிரதியின் ஆதாரமா வது இல்லாமற் பாடபேதத்தைத் திருத்துதல் ஒழிந்த

யான், இப்பொழுது பிரதிகள் அனைத்தும் பிழை யென்றும், பிரதிகளில் இருக்கும் பாடம் ஆக்கியோன் வாய்மொழியாய் இருக்கமாட்டாதென்றும், எந்தப் பிரதி வழிச் சென்றாலும் அச்சில் வருவது ஆசிரியரினின் றும் வேறுபட்ட பிழைபாடென்றும் நிச்சயிக்க ஏது உண்டான இடங்களில் இரண்டொரு எழுத்தையாவது மொழியையாவது சந்தர்ப்பத்திற்கும் பொருளுக்கும் இயையுமாறு திருத்தத் துணிந்தேன். அவ்வாறு செய்யா விடின் நூலின் சிறப்பு அழிவதுமன்றிச் சில பாடங் கள் ஒரு பயனும் தராமலுஞ் சில முன்பின்னோடும் பிறநூல்களோடும் விரோதப்பட்டும் நிற்குமாதலிற் திருத்தம் அத்தியாவசியகமாயிற்று'' என்றுரைப்பர்.[51]

பிள்ளையவர்கள் முன்னைய பதிப்புகளிற் பிரதிகளில் இருந்த வண்ணம் ஒப்புவித்த வழுக்கள் மூலபாடத்தின் கண்ணாவது அம்மூலபாடத்தின் பொருளிலாவது உள் ளன அல்ல. உரையாசிரியர்கள் பிறநூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய உதாரணச்செய்யுளிலாவது மேற் கோள்களிலாவது புகுந்த வழுக்களே பிரதிகளிற் கண்டபடி ஒப்பிக்கப்பட்டன. அவ்வழுக்கள் அவ்வவ் நூலாராய்ச்சியால் அப்பப்போ திருத்திக்கொள்ளக்கூடி யன. மேலும் உதாரணங்கள், மேற்கோள்களிற் புகுந் திருந்த வழுக்கள் தாமும் ஆங்காங்கு எடுத்தோதிய பொருட்டுணிபிற்கு எம்மாத்திரம் வேண்டியதோ அத னுட் புகுந்த வழுவல்ல. எனவே கற்போர் பெறக் கரு திய பயன் எவ்வாற்றானும் சிதைவுபடாது.

சூளாமணிப் பிரதிகள் உரையெழுதப்படாத மூலத்தை மட்டுமே கொண்டிருந்தன. மூலம் மட்டுமே யுள்ள நூல்களிற் கதைப்பொருத்தமும் சாஸ்திர முடி பும் பிற நூலாராய்ச்சியாலே துணிதற்பாலனவாயினும் வாக்கிய முடிபு பிரதிகளின் உதவியாலேயே அறிதற் பாலது. அதற்குப் பிரதிகள் உதவாத நிலையில், மரண

தசையடைந்ததொரு நூலை ஒன்றிற் பிரசுரம் செய்யாமல் விட்டுவிட வேண்டும் அல்லது திருத்தி அச்சிடல் வேண்டும். பிள்ளையவர்கள் திருத்தி அச்சிட்டமைக்கு வேறொரு காரணமும் உண்டு. "வீரசோழியத்திற் சில சில இடங்களிற் பிழைப்பட்டனவற்றை இருந்த வண்ணம் ஒப்பித்தேனன்றோ? யாவர் அவற்றிற்குப் பூர்வ சொரூபந் தேடிக் கொடுத்தார்! தேட முயன்றவராயினும் உளரா? என்பு நொறுங்கிய காலை வெட்டியெறிந்து பொய்க்கால் வைத்தாற்போல அவற்றிற்குப் புத்துதாரணங்கள் செய்து சேர்த்திருப்பேனாயின் கற்போர்க்குச்சிறிதாவதுபயன்படத்தக்கதாயிருக்குமே"[3] என்னுங் கூற்றுக் காண்க. ஏட்டுப் பிரதிகளிலே பிழைபட்டிருக்கும் உருவம் ஆக்கியோனதல்ல என்று மலையிலக்குப்போலே தெரியும்போது, பொருளெதுவும் தராமலாவது விரோதப்பொருள் பயந்தாவது நிற்கும் உருவத்திலே மாற்றம்செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. பிள்ளையவர்கள் தாம் சூளாமணியிலே செய்த திருத்தங்களைச் சிறந்த சைன வித்துவான்களுக்குக் காண்பித்து அவர்கள் ஒப்புதலுடனேயே பதிப்பித்தார். மேலும் அவர் தாம் செய்த திருத்தங்களைத் தெரிவியாது சொருகி வைத்து யாவும் ஆசிரியர் வழக்கென்று நடைபெறவிடவில்லை. தாம் செய்த திருத்தங்கள் சிலவற்றையும் பிரதிகளின் பாடத்தையும் உதாரணத்திற்காக எடுத்துக்காட்டியுள்ள பிள்ளையவர்கள் தம் திருத்தங்கள் எப்படிப்பட்டன வென்று யாவரொருவர் அறிய விரும்புவாராயின் அவருக்கு அதனைத் தெரிவித்தலைத் தமது கடமையாகக் கொண்டார்.

இரு தசாப்தங்களுக்கு மேலாகப் பதிப்புத் துறையிலே ஈடுபட்டிருந்த பிள்ளையவர்கள் சூளாமணிப் பதிப்புரையிலே பதிப்புப் பற்றிக் கூறும் கருத்துக்களை நோக்கும்போது, அவர் பரிசோதனை செய்து கொண்டிருந்த அகநானூறு வெளிவந்திருப்பின், அஃது அவ

ரைப் பதிப்பாசிரியராக மட்டுமன்றி ஆராய்ச்சிப் பதிப்பாசிரியராகவும் தமிழுலகிற்கு அறிமுகஞ் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பிள்ளையவர்கள் தாம் பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய பதிப்புரைகளை வீரசோழியத்திலிருந்து தொடர்பாக நோக்குமிடத்து, அவர் பதிப்புப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் வளர்ச்சியடைந்து கொண்டே வந்திருப்பதையும் அவ்வளர்ச்சி சுத்தப் பதிப்பாகிய ஆராய்ச்சிப் பதிப்பினை இலக்காகக் கொண்டிருப்பதையும் காணலாம். மரணதசையடையும் நிலையிலிருந்த நூல்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்டு பதிப்பாசிரியராக மாறிய பிள்ளையவர்கள் கலித்தொகைப் பதிப்பினையொட்டித் தம் பதிப்புகள் சுத்தப் பதிப்புகளாக, ஆராய்ச்சிப் பதிப்புகளாக அமையவேண்டும் என்பதை லட்சியமாக்கிக் கொள்கிறார். சூளாமணி இத்தகைய கருத்து வளர்ச்சியிலே ஒரு படியினைச் சுட்டுகிறது. நந்தன வருடம் புரட்டாதி மாதம் (1892) சென்னையிலுள்ள 'விக்டோரியா ஜூபிலியந்திரசாலை' யில் அச்சிடப் பெற்ற தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியப் பதிப்பும் இக்கருத்தை வலியுறுத்தும். வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், "இவர் பதிப்பித்த நூல்களெல்லாம் இவரது சங்கச் செய்யுட் பழக்கத்தினையும், நுணுகியுணருங் கூரிய மதியினையும், ஆராய்ச்சி வன்மையினையும் பெரிதும் புலப்படுத்துகின்றன" என்பர்[53]. 'பதிப்பாசிரியர் தாமோதரம்' என்ற கட்டுரையிலே அ. சிதம்பரநாத செட்டியார், "பிள்ளையவர்கள் பதிப்பித்தவற்றுள் பெரும்பாலன இன்னும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாய் இருத்தல் ஒன்றே இவர்கள் புலமைக்குத் தக்க சான்று" என்பர்.[54]

ஏட்டுப் பிரதிகளை அரும்பாடுபட்டுத் தேடி, அவற்றைப் பிரயாசைப்பட்டுப் பரிசோதனை செய்து, அச்சிடுவதற்குத் தக்கவாறு எழுதிவைத்திருக்கும் பதிப்

பாசிரியரை எதிர்நோக்கும் பாரிய இடையூறு பதிப்புச் செலவுக்கு வேண்டிய பொருட் செல்வமாகும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலே அழிந்து போகும் தமிழ்ச் செல்வத்தைக் காப்பாற்ற விழைந்த பதிப்பாசிரியரை எதிர்நோக்கிய இப்பிரச்சினையை நாம் தாமோதரம்பிள்ளையின் வாழ்க்கையிலும் காணலாம். பிள்ளையவர்கள் தாம் புரிந்த அரசியற் பணிக்காகப் பெற்ற ஊதியம் தமது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும் சுற்றத்தாரைப் பேணுவதற்கும் மட்டும் பயன்படுத்தப்படவில்லை; வேறு பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. "பிள்ளையவர்கள் தாம் உயிரோடிருக்கும் வரையில் வருடாவருடம் கீரிமலைச் சிவன் கோயிலில் ஓர் அபிஷேகம் செய்வித்து வந்தார். தமக்குப் பின்னும் அவ்வபிஷேகம் நடைபெற வேண்டுமெனவும் வருடாவருடம் அதற்காக இருபத்தைந்து ரூபா அனுப்ப வேண்டுமெனவும் தமது மரண சாதனத்தில் தத்துவகாரருக்கு ஆஞ்ஞையிட்டிருந்தனர்."[55] பிள்ளையவர்கள் தமது தாயார் பெருந்தேவியாரின் ஊரும் தாம் பிறந்த ஊருமாகிய ஏழாலையிலே தாது வருடம் ஆவணி மாதம் (1876) சைவப்பிரகாச வித்தியாசாலையொன்றினை நிறுவினர். சுன்னுகம் பூ. முருகேச பண்டிதர் (-1900) அதன் தலைமையாசிரியராகச் சிறிது காலம் பணிபுரிந்தனர். சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் (1854-1922) இவ்வித்தியாசாலையிலேயே இருபத்து மூன்று வருடகாலமாகத் தமிழ்ப்புலமை நடாத்தினர். இவ்வித்தியாசாலையிற் பயின்ற மாணக்கர் ஆறுமுக நாவலர், சுன்னுகம் பூ. முருகேச பண்டிதர், நல்லூர் வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை (1837-1897), கொக்குவில் ச. சபாரத்தின முதலியார் (1858-1922) முதலியோராற் பரீட்சிக்கப்பட்டவர்கள். பிள்ளையவர்கள் தாம் நிறுவிய வித்தியாசாலைச் செலவுகளைத் தமது மரண பரியந்தம் ஏற்று, நடத்திவந்தார். அரசாங்க சேவையிலிருந்து 1882-ம் ஆண்டிலே ஓய்வு

பெற்ற பின்பு, தமது ஐம்பத்துமூன்ருவது வயதிலே குடந்தைக்கு வக்கீலாகத் தொழில்புரியச் சென்றமைக்கு, பிள்ளையவர்களின் ஊதியத்தின் சேமிப்புப் போதாமையும் ஒரு காரணமாகலாம். தொல்காப்பியம் சேனவரையம் (1868), வீரசோழியம் மூலமும் உரையும் (1881) ஆகியன பிள்ளையவர்கள் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுமுன்பு பதிப்பிக்கப்பட்டவை; ஏனையவை ஓய்வு பெற்ற பின்பே பதிப்பிக்கப்பட்டன. விசு வருடம் (1881) தொல்காப்பியம் பொருளதிகாரத்தை அச்சிட ஆரம்பித்தபோதே பிள்ளையவர்கள் அம்முயற்சியால் வரப்போகும் பொருள் நட்டத்தைக் குறித்து மனந்தளர்ந்தார். நியாயாதிபதி அ. இராமச்சந்திரையர், பூண்டி அரங்கநாத முதலியார் ஆகியோர் அத்தருணத்திலே ரூபா 225 கொடுத்து ஊக்குவித்தனர். இறையனுரகப்பொருளும் தணிகைப்புராணமும் சென்னை 'ஸ்கொட்டிஷ்பிரஸ்' என்னும் அச்சியந்திரசாலையிலே சுபானு வருடம் சித்திரை மாதம் (1883) பதிப்பிக்கப்பெற்றன. இவற்றைத் தொடர்ந்து தொல்காப்பியம் பொருளதிகாரம் பார்த்திப வருடம் (1885) வெளிவந்தது. பிள்ளையவர்கள் கும்பகோணத்திலிருந்து பார்த்திப வருடம் ஐப்பசி மாதம் தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு எழுதிய பதிப்புரையிலே தம்மை எதிர்நோக்கும் பிரச்சினையை எடுத்துக்கூறியுள்ளார். கைநட்டம் வராதிருப்பதொன்றே தமக்குப் போதுமானதென்றும் பொருளதிகாரப் பதிப்புவரை தாம் பதிப்பித்த நூல்களால் அடைந்த பொருள் நட்டம் கொஞ்சமல்ல என்றும் பொருட்செல்வர்கள் உதவி செய்தாலன்றிப் பரிசோதித்துப் பதிப்பிப்பதிலே தமக்கு ஊக்கஞ்செல்லாது என்றும் பிள்ளையவர்கள் ஆங்கு கூறினர். பிள்ளையவர்கள் தமது நிலையை இவ்வாறு எடுத்துக்கூறியபோதும் அவருக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு பொருளுதவி கிடைத்ததாகத் தெரியவில்லை. பிள்ளையவர்கள் ரூபா 3500 வரை பொருள் நட்டம் அடைந்த நிலை

யிலே விய வருடம் ஆடி மாதம் (1886) 'ஹிந்து' பத்திரிகையிலே தமது மனக்குறையை உலகத்திற்குத் தெரிவித்தார். 'ஹிந்து'ப் பத்திரிகையிலே பிள்ளையவர்கள் வெளியிட்ட 'விக்கியாபன'த்தைக் கண்டு தமிழபிமானிகள் சிலர் ரூபா. 1100 வரை உதவி செய்தனர்.[56] இத்தொகையோடு நூல்களின் விற்பனையிற் கிடைத்த பொருளையும் சேர்த்துப் பிள்ளையவர்கள் தாம் செலவிட்ட பணத்தில் முக்காற் பங்கினைக் கலித்தொகைப் பதிப்புக்காலத்தையொட்டிப்பெற்றுவிட்டார். இதனாலே பிள்ளையவர்கள் பேரூக்கம் கொண்டார்.

பிள்ளையவர்கள் 1885-ம் ஆண்டில் எழுதிய தொல்காப்பியம் பொருளதிகாரப் பதிப்புரையிலே கலித்தொகையை அமராவதி சேஷையசாஸ்திரிகளும் தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியத்தை மஞ்சக்குப்பம் ராஜரத்தின முதலியாரும் பதிப்பிக்கப் பொருளுதவி செய்ய ஒத்திருப்பதாகக் கூறினார். சேஷையசாஸ்திரிகளின் 'காருண்யோபகார திரவியத்தைக் கொண்டு' கலித்தொகை 1887-ம் ஆண்டிலே பதிப்பிக்கப்பெற்றது. சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம் 1892-ம் ஆண்டிலே அச்சிடப்பெற்றது. திருத்தணிகைப் புராணச் செலவைக் கொழும்புத்துறை தி. குமாரசாமிச் செட்டியார் கொடுப்பதாக ஒத்துக் கொண்டார்.[57] இலக்கண விளக்கத்தை உரையுடன் பதிப்பிக்க விரும்பியபோது சேஷையசாஸ்திரிகள் போன்றவர் கிடையாமையாற் போலும் அதனை அச்சிட ரூபா. 1000 வரை செலவாகும் என எடுத்துரைக்கும் 'விக்கியாபனம்' ஒன்றினைப் பிள்ளையவர்கள் வெளியிட்டார். இதனைக் கண்டு போடிநாயக்கனூர் ஜமீன்தார் திருமலை போடய காமராசய பாண்டிய நாயக்கர் இலக்கண விளக்கப் பதிப்புச் செலவினைத் தாம் தருவதாக ஒத்துக் கொண்டார். இலக்கண விளக்கப் பதிப்புப் பற்றிய விளம்பரத்தைக் கண்டு ரங்கூனிற்

பணிபுரிந்த பிள்ளையவர்களின் சகோதரர் இளையதம்பிப் பிள்ளை ரூபா 500 சேர்த்தனுப்பினார்.[58] இப்பணம் சூளாமணியைப் பதிப்பிக்க உதவியது. முற்கிளந்தன வற்றை நோக்குமிடத்து 1887-ம் ஆண்டு கலித்தொகை பதிப்பிக்கப்படுவதற்கு முன்பு பிள்ளையவர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டமையாற் கைநட்டம் ஏற்பட்டவ ராய் இருந்தமையும் பின்பு அந்நிலை ஓரளவுக்கு மாறி ஊக்கத்துடன் நூற் பரிசோதனைகளிலே ஈடுபட்டி ருக்கக் கூடிய சூழல் ஏற்பட்டமையும் புலனாகும்.

தாமோதரம்பிள்ளை ஏட்டுச் சுவடிகளைத் தேடி யெடுத்துப் பரிசோதனை செய்து, பொருள் நட்டம் ஏற் படும் நிலையிலும் அவற்றைப் பதிப்பிக்க ஆர்வம் கொண்டமைக்கு அவருடைய தமிழ் மொழிப் பற்றும் அபிமானமும் காரணமாகும். தமிழ் நூல்கள் அழிந்து போகாமற் பேணப்பட வேண்டும் என்ற ஆசை அவ ரைப் பதிப்புத்துறையிலே இழுத்துச்சென்றது. கலித் தொகைப் பதிப்புரையிலே, "பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதின்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடை யீர்! நுங்கருணை இந்நாட் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ்நூற்களை மீட்டல் அரிது. யானைவாய்ப்பட்ட விளம்பழத்தைப் பின் இலண் டத்துள் எடுத்துமென்? ஓடன்றோ கிட்டுவது! காலத் தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினுங் கம்பையும் நாராசமுந்தான் மீளும். அரைக்காசுக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது. சங்கமரீஇய நூல்களுட் சில இப்போது தானுங் கிடைப் பது சமுசயம். முப்பால் அப்பாலாய்விட்டது.[59] என் காலத்தில் யான் பார்க்கப்பெற்ற ஐங்குறுநூறு இப்

பொழுது தேசங்கடோறுந் தேடியும் அகப்பட்டிலது.[60] எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்ருய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்ருவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கினும் மனந்தளம்புகின்றதே! தமிழ் மாது நுந்தாயல்லவா! இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா! தேசாபிமானம் மதாபிமானம் பாஷாபிமானமென்று இவையில்லாதார் பெருமையும் பெருமையாமா! இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக,''[61] என்று பிள்ளையவர்கள் கூறிய வார்த்தைகள் அவருடைய தமிழ் உள்ளத்தைத் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ்மொழிப் பற்றிஞலும் அபிமானத்திஞலும் பதிப்புத்துறையிலே புகுந்த பிள்ளையவர்களுக்கு முன்பே, தமிழ்நூற் பதிப்பிலே சிலர் ஈடுபட்டிருந்தனர். புதுவை நயனப்ப முதலியார் (1779–1845), திருவேங்கடாசல முதலியார், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், வில்லிவாக்கம் தாண்டவராய முதலியார், களத்தூர் வேதகிரி முதலியார் (1795-1852), முகவை இராமாநுசக்கவிராயர், திருத்தணிகை சரவணப்பெருமாளையர், ஆறுமுக நாவலர் (1822-1879) முதலியோர் பதிப்பாசிரியர் வரிசையிலே தாமோதரம்பிள்ளைக்கு முன்னேடிகளாகத் திகழ்ந்தனர். ஆயினும் இவர்கள் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூல்களிலே திருமுருகாற்றுப்படை ஒழிந்தவை, கீழ்க்கணக்கு வரிசைக்கு முற்பட்டனவாயிருக்கவில்லை. மழவை மகாலிங்கையரும் எஸ். சாமுவேற்பிள்ளையும் மட்டுமே விதிவிலக்காகக் காணப்படுகின்றனர். மழவை மகாலிங்கையர் பிலவங்க வருடம் ஆவணி மாதம் (1847) தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினர்க்கினியத்தைப் பதிப்பித்தார். எஸ். சாமுவேற்பிள்ளை தமது 'தொல்காப்பிய நன்னூல்' என்னும் நூலிலே (1858) தொல்காப்பியத்தி

னுள்ள மூன்றதிகாரங்களுக்குமுரியதாக 1583 சூத்திரங்களைத் தந்தார். "தொல்காப்பியத்திற்கு முதன் முதல் மூலபாடம் வெளியிட்ட பெருமை இவரைச் சாரும்" என்பர்.[63] ஆயினும் மழவை மகாலிங்கையரும் சாமுவேற் பிள்ளையும் வேறு பண்டைத் தமிழ் நூல்களைப் பதிப்பித்ததாகத் தெரியவில்லை. இந்நிலையிலே பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்களை நோக்குமிடத்து, அவர் சிறப்பு வெளியாகின்றது. பிள்ளையவர்கள் பதிப்பித்த பதினொரு நூல்களிலே எட்டு நூல்கள் பண்டைத்தமிழோடு தொடர்புடையவை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே கிடைக்கப்பெற்ற தமிழிலக்கண நூல்களிலே காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். அது பண்டைத் தமிழ்மொழியை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐவகையாலும் விளங்கவைப்பது. எனவே பிள்ளையவர்கள் அதனைப் பதிப்பிக்க விழைந்தார். தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் சேனாவரையம் (1868), பொருளதிகாரம் நச்சினார்க்கினியமும் பேராசிரியமும் (1885), சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம் (1892) என்பனவும் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியமும் (1891) பிள்ளையவர்களாற் பதிப்பிக்கப்பெற்றன. தொல்காப்பியத்தின் மூவதிகாரங்களையும் உரையுடன் முதன் முதற் பதிப்பித்த பெருமை பிள்ளையவர்களுக்கே யுரியது. இறையனாரகப்பொருளும் இலக்கணவிளக்கமும் பிற்காலத்தனவாயினும் பண்டைத் தமிழோடு தொடர்புடையன; தொல்காப்பியப் பயிற்சிக்கு உதவக் கூடியன. இறையனாரகப் பொருள் 'பொருளதிகாரத்தின் திறவுகோல்' எனக் கருதப்படுவது. இலக்கண விளக்கம் 'குட்டித்தொல்காப்பியம்' என்று போற்றப்படுவது. எனவே தொல்காப்பியப் பதிப்பாசிரியர் இறையனாரகப்பொருளையும் இலக்கண விளக்கத்தையும் பதிப்பித்தார். வீரசோழியம் தொல்காப்பிய நெறியிலிருந்து விலகிச்செல்வதாயினும் தொல்காப்பியத்தைப் போன்று ஐந்திலக்கணமுமுடையது. தொல்காப்பியத்

தின் பொருளதிகாரப் பயிற்சி குன்றியமைக்கு எழுத்து சொல் ஆகிய இரு இலக்கணங்களையும் விளக்கும் சிற்றிலக்கண நூல்களின் பயிற்சியே காரணம் என்று கருதிய பிள்ளையவர்கள் ஐந்திலக்கணப் பயிற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, தொல்காப்பியப் பயிற்சி மீண்டும் செல்வாக்கடையும் பொருட்டு, ஐந்திலக்கணங்களையும் கூறும் வீரசோழியம், இலக்கணவிளக்கம் ஆகியனவற்றைப் பதிப்பித்தார். கலித்தொகை எட்டுத்தொகை நூல்களிலே ஒன்று; 'கற்றறிந்தாரேத்தும் கலி' எனப் போற்றப்பட்டது. எனவே பிள்ளையவர்கள் கலித்தொகையைப் பதிப்பித்தார் (1887). எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் வரிசையிலிடம் பெறுவனவற்றையே பண்டைத் தமிழ் இலக்கியம் என ஆராய்ச்சியாளர் கருதுவர்; பதினெண்கீழ்க்கணக்கு வரிசையிலே இடம்பெறும் நூல்கள் 'பிற்சான்றோர்' இயற்றியனவாகக் கருதப்படுகின்றன. எனவே பண்டைத்தமிழ் இலக்கிய வரிசையில் வழங்கும் கலித்தொகையைப் பதிப்பித்ததின் மூலம் பிள்ளையவர்கள், முதன்முதற் பண்டைத் தமிழ் இலக்கிய நூலைப் பதிப்பித்த பெருமையையும் பெறுகிறார்[63]. பிள்ளையவர்கள் தமது இறுதிக் காலத்தையொட்டிப் பரிசோதனை செய்துகொண்டிருந்த அகநானூறும் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

பிள்ளையவர்கள் பதிப்பித்த ஏனைய நூல்களிலே இரண்டு தமிழ் இலக்கியத்தின் காவிய கதியோடு தொடர்புடையவை. சீவகசிந்தாமணியின் சொற்சுவை, பொருட்சுவைகளின் மேலே தம் மாணாக்கர் மனம் சென்றதைக் கண்ட கச்சியப்பமுனிவர் அதற்கிணையாகச் சைவ இலக்கியமொன்று நிலைபெறும்படி தணிகைப்புராணத்தைச் செய்தருளினார்.[64] திருவாவடுதுறையாதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரோடு

பிள்ளையவர்களுக்கு ஏற்பட்ட தொடர்பினால், அவ்வாதீனத்தைச் சேர்ந்த கச்சியப்ப முனிவரின் நூலைப் பிள்ளையவர்கள் பதிப்பித்தார் என்று கருத இடமுண்டாயினும் அவ்வாறு கருதுதல் முற்றும் பொருந்துவதல்ல. தணிகைப்புராணம் ஈழத்தவராற் போற்றப்பட்ட புராண நூல்களிலே ஒன்று. அதற்குப் பாடஞ் சொல்வதிற் சிறந்தவர்கள் ஈழத்திலே இருந்தமை கண்டு திருவாவடுதுறையாதீன சம்பந்தமுடையவரே ஈழம் வந்து பாடங்கேட்டனர். நல்லூர் வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளையிடம் தணிகைப்புராணம் பாடங்கேட்ட பொன்னோதுவா மூர்த்திகள் எழுதி வைத்திருந்த குறிப்புரையை, பொன்னம்பலபிள்ளையின் வேறொரு மாணவகராகிய த. ஆ. சபாபதிப்பிள்ளையின் புதல்வர் திருவாவடுதுறை வித்துவான் த. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை திருவாவடுதுறையாதீன வெளியீடாக 1960-ம் ஆண்டு பதிப்பித்துள்ளார். திருவாவடுதுறை பொன்னோதுவா மூர்த்திகள் பின்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் விரிவுரையாளராக இருந்தவர்.[65] தாமோதரம்பிள்ளையுடன் நெருங்கிய தொடர்புடைய இணுவில் பொ. அம்பிகைபாக உபாத்தியாயர்[66] தணிகைப்புராணத்திற்கு நகரப்படலம் வரை உரையியற்றியவர். இவ்வுரை அச்சிடப்பெற்றபோதும் இவர் தணிகைப்புராணம் முழுவதற்கும் எழுதிய பொழிப்புரை பதிப்பிக்கப்பெறவில்லை. புன்னாலைக்கட்டுவன் சி. கணேசையர் அம்பிகைபாக உபாத்தியாயரிடமே தணிகைப்புராணத்திற்குப் பாடம் கேட்டனர். ஈழத்தவராலே கந்தபுராணத்தைப் போன்று தணிகைப்புராணம் போற்றப்பட்டமைக்கு, அதன் இலக்கியச் சுவையும் முக்கிய காரணங்களிலொன்றாகும். சீவகசிந்தாமணியின் 'ஆழம்' தெரிந்த வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை தணிகைப்புராணத்திலே ஈடுபாடு உடையவராய் இருந்தமை இக்கருத்தை வலியுறுத்தும்[67].

எனவே தாமோதரம்பிள்ளை தணிகைப்புராணத்தைப் பதிப்பித்தார்.

பிள்ளையவர்கள் உ. வே. சாமிநாதையருக்கு எழுதிய முதற்கடிதத்தின் சில பகுதிகள் என, 'என்சரித்திர' த்திலே இடம்பெறும் பந்திகளின் இறுதியில் அக்கடிதம் சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 18-ம் தேதி (25-3-1883) எழுதப்பட்டதாகத் தரப்பட்டுள்ளது.[68] தணிகைப்புராணம் அடுத்த மாதம் வெளிவந்தது (சுபானு - சித்திரை). இக்குறுகிய காலவெல்லைக்குள் பிள்ளையவர்கள் சாமிநாதையர் சிந்தாமணி பதிப்பிக்கும் நோக்கமுடையவராய் இருந்தமை கண்டு, ஐயருக்குப் போட்டியாகத் தணிகைப்புராணம் பதிப்பித்தார் என்று கருத இடமில்லை.

சூளாமணி தமிழ் மொழியிலெழுந்த காவியங்களிற் சிறப்பிடம் பெறுவனவற்றிலே ஒன்றுகும். யசோதரகாவியம் காஞ்சிபுரம் பாகுபலிநயினுரால் சூளாமணிக்கு முன்பே பதிப்பிக்கப்பட்டுவிட்டது. உ. வே. சாமிநாதையர் சீவகசிந்தாமணியை 1887 ம் ஆண்டு பதிப்பித்தார். சூளாமணி 1889-ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. பிள்ளையவர்கள் சிந்தாமணிக்கு முன்பு சூளாமணி இயற்றப்பட்டதாகக் கருதினுர். எனவே தமிழ் இலக்கியத்தின் காவிய கதியை உணர்வதற்குச் சூளாமணி இன்றியமையாதது எனக் கண்டு, அதனைப் பதிப்பித்தார்.

பண்டைத்தமிழ் நூற்பதிப்பிலே ஈடுபட்ட பிள்ளையவர்கள் காவிய வரிசையிலும் முதலிலெழுந்த நூல்களைப் பதிப்பிக்க விழைந்தார். கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய நூல்கள் செல்வாக்குடன் உலவிய நாளிலே அந்நூல்களின் காவிய கதிக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்த நூல்களைப் பதிப்பிக்க வேண்டும் என்று பிள்ளையவர்கள் விரும்பினுர்.

சிந்தாமணி அத்தகைய நூல்களிலொன்று என வுணர்ந்த பிள்ளையவர்கள், அந்நூலின் இலக்கியநயத் திற்கு ஒப்ப இயற்றப்பட வேண்டும் என்ற நோக்கத் தோடு கச்சியப்ப முனிவர் பாடிய தணிகைப் புரா ணத்தைப் பதிப்பித்தார். உத்தமதானபுரம் வே. சாமி நாதையர் சிந்தாமணியைப் பரிசோதனை செய்து வந் ததை அறிந்த பிள்ளையவர்கள், அம்முயற்சியிலே தாமு மீடுபடாது, அவரைச் சிந்தாமணியை விரைவிற் பதிப் பிக்கும்படி அடிக்கடி ஊக்குவிப்பதோடமையாது தம் மிடமிருந்த சிந்தாமணி உரைப்பிரதிகள் இரண்டினை யும் கொடுத்துதவினர். சிந்தாமணிக்கு முற்பட்ட தென்று தாம் கருதிய சூளாமணியினைப் பரிசோ தித்துப் பிள்ளையவர்கள் பதிப்பித்தார்கள்.

தாமோதரம்பிள்ளை பண்டைத்தமிழ் நூல்களைப் பதிப்பிக்க வேண்டுமென்று விழைந்தமைக்கு அவர் பயின்ற கல்விமுறை ஒரு முக்கிய காரணமாகலாம். வட்டுக்கோட்டை சர்வசாத்திரக்கலாசாலையிலும் பின்பு சென்னையிலும் ஆங்கிலக் கல்வி முறையிற் பயின்ற பிள்ளையவர்கள் மேலைத்தேய மொழிகளிலுள்ள பண்டைய இலக்கியங்களுக்கு அறிமுகமானர். வேற்று நாட்டவரின் கல்விமுறை மூலம் பண்டைய இலக்கியம் பயின்றவர்கள் தம் தாய்மொழியிலுள்ள பண்டைய இலக்கியங்களையும் கற்க விரும்பினர்கள். சேலம் கோ. இராமசுவாமிமுதலியாருக்கும் உ. வே. சாமிநாதை யருக்குமிடையே நிகழ்ந்ததாக 'என்சரித்திர' த்தில் இடம்பெறும் உரையாடல் இக்கருத்தை ஆதரிக் கின்றது.[69] 1880-ஆண்டு 'ஒக்ரோபர்' மாதம் 21-ம் தேதி சாமிநாதையர் தாம் சேலம் இராமசுவாமி முதலி யாரைச் சந்தித்தமையாலடைந்த பயனை மேல்வருமாறு கூறுவர்: "அவரிடம் என் நல்லூழ் என்னைக் கொண்டு போய் விட்டது. அவருடைய நட்பினல் என் வாழ்க் கையில் ஒரு புதுத்துறை தோன்றியது. தமிழிலக்கி

யத்தின் விரிவை அறியமுடிந்தது. அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, கோவை முதலிய பிரபந்தங்களி லும் புராணங்களிலும் தமிழின்பம் கண்டு மகிழ்வ தோடு நில்லாமற் பழமையும் பெருமதிப்புமுடைய தண்டமிழ் நூல்களிற் பொதிந்து கிடக்கும் இன்றமி ழியற்கையின்பத்தை மாந்தி நான் மகிழ்வதோடு, பிற ரும் அறிந்து இன்புறச் செய்யும் பேறு எனக்கு வாய்த் தது"[70]. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் முதலியோரின் மாணவ கர் இவ்வாறு கூறுவதற்குக் காரணமாயிருந்தது அவர் காலத்துத் தமிழ்க்கல்விமுறை. ஆதீனங்களால் வளர்க் கப்பட்ட தமிழ் பரப்பளவிலே குறுகியதாகவேயிருந் தது. சமய சம்பந்தமற்ற நூல்களையும் புறச்சமய நூல்களையும் ஆதீனக்கல்வி போற்றவில்லை. சுவாமிநாத தேசிகர் தமது இலக்கணக் கொத்திலே மேல்வருமாறு கூறுவதிலிருந்து ஆதீனங்கள் கொண்டிருந்த கருத் துக் தெளிவாகும்: "மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே யென்பது திண்ணம்: அன்றியும், அழகிய திருச்சிற்றம் பலமுடையார் அவர் வாக்கிற் கலந்திரந்து அருமைத் திருக்கையாலெழுதினுர். அப்பெருமையை நோக்காது சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப் பாட்டு, கொங்குவேண்மாக்கதை முதலியவற்ருேடு சேர்த்துச் செய்யுட்களோடொன்ருக்குவர் ......... அது மட்டோ இறையனுரகப்பொருள் முதலான இலக்கணங் களையும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப் பிள்ளையார் பாடல் முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணுது நன்னூல், சின்னூல், அகப் பொருள், காரிகை, அலங்காரம் முதலிய இலக்கணங் களையும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, இராமன் கதை, நளன்கதை, அரிச்சந்

திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாகவெண்ணி வாணாள் வீணாள் கழிப்பர். அவரிவைகளிருக்கவே அவைகளை விரும்புதலென்னெனின், பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறுபலவற்றை விரும்புதல்போல அவரதியற்கையென்க''[71]. ஆதீனங்களின் ஆணைக்குட்படாத அறிஞர் சிலரே ஆங்காங்கு அவற்றுற் போற்றப்படாதவற்றையும் பேணி வந்தனர். ஆயினும் அவர்கள் எண்ணிக்கை அருகியே இருந்ததாதல் வேண்டும். எனவேதான் தாமோதரம்பிள்ளை பண்டைய நூற்பயிற்சி பற்றிக் கூறுமிடத்து, ''இவற்றைக் கற்றுரைக் கண்டாரைக் காண்டலுங் கார்த்திகைப் பிறையாயிற்று'' என்று கூறினர்.[72] பண்டைத் தமிழ்நூல்களைப் பதிப்பிக்க ஆர்வம் கொண்ட பிள்ளையவர்கள் அம் முயற்சியிலே தாமே ஈடுபட்டதுடன் அமையாது பிறரையும் அம் முயற்சியிலே ஊக்குவித்தனர்.

'கும்பகோணம் கவரன்மென்டு காலேஜ் தமிழ்ப் பண்டிதர்' உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்கும் பொருட்டு 1880-ம் ஆண்டிலிருந்து பரிசோதனை செய்துவரும்போது தாமோதரம்பிள்ளை தம்மிடமிருந்த சிந்தாமணி உரைப் பிரதிகள் இரண்டினைக் கொடுத்துதவினர்[73]. ஏட்டுப் பிரதிகள் கொடுத்ததோடு பிள்ளையவர்கள் நின்றுவிடவில்லை; சாமிநாதையரை விரைவிற் பதிப்பித்து வெளியிடும்படி அடிக்கடி ஊக்குவித்தார். இதனை ஐயரவர்களே சீவகசிந்தாமணி முகவுரையிலே மேல்வருமாறு கூறுவர்: ''இந்நூலையும் இவ்வுரையையும் பின்னும் இரண்டொரு முறை பரிசோதித்தற்கு விருப்புடையனேனும், இவற்றை விரைவிற் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்யும்படி, யாழ்ப்பாணம் ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பலமுறை தூண்டினமையால் விரைந்து அச்சிடுவிக்கத் துணிந்தேன்''.[74]

சீவகசிந்தாமணி வெளிவந்த ஆண்டிலே பிள்ளையவர்கள் சாமிநாதையருக்குச் சூட்டிய புகழ்மாலை கலித்தொகைப் பதிப்புரையிலே இடம்பெறுகின்றது. ஆங்கு,

"ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கிவைத்துக்கொண்டு என் கண்காணச் சிந்தாமணி பரிசோதனை செய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் வே. சாமிநாதையரைக் கேட்டால் இந்நால் வகையாசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி" என்று பிள்ளையவர்கள் கூறியுள்ளார்.[75] முப்பத்திரண்டு பக்கங்களைக் கொண்ட சுப்பிரமணிய தேசிக விலாசச் சிறப்பு: வேணுவனலிங்க விலாசச் சிறப்பு என்னும் பாடற்றிரட்டைத் திருவாவடுதுறையாதீனத்து ஆறுமுகத்தம்பிரானோடு சேர்ந்து வெகுதானிய வருடம் ஆனி மாதமும் (1878)[76] திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் திருக்குடந்தைப்புராணத்தைப் பூவாளூர் சி. தியாகராயசெட்டியாருடன் சேர்ந்து சுபானு வருடம் ஆனி மாதமும் (1883)[77] பதிப்பித்த சாமிநாதையர் சீவகசிந்தாமணியை வெளியிட்ட வருடத்திலேயே, தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், வீரசோழியம், இறையனாரகப்பொருள், தணிகைப்புராணம், தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியமும் பேராசிரியமும் என்பனவற்றை 1868-ம் ஆண்டு முதலாக வெளியிட்ட பதிப்புப் பேராசிரியர் சி. வை. தாமோதரம்பிள்ளை முற்கிளந்தவாறு அவரைப் பெருமைப்படுத்தியது பிள்ளையவர்களின் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. சாமிநாதையரை மேலும் ஊக்குவிக்கும் முயற்சியிலே பிள்ளையவர்கள் தொடர்ந்து பங்கு கொண்டிருக்கிறார். ஐயரவர்கள் சிலப்பதிகாரத்தைப் பரிசோதனை செய்தபோது அடி

யார்க்குநல்லாருரையோடு கூடிய சிலப்பதிகாரப் பிரதிகளைக் கொடுத்துதவிய ஈழத்தவர்களிலே தாமோதரம்பிள்ளையும் ஒருவராவர். ஐயரவர்கள் புறநானூறு பரிசோதனை செய்த காலத்து, பிள்ளையவர்கள் திருத்தணிகை சரவணப்பெருமாளையரின் மூலப்பிரதியையும் வண்ணார்பேட்டை திருப்பாற்கடனாதகவிராயரின் உரைப் பிரதியையும் கொடுத்துதவியிருக்கிறார். இவ்வாறு ஐயரவர்கள் பிற்காலத்திலே தமிழகத்தில் 'தமிழ்த் தாத்தா' என்றழைக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தவர்களிலே ஒருவரான பிள்ளையவர்களைப் பற்றிச் சாமிநாதையர் பெயரால் வெளிவந்த 'என் சரித்திர'த்திலே பிள்ளையவர்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

சாமிநாதையர் பரிசோதனை செய்து எழுதிவைத்திருந்த சிந்தாமணிப் பிரதியைப் பிள்ளையவர்கள் பெற்றுப் பதிப்பிக்க முயன்றதாகவும் அதற்குப் பதிலாக இராமாயணம் பதிப்பித்தால் தான் பொருட் செலவுக்கு ஒழுங்கு செய்வதாகப் பிள்ளையவர்கள் கூறியதாகவும் தமது பிரதி கைக்கெட்டியவுடன் பிள்ளையவர்கள் திடீரென்று புறப்பட்டமையால் தமது மனதிலே புதிய உணர்ச்சி தோன்றியதாகவும் சேலம் இராமசுவாமி முதலியார் தமக்குப் பிள்ளையவர்கள் பலசாலியாக இருக்கிறார் என்று கூறியதாகவும் தாமும் சிந்தாமணி பதிப்பிக்கப்போவதாகப் பிள்ளையவர்கள் சிலரிடம் கூறிக்கொண்டிருந்ததாகவும் சுப்பிரமணியதேசிகர் பிள்ளையவர்கள் சிந்தாமணிப் பிரதி வேண்டியமையாலே தாம் சின்னப்பட்டத்தின் பிரதியை வருவித்து அனுப்பியதாக ஒருவர் மூலம் செய்தி தந்ததாகவும் 'என் சரித்திர'த்தின் ஆசிரியர் கூறியுள்ளார்[78].

சாமிநாதையர் சீவகசிந்தாமணி முகவுரையிலே கூறிய வார்த்தைகளையும் பிள்ளையவர்கள் கலித்

தொகைப் பதிப்புரையிலே சூட்டிய புகழ்மாலையையும் நோக்குபவர்களும் சிந்தாமணி உரைப்பிரதிகள் இரண்டினைப் பிள்ளையவர்கள் கொடுத்துதவியதைச் சிந்தாமணியின் முகவுரையிலே பார்த்தவர்களும் சிந்தாமணிப் பதிப்பாசிரியர்தானா 'என் சரித்திர'த்திலே முற்கிளந்தவாறு எழுதி 'பங்குனி மதியிலுற்பத்தியான' சிநேகம் பற்குனன்போல நிலைதடுமாறியதைக் காட்டினார் என்று ஐயுறவேண்டியிருக்கிறது.

'திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம்' முதற்பாகம் ஸ்ரீமுக வருடம் கார்த்திகை மாதம் (1933) வெளிவந்தது.[79] அப்பொழுது உ. வே. சாமிநாதையருக்கு வயது எழுபத்தெட்டு.[80] இரண்டாம் பாகம் ஸ்ரீமுக வருடம் மாசி மாதம் (1934) வெளிவந்தது. அப்பொழுது ஐயரவர்களுக்கு வயது எழுபத்தொன்பது. 1935-ம் ஆண்டு 'மார்ச்சு' மாதம் 6-ம் தேதி ஐயரவர்களின் எண்பதாம் ஆண்டு பூர்த்திவிழா நடைபெற்றது.[81] இந்த விழாவிலேதான் ஐயரவர்கள் சுயசரிதம் எழுத வேண்டும் என்ற கருத்துப் பிறந்தது. ஆனால் "சதாபிஷேகம் ஆனபிறகு சுயசரிதம் எழுத வேண்டுமென்ற கருத்து எந்தையாரவர்களுக்கு ஏற்பட்டும் சர்வகலாசாலையார் விரும்பியபடி குறுந்தொகையைப் பதிப்பிக்க வேண்டுமென்ற வேகம் உண்டாகவே இடைவிடாது அவ்வேலையைக் கவனித்து வந்தார்" என்பர் ஐயரவர்களின் புதல்வர் கலியாணசுந்தரஐயர்[82]. குறுந்தொகைப் பதிப்பு 1937-ம் ஆண்டு வெளிவந்தது. அப்போது ஐயரவர்களுக்கு வயது எண்பத்திரண்டு.[83] இந்த வயதிலேதான் ஐயரவர்கள் சுயசரிதம் எழுதத் தொடங்கினார். தளர்ச்சி மேலிட்டிருந்த ஐயரவர்கள் சுயசரிதம் எழுதத் தொடங்கியபோது பயன்படுத்திய மூலங்கள் யாவை? 'ஆனந்தரங்கம்பிள்ளை டயறி' போலச் சாமிநாதையரும் தினக்குறிப்புகள் எழுதிவந்

தாரா என்பது தெரியவில்லை. அவ்வாறு செய்தவர் என்று கருத மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தின் முகவுரை இடந்தரவில்லை. 1933-ம் ஆண்டிலே வெளி வந்த முதற்பாகத்தின் முகவுரையிலே மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சரித்திரம் எழுதும் முயற்சியைச் சற்றேறக் குறைய 45 வருடங்களுக்கு முன்பு, அதாவது 1888-ம் ஆண்டு வரையில், ஆரம்பித்ததாகக் கூறியுள்ளார். ஆயினும் 1900-ம் ஆண்டிலும் பின்பு 1931-ம் ஆண்டி லும் சுதேசமித்திரனிலே விளம்பரஞ் செய்து மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் சரித்திரத்திற்குக் குறிப்புகள் தேட முயன்றுர் என்று தெரிகிறது. 1871-ம் ஆண்டிலே மகா வித்துவானின் மாணவகராகிய ஐயரவர்கள் தமது ஆசி ரியர் பற்றிய குறிப்புகளை விளம்பரம் மூலம் சேகரிக்க முயன்றமை அவர் ஆனந்தரங்கம் பிள்ளையல்லர் என் பதைக் காட்டுகிறது. 'என் சரித்திர'த்திற்கு முகவுரை எழுதிய ஐயரவர்களின் புதல்வர், 'சரித்திர சம்பந்த மான பலவகைக் குறிப்புக்களை அவர்கள் தொகுத்து வைத்துள்ளார்கள்' என்று கூறியுள்ளார். மீனாட்சிசுந் தரம்பிள்ளை சரித்திரத்தை எழுத ஐம்பத்தைந்து வரு டங்களாக முயன்ற ஐயரவர்கள், அம்முயற்சியின் கஷ் டத்தையுணர்ந்து தமது சுயசரிதத்திற்குரிய குறிப்பு களை எழுதிவந்தார் என்று கருதியவிடத்தும் அந் நோக்கம் சதாபிஷேகத்திற்குப் பின்பே ஏற்பட்டதாக ஐயரவர்களின் புதல்வரே கூறுவதைக்கொண்டு சுய சரிதத்திற்குரிய குறிப்புகள் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யின் சரித்திரம் வெளிவந்த காலத்தை யொட்டியே சேர்க்கப்பட்டன என்று கருத இடமுண்டு. 'என் சரித் திரக்' குறிப்புகள் சேர்க்கும் முயற்சியில் ஐயருடைய பங்கு எவ்வளவு என்பதை அறியுமாறில்லை. ஆயினும் அது பெரிதாக இருந்திருக்கமுடியாது என்று கருத லாம். ஏனெனில் அயர்ச்சியும் மறதியும் முக்கிய இடம் வகிக்கும் வாழ்க்கைக் கட்டத்திலே ஐயரவர்கள் அப் பொழுது இருந்தார்கள். இந்த நிலையிலே என்சரித்

திரம் 'ஆனந்தவிகடன்' என்னும் சஞ்சிகையிலே 1940-ம் ஆண்டு 'ஜனவரி' மாதம் 6-ம் தேதி முதலாக வெளிவரத் தொடங்கியது. அப்பொழுது ஐயரவர்கள் எண்பத்துநான்கு வருடங்களைக் கழித்துவிட்டார். என் சரித்திரத்தின் பதிப்பாசிரியர், சா. கலியாணசுந்தர ஐயர், "சரித்திரம் வெளிவர வேண்டுமென்ற ஊக்கத்துடனிருந்து அதற்குரிய வேலைகளையும் எந்தையாருடன் இருந்து கவனித்து உதவியது மிகவும் பாராட்டற் குரியதாகும்" என, என்சரித்திரத்தின் ஆக்கத்திற்கு முக்கிய காரணமாக இருந்த 'மோகனூர்த் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி கி. வா. ஜகந்நாதஐயர்' அவர்களுடைய உதவியை மறவாமல் முகவுரையிலே கூறியுள்ளார். 'ஆங்கிலமணமும் இளமை எழுச்சியும் கலையுணர்ச்சியும்'[84] என்சரித்திரத்திலே பெரிதும் காணப்படுவதற்கு, கலைமகள் ஆசிரியர் மிகவும் உழைத்திருக்கிறார்.

பண்டைத்தமிழ் நூல்களைப் பதிப்பிக்க வேண்டும் என்ற ஆர்வம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறிலே முக்கியத்துவம் பெற்ற வேறோர் எழுச்சியுடன் தொடர்புடையது. தமிழ்பேசு நல்லுலகம் அந்நிய ஆதிக்கத்தின் அடிமைத் தளையிலிருந்த இக்காலத்திலே தமிழ்மொழியின் தொன்மையையும் அதனைப் பேசும் மக்களுடைய பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றின்பண்டைய நிலையையும் தேட எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சியே அது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்கூறிலே மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை, ஆலப்புழை பெ. சுந்தரம்பிள்ளை போன்றவர்களின் ஆய்வுகளால் அவ்வெழுச்சி குறிக்கோளையடையும் சாத்தியக்கூறுகளைப் பெற்றதாயினும் அவர்கள் செய்த ஆராய்ச்சிகளுக்குரிய நிலைக்களம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறிலேயே உருப்பெறத் தொடங்கிற்று.

தமிழின் தொன்மையைத் தேடும் முயற்சிக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறிலே தமிழ்மொழி பற்றி அறிஞர் வெளியிட்ட கருத்துக்கள் ஊக்கமளித்தன. 'ஐந்தெழுத்தாலொரு பாடை யென்று அறையவே நாணுவர் அறிவுடையோரே' என்றும்[85] 'திரமிள மென்னும் ஆரியச்சொற்றமிழெனத் திரிந்தது' என்றும்[86] சங்கதமொழிப் பற்று மிக்க தமிழ்மொழி வாணர் தம் மொழியைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் நிலவிய காலத்திலே மொழியியற் பயிற்சியுடைய மேலைத்தேய அறிஞர் சிலர் வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்தனர். எல்லிஸ் (F. W. Ellis —1819) போன்றவர்கள் தமிழ், தெலுங்கு முதலிய தென்னிந்திய மொழிகளின் ஒருமைப்பாடு பற்றியும் அவற்றிற்கும் வட இந்தியாவிலே செல்வாக்குப் பெற்ற 'இந்தோ ஐரோப்பிய' மொழிகளுக்குமிடையே காணப்பட்ட வேறுபாடுகள் பற்றியும் கூறிய கருத்துக்கள்[87] கால்ட்வெல் அவர்களுடைய (Rev. R. Caldwell 1814—1891) 'ஒப்பியலிலக்கண நூலிலே' ஆராயப்பட்டன.[88] தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய 'திராவிட' மொழிகளுக்குச் சங்கதமொழி தாய்மொழியல்ல என்றும் வடஇந்திய அல்லது 'இந்தோ ஐரோப்பிய' மொழிகளின் வளர்ச்சியிலே திராவிடமொழிகள் காத்திரமான பங்கு கொண்டிருக்கின்றன என்றும் தமிழ் மொழியிலே 'திராவிடத் தாய்மொழி' யின் பண்டைய அமைப்புக்குரிய கூறுகள் பல காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்றும் கால்ட்வெல் தமது நூலிலே நிறுவினார். கால்ட்வெல் எழுதிய 'ஒப்பியலிலக்கணநூல்' ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தது. இந்நூலைத் தொடர்ந்து 1859- ம் ஆண்டிலே வெளிவந்த 'தமிழ்புளூராக்' என்னும் தமது நூலுக்குச் சைமன் காசிச்செட்டி எழுதிய முகவுரையிலே 'ஒப்பியலிலக்கணநூல்' தமிழறிஞருக்கு அளித்த பெருமிதத்தைக் காணலாம். "சிதியன் மொழிக்குடும்பத்திலே

யுள்ள மொழிகளிலே, நிச்சயமாக, தமிழ்மொழியே மிக மேன்மை வாய்ந்த இடத்தை வகிக்கின்றது'' என்று கூறியே சைமன் காசிச்செட்டி தமது நூலின் முகவுரையை ஆரம்பிக்கிறார்.

தமிழறிஞரிடையே கால்ட்வெல் அவர்களது 'ஒப்பியலிலக்கண நூல்' ஏற்படுத்திய சிந்தனை வளர்ச்சியை நாம் தாமோதரம்பிள்ளை வீரசோழியம், கலித்தொகை, சூளாமணி என்பனவற்றிற்கு எழுதிய பதிப்புரைகள் மூலம் அறியலாம். சங்கதமொழிக்குத் தமிழ்மொழி பிற்பட்டது: தமிழ்மொழியின் தாய்மொழி சங்கதம்: திராவிடம் என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லாயிற்று: தமிழ் என்னும் சொல்லே திராவிடம் என்னும் சொல்லாயிற்று என்னும் கருத்துக்களைப் பிள்ளையவர்கள் வீரசோழியப் பதிப்புரையிலே மறுத்துரைக்கின்றார். தமிழ் என்னும் சொல்லுக்குத் 'தனக்கிணையில்லாப் பாஷை' என்று பொருள் கொண்ட பிள்ளையவர்கள் சங்கதம் தமிழுக்குத் தாய்மொழியல்ல என்பதை நிறுவுவதற்குக் கால்ட்வெல் எடுத்துரைத்த ஆதாரங்களைப் பயன்படுத்தியுள்ளார். 'தமிழ் திராவிடமாயதூஉந் திராவிடந் தமிழாயதூஉம் இரண்டுந் தவறென்று' இரண்டு சொற்களும் வழக்கிலே தந்த பொருளைக்கொண்டு நிறுவுகிறார். தமிழ்மொழி சங்கதத்திற்குப் பிற்பட்டது என்போரை நோக்கி ''அழகினும் வலிமையானுமன்றிக் காலத்தினும் ஒன்றற்கொன்று சமத்துவமுடைய தென்றெப்பித்தற்கன்றே ஒன்றை வடமொழியென்பார் மற்றதைத் தென்மொழியென்பதூஉம் ஒன்றைச் சிவபெருமான் தந்ததென்பார் மற்றதைச் சுப்பிரமணியக்கடவுள் தந்தருளியதென்பதூஉம்! வடக்குக்குத் தெற்குஞ் சுவாமிக்குச் சக்தியும் பிந்தியவென்றாற் சமஸ்கிருதந் தமிழிற்கு முந்தியதென்க'' என்பர்.[89] சங்கதமும் தமிழும் ஒன்றற்கொன்று முந்தியனவல்ல என்று கருதிய பிள்ளையவர்

கள், "ஆதிகாலத்தாரியரோடு சமஸ்கிருதம் இமயமலைக் கப்பாலிருந்து வந்ததென்றும், ஆரியர் வடபாலிற் புக்குக் கங்காதீரதேசங்களை வென்று கைப்பற்றியபோது அங்கே வசித்தவர்கள் தமிழரென்றும், ஆரியரைச் செயிக்கமுடியாமையானும் அவர்க்குக் கீழ்ப்பட்டிருக்க மனமொவ்வாமையானுஞ் சுயேஷ்டபங்கம் உறுவதினுந் தமது நாட்டைக் கைவிட்டுப் பிறவிடஞ்சேர்ந்து சஞ்சரித்தலே தமக்குச் சிறப்பென்று கருதித் தமிழர் தென்றிசைச்சென்று வதிந்து தமக்குள்ளே சேரசோழ பாண்டிய இராச்சியங்களை ஏற்படுத்தினார்களென்றுந் துணிவார் பலருளர். இவர் மதத்திற்குச் சார்பான அயற்சாட்சிகளும் பலவுள. இஃதுண்மையாயின் இந்தியாவிற்கு ஆதிபாஷை தமிழென்றே முடியும்'' எனக் கால்ட்வெல் போன்றவர்களாலெடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களையும் கூறுகிறார்.[90] ஆயினும் வீரசோழியப் பதிப்புரையிலோ அல்லது கலித்தொகைப் பதிப்புரையிலோ இந்தியாவிற்கு ஆதிமொழி தமிழென்பது தமது கருத்தென்று பிள்ளையவர்கள் கூறவில்லை. கலித்தொகைப்பதிப்புரையிலே பிள்ளையவர்கள் வீரசோழியப் பதிப்புரையிலே தாம் தமிழ் பற்றிக்கூறிய கருத்துக்களை மறுத்தவர்களுக்குப் பதில் கூறுகிறார். 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலே வீரசோழியப் பதிப்புரையிற் கூறப்பட்ட கருத்துக்களை மறுத்தெழுதிய கட்டுரையொன்று பிரசுரமாகியது. சுவாமிநாத தேசிகரும் சுப்பிரமணிய தீட்சிதரும் ஒருருக்கொண்டு எழுதியதுபோற் காணப்படும் அக்கட்டுரை மறுப்புரையாக அமையாது இழிந்துரையாக விளங்கியது. பிள்ளையவர்கள் 1889-ம் ஆண்டு எழுதிய சூளாமணிப் பதிப்புரையிலே முன்னைய பதிப்புரைகளிலே பிறர் மதமாகக் கூறியதைத் தம் மதமாக உரைப்பர். இந்தியாவிற்கு ஆதிமொழி தமிழ் மொழி என்ற கருத்தைச் சூளாமணிப் பதிப்புரையிலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்.[91]

தமிழ்மொழியின் தொன்மையையும் தனித்தன்மையையும் ஏற்றுக்கொண்ட மேலைத்தேயத்தவர்கூட, தமிழ் இலக்கியத்தின் தொன்மையை ஏற்றுக் கொள்ள வில்லை. ஒப்பியலிலக்கண நூலாசிரியர் தமது நூலின் முகவுரையிலே தமிழ் இலக்கியப் பரப்பினை ஏழு காலப்பிரிவுகளாக வகுத்துரைக்கும்போது, அப்பாகுபாட்டின் முதற் பிரிவாகிய சமணகாலம் அல்லது மதுரைச்சங்க காலம் கி. பி. எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றுண்டிலே ஆரம்பிப்பதாகக் கூறினுர்.[92] பண்டைத் தமிழ் நூல்கள் கால்ட்வெல் காலத்திலே வெளிவராமை, தமிழிலக்கியத்தின் மேலெல்லை கி. பி. எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றுண்டிலே வைக்கப்படுவதற்கு முக்கிய காரணமாகும். பண்டைய நூல்கள் வெளிவந்தாலொழிய தமிழ் இலக்கியத்தின் தொன்மையை நிறுவ முடியாது. தமிழ் இலக்கியத்தின் தொன்மையிலேயே தமிழரின் பண்டைய பண்பாடு, பாரம்பரியம் என்பன தங்கியிருந்தன. கல்வெட்டாராய்ச்சியும் புதைபொருளாராய்ச்சியும் 'தொட்டிற்பிள்ளை'களாக இருந்தகாலம் அது என்பது குறிக்கற்பாலது.

தமிழ் இலக்கியத்தின் தொன்மையை நிறுவும் முயற்சியிலே ஈடுபட்ட தாமோதரம்பிள்ளை, பண்டைய நூல்களைப் பதிப்பிப்பதோடு அமையாது, அந்நூல்களின் பதிப்புரைகளிலே தமிழ் இலக்கியத்தின் தொன்மை பற்றித் தமது கருத்துரைகளையும் வழங்கியுள்ளார். வீரசோழியப் பதிப்புரையிலே 'தமிழ்ப்பாஷையின் கால வருத்தமானம்' என்னும் பிரிவிலே தமிழ்மொழி, இலக்கியப் பரப்பினை எட்டுக் காலப்பிரிவுகளாக வகுத்துரைக்கிருர்.[93] பிள்ளையவர்களின் பாகுபாடும் அங்கு அவர் கூறிய கருத்துக்களும் வன்மையாகப் பின்வந்தோரால் கண்டிக்கப்பட்டுள்ளன.[94] பிள்ளையவர்கள் 1881-ம் ஆண்டு பாகுபாடு செய்யும்பொழுது தமிழ் ஆராய்ச்சிக்கு உதவியாக இருந்த ஆதாரங்களைப்பற்றிச் சற்றே

சிந்தனை செய்வார் அவ்வாறு செய்யமாட்டார்கள். ஆராய்ச்சியின் ஆதி நிலையைப் பிள்ளையவர்களின் பாகுபாடு காட்டுகின்றது.

'தமிழ்ப்பாஷையின் கால வருத்தமான'த்திலே பிள்ளையவர்கள் 'அபோதகாலம்' பற்றிக் கூறுமிடத்து தெரிவித்த கருத்துக்களிற் சில, 'திராவிடப்பிரகாசிகைப்பிழைகள்' என்னும் கண்டனத்திலே போய் முடிந்தன. "தவறுநர் நண்பரேயாயினும் நொதுமலரேயாயினும் அவரை நல்லறிவூட்டித் தெருட்டுவார் இவர்" என்பர் 'பரிதிமாற் கலைஞர்'.[95] திருவாவடுதுறையாதீனகர்த்தரோடு தொடர்புடையவராயிருந்த பிள்ளையவர்கள், அவ்வாதீன சம்பந்தமுடையவர்கள் செய்தவை அல்லது கூறியவை தமது கருத்துக்குப் பிழையென்று கண்டவிடத்து, அவற்றை எடுத்துக்காட்டித் தம் கருத்துக்களைத் கூறத் தவறவில்லை.

"சமஸ்கிருதத்திற்குப் பாணிநீயம் போலத் தமிழிற்கு ஆதியிலக்கணஞ் செய்தவரன்றித் தமிழ்மொழியைத் தந்தவர் அகத்தியரல்லரென்றறிக"[96] எனக்கூறிய பிள்ளையவர்கள் 'அபோதகாலம்' பற்றிக் கூறுமிடத்து "சிவஞானமுனிவரர்... அகத்தியராற் தமிழ் பூமியில் உற்பத்தியாயினதெனக்கொண்டு, அகத்தியம் 'அச் செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்றுநூல்' எனவுஞ் 'செந்தமிழ்நிலத்து மொழி தோன்றுங் காலத்துடன் றோன்றியநூல்' எனவும் மயங்குவாராயினர்......'முந்துநூல்' 'முந்தைநூல்' என்பன முதனூற்குப் பெயர்களாகவும், இளம்பூரணரும் நச்சினார்க்கினியாரும் அவ்வாறே பொருள் கூறி 'நிலத்தொடு' என்பதற்குச் செந்தமிழ் நிலத்து வழக்கொடு எனப் பொருளுரைத்திருப்பது கண்டாராகவும் 'நிலத்தொடு முந்துநூல்கண்டு' என்பதற்கு எண்ணுப் பொருளில்நிலத்தையும் (அதாவது நிலத்தின்கணுள்ள இயற்ற

மிழ் வழக்கையும்) முதனூலையுங் கண்டு எனச் செம்பா கமாகப் பொருள் வெட்டவெளிபோலக் கிடப்பதாகவும், இவர் உடனிகழ்ச்சிப்பொருள் கொடுத்து 'முந்து' என் பதை வினைத்தொகையாக்கி, அறுகம்புல்லிற் தடக்கிய யானை போல, இவ்வாறு இடர்ப்பட்டது காலகதியோ அன்றேல் பிற ஆசிரியர் மதங்களை மறுத்தலும் ஆங் காங்குத் தமது நூதனமதத்தை நாட்டுதலுந் தமக்கு என்றும் இயல்பாயினமை பற்றியோ அறியேம்'' எனத் திருவாவடுதுறையாதீனத்துச் சிவஞானசுவாமிகளை 1881-ம் ஆண்டிலெழுதிய வீரசோழியப் பதிப்புரை யிலே கண்டித்தார்.[97] 1887-ம் ஆண்டு கலித்தொகைப் பதிப்புரையிலே, ''......இலக்கிய இலக்கணங்களுள் யாதாயினுமோர் அரிய பெரிய நூற்கு அவர் உரை யெழுதாமையானுஞ், சித்தாந்த சாத்திரத்தை விளக்கு தலே முக்கிய கருத்தாயினுந், தமிழின் சிறப்பும் அதன் நுண்மையும் அருமையும் இடம்தொறுஞ் சொலிக்க அவர் செய்த சிவஞானபாடியம் அவராதீனத்து மடா திபதிகட்கு ஓர் இரத்தின மகுடமாய்க் கிடந்து துலங்கப்பெறுவதன்றித் தமிழ்ப் புலவர் கைக்கு அகப் படாமையானும் அவர் சாமர்த்தியத்துக்குத் தக்க பெரும் பயனைத் தமிழுலகம் அடைந்திலது''[98] என அவர் தொண்டை மதிப்பிடுவதோடமையாது, ''சூருவளி மாருய் மோதியென்? சூத்திரவிருத்தி வான் ஆர்த் ததிர்த்திடித்தென்? கன்னதுரோணசயித்திரதர் என்ன துரோகம் இயைத்திடினும் 'தேரொன்று கிடையாத குறையன்றோ களத்தவிந்தான்' சிறுவன்? அச்சுவாக னங்கிடையாத குறையன்றோ இலக்கணவிளக்கம் மடங் கியது?''[99] என இலக்கண விளக்கப் பதிப்புரையிலே சிவ ஞானமுனிவர் பற்றித் தாம் கூறப்போகும் செய்தி களுக்குத் தோற்றுவாயும் செய்கிறார். பிள்ளையவர்கள் சிவஞானமுனிவரைப் பற்றித் தெரிவித்த முற்கிளந்த

கருத்துக்கள் கோப்பாய் சு. சபாபதிநாவலருக்கு (1845-1903) ஆத்திரமூட்டின.

கோப்பாய் சபாபதிநாவலர் சிவஞானமுனிவரின் உபாசகர். அவர் மொழியே அன்றி அவர் மொழி பொருளையும் பொன்னே போற் போற்றியவர். 1878-ம் ஆண்டு ஈழம் வந்த சபாபதிநாவலர் அகோரசிவா சாரிய பத்ததியையும் 'சமவாத சைவர்'களையும் கண் டித்து மாவிட்டபுரத்திலே பிரசங்கம் செய்தமைக்கு, அவர் சிவஞானமுனிவர் மீது கொண்ட பற்றும் காரணமாகும். துறைசையாதீனத்தவர் எழுதிய 'சித்தாந்த மரபு' என்னும் நூலைக் கண்டித்துத் தருமையாதீனத் தவர் எழுதிய 'சித்தாந்தமரபு கண்டனம்' என்னும் நூலை மறுத்துத் தாமெழுதிய 'சித்தாந்தமரபு கண்டன கண்டனம்' என்னும் நூலிலே சிவஞானமுனிவர், "சோமசம்பு சிவாசாரியார் ஞானசிவாசாரியார் முதலிய பூர்வாசாரியர் சிவாகமத்தின் வழி விதித்த பத்ததிகளோடும் அவற்றைப் பெயர்த்துச் செய்த ஞானுமிர் தஞ் சிவார்ச்சனுபோத முதலியவற்றோடு முரணி, சிவ சமவாததாபகரான அகோர சிவாசாரியரையுள்ளிட்ட ஆதுனிகர் மூல வசனமின்றித் தாமே படைத்திட்டுக் கொண்ட பத்ததிகளையே கைப்பற்றி, கேவலங் கெதானு கெதிக நியாயத்தில் வீழ்ந்து......"[100] எனத் தருமபுர வாதீனத்தாரைக் கண்டிப்பதைக் காண்க. ஞானப்பிர காசமுனிவர் சிவஞானசித்தியாருக்கு எழுதிய உரையை மறுத்துச் சிவஞானமுனிவர் இயற்றிய சிவ சமவாத வுரைமறுப்பு, 'எடுத்து' என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம், சிவசமவாதகண்டனமென்னும் சிவசமவாதவுரை மறுப்பு என்பனவற்றையும் சித் தாந்தமரபு கண்டனகண்டனம் என்பதையும் திரு வாவடுதுறை ஆதீனத்துப் பண்டாரசந்நிதிகள் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் கட்டளைப்படி பரிசோதித்துத் தமது அச்சுக்கூடத்திற் பதிப்பித்தகாலை, அப்பதிப்

பிற்கெழுதிய சமய வரலாற்றிலே சபாபதிநாவலர் மேல்வருமாறு கூறுவர்: "சமயங்களெல்லாம் புறப்புறம், புறம், அகப்புறம், அகமென நான்காக வகுக்கப் படும் ..... அகச்சமயத்தார் பாடாணவாத சைவர், பேதவாத சைவர், சமவாத சைவர், சங்கிராந்தவாத சைவர், ஈசுரவவிகாரவாத சைவர், சிவாத்துவித சைவரென அறுவகைப்படுவர்......பாடாணவாதசைவர் முதற் சிவாத்துவித சைவர் ஈறுன (மற்றை) அறுவரும் வேதாகமப்பொருளுண்மையெல்லாஞ் சித்தாந்தசைவர் போலக் கொள்ளும் அந்தரங்கவுரிமையுடையவர். ஆயினும் அவ்வப்பொருள்களுக்குக்கூறுஞ் சிறப்பிலக்கணம் பொதுவிலக்கணங்கண் மாத்திரையில் மாறுபடுவர். ஆதலால், அவர் அகச்சமயத்தாரென வேறு வைத்தெண்ணப்பட்டார்......இனி இவ்வாறன்றிப் பாடாணவாதத்திற்கும் பேதவாதத்திற்கும் தம்முள் வேறுபாடு சிறிதாகலின் அவ்விரண்டனையும் ஒன்ருக வைத்தெண்ணிச் சுத்த சைவத்தையுமுடன்கூட்டி அகச்சமயமாறெனத் தொகைகோடலும் ஒன்று......இனி இவ்வகச்சமய முதலிய வனைத்திற்கும் மேலாய் விளக்கமுற்று அவையெல்லாந் தன்கண் ஏகதேசமாய் அடங்கக்கொண்டு நிற்பது சித்தாந்தசைவம். அது வேதாகம மிரண்டானுந் தலையான சன்மார்க்கமென்றெடுத்துப் புகழப்படுஞ் சுத்தாத்துவித சித்தாந்த சமயம்... இனிமேற்கூறிய அகச்சமயத்துட்பட்ட சிவசமவாதம் சங்கிராந்தசிவசமவாதம், உற்பத்தி சிவசமவாதம், ஆவேசசிவசமவாதம், ரூபசிவசமவாதம், அரூபசிவசமவாதமெனப் பலதிறப்படும். ஆயினும் அவையெல்லாம் ரூபசிவசமவாதம், அரூபசிவசமவாதமென்னும் இரண்டாய் அடங்குமாறு ஓர்ந்துணர்க. இனி அவை தம்முள் ஞானப்பிரகாசமுனிவர் கொண்ட சமவாதம் அரூபசிவசமவாதமெனவுணர்க. இவ்வரூபசிவசமவாத மதாபகர் அகோரசிவாசாரியர்"[101]. ஞானப்பிரகாசமுனிவர் மரபிலே வந்தவரான ஆறுமுகநாவலரிடத்தும்

அவர் மருகரும் மாணவகருமான வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளையிடத்தும் தமிழ் பயின்ற சபாபதி நாவலர்,[102] சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியராக இருந்த சபாபதி நாவலர், ஞானப்பிரகாசமுனிவரின் மரபினை ஈழத்திலே கண்டிக்கும் அளவிற்குச் சிவஞானமுனிவரிடம் பக்தியும் திருவாவடுதுறையாதீனத்திடத்துப் பணிவும் உடையவராக இருந்தார். மாவிட்டபுரத்துக் கந்தசுவாமி கோயிலிலே சபாபதிநாவலர் செய்த பிரசங்கத்திற்கெதிராகக் கா. சபாபதிக் குருக்கள் கண்டனங்கள் எழுதினர்.[103] அக்கண்டனங்கள் ஆறுமுகநாவலராற்றிருத்தப்பட்டன என்பர் 'ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு' தொகுத்த த. கைலாசபிள்ளை. சபாபதிக்குருக்கள் எழுதிய 'அகோரசிவாசாரியபத்ததி தூஷண கண்டனம்', 'சபாபதிக்குருக்கள்வினு' என்பவற்றுடன் சபாபதி நாவலருக்கு எழுந்த கண்டனங்கள் முடிந்துவிடவில்லை.

தர்க்ககுடாரதாலுதாரி வை. திருஞானசம்பந்தப்பிள்ளை (-1901) சபாபதி நாவலருக்கு மாருகக் கண்டனமொன்று எழுதினர்.[104] இக்கண்டனம் "தர்க்ககுடாரதாலுதாரி என்பவருக்கும் பிள்ளையவர்களுக்கும் இடையிலுண்டான ஒரு விரோதத்தால்" எழுந்தது என்று மட்டுமே அறிய முடிகின்றது. இக்கண்டனம் சபாபதிநாவலர் செய்த பிரசங்கங்களின் எதிரொலிப்பா அல்லது தனிப்பட்ட விரோதத்தின் பிரதிபலிப்பா என்பது தெரியவில்லை. ஆயினும் இக்கண்டனம் மூலம் ஆறுமுகநாவலரும் நேரடியாக இவ்விவகாரத்தில் இறங்கவேண்டிய நிலைமையேற்பட்டது. தர்க்ககுடாரதாலுதாரியின் கண்டனத்தோடு சபாபதி நாவலர் சுப்பிரமணியதேசிகமூர்த்திகளுக்கு அனுப்பிய கடிதத்திலே 'சமவாத சைவப் பிசாசாகிய ஞானப்பிரகாசர்' என்று ஞானப்பிரகாசமுனிவரைக்

குறிப்பிட்டிருந்தார். இக்கடிதத்தைக்கண்ட ஆறுமுக நாவலர் 'பிசாசு யார்?' என்று மிக நீண்ட கடிதமொன்றெழுதித் தேசிக மூர்த்திகளுக்கு அனுப்பினர் என்பர் த. கைலாசபிள்ளை.[105] சிவஞானமுனிவரின் கருத்துக்களை ஆதரித்த சபாபதி நாவலர் தாமோதரம் பிள்ளை வீரசோழியம், கலித்தொகை என்பனவற்றிற்கு எழுதிய பதிப்புரைகளிலே சிவஞானமுனிவரைக் கண்டித்தபோது ஆத்திரங் கொண்டதில் வியப்பில்லை.

சபாபதிநாவலரின் எதிர்ப்பு அவருடைய பத்திரிகை மூலம் வெளிவந்தது. 'ஞானமிர்தம்' என்னும் பத்திரிகைக்கு இக்காலகட்டத்திலே வதிரி சி. தாமோதரம்பிள்ளை (1863-1921) ஆசிரியராக இருந்தார். அவர் பிள்ளையவர்களின் கருத்துக்களைக் கண்டித்தார். ஞானமிர்த ஆசிரியருடைய கண்டனத்தின் இயல்பை நகைச்சுவையுடன் பிள்ளையவர்கள் மேல்வருமாறு இலக்கண விளக்கப் பதிப்புரையிலே கூறுவர்: "யான் தமோதரம்பிள்ளையென என் பெயரெழுதல் தவறென்றும் அது தாமோதரப்பிள்ளை என்றிருத்தல் வேண்டுமென்றுங் கிளம்புகின்றார். அப்படிப்பட்டவரோடு யாது வாதம் புரிவது? தன்பெயர் எழுதுதற்கே இன்னுங் கற்றுக் கொண்டிருக்கின்றார் போலும்".[106]

இலக்கணவிளக்கப் பதிப்புரையிலே பிள்ளையவர்கள் இலக்கண விளக்கம் பயிற்சி குன்றியமைக்கான காரணங்களை விரித்துக்கூறுமிடத்துத் திருவாவடுதுறையாதீனத்தார் செய்கையை வன்மையாகக் கண்டிப்பதோடு இலக்கணவிளக்கச்சூறாவளியின் இயல்பையும் விளக்கிக் காட்டுகின்றார். திருவாவடுதுறையாதீனத்தார் இலக்கண விளக்கப் பயிற்சி அருகும்படி திட்டமிட்டுச் செயல் புரிந்ததாகக் கருதிய பிள்ளையவர்கள், அச்செய்கை அவர்களுக்கு எஞ்ஞான்றும் களங்கமாம் என்பர். இலக்கண விளக்கச் சூறாவளியை

ஐந்து உதாரணங்கள் மூலம் விளக்கி, அதனை 'அநியாய கண்டனம்' என நிறுவுகிருர். திருவாவடுதுறையாதீனத்தையும் சிவஞானமுனிவரையும் பிள்ளையவர்கள் வன்மையாகக் கண்டித்ததைக்கண்ட சபாபதி நாவலர் 'இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு' வெளியிட்டார். அதனேடும் அமைதியுருத சபாபதி நாவலர் 'திராவிடப்பிரகாசிகை' வெளியிட்டார். "தமிழின் ருென்மை மரபினையும், அதனிலக்கண மரபினையும், இலக்கிய மரபினையும், சாத்திர மரபினையும், நல்லாசிரியர் வழிநின்று தெளிதரற்குரிய நற்றவ அறிவு மாட்சியுடையரல்லாதார் சிலர், இக்காலத்துத் தாந் தாமறிந்தவாற்ருன் முறை பிறழக்கொண்டு தமிழ் மொழியினும் பிறமொழியுனும் பலவாறெழுதி வெளியிட்டு வரம்பழித்தலானும், அவர் உரையின் பொய்ம்மை தேறமாட்டாத பேதைநீரார், அவற்றினை மெய்யெனக்கொண்டு தமிழ் நல்லாசிரியர் தெய்வப் புலமை மாட்சியினையும், அவர் நூலுரைகளின் ருர தம்மிய முறையினையும், வரன்முறை போற்ருது புறம் பழித்துத் தமக்கும் பிறர்க்குங் கேடுசூழுதலானும், தமிழ் உலக மற்றவற்றின் உண்மை தேறி யுறுதிப் பயனெய்துதற் பொருட்டு அத்திறனெல்லாம் விளக்கித், 'திராவிடப்பிரகாசிகை' யென்னும் பெயரினுல் இவ் வசனகிரந்தம் இயற்றுவே மாயினேம்"[107] என்பது பாயிரம். திராவிடப் பிரகாசிகை என்னும் தமிழ் வரலாறு தாமோதரம்பிள்ளையைக் கண்டிக்கும் வரலாருக அமையப்போகின்றது என்பதைக் குறிப்பாக முற்கிளந்த பகுதியிலே கூறிய சபாபதி நாவலர் பிள்ளையவர்களின் பெயரைக்கூடக் கூற விரும்பவில்லைப்போலும். 'வீரசோழியப்பதிப்புரைகாரர்' என்று கூறுவதோடமைந்து விடுகிருர்.

திராவிடப்பிரகாசிகையுடையார் பிள்ளையவர்களைக் கண்டிக்கும்பொருட்டுக் கூறிய வார்த்தைகளிற் சில

மேல்வருமாறு: "இன்னும், சிவஞானயோகிகளைப் 'பிற ஆசிரியர் மதங்களை மறுத்து நூதன மத நாட்டுங் குணமுடையார்' என்று அவர் அஞ்சாது பழித்தனர். அதனுற்றீயூழ் வசத்தாற் றம்மத மறுத்துப் பரமதந் தழுவிப் பழி பூண்ட தம் வரலாறு வாய்சோர்ந்து புலம்பி, 'யானுமறியே னவளும் பொய் சொல்லாள்' என்பதை விளக்கி யிட்டனரென்றுணர்க."[108] இவ் வார்த்தைகள், பத்தொன்பதாம் நூற்றுண்டிற் செல் வாக்குப்பெற்ற கண்டனநூல்களின் வார்த்தைகளுக்கு விதிவிலக்காக அமையாதவிடத்தும், ஈண்டு பொருத்த மற்றவை எனக்கூறவேண்டியதில்லை. கருத்துக்களைக் கண்டிப்பதைவிடுத்துக் கருத்துக்களைக் கூறியவரைத் தனிப்பட்ட முறையிலே கண்டிப்பது பண்பான செய லல்ல. பிள்ளையவர்களைப் பற்றி ஈண்டு சபாபதிப்பிள்ளை கூறிய வார்த்தைகளில் ஒரு பகுதி அவருடைய சமய வரலாறு பற்றியது.

கிறித்தவ சமயத்தினராக விளங்கிய பெற்றோருக் குப் பிறந்த பிள்ளையவர்கள் பின்பு சைவராயினர். சைவரான பிள்ளையவர்கள் உரையும் பாட்டுமாகச் 'சைவமகத்துவம்' என்னும் நூலை இயற்றினர். சைவ மகத்துவம் வெளிவந்தபோது 'கத்தோலிக்க பாது காவலன்' ஆசிரியர் அருளப்ப முதலியார் அதனை அப்பத்திரிகையிலே கண்டனஞ்செய்தார். வல்வை ச. வயித்தியலிங்கபிள்ளை, சுன்னுகம் அ. குமார சுவாமிப்புலவர், சுன்னுகம் பூ. முருகேச பண்டிதர் முதலியோர் அருளப்ப முதலியாரின் கண்டனங்களை மறுத்தெழுதினர். இலங்கைநேசன், சைவஉதயபானு என்னும் பத்திரிகைகள் பிள்ளையவர்களுக்கு எதிராக எழுந்த கண்டனங்களை மறுத்தெழுத உதவின. சைவ மகத்துவத்தை ஆதரித்துச் சைவமகத்துவபானு, சைவ மகத்துவபாநுபாலம், இருண்மதியடுசுடர், சைவமகத் துவவாபாச விளக்கமறுப்பு, சைவமகத்துவ திக்கார

நிக்கிரகம், சைவமகத்துவதிக்கார மகத்துவம் முதலிய நூல்கள் எழுந்தன; அதனை எதிர்த்துச் சைவமகத்துவ திக்காரம், சைவமகத்துவதிக்கார நிக்கிரக எதிரேற்று, சைவமகத்துவதிமிரபானு முதலிய நூல்கள் தோன்றின சைவசமயத் தலைவர்களுள் ஒருவரென மதிக்கப்பட்ட பிள்ளையவர்களைப்பற்றி மதுரை சொ. மு. இராமசாமிச் செட்டியார் மேல் வருமாறு கூறுவர்:

முத்துக் குமாரக விராச சேகரன் மொய்யமரிற்
றத்தித் தடக்குண்டு நாவலர் தாவச் சவிமடிந்து
சித்தங் கெடவுட ருமோத ரேந்த்ரன் சிதைத்தபைபிள்
செத்துக் கிடக்குது பார்சிவ சங்கரன் றெம்முனைக்கே

இச்சிறப்புக்கவி நீர்வேலி சி. சங்கர பண்டிதருடைய 'கிறிஸ்துமத கண்டனத்' திற்கு விசு வருடம் தை மாதம் (1882) வழங்கப்பட்டது. சபாபதி நாவலர் அவர்களு டைய 'யேசுமத சங்கற்ப நிராகரணம்' பிரமாதி வருடம் (1879) இயற்றப்பட்டுச் சித்திரபானு வருடம் வைகாசி மாதம் (1882) வெளியிடப்பெற்றது.[109] இப்பதிப்பிற்குச் சிறப்புப்பாயிரம் தாமோதரம்பிள்ளையிடமிருந்து வேண்டப்பட்டுள்ளது. தமது நூற்பதிப்பிலே பிள்ளை யவர்களுடைய சிறப்புப்பாயிரத்தைத் தமக்குக் கெள ரவமென ஏற்றுக்கொண்ட சபாபதிநாவலர் திராவிடப் பிரகாசிகையிலே பிள்ளையவர்களுடைய 'சமயவரலாறு' பற்றிக் கூறப் புகுந்தது பொருந்துவதாயில்லை. சபா பதிநாவலரின் திராவிடப்பிரகாசிகைக்கு மறுப்பாக எழுந்த கண்டனங்களுளொன்று 'திராவிடப்பிரகாசி கைப் பிழைகள்'; அதனை எழுதியவர் சுன்னுகம் அ குமா ரசுவாமிப் புலவர்[110].

திருவாவடுதுறையாதீன சம்பந்தத்தாலே ஞானப் பிரகாச முனிவரின் கருத்துக்களையும் அவர் கருத்துக் களை ஏற்பவர்களையும் தாமோதரம்பிள்ளையையும் கண் டித்த சபாபதிநாவலர்[111] அவர்களைப் பற்றியது 'என்சரித்

திர'த்திலே இடம்பெறும் மேல்வரும் பகுதி: "ஒருசமயம் வழக்கம் போல் நான் திருவாவடுதுறை சென்று சிந்தாமணி புரூபையும் அடித்த பாரங்களையும் சுப்பிரமணிய தேசிகரிடம் காட்டினேன். அப்போது கோப்பாயென்னும் ஊரினராகிய சபாபதிப்பிள்ளையென்பவர் அங்கே வந்திருந்தார். அவர் தமிழ் நூல்களில் நல்ல பயிற்சியுள்ளவர். நான் சிந்தாமணி புரூப்களைக் காட்டும் போது அவரும் கவனித்தார். எனக்கு அவர் பழக்கம் முன்பே உண்டு. பிறகு அவர், 'நானும் இந்தப் புஸ்தகத்தின் புரூபைப் பார்த்துத் திருத்தித் தருகிறேன். அனுமதி செய்யவேண்டும்' என்றார். அப்போது நான் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்துவிட்டேன். பிறகு தனியே இருக்கும் போது சுப்பிரமணிய தேசிகர் என்னை நோக்கி, 'கண்டபேரிடம் இதைக் கொடுக்கக் கூடாது. நீங்கள் மிகவும் சிரமப்பட்டுச் செய்த திருத்தங்களையெல்லாம் தாமே செய்தனவாகச் சொல்லிக் கொள்வதற்கு இடமேற்படும். சபாபதிப்பிள்ளை விருப்பத்திற்கு இணங்கவேண்டாம்' என்று சொன்னார். நான் அவர் கருத்தின்படியே இருந்தேன்". [112]இப்பகுதியிலே சுப்பிரமணிய தேசிகர் 'கண்டபேர்' வரிசையிலே சபாபதிநாவலரையும் அடக்கியதாக 'என் சரித்திர' ஆசிரியர்கூறுவதை நம்பமுடியாமலிருக்கிறது.'திருவாவடுதுறை மாதவச்சிவஞானயோகி சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அருளுபதேசம் பெற்று அவ்வாதீன வித்வசிகாமணியாய் விளங்காநின்ற' சபாபதிநாவலர் 1866-ம் ஆண்டளவிலே திருவாவடுதுறையாதீனத்தையடைந்து, பன்னிரண்டு வருடம் அங்கிருந்து சுப்பிரமணியதேசிகரிடம் 'உண்மை நூலுணர்ச்சியும் மெய்யுபதேசமும்' பெற்றவர்.[113] திருவாவடுதுறையாதீனத்தார் போற்றும் கொள்கைகளைப் பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரத்திலே 1878-ம் ஆண்டு பிரசங்கம் செய்து கண்டனங்களுக்காளானவர். இத்தகைய சபாபதிநாவலரை, சுப்பிரமணியதேசிகர் தாம் 1871-ம்

ஆண்டிலே முதன்முதலாகச் சந்தித்த சாமிநாதையரிடம்,[114] 1886-ம் ஆண்டிலே 'கண்டபேர்' வரிசையில் வைத்துக் கூறியதாக என்சரித்திரம் தரும் செய்தி பொருத்தமற்றதாகத் தெரிகிறது.

தமிழ் தந்த தாமோதரம்பிள்ளையை, தமிழார்வம் மிக்க தாமோதரம்பிள்ளையை, தமிழ்த்தொண்டர் தாமோதரம்பிள்ளையை, ஏடு காத்த பெரியாரைச் சிலர் ஆங்காங்கே கண்டித்தும் இழித்துரைத்தும் வசைபாடியபோதும் தமிழ்பேசு நல்லுலகம் பெரிதும் மதித்தது. பிள்ளையவர்கள் தேகவியோகமடைந்தகாலை சென்னையிற் கூடிய அநுதாபக்கூட்டமொன்றில் 'திராவிட சாஸ்திரி' பரிதிமாற் கலைஞர் கையற்றுப் பாடிய மேல்வருஞ் செய்யுள் தமிழ்நாட்டறிஞர் பிள்ளையவர்கள் மீது வைத்திருந்த மதிப்பிற்கெடுத்துக்காட்டு:

காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போ
ஞமோது செந்தமிழி னன்னூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்.

உசாத்துணை

1. தாமோதரம்பிள்ளை தாம் பதிப்பித்த பொருளதிகாரவுரையின் ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் என்றே கருதினர். ஆனால் அவர் பதிப்பித்த உரையின் ஆசிரியர் இருவர் என்பதும் அவ்வுரையில் முன்னைந்தியல்களுக்கு உள்ள உரை நச்சினார்க்கினியரது என்பதும் பின்னான்கியல்களுக்கு உள்ள உரை பேராசிரியரது என்பதும் ரா. ராகவையங்கார் 'செந்தமிழ்' என்னும் சஞ்சிகையின் முதலாம் தொகுதியில் எழுதிய கட்டுரை மூலமும், அவர் 1917-ம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வெளியீடாகப் பதிப்பித்த தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நச்சினார்க்கினியருரை மூலமும் தெளிவாகின. ச. பவானந்தம்பிள்ளை பதிப்பிலும் எஸ். கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிலும் ரா. ராகவையங்கார் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. நல்லந்துவனார் கலித்தொகை; சென்னை: ஸ்கொட்டிஷ் பிரஸ்; சர்வசித்து, ஆடி (1887); கலித்தொகைப் பதிப்புரை, பக். 26.

3. கலித்தொகைப் பதிப்புரை, பக். 28.

4. வீரசோழியம்; சென்னபட்டணம்: வித்தியாவர்த்தனி அச்சுக்கூடம்; விசு - சித்திரை (1881); வீரசோழியப்பதிப்புரை, பக். 26.

5. கலித்தொகைப் பதிப்புரை, பக். 26 – 27.

6. பக். 30

7. சூளாமணி; சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை; விரோதி-கார்த்திகை (1889); சூளாமணிப் பதிப்புரை, பக். 6

8. இலக்கண விளக்கம்; சென்னபட்டணம்: வித்தியாநுபாலனயந்திரசாலை; விரோதி-புரட்டாதி (1889); இலக்கணவிளக்கப் பதிப்புரை, பக். 6

9. கலித்தொகைப் பதிப்புரை, பக். 30

10. பக். 15

11. குலசேகரப்பெருமாள் பாடிய 'பெருமாள் திருமொழி' யின் நான்காம் பத்தினை நோக்குக.

12. என் சரித்திரம்; சென்னை: கபீர் அச்சுக்கூடம்; விரோதி-பங்குனி (1950); பக். 783

13. தினவர்த்தமானி 1855-ம் ஆண்டு வெளிவரத் தொடங்கிற்று. பேர்சிவல் பாதிரியார் (Rev.P.Percival) இவ்வாரப் பத்திரிகையைத் தொடங்கி, அதன் ஆசிரியராகச் சிலகாலம் இருந்தார். பின்பு தான் தாமோதரம்பிள்ளை அதன் ஆசிரியரானுர். [மயிலை. சீனி. வேங்கடசாமி: பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம்(1962), பக்.135-136] பேர்சிவல் பாதிரியாரின் அழைப்பின் பேரிலேயே பிள்ளையவர்கள் சென்னை சென்று, பத்திரிகைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகத் தாமோதரம் பிள்ளையின் வரலாற்றுக் குறிப்புக்களைத் தரும் கட்டுரைகள் கூறுகின்றன. ஆயினும் பிள்ளையவர்கள் பத்திரிகைப் பொறுப்பை ஏற்கும் பொருட்டு சென்னை சென்ற ஆண்டினைத் திட்டவட்டமாகச் சுட்டமுடியவில்லை.

14. பக். 6

15. பக். 782–783

16. பிள்ளையவர்கள் 1832-ம் ஆண்டு 'செப்ரெம்பர்' மாதம் பன்னிரெண்டாம் தேதி ஏழாலையிற் பிறந்தார்.
17. கலித்தொகைப் பதிப்புரை, பக்.13
18. பக்.28
19. என் சரித்திரம், பக்.757-758
20. க. வெள்ளைவாரணர் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு-தொல்காப்பியம்' (1957) காண்க.
21. எஸ். வையாபுரிப்பிள்ளை; கம்பன் காவியம் (முதற் பதிப்பு, 1955): 'கம்பன்: ஆராய்ச்சிப் பதிப்பு' பக். 35—69
22. மு. அருணசலம்: திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள் (முதற் பதிப்பு, 1965): 'மிகைப் பாடல்கள்' பக்.163.171
23. எஸ். வையாபுரிப்பிள்ளை: இலக்கிய தீபம் (இரண்டாம் பதிப்பு, 1955), பக்.82
24. வீரசோழியப் பதிப்புரை, பக்.26
25. வீரசோழியப் பதிப்புரை, பக்.25
26. கலித்தொகைப் பதிப்புரை, பக்.12
27. மழவை மகாலிங்கையர் பிலவங்க வருடம் ஆவணி மாதம் (1847) முதன் முதலாகப் பதிப்பித்த தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினர்க்கினியத்தைத் தாமோதரம்பிள்ளை "நச்சினர்க்கினியம் பூர்ணமாதற் பொருட்டு" மீண்டும் 1891-ம் ஆண்டு பதிப்பித்தார். நீதி நெறிவிளக்கத்தினை முதன் முதலாகப் பதிப்பித்தவர் யார் என்பது தெரியவில்லை. இவை நீங்கலாகப் பிள்ளையவர்கள் பதிப்பித்த ஏனைய நூல்களுக்கு அவரே முதற் பதிப்பாசிரியராவர்.

28. பக். 26-27

29. கலித்துறை பற்றிப் பெருந்தேவனுர் கூறிய உரையை மறுத்துக்கூறிய பிள்ளையவர்கள் (வீர சோழியம், பக். 121) 'கட்டளைக் கலித்துறை' எனப்பெயரிய யாப்பிலக்கண நூலையியற்றியவர். "கட்டளைக் கலித்துறையிலே வரற்பாலனவாகிய உத்தமமோனை முதலியனவும், உத்தமச்சீர் முதலியனவும், பிறவுங் கட்டளைக் கலித்துறையில் வித்தகம் பெற விரித்துக்கூறுவர்" என்பர் சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர் (தமிழ்ப் புலவர் சரித்திரம், 1916 : பக். 105)

30. பக். 28-29

31. பக். 34

32. பிள்ளையவர்கள் வட்டுக்கோட்டையிற் பயின்ற பின்பு, சென்னைக்குச் செல்லுமுன்பு, யாழ்ப்பாணக்குடா நாட்டிலே ஆசிரியராகப் பணிபுரிந்த இடம் கோப்பாய் என்று பிள்ளையவர்களின் வரலாறு கூறினேர் உரைத்துள்ளனர். சி. ந. தேவராஜன் கோப்பாயிற் பிள்ளையவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்த பாடசாலை 'அமெரிக்க மிஷன் போதனு வித்தியாசாலை' (Teachers' Training School) என்று கூறியுள்ளார் (தினகரன் 3.10.69). நீதிநெறி விளக்க உரைப் பதிப்பிலே 'யாழ்ப்பாணம் சேட்ச் மிசன் வித்தியாசாலை' உபாத்தியாயர் என்றே காணப்படுகிறது.

33. இக் காலத்திலே பிள்ளையவர்கள் கிறிஸ்தவராக இருந்தமையால் அவரது கிறிஸ்தவப் பெயராகிய C.L.W. Kingsbury என்பதும் முகப்பிலே இடம் பெறுகின்றது.

34. அ.சதாசிவம்பிள்ளை: பாவலர் சரித்திரதீபகம் (1886), பக்.107; ஸ்ரோக்ஸ் அவர்களுடைய மொழி

பெயர்ப்பு 1832-ம் ஆண்டிற்கு முன்பு அச்சிடப்பட்ட தாகவும் ஆனல் எந்த ஆண்டில் அச்சிடப் பெற்றது என்பது தெரியவில்லை என்றும் கூறிய மயிலை. சீனி.வேங்கடசாமி (பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம், பக்.26), பின்பு 1830-ம் ஆண்டில் அச்சிடப்பெற்றதாகக் கூறுவர்(பக்.379); ஸ்ரோக்ஸ் அவர்களுடைய மொழிபெயர்ப்பு சென்னையிலே 1830-ம் ஆண்டிலே அச்சிடப் பெற்றது (**Tamil Studies Abroad**, IATR, 1968, P.59). வோக்கர் (J.Walker) 1840-ம் ஆண்டில் வெளியிட்ட 'நீதி மொழித் திரட்டு' என்னும் தொகுப்பிலே, நீதி நெறி விளக்கத்திலிருந்து சில செய்யுள்களைத் தந்து அவற்றிற்குரிய ஆங்கில மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார்.

35. க.கணபதிப்பிள்ளை: ஈழத்து வாழ்வும் வளமும் (1962): 'தாமோதரம்பிள்ளை', பக்.62.

36. பக்.29.

37. சி. ந. தேவராஜன்: 'அருந்தமிழ்த்தொண்டர் ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை' (தினகரன் 10. 10. 1969)

38. சி. கணபதிப்பிள்ளை: இலக்கியவழி (1964) 'தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை', பக். 132

39. என்சரித்திரம், பக். 833

40. பக். 26

41. சூளாமணிப் பதிப்புரை, பக். 15; கணபதிப்பிள்ளை புலோலி வல்லிபுரநாதபிள்ளையின் புதல்வர்: உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவரின் மாணவகர்: மாகறல் கார்த்திகேய முதலியாரின் ஆசிரியர்: ஸ்ரீவேதாரணியேசுவரர் திருவூஞ்சல், ஸ்ரீவேதாரணியேசுவரி திருவூஞ்சல், மாணிக்கவாசகர் புராணம் (1875), வில்

ஹரணீயம் (1928), இரகுவம்சச் சுருக்கம், இரகு வம்ச நேர்மொழிபெயர்ப்பு முதலிய நூல்களை இயற்றியவர்; 1895-ம் ஆண்டு நவம்பர் மாதத்திலே இறையடி சேர்ந்தவர்.

42. ஞானக்கும்மியை மறுத்து வெஸ்லி ஆபிரகாம் என்பவர் (ஆறுமுகத்தம்பிரான்) அஞ்ஞானக்கும்மி பாடினுர். அஞ்ஞானக்கும்மி 1878-ம் ஆண்டு சென்னையிற் பதிப்பிக்கப்பெற்றது. அஞ்ஞானக்கும்மியின் ஆசிரியரே பெரியபுராணத்தின் உரையாசிரியர் என்று மயிலை. சீனி. வேங்கடசாமி எழுதியுள்ளார் (பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம், பக். 264 ). ஆறுமுகநாவலர் சைவசமயப்பிள்ளைகளைச் சேர்த்துக் கல்வி கற்பிக்கத் தொடங்கிய காலத்தில் (1846-ம் வருடம்) அவரிடம் சென்று பயின்றவர்களிலொருவர் ஆறுமுகப்பிள்ளை. ''ஆறுமுகப்பிள்ளை என்பவர் திருவண்ணுமலை ஆதீனத்திற் சேர்ந்து தம்பிரானுகி, சித்தாந்த நூல்களில் அதிக பயிற்சியுடையவராய்ப் பெரியபுராணத்திற்கு ஒரு சிறந்த உரை செய்திருக்கின்ருர்'' என்பர் த. கைலாசபிள்ளை (ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919: பக். 13). அஞ்ஞானக்கும்மி பாடிய ஆறுமுகத்தம்பிரான் 1836 - ம் ஆண்டு ஆவணி மாதம் ஏழாந் தேதி ஞானஸ்நானம் பெற்று வெஸ்லி ஆபிரகாம் என்ற பெயர் பெற்றதாகப் பாவலர் சரித்திர தீபகம் (1886, பக். 31) கூறுகின்றது. எனவே அஞ்ஞானக்கும்மி ஆசிரியர் ஆறுமுகநாவலரின் மாணவகர் என்பது பொருந்தாது. பெரியபுராண உரைகாரர் வேறு; அஞ்ஞானக்கும்மி ஆசிரியர் வேறு என்பது முற்கிளந்தனவற்ருற்போதரும். அஞ்ஞானக்கும்மியை மறுத்துக் கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை அஞ்ஞானக்கும்மி மறுப்பு என்னும் நூலை இயற்றியுள்ளார்.

43. வீரசோழியப் பதிப்புரை, பக்.29
44. வீரசோழியம், பக். 186.
45. வீரசோழியப் பதிப்புரை, பக். 29
46. வீரசோழியம், பக். 131 அடிக்குறிப்பு
47. கலித்தொகைப் பதிப்புரை, பக். 25
48. கலித்தொகைப் பதிப்புரை, பக். 23
49. பக். 8
50. "நூலை ஏட்டுப் பிரதிகளின் போக்கிலே விடாமல் அறிவு துணையாக வரிசைப்படுத்தியும் கோவைப் படுத்தியும் பதிப்பித்த பெருமை பிள்ளையவர்கட்கே உரியது" என்பர் அ. சிதம்பரநாத செட்டியார் (தமிழோசை, 1955; பக்.128—129)
51. பக். 10
52. சூளாமணிப் பதிப்புரை, பக். 13
53. தமிழ்ப்புலவர் சரித்திரம்(ஐந்தாம் பதிப்பு, 1952) 'தாமோதரம்பிள்ளை', பக். 83
54. தமிழோசை (முதலாம் பதிப்பு, 1955), பக். 130
55. சி. ந. தேவராஜன், "அருந்தமிழ்த்தொண்டர் ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை" (தினகரன் 18. 10. 1969)
56. இவர்களிலே ரூபா 350 கொடுத்தவர் நியாயாதிபதி அ. இராமச்சந்திரையர்; ரூபா 100 கொடுத்தவர்கள் இராஜா சேர். த. மாதவராயர், சேர். ச. இராமசாமி முதலியார், ஊற்றுமலை ஜமீன்தார் இருதாலய மருதப்பதேவர்; ரூபா 50 கொடுத்தவர்கள் திருப்பனந்தாளாதீனம் குமாரசாமித்தம்பிரான், இராய பஹதூர் சூ. சு. சுப்பிரமணியையர், பேரூர் ஜமீன்தார் முத்துவிஜயரகுநாத தும்பையசாமி

தும்பச்சி நாயக்கர், கும்பகோணம் சா. சேஷையர்; ஈழத்தவர்களிலே பொ. குமாரசுவாமி முதலியார், பொ. இராமநாதமுதலியார், பொ. அருணசலமுதலியார், ஆ. இரகுநாத முதலியார் உதவியிருக்கின்றனர்; ஏனையோரில் சேலம் இராமசாமி முதலியாரும் கவித்தலம் துரைசாமி மூப்பனரும் குறிப்பிடத்தக்கவர்.

57. வீரசோழியம், தணிகைப்புராணம், இறையனுரகப் பொருள் ஆகியனவற்றின் முகப்புப் பக்கத்திலே இவற்றை தி. குமாரசாமிச்செட்டியார் பதிப்பித்ததாகவே குறிக்கப்பட்டுள்ளது. குமாரசாமிச் செட்டியாரைத் தம் உயிர்நண்பர் என்பர் பிள்ளையவர்கள்.

58. இளையதம்பிப்பிள்ளை சேர்த்த பணத்தொகையில் ரூபா 50 கொடுத்தவர் தி. எம். பொன்னுசாமிப் பிள்ளை. தமிழ் நாவலிலக்கியத்தின் ஆரம்பகாலத்து எழுத்தாளர்களிற் பொன்னுசாமிப்பிள்ளையும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

59. பிள்ளையவர்கள் காலத்திலேயே 'முப்பால்' என்பதைச் சிலர் திருக்குறள் எனக்கொண்டனர். ஆனுல் பிள்ளையவர்கள் தமிழ் வேதமாகிய திருக்குறள் கீழ்கணக்கு வரிசையில் அடங்காதெனக்கொண்டு 'முப்பால்' என்ற பெயராற் சுட்டப்பட்ட நூல் வேறெனக் கருதினுர்.

60. ஐங்குறுநூறு பழையவுரையுடன் உ. வே. சாமிநாதையராற் சென்னையிலுள்ள வைஜயந்தி அச்சுக் கூடத்திலே சோபகிருது வருடம் ஆனி மாதம் (1903) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

61. பக். 33 – 34

62. தொல்காப்பியம் : எஸ். ராஜம் வெளியீடு (1960) : பதிப்புரை

63. திருமுருகாற்றுப்படை சைவருக்குரிய பாராயண நூல்களுளொன்ருகச் சிறப்புற்றமையாற் பிள்ளையவர்கள் கலித்தொகையைப் பதிப்பிப்பதற்கு முன்பே வெளிவந்துவிட்டது. ஆனல் பத்துப் பாட்டு முழுவதும் விரோதி வருடம் ஆனி மாதத்திலேயே(1889)முதன்முதலாக வெளியிடப்பெற்றது.

64. இலக்கணவிளக்கப்பதிப்புரை, பக். 8

65. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1965-ம் ஆண்டு வெளியிட்ட தணிகைப் புராணம் உரைப்பதிப்பிலே சோழவந்தான் கிண்ணிமடம் கந்தசாமியார் 1976 செய்யுள்களுக்கு எழுதிய உரையும் இடம்பெறுகிறது. இப்பதிப்பிலே கந்தசாமியாரின் உரையில்லாத பகுதிக்கு உரையெழுதியவர்களிலே ஒருவராகிய பொ. வே. சோமசுந்தரனர் கந்தசாமியாருடைய உரை, அவர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் விரிவுரையாளராக இருந்தகாலத்திலே எழுதப்பட்டது என்பர். கந்தசாமியார் அண்ணமலையிற் பணிபுரிந்த காலத்திலே பொன்னேதுவாரும் அங்கு தமிழ் விரிவுரையாளராகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 'உரை வரலாறு' கூறும் சோமசுந்தரனர் கந்தசாமியார் யாரிடம் தணிகைப்புராணத்திற்குப் பாடங்கேட்டார் என்பது பற்றி யாதும் கூறவில்லை.

66. 'ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்' எழுதியவர்கள் 'சூளாமணி வசனம்' எனப்பெயரிய நூலொன்றினைத் தாமோதரம்பிள்ளை வரலாற்றிலும் அம்பிகைபாக உபாத்தியாயர் வரலாற்றிலும் கூறுவர். இதனற் பின்வந்தோர் பிள்ளையவர்களும் உபாத்தியாயரும் சூளாமணி வசனத்தைத் தனித்தனியே எழுதி அச்சிட்டிருப்பதாகக் கருத இடமேற்பட்டது. சென்னை வெ. நா. ஜுபிலி அச்சுக்கூடத்திலே

வஜ்ரவேலுப்பிள்ளையால் விளம்பி வருடம் ஆவணி மாதம் (1898) பதிப்பிக்கப்பெற்ற 'தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணிக் காவியத்தை மாணாக்கர் எளிதிற் கற்றுணரும்படி கத்தியரூபமாகச் செய்த திவிட்டகுமாரன் கதை அல்லது வசன சூளாமணி'யை நோக்கும்போது மயக்கம் தெளிவாகின்றது. 'ருவ்பஹதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பு' என வெளிவந்த வசனசூளாமணியிலே தாமோதரம்பிள்ளை அதன் வரலாற்றைக் கூறுகிருர். பிள்ளையவர்களின் வேண்டுகோளின்படி அம்பிகைபாக உபாத்தியாயர் சூளாமணி வசனம் எழுதிஞர். உபாத்தியாயரின் வசனநூலைப் பாடநூலாக்கத் திராவிடபாட சபையினர் மறுத்துவிடவே பிள்ளையவர்கள் அதனைத் திருத்தியும் புதுக்கியும் திவான்பஹதூர் வன்பாக்கம் கிருஷ்ணமாசாரியாரின் 'மஹாராணி' என்னும் திங்களிதழிலே 1897-ம் ஆண்டு பாகம் பாகமாக வெளியிட்டார். 'மஹாராணி'யின் பகுதிகளைக் கண்ட பாட சபையினர் சூளாமணி வசனத்தைப் பாட நூலாக்க விரும்பவே பிள்ளையவர்கள் அதனை மீண்டும் திருத்தியும் புதுக்கியும் எழுதிஞர். ''ஆயினும் இடந்தொறும் இடந்தொறும் உபாத்தியாயர் புத்தக வாக்கியம் இன்னும் இருத்தலாற் பாஷைநடை இரண்டுபட்டுத் தோன்றும்'' என்பர் பிள்ளையவர்கள்.

67. 'என்சரித்திர'த்தின் ஆசிரியர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டார் என்றும் அம் முயற்சி நிறைவேருமற் போய்விட்டது என்றும் எழுதியுள்ளார் (பக். 814, 820, 849). அவர் கூற்றுகளின் தாற்பரியத்தை வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் வரலாறுணர்ந்தோர் ஆராய்ந்து வெளியிட வேண்டும்.

68. பக். 759

69. பக். 729 – 734

70. என்சரித்திரம், பக். 726

71. இலக்கணக்கொத்து, பாயிரம், ஏழாவது நூற்பா உரை

72. கலித்தொகைப் பதிப்புரை, பக். 19

73. சீவகசிந்தாமணியின் முதற்பதிப்பு முகவுரையிலே காணப்படும் இச்செய்தி 'என்சரித்திர'த்திலே இடம் பெறவில்லை.

74. சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும்; சென்னை : திராவிட ரத்நாகர அச்சுக்கூடம், 1887; முகவுரை, பக். 2

75. பக். 26

76. என்சரித்திரம், பக். 622 – 623

77. என்சரித்திரம், பக். 760

78. பக். 784–791, 793–794, 813, 820

79. இப்பாகத்திலே இடம்பெறும் 'ஆறுமுகநாவலர் நூற்பதிப்புக்களுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது' என்னும் பகுதி (பக். 227–229) பிழையான கருத்துக்களைக் கொண்டிருப்பதை நல்லூர் த. கைலாசபிள்ளை 'சி. க.' வின் பெயராற் சிவகாசி அருணசலக் கவிராயரின் 'யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்' என்னும் நூலின் இரண்டாம் பதிப்பிற்கு (1934) எழுதிய முகவுரை மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

80. சாமிநாதையர் ஆனந்தவருடம் மாசிமாதம் 9-ம் தேதி (19-2-1855) பிறந்தவர்.

81. என் சரித்திரம் முகவுரையைப் பார்க்கவும்.

82. என் சரித்திரம், முகவுரை.

83. "......... இவர் தாமாக முழுப்பொறுப்பையும் ஏற்று நன்ருக உழைத்து வந்தது சுமார் 1930 வரை என்று தான் நாம் சொல்லுதல் வேண்டும். இதற்குப் பின் தளர்ச்சி மேலீட்டிஞல் ஐயர் தமது சிஷ்யர்களையே முற்றும் நம்பிவிட வேண்டியதாயிற்று. இதனுல், முன் பதிப்பித்த நூல்களின் செம்மைப்பாடு பின் வெளிவந்தனவற்றுள் இல்லை. இதற்கு உதாரண மாகக் குறுந்தொகைப் பதிப்பைக் கூறலாம். இதன் கண்ணே பாட நிச்சயத்திலும், பொருளுணர்ச்சி யிலும் பிழைகள் பல உள்ளன என்பது தமிழறி ஞர்கள் நன்கு உணர்ந்ததே" என்பர் எஸ். வையா புரிப்பிள்ளை (தமிழ்ச்சுடர்மணிகள், நான்காம் பதிப்பு, 1968, பக்கம் 304)

84. எஸ். வையாபுரிப்பிள்ளை தமிழ்ச்சுடர்மணிகள் (நான் காம் பதிப்பு, 1968), பக். 305

85. இலக்கணக்கொத்து, பாயிரம், 7

86. பிரயோகவிவேகவுரை

87. Note to the Introduction by Ellis to A. D. Campbell's '**A Grammar of the Teloogoo Language**, commonly termed the Gentoo, peculiar to the Hindoos inhabiting the north eastern provinces of the Indian Peninsula'. **Madras:** College of Fort St. George Press, 1816, 1820.

88. **A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages.** London: Harrison, 1856.

89. வீரசோழியப் பதிப்புரை, பக். 4

90. வீரசோழியப் பதிப்புரை, பக். 4

91. சூளாமணிப் பதிப்புரை, பக். 2

92. M. Srinivasa Aiyangar : **Tamil Studies** (1914), pp. 201-202;
1913-ம் ஆண்டில் வெளிவந்த 'ஒப்பியலிலக்கண'த்தின் மூன்றும் பதிப்பிலே திராவிட இலக்கிய வரலாறு பற்றிய செய்திகளைத் தரும் பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன; நீக்கப்பட்ட பகுதிகளைச் சென்னைப் பல்கலைக்கழகம் 1956-ம் ஆண்டு வெளியிட்ட பதிப்பிலே சேர்த்துக்கொள்ளவில்லை.

93. பிள்ளையவர்கள் வீரசோழியப் பதிப்புரையிலே தரும் 'தமிழ்ப் பாஷையின் கால வருத்தமானம்' பேரிசைச்சூத்திரம் என்னும் செய்யுளை ஒட்டி அமைந்துள்ளது. பேரிசைச் சூத்திரத்தின் பகுப்பைத்திருத்தி, விளக்குவதுபோன்று பிள்ளையவர்களின் பகுப்பு அமைந்திருக்கின்றது.

94. M. Srinivasa Aiyangar : **Tamil Studies** (1914), pp. 198-200

95. தமிழ்ப்புலவர் சரித்திரம் (ஐந்தாம் பதிப்பு, 1952), பக். 85

96. வீரசோழியப் பதிப்புரை, பக். 4

97. வீரசோழியப் பதிப்புரை, பக். 11-12.

98. பக் 21

99. பக். 32

100. சிவஞானசுவாமிகள் இயற்றியருளிய உரைச் செய்யுள், பக். 54 (சைவ சித்தாந்த நுற்பதிப்புக்கழக வெளியீடு, துந்துபி வருடம் வைகாசி மாதம்)

101. மேற்படி நூல், பக் 1-6

102. சி.கணேசையர்: ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (1939), பக். 95

103. த கைலாசபிள்ளை தொகுத்த 'ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு' காண்க.

104. சிவகாசி அருணசலக்கவிராயர்: 'யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்' (இரண்டாம் பதிப்பு, 1934) முகவுரை காண்க.

105. மேற்படி நூல் முகவுரை காண்க.

106. பக். 16

107. திராவிடப்பிரகாசிகை; கும்பகோணம்: சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலை, 1899; பக். 2

108. திராவிடப்பிரகாசிகை (1899), பக். 24

109. சபாபதி நாவலர் சரித்திரச் சுருக்கம் (1955), பக். 27

110. கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை:புலவர் நினைவுகள் (1967), பக். 6

111. வீரசோழியப் பதிப்பிலே இடம்பெறும் சிறப்புக் கவியை வழங்கிய கோப்பாய் வித்துவான் சபாபதிப்பிள்ளை நீர்வேலி ச. பீதாம்பரப்புலவரின் கனிட்ட புதல்வரும் சி. சங்கரபண்டிதரின் மாணவகருமாவர்.

112. பக். 811

113. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டிலிடம்பெறும் 'சபாபதிக்குருக்கள்விஞ' என்னும்பகுதி காண்க.

114. சாமிநாதையர் மீனுட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவகர் ஆகியது பிரசோற்பத்தி வருடம் சித்திரை மாதம் (1871). இவ்வாண்டிலே மீனுட்சிசுந்தரம்பிள்ளையுடன் திருவாவடுதுறை சென்றிருக்கிருர் ஐயரவர்கள்.

# 6. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்

"தமிழுக்கென்று உண்மையில் உழைத்தவர்களிற் காலஞ்சென்ற சில பெரியோர் பெயரை ஈண்டு குறிக்கின்றேன். அவர்கள் ஸ்ரீமான்களான ஆறுமுகநாவலர், பாண்டித்துரைச்சாமிதேவர், தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை என்பவராவர்...... தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை இருவரும் உத்தியோகத்திலிருந்தவராயிருந்தும் தமிழுக்கு உழைத்ததை அறியாதார் யாவர்? இவர்கள் மேகத்தைத்போல் ஒருவகைக் கைமாறும் வேண்டாது உழைத்தவர்களாவார்கள்". இவ்வசனங்கள் கீழ்க்கோளூர் சிவசிதம்பரம்பிள்ளையின் புதல்வரும் தஞ்சாவூர் வழக்கறிஞரும் 1921-1922 ஆம் ஆண்டுகளிலே தமது 'தமிழ் வரலாறு' என்னும் நூலின் முதலிரு பகுதிகளையும் வெளியிட்டவருமான ஸ்ரீநிவாசபிள்ளை (1852-1929) அவர்களுடையனவாம்[1].

கே. எஸ். ஸ்ரீநிவாசபிள்ளையாற் போற்றப்பட்டவர்களிலொருவரான கனகசபைப்பிள்ளை சென்னையிலுள்ள கோமளேசுவரன்பேட்டையில் 25. 5. 1855-லே பிறந்தவர். சென்னை அரசாங்கக் கல்லூரியிலே பயின்று, இளவயதிலேயே பீ.ஏ. பரீட்சையிலும் பின் பீ.எல். பரீட்சையிலும் தேறியவர். மதுரையில் ஒரு வருடகாலம் வரை இடையிலே வழக்கறிஞராகப் பணிபுரிந்த போதும் வாழ்நாள் முழுவதும் சென்னை அரசாங்கத்தின் அஞ்சற்றுறையிலே கடமைசெய்து மேலதிகாரியாக (Superintendent) உயர்ந்தவர். காஞ்சிபுரத்தில் 22. 2. 1906-ல் இறையடி நீழல் சேர்ந்தவர். தமிழகத்திலே பிறந்து, வளர்ந்து, மறைந்த கனகசபைப்பிள்ளை ஈழத்தின் மாண்பினைத் தமிழ்நாட்டிலே நிறுவியவர்

களிலொருவராவர். கனகசபைப்பிள்ளையின் தந்தையாகிய விசுவநாதபிள்ளையும் தாயாரும் ஈழத்தினராவர்.

V. விசுவநாதபிள்ளை என்ற பெயருடைய ஈழத்தவர் இருவர் பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில், ஏறக்குறைய சமகாலத்திலே சிறப்புடன் விளங்கினர். இதனுற் பின்வந்தோர் ஒருவரை மற்றவராக மயங்கிய நிகழ்ச்சிகளும் ஏற்பட்டன[2]. இவர்களிலே வயதில் மூத்தவராகக் கருதப்படும் 'கறல்' விசுவநாதபிள்ளையை முதற்கண் நோக்குவோம்.

சுதுமலை வயிரவநாதரின் புதல்வர் விசுவநாதபிள்ளை "நாவலர் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் மூத்தவர்"[3]. ஆறுமுகநாவலர் 18-12-1822-லே பிறந்தவர். விசுவநாதபிள்ளை "கிறிஸ்தாப்தம் 1820-ம் ஆண்டளவிலே பிறந்தவர்"[4]. வட்டுக்கோட்டை சர்வசாத்திரக் கலாசாலையிலே 1832-ம் ஆண்டு முதலாக நவாலி அ. சதாசிவம்பிள்ளை (J. R. Arnold) போன்றவர்களின் பள்ளித் தோழராயிருந்தவர். ஜே. ஆர். ஆனெல்டு 1840-ம் ஆண்டு 'வட்டுக்கோட்டை செமினறி'யை விட்டு வெளியேறிய பின்பும் அவ்விடத்திலேயே இருந்து சிறிது காலத்திலே அங்கு ஆசிரியரானவர். 1841-ம் ஆண்டு 'க. ஆறுமுகப்பிள்ளை' அல்லது 'கந்தர்குமாரன் ஆறுமுகவன்'(நாவலரவர்கள்) உதயதாரகைக்கு 'நயனசாஸ்திரம்' பற்றிக் கேள்வி கேட்டெழுதியபோது 'வட்டுக்கோட்டைச் சாத்திரப் பள்ளிக்கூட'த்திலே ஆசிரியராக இருந்த விசுவநாதர் பதில் எழுதினுர். அப்பொழுது அவர் தமது பெயரை ஆங்கிலத்தில் எழுதும்போது D. L. Carrol என்றெழுதி வந்தார்[5]. வட்டுக்கோட்டை சர்வசாத்திரக் கலாசாலை 1855-ம் ஆண்டிலே மூடப்பட்டது. அதே ஆண்டிலே டி.எல்.கறல் எழுதிய 'வீசகணிதம்' (Elementary Algebra) வெளிவந்தது. ஜே. ஆர். ஆனெல்டு 1857-ம் ஆண்டு ஆனிமாதம் எம். டி. சாண்டேர்ஸ் பாதிரியாரிடமிருந்து (Rev. M. D

Sanders) உதயதாரகைப் பத்திரிகாசிரியர் பொறுப்பை ஏற்பதற்கு[6] முன்பு ஒரு வருடம் வரையில் அதனை நடத்திவந்தார்[7]. 1857-ம் ஆண்டு கறல் விசுவநாத பிள்ளை நாவலரவர்கள் 1854-ம் ஆண்டிலே வெளிப்படுத்திய 'சைவதூஷண பரிகாரம்' என்னும் நூலை மறுத்துச் 'சுப்பிரதீபம்' எழுதி வெளியிட்டார். அதே ஆண்டிலே விசுவநாதபிள்ளை சென்னை சென்று, அங்கு சென்னைப் பல்கலைக்கழகம் முதன் முதலாக 1857-ம் ஆண்டிலே நடத்திய பீ. ஏ. பரீட்சையிலே இரண்டாம் ஆளாகச் சித்தியடைந்தார். இப்பரீட்சையிலே முதல் வராகத் தேறியவர் விசுவநாதபிள்ளையின் மாணவகர் சி. வை. தாமோதரம்பிள்ளை. விசுவநாதபிள்ளை தமிழ் நாட்டிலே பதிவாளராகப் (Registrar of Assurance) பணிபுரிந்தார். வின்ஸ்லோ பாதிரியார் (Rev. Miron Winslow) தமிழ் ஆங்கில அகராதியைப் பதிப்பித்த போது அதன்'புரூப்' தாள்களைத் திருத்திக் கொடுத்தவர்[8]. இவரை D. C. Visvanatha Pillai, B. A. என்று தமது முகவுரையிலே வின்ஸ்லோ பாதிரியார் குறிப்பிடுகிறார். சென்னை வாழ்க்கையின்போது விசுவநாதப் பிள்ளையின் மனம் சைவத்தை நாடியது[9]. அதன் விளைவாகத் தமது சுப்பிரதீபத்திற்கு எதிராகச் 'சுப்பிர தீபமறுப்பு' எழுதியதோடமையாது[10] சிதம்பரத்திற்குச் சென்று தாம் செய்த சிவதூஷணங்களுக்குப் பரிகாரமாகப் பொன்னூசி காய்ச்சித் தமது நாவைச் சுடுவித்துக்கொண்டு சைவராயினர்[11]. நாவலரவர்களும் தா. பென்னம்பலபிள்ளையும் பங்கு கொண்ட, 1879-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ம் திகதி வண்ணர் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிற் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களைச் சட்டசபைத் தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்க வேண்டுமென்று கோரி நடத்தப்பட்ட கூட்டத்திற்குக் 'கறல்' விசுவநாதப்பிள்ளை தலைமை தாங்கினர்[12]. அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்பு, யாழ்ப்பாணம் வந்து

தமது மனைவியின் ஊராகிய சங்கானையிலே வசிக்கும் போது, அறுபத்தோராவது வயதிலே தேகவியோக மடைந்தார்[13].

மல்லாகம் வீரகத்தியவர்களின் புதல்வர் விசுவநாத பிள்ளை பிறந்த ஆண்டினைத் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியாத நிலையிலுள்ளோம். ஆயினும் 'கறல்' விசுவநாதபிள்ளைக்கு வயதிலே இளையவர் என்று கருத இடமுண்டு[14]. இவரும் வட்டுக்கோட்டை சர்வ சாத்திரக் கலாசாலையிலேயே பயின்றவர். வட்டுக்கோட்டையிலே பயின்ற பின்பு இவர் செய்த தொழிலோ அல்லது சென்னைக்குச் சென்ற ஆண்டு யாதென்பதோ தெரியவில்லை. சென்னை அரசாங்கத்திலே தமிழ் மொழிபெயர்ப்பாளராகக் கல்வித் துறையிலே (Dept. of Public Instruction) பணிபுரிந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் சோதனை மதிப்பாளராகவும் திகழ்ந்தார்[15]. வின்ஸ்லோ பாதிரியார் தமிழ் ஆங்கில அகராதியை அச்சிட்ட போது அதன் 'புரூப்' தாள்களைச் சிறிது காலம் திருத்திக் கொடுத்தவர். இவரைப் பாதிரியார் 'Mr.B.Kellogg' என்று குறிப்பிடுகிறுர். சென்னை சிவபாதநேசப்பிள்ளை வெளியிட்ட 'நல்லறிவுச்சுடர் கொளுத்தல்' என்னும் பிரசுரத்திலே, ''இங்கிலீசினின்றுந் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழ் நாடெங்குமுள்ள கெவரன்மென்ட் பாடசாலைகளெங்கும் வழங்கும் தமிழ்ப் புத்தகங்களுக்கு ஆசிரியராகிய ஸ்ரீ விசுவநாதபிள்ளையவர்களும் யாழ்ப்பாணத்தாரன்றோ?'' என்று குறிப்பிடப்பட்டவரும்[16] 'கெலக்' விசுவநாதபிள்ளையவர்களேயாம். 1870-ம் ஆண்டு சென்னை அரசாங்கத்தின் கல்வித்துறை அதிகாரி வெளியிட்ட தமிழ் ஆங்கில அகராதியை (Classical Tamil-English Dictionary) விசுவநாதபிள்ளை புதுக்கியும் பெருக்கியும் கிறித்தவ இலக்கிய சங்கத்தினரிடம் (CLS) வெளியிடக் கொடுத்தார்[17]. 'கெலக்'

விசுவநாதபிள்ளை 1884-ம் ஆண்டு வியோகமடைந்தார் என்பர்[18]. இவரே கனகசபைப்பிள்ளையின் தந்தையாவர்.

சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாகிய அஞ்சற்றுறை அதிகாரி கனகசபைப்பிள்ளை தமிழார்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். "...... சமுதாயத்துறையிலும் அரசியற் துறையிலும் அக்காலத் தமிழருக்கும் இக்காலத் தமிழருக்கும் உள்ள உயர்வு தாழ்வின் அளவு மனச் சோர்வளிக்கும் அளவேயாகும். இன்று தமிழர் ஆட்சியுரிமை இழந்த ஓர் ஆளப்படும் இனம். பல நூற்றுண்டுகளுக்கு முன்பே அவர்கள் பண்டை ஆட்சிக் குடிகளின் மரபுகள் கால்வழித் தடமற்று அழிந்து விட்டன. குருமார், கணிகள், அமைச்சர், படைத் துறைப் பணியாளர், மருத்துவர் ஆகியோர் அடங்கிய ஐம்பெருங் குழுவினர் கூடி மன்னுரிமை ஆட்சியாளருக்கு அறிவுரை வழங்கி ஆட்சி நடாத்தும் காலம் மலையேறிப்போய்விட்டது. வெற்றி விழாக்களிலும் விருந்துகளிலும் தமிழ்ப் பாணர் குலம் யாழ் மீட்டித் தங்கள் மூதாதையர் வீரப்புகழ் பாடும் காட்சியை நாம் இன்று கனவு காணக்கூட முடியாது. உயர்ந்த நேரியல் ஆடைகளையும் தமிழகத் தொழிலாளர் செய்த பிறபொருள்களையும் வாங்கத் தொலை அயல்நாட்டுக் கப்பல்கள் நம் துறைமுகங்களில் வந்து காத்திருந்த காலத்தின் நினைவு கனவில்கூடத் தொலைவாகிவிட்டது. ஒரு தேசிய இனம் என்ற முறையில் தமிழர் உயிர்த் துடிப்பு ஆறி அடங்கிவிட்டது என்பதுகூட இன்றைய முழு அவல நிலையைச் சித்திரித்து விடவில்லை. அவர்கள் தொழில்கள் அழிந்துவிட்டன. கலைகள் மடிந்து விட்டன. அவர்கள் பழந் தெய்வங்கள்கூட உயிர்ப் பிழந்துபோயின"[19] என்று பண்டைத் தமிழர் பாரம்பரியத்தை எண்ணி இரங்கியவர். இவ்விரக்கம் பத்தொன்பதாம் நூற்றுண்டிலே தமிழ் மக்களுடைய சமு

தாயம் இருந்த நிலையையொட்டி எழுந்ததாகும். பண்டைய பாரம்பரியப் பெருமை மிக்க தமிழர் தம்நிலை மறந்து உறங்கிக்கொண்டிருந்தனர். சாதிமுறைகள், தற்பண்பையும் தன்மதிப்பையும் துறக்கும்படி கற்பித்து வந்த தத்துவக் கோட்பாடுகள், தப்பெண்ணங்கள், மூட நம்பிக்கைகள், கல்வியறிவற்ற பெண்ணினம், சமய பேதங்கள் முதலியன தமிழ்மக்களின் நிலையைத் தாழ்த்திக்கொண்டிருந்தன. இந்நிலையிலே தமிழ் பேசும் சமூகம் விழித்தெழ வேண்டுமெனவும் புதியன வற்றிலே நல்லனவற்றை ஏற்று முன்னேற வேண்டுமெனவும் விரும்பிய ஆங்கிலக் கல்வி பயின்ற அறிஞர் தமிழர்தம் பண்டைய பெருமையை எடுத்துக்காட்டுவதன் மூலம் அவ்வாறு செய்யலாம் எனக் கருதினர் போலும். பிள்ளையவர்களும் அவ்வழியிலே சிந்தித்தார் என்பது, அவருடைய 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலின் முடிவுரை மூலம் புலனாகும்.

கனகசபைப்பிள்ளையுடைய தமிழ்ப்பற்றை அரசியல் விடுதலைத் தாகத்தோடு தொடர்புபடுத்துவது பொருந்தாது. சைமன் காசிச்செட்டி, வி கோ. சூரிய நாராயண சாஸ்திரி, கனகசபைப்பிள்ளை போன்றவர்களுடைய தமிழார்வம் பண்டைய நிலையை அறிவுறுத்தித் தமிழர்தம் சமூகநிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டிருந்ததேயொழிய அரசியல் விடுதலையைக்குறிக்கோளாகக் கொள்ளவில்லை. சைமன் காசிச்செட்டி தமது 'தமிழ் புளூராக்' என்னும் நூலின் முகவுரையிலே, ''தமிழரை அடக்கித் தன்புறுத்திய ஆதிக்கம் நீங்கிவிட்டது. அதனிடத்திலே, இறையருளாலே ஏற்பட்ட, தமிழர்தம் சமூகநிலையை நன்னிலைக்குக் கொண்டுவரக் கூடியதும் அவர்தம் கல்வித் தரத்தை உயர்த்தக் கூடியதுமான ஆட்சி ஏற்பட்டுள்ளது'' என்று ஆங்கிலேயர் ஆட்சிக்கு மு

மன் கூறினர். விக்ரோறியா மகாராணி இறந்தபோது கையறுநிலை பாடிய பரிதிமாற்கலைஞர் அவர்கள் எட்வேட் (Edward VII) 1902-ம் ஆண்டிலே அரசுகட்டிலேறியபோது 'முடிசூட்டிரட்டை மணிமாலை' பாடினர்[20]. எட்வேட் இளவரசராக இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது கனகசபைப்பிள்ளை ஆங்கிலத்திலே வரவேற்புக் கவிதைகள் பாடினர். இளவரசர் இந்தியாவையடைந்த நாளிலே 'மதராஸ் மெயில்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையிலே அவை வெளிவந்தன. மேலும் பிள்ளையவர்கள், "இறுதியில் மேம்பட்ட உரம் வாய்ந்த வெளிறிய முகம் படைத்த ஓரினத்தவர் வானகத்திலிருந்து திடுமென வந்ததுபோல வந்துசேர்ந்து, தமிழரையும் இந்தியாவிலுள்ள பிற இனத்தவர்களையும் அரசியல் குழப்ப நிலைகளிலிருந்தும் ஆட்சிக் குளறுபடிகளிலிருந்தும் காத்து ஆண்டுள்ளனர். தொலை தூரத்திலுள்ள ஒரு தீவிலிருந்து அவர்கள் ஆரிடர் மிக்க மாகடல்கள் கடந்து தம் வாணிக வளர்ச்சிக்குரிய புதிய வாணிகக் களங்கள் நாடி வந்தனர். அமைதிவாய்ந்த வாணிகராக வந்து காலூன்றிய அவர்கள் தங்கள் ஒற்றுமை, ஊக்கம், அறிவுத்திறம் ஆகியவற்ருல் இங்கே மொகலாயரோ, மகதப் பேரரசரோ ஆண்ட பேரரசுகளை விடப் பாரிய பெரும் பேரரசை நிறுவினர். ஆங்கில நாட்டின் இக் காவலின்கீழ் தமிழர் இன்று தங்குதடையற்ற ஆழ்ந்த வாழ்வமைதி பெற்றுள்ளனர்"[21] என்று கூறுவதும் காண்க.

தமிழ்ப்பற்று மிக்க கனகசபைப்பிள்ளை தமிழ் இலக்கியக் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபாடுடையவராக விளங்கினர். இவ்வீடுபாட்டினல் அச்சுவாகனமேருத நூல்களைத் தேடிப் பெறுவதிலே அக்கறையுடையவராக இருந்தார். உத்தியோக நிமித்தம் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்யும்போது தமிழ்ச்

சுவடிகளைச் சேகரிப்பதையும் தமது தொழிலாகக் கொண்டார். அவர் தமது சுயசரிதத்தை எழுதி வெளியிட்டிருப்பின் ஏடு தேடும் முயற்சியிலே அவர் பெற்ற அனுபவங்களை நாம் அறியக்கூடியதாக இருந் திருக்கும். பிள்ளையவர்கள் பல ஏட்டுப்பிரதிகளைத் தேடிப்பெற்றுத் தொகுத்து வைத்திருந்தார். ஏட்டுப் பிரதிகளைக் கடிதத்திலே பெயர்த்தெழுதுவதற்கு அப் பாவுப்பிள்ளை என்பவரைத் தம்முடனே இருபது ஆண்டுகளாக வைத்திருந்தார். பிள்ளையவர்கள் தாம் தேடிப்பெற்ற அரிய பிரதிகளைப் பதிப்பாசிரியர்க ளுக்குக் கொடுத்துதவினர். சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்த கலித்தொகை, சூளாமணி என்பன வற்றின் பரிசோதனைக்கு உதவிய பிரதிகளிலே கனக சபைப்பிள்ளையின் பிரதிகளும் இடம்பெற்றன. சூளா மணிப் பதிப்பை இடையிலே நிறுத்திவிட்டுத் தாமோ தரம்பிள்ளை மேலும் பிரதிகள் தேடுவதற்குக் காரண மாக விருந்த பிரதி கனகசபைப்பிள்ளைக்குரியதாகும். தாமோதரம்பிள்ளை சூளாமணிப் பதிப்புரையிலே, "எனது நண்பரும் பண்டைத் தமிழ்நூல் ஆராய்ச் சியே தமக்குப் பொழுதுபோகும் விநோதமாக உடை யவருஞ் சென்னைத் தபாலாபீசுகளின் மேல்விசா ரணைத் தலைவருமாகிய ஸ்ரீ மல்லாகம் வி. கனக சபைப்பிள்ளையவர்கள்" என்று பிள்ளையவர்களைப் போற்றுகிருர்[22]. உ. வே. சாமிநாதையர் பத்துப்பாட் டினைப் பரிசோதனை செய்த காலத்துப் பிள்ளையவர் கள் தமது உரைப் பிரதியைக் கொடுத்துதவினர். ஐயரவர்கள் சிலப்பதிகாரத்தைப் பரிசோதனைசெய்த போது பிரதிகளைக் கொடுத்துதவிய ஈழத்தைச் சேர்ந்த மூவரிலே கனகசபைப்பிள்ளையவர்களுமொரு வராவர்[23]. பிள்ளையவர்கள் அடியார்க்கு நல்லாருரை யுடன் கூடிய பிரதியையும் மூலம் மட்டுமேயுள்ள பிரதியையும் கொடுத்து ஐயரவர்களை ஊக்குவித்தார். புறநானூற்றுப் பரிசோதனையின்போது பிள்ளையவர்கள்

ஐயரவர்களுக்கு மூலப் பிரதி வழங்கினர். சாமிநாதையர் தமது பத்துப்பாட்டு முகவுரையிலே, "......... பழைய தமிழ் நூலாராய்ச்சியையே இடைவிடாது செய்தொழுகுகின்றவராகிய தபால் ஸுபரின்டெண்டன்ட் ஸ்ரீ வி. கனகசபைபிள்ளையவர்கள்" என்று பிள்ளையவர்களைக் குறிப்பிடுகிருர்[24]. பதிப்பாசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, "கனகசபைப்பிள்ளை போன்று விரிந்த மனப்பான்மை தமிழறிஞர்களுக்கு அமைந்திருக்குமாயின் எத்தனையோ அரிய பழந்தமிழ் நூல்களை நாம் இன்று இழந்திருக்கமாட்டோம்" என்று பிள்ளையவர்களின் பெருந்தன்மையைப் போற்றுகிருர்[25]. இச்சந்தர்ப்பத்திலே பல ஏட்டுப் பிரதிகளைச் சேர்த்து வைத்திருந்த உ. வே. சாமிநாதையரைப் பற்றி எஸ். வையாபுரிப்பிள்ளை கூறுவதையும் ஈண்டு குறிப்பிடுதல் பொருத்தமாகும். அவர், "... பிரதிகள் தேடிப் பண்டை நூல்களைப் பதிப்பிடுவதில் முயன்றுவரும் அறிஞர்களுக்குப் பிரதிகளை ஈந்து உவக்கும் இன்பமும் எளிதில் கிடைப்பதா? இல்லை. ஐயருக்கு இந்த நல்லூழும் விதிக்கப்படவில்லை. இதனல் ஒருவருக்கும் இவர் தம்மிடமுள்ள பிரதிகளைக் கொடுத்ததில்லை என்பது என் கருத்தல்ல. எனக்குச் சில பிரதிகள் உதவியிருக்கிருர்கள் என்பதை நன்றியுடன் பாராட்டுகிறேன். நானும் இவர்களுக்குப் பிரதிகள் உதவியுள்ளேன். கேட்போர் தகுதியையும் நோக்கத்தின் தூய்மையையும் மாத்திரம் கருதி இவர் பிரதிகள் உதவுவதில்லை. விலக்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான் இவர் உதவுவார். அவ்வாறு தரும் பிரதிகளும் பெரும்பாலும் பயனற்றனவாகவே இருக்கும். தாம் பல ஆண்டுகளாக அரிதில் தேடி வைத்த பொருளை ஒருவர் கேட்டவுடனே கொடுத்துவிட எளிதில் மனம் வருமா? ஆனல், தாம் உதவாதது மாத்திரமேயன்றி, பிற பேரறிஞர்களும்

நூலைப் பதிப்பிடுவோர்க்கு உதவுதல் கூடாது என்று இவர் கடிந்துரைத்ததை நான் நன்கு அறிவேன். கம்பர்விலாசம் இராஜகோபாலையங்கார் அகநானூற்றைப் பதிப்பிட எடுத்துக்கொண்டபொழுது, அவருக்கு ஸேது ஸம்ஸ்தான மகாவித்வான் ரா. இராகவையங்கார் பிரதிகள் கொடுத்தும் பிறவாறும் உதவக்கூடாது என்று இவர் தடை செய்தனர். அகநானூற்றை ஐயர் தாமே பதிப்பிடக் கருதியிருந்தனர். ஒரு வேளை, இக்கருத்து இவரைக் கடுமையுள்ளத்தாராகச் செய்திருக்கலாம். எனினும் இவ்வகையான மனப்பான்மைகள் ஐயருக்கு இருந்தமை தமிழ் மக்களது துர்ப்பாக்கியமே'' என்பர்[26].

ஏட்டுப்பிரதிகளைக் கொடுத்து உதவிபுரிந்ததேயன்றித் தாம் அருமையாகக் கண்டு தெளிந்த ஆராய்ச்சியுண்மைகளையும் பிள்ளையவர்கள் தமிழறிஞர்களுக்கு மனமுவந்து வெளியிட்டு உதவி வந்தனர். ''அரசர்களை இன்ன இடத்துத் துஞ்சினரென்று குறித்தல் ஒரு சம்பிரதாயம். அதனை அக்காலத்தில் அறிந்து கொள்ளாமல் இருந்த எனக்கு, 'துஞ்சிய' என்பதற்கு 'இறந்த' என்ற பொருள் கொள்ளுவது உசிதமாகப் படவில்லை. இந்த விஷயத்தை கனகசபைப்பிள்ளை தெளிவித்தார். துஞ்சியவென்பதற்கு இறந்தவென்றே பொருள் கொள்ளவேண்டுமென்று அவர் எழுதினர். அதற்கு ஆதாரமாகச் சிலப்பதிகாரம், தேவாரம் என்பவற்றை எடுத்துக்காட்டினர். 'இப்படியே அரசர்கள் இறந்த காலத்தை அவர்கள் பெயர்க்கு விசேடணமாக்கிக் கூறுதல், கோழிக்கோட்டு ஸாமூதிரி அரசரின் பரம்பரை வழக்கம்; திருவனந்தபுரத்தரசரின் வழக்கமும் இதுவே' என்று பிறவிடங்களிலுள்ள வழக்கத்தையும் தெரிவித்தார்'' என்பர் 'என்சரித்திர' ஆசிரியர்[27]. இச்செய்திகள் சாமிநாதையர் வெளியிட்ட புறநானூற்றின் முதற் பதிப்பிலும் (1894) இடம்பெறு

கின்றன. ''உண்மையெனத் தெளிந்தவற்றை மறைத்து வைப்பதனுற் சிறிதும் பயனில்லை; ஆராய்ச்சி பெருகாது; தமிழறிவு பரவாது. இவ்விளைவினை நன்குக உணர்ந்திருந்தனர் நம் கனகசபைப்பிள்ளை''[28].

தமிழரின் பண்டைய பண்பாட்டினை விளக்குவதன் மூலம் தமிழ்பேசும் சமூகத்திலே புத்துணர்ச்சியைத் தூண்டலாம் என்று கனவுகண்ட பிள்ளையவர்கள் பண்டைய நூல்களின் ஏட்டுப்பிரதிகளைத் தேடிப்பெற்று, கையெழுத்துப் பிரதிகளாக அவற்றை எழுதுவித்துத் தொகுத்துத் தமது ஆராய்ச்சிக்கு வேண்டிய செய்திகளை வரிசைப்படுத்தத் தொடங்கிய காலத்திலே 'தமிழர் வரலாறு' இருந்த நிலையை நோக்கும்போது பிள்ளையவர்களின் முயற்சியின் அருமைப்பாடு புலனுகும்.

பதினுரும் நூற்ருண்டிலிருந்து மேலைத்தேயத்தவர் இந்தியக்கலை, பண்பாடு சம்பந்தமான விடயங்களிலே கொண்டிருந்த அக்கறை தென்னகத்தோடு ஒட்டியதாக இருந்தது. இந்நிலை பதினெட்டாம் நூற்ருண்டின் கடைக்கூறிலே மாற்றமடைந்தது 1784-ம் ஆண்டு கல்கத்தாவிலே 'ஆசிய சங்கம்' ( Asiatic Society ) நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் தோற்றத்தில் முக்கிய பங்குகொண்ட வில்லியம் ஜோன்ஸ் பிரபு (Sir William Jones) 1786-ம் ஆண்டு சங்கத மொழிக்கும் ஐரோப்பிய மொழிகளுக்குமிடையேயுள்ள தொடர்புகள் பற்றி விரித்துரைத்தார். அக்காலம் முதல் இந்திய - ஐரோப்பிய மொழிகளின் ஒப்பியலிலக்கணம் புது நெறியிலே செல்லத்தொடங்கிற்று. ''பண்பாட்டு வரலாற்றிலே, ஐரோப்பாவிலே தோன்றிய சமய மறுமலர்ச்சிக் (Renaissance) காலத்திற்குப் பின்பு கி. பி. பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்கூறிலே சங்கத மொழி இலக்கியத்தைக் கண்டு பிடித்த சம்பவத்திற்குள்ள உலக வரலாற்று முக்கியத்துவம் வேறெந்தச் சம்பவத்திற்கும்

இல்லை'' என்பர் ஆதர் மக்டொனெல் (Arthur Macdonell)[29]. சங்கத மொழிக்கும் ஐரோப்பிய மொழிக் குமிடையேயுள்ள தொடர்புகளைக் கண்ட மேனாட்டறி ஞர் இந்தியவியலிலே (Indology) தமது கவனத்தை வடதிசையை நோக்கித் திருப்பினார்கள். பிலியோசா அவர்கள் ( J. Filliozat ) அக்காலகட்டத்தைப் பற்றி மேல்வருமாறு கூறுவர்:

"Scholars turned then almost exclusively towards Sanskrit and Vedic studies in order to discover the origins of Indian civilization. The dominant idea among them was that the main current of Indian culture was Aryan and that Dravidian culture was partly from an old genuine substratum, and partly inspired by an Aryan one and even completely dominated by the Aryan".[30] இந்நிலையிலே 'திராவிட மொழிகள்' கூட இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தனவாகக் கருதப்பட்டன. சாமிநாததேசிகரும் சுப்பிரமணிய தீட்சிதரும் பதினேழாம் நூற்றாண்டிலேயே தமிழ் மொழியின் தாய்மொழியாகச் சங்கதத்தைக் கருதிய வர்கள். அவர்கள் கருத்திற்குச் சங்கதத்தின் மீது அவர் கள் கொண்ட பற்றுக் காரணமாயிருந்தது. பதினெட் டாம் நூற்றாண்டின் இறுதியிற் சங்கதத்திற்கும் ஐரோப் பிய மொழிகளுக்குமிடையேயுள்ள தொடர்புகள் நிறு வப்பட்ட காலத்தைத் தொடர்ந்தும் இந்தியாவின் ஏனைய மொழிகள் சங்கதத்தின் கிளைமொழிகளாகக் கருதப்பட்டன. வில்லியம் கரி (William Carey) தாம் எழு திய சங்கதமொழி இலக்கணம்[31], தெலுங்குமொழி இலக் கணம்[32] என்பனவற்றின் முகவுரைகளிலேயே தென் னாட்டு மொழிகளையும் சங்கதத்தின் கிளை மொழிகளாகக் கருதியவர். எல்லிஸ் (F.W. Ellis)[33], ரெய்லர் (W. Taylor)[34] போன்ற சிலரே அக்கருத்தை ஆதரிக்கவில்லை. கால்ட் வெல் அவர்களுடைய 'ஒப்பியலிலக்கண நூல்'[35] சங்கத மொழி திராவிட மொழிகளின் தாய்மொழியல்ல என்

பதைத் தெளிவாக நிறுவியது. கோவர் (C. E. Gover)[36], எம். சேஷகிரி சாஸ்திரி[37] போன்றவர்கள் கால்ட்வெல் திராவிட மொழிகளின் தனித்தன்மை பற்றிக் கூறிய கருத்துக்களை மறுத்துரைத்தபோதும், அவர் கூறிய கருத்துக்களை மொழியியலாராய்ச்சியிலீடுபட்ட பெரும் பான்மையினோர் ஏற்றுக்கொண்டனர்[38].

கால்ட்வெல் அவர்களுடைய 'ஒப்பியலிலக்கண நூல்' சைமன் காசிச்செட்டி, தாமோதரம்பிள்ளை போன்றவர்களைத் தமிழாராய்ச்சியிலே ஊக்குவித்த போதும், மேனாட்டறிஞரை, அவர்கள் பின்பற்றிவந்த பழைய நெறியிலிருந்து திசை திருப்பவில்லை என்றே கூறவேண்டும். ஏனெனில், தமிழ்மொழியின் தனித் தன்மையை ஒத்துக்கொண்ட கால்ட்வெல் கூட, திரா விட மொழிகளிலே பண்டைய இலக்கியங்களையுடைய தமிழ்மொழியின் இலக்கிய சரிதம் கி. பி எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றுண்டில் ஆரம்பிப்பதாகக் கருதினார். இக்கருத்து மேனாட்டறிஞர் சிந்தனைப் போக்கைப் பெருமளவிற்கு இயக்கி வந்தது என்று கருத இடமுண்டு[39]. எனவே தமிழருடைய பண்பாடு, நாகரிகம் பற்றிய ஆராய்ச்சிகளை மேனாட்டறிஞர் விரிவாக மேற்கொள்ளவில்லை. இந்நிலை வி. கனக சபைப்பிள்ளை, எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், எம். ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலியோருடைய நூல்களிற் சில வெளிவந்த பின்பு கூட மாறவில்லை. வின்சென்ற் சிமித் (Vincent Smith) எழுதிய 'இந்திய வரலாறு' தமிழகத்திற்குத் தகுந்த இடமளிக்கவில்லை.[40] றப்சன் (E. J. Rapson) பதிப்பித்த 'இந்திய வரலாறு' என்னும் நூலின் முதற்பெருகுதியின் 24-ம் அதிகாரத்தை எழு திய பாணற் (L. D. Barnett) பதினொரு பக்கங்களிலே (593 - 603) 'தென்னிந்தியாவின் பண்டையவரலாறு' பற்றி எழுதியுள்ளார்[41], இப்பதினொரு பக்கங்களிலே தமிழகத்தின் பண்டைய வரலாற்றிற்கு ஐந்து பக்கங்

கள் அளிக்கப்பட்டுள்ளன. இத்தகைய மனநிலை நிலவிய காலத்திலே பண்டைத் தமிழர் பற்றிய ஆராய்ச்சியிலே வளர்ச்சியெதுவும் எதிர்பார்ப்பது பொருத்தமில்லை.

திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலியனவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தளித்த[42] ஜி. யு. போப் அவர்கள் எழுதிய வரலாறு பற்றிய நூல்கள் மாணுக்கருக்கான கையேடுகளாக விளங்கியதோடு தமிழ்நாட்டு வரலாற்ருேடு சிறிதளவே தொடர்புடையனவாக விளங்கின[43]. கால்ட்வெல் எழுதிய 'திருநெல்வேலி வரலாறு'[44] பண்டைக்கால வரலாற்றிற்குரிய செய்திகள் கிடைக்குமாறுகள் துலக்கமுருத காலத்திலே இயற்றப்பட்டது. செவல் (R. Sewell) எழுதிய 'தென்னிந்திய அரசபரம்பரைகளின் விவரணம்' என்னும் நூலும்[45] அதே சூழலிலே எழுந்ததாகும்.

மேனுட்டறிஞர் எழுதிய நூல்கள் மட்டுமன்றி இந்தியர் எழுதிய வரலாற்று நூல்களும் தமிழகத்தின் பண்டைய வரலாற்றிற்குக் கனகசபைப்பிள்ளைக்கு முன்பு போதிய இடமளிக்கவில்லை. ஆர். ஜி. பண்டர்கார் (R. G. Bhandardar) எழுதிய 'தக்காணத்தின் பண்டைய வரலாறு' என்னும் நூலிலே[46] தக்காணத்தின் கீழ்ப்பகுதியின் வரலாற்றினைக் காணமுடியாது[47]. இவ்வாறு பண்டைத் தமிழகத்தின் வரலாறு இருண்ட நிலையிலிருந்த காலத்திலேதான் கனகசபைப்பிள்ளை 'மதராஸ் றிவியூ' (Madras Review) என்னும் சஞ்சிகையிலே 1895-ம் ஆண்டு, பின்பு 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலாகத் தொகுக்கப்பட்ட கட்டுரைகளை எழுதத் தொடங்கினர்.

கனகசபைப்பிள்ளை பழந்தமிழர் வரலாற்றினை எழுதுவதற்குத் தூண்டுகோலாக அமையும் முறையிற் பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதி நிகழ்ச்சிகள்

சில அமைந்தன. இவற்றிலே தொன்மை அல்லது பழமை ஆராய்ச்சி பற்றிய இக்காலகட்டத்து ஈடு பாட்டினைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். 'ஆசிய சங் கம்' (Asiatic Society) என்னும் நிறுவனமும் அதன் வெளியீடாகிய 'ஆசிய ஆய்வுகள்' (Asiatic Researches) என்னும் சஞ்சிகையும் மேனாட்டறிஞரையும் இந்திய அறிஞரையும் தொன்மை ஆராய்ச்சி வழியிலே தூண்டி நின்றன. சங்கதமொழியின் பழமையையும் ஆரிய நாகரிகத்தின் பெருமையையும் நிறுவ முயன்ற 'ஆசிய ஆய்வுகள்' தென்னகத்தின் பழமை பற்றிய கருத்துப் பரிமாறல்களுக்கும் இடமளித்து வந்தது. இந்தியத் தொன்மை ஆராய்ச்சியில் 'ஆசிய ஆய்வு கள்' ஏற்படுத்திய விழிப்பினைத் தொடர்ந்து அலெக்சான்டர் கன்னிங்காம் (Alexander Cunningham) அவர்கள் தலைமையிலே வட இந்தியாவுக்கு 1862-ம் ஆண்டிலே தொல்பொருள் ஆராய்ச்சித்துறை (Dept. of Archaeology) நிறுவப்பட்டது. நான்காண்டுகளுக்குப் பின்பு இத்துறை மூடப்பட்டபோதும் மீண்டும் 1870-ம் ஆண்டு கன்னிங்காம் அவர்களின் தலைமையில் அது இயங்கத் தொடங்கியது. இத்துறை வட இந்தியாவின் தொல்பொருள் ஆராய்ச்சியைச் செய்யும்பொருட்டு நிறுவப்பட்டபோதும், அதனையொட்டித் தக்காணத் திற்கும் ஒரு துறையை ஏற்படுத்தத் தூண்டுகோலாக அமைந்தது. பம்பாய், சென்னை ஆகிய இரு மாகாணங் களின் தொல்பொருள் ஆராய்ச்சியைக் கவனிப்பதற் காக 1874-ம் ஆண்டு வேருெரு தொல்பொருள் ஆராய்ச்சித்துறை நிறுவப்பட்டது. வட இந்தியா, தென் னிந்தியா ஆகிய இருபகுதிகளுக்கும் தனித்தனியே அமைக்கப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சித்துறைகள் 1885-ம் ஆண்டு ஒரே துறையாக இணைக்கப்பட்டன. அதன் தலைவராக (Director General of Archaeology) ஜே. பர்கஸ் (J. Burges) நியமனம் பெற்ருர். அடுத்த ஆண்டிலே ஹுல்ஸ் (Eugen Hultzsch 1857 - 1927)

அவர்கள் சென்னை அரசாங்கத்தின் 'சாசன ஆய் வாளர்' (Epigraphist) என்னும் பதவியை ஏற்றுக் கொண்டார். இக்காலம் முதலாகத் தென்னிந்திய தொல்பொருள் ஆராய்ச்சியிலே சூடு பிறந்தது. ஹூள்ஸ் அவர்கள் தென்னிந்திய சாசனங்களின் முதலாம் தொகுதியை 1890-ம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார். இக்காலத்திலே ஹூள்ஸ் அவர்களின் உதவியாளராக வி. வெங்கையா பணிபுரிந்தார். பர்கஸ் அவர்கள் 'இந்திய சாசனங்கள்' (Epigraphia Indica) என்னும் தொடரின் முதலாம் தொகுதியை 1892-ம் ஆண்டு வெளியிட்டார்.

சாசன ஆராய்ச்சியில் ஈடுபட்ட பர்கஸ் அவர்கள் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் தலைமைப் பத வியை ஏற்பதற்கு முன்பே 'இந்தியன் அன்ரிகுவரி' (Indian Antiquary) என்னும் சஞ்சிகையை ஆரம்பித்து நடத்திவந்தார்.

"The Indian Antiquary, A Journal of Oriental Research in Archaeology, History, Literature, Languages, Folklore, etc., etc."

என்னும் சஞ்சிகையின் முதல் இதழ் 1872-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி வெளியிடப்பெற்றது. முதலிதழிலே இடம்பெறும் மேல்வரும் பகுதி இக்கால கட்டத்திலே தொன்மை ஆராய்ச்சி பெற்ற செல்வாக் கினை எடுத்துக்காட்டுகின்றது: "இந்தியாவின் தொன்மை பற்றிய பல்வேறு துறைகளிலும் இந்திய நாட்டறிஞரும் மேனாட்டறிஞரும் காட்டுகின்ற மிகுந்த ஈடுபாடு இச்சஞ்சிகையை வெளியிடத் திட்டமிட்டவர் களை, அதனை இந்தியாவின் பல்வேறு மாகாணங்களில் வசிப்பவரும் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய தேசங் களில் வசிப்பவருமான கீழைத்தேய ஆராய்ச்சியாள ருக்கும் தொல்பொருள் ஆராய்ச்சியாளருக்குமிடையே போதுமான தொடர்பு ஏற்படுத்தக்கூடிய ஒரு சாதன மாக அமையுமாறு வெளியிடத்தூண்டியது".

கனகசபைப்பிள்ளை இந்தியாவின் தொன்மை பற்றிய ஆராய்ச்சியிலே ஈடுபட்டோர் இலக்கியச் சான்றுகளைச் சாசனச் செய்திகள் மூலம் உறுதிப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளை அறிந்திருந்தார். வட இந்தியாவின் தொன்மை ஆராய்ச்சியே அக்கால அறிஞரின் கவனத்தை மிகவும் ஈர்ந்தபோதும் ஆங்காங்கே சிலர் தென்னகத்தின் பழமை பற்றியும் கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். இவர்கள் கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியன தந்த சில செய்திகளையும் தம் கூற்றுகளுக்கு ஆதாரமாகப் பயன்படுத்தி வந்தனர். மலபார் கையேடு (Malabar Manual), சேலம் மாவட்டக் கையேடு (Salem District Manual) முதலியனவற்றின் ஆசிரியர்கள் அவ்வப்பகுதிகளிலே வழங்கிய பூர்வீகச் செய்திகளையும் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு உதவக்கூடிய சாசனச் செய்திகளையும் பிற செய்திகளையும் தம் நூல்களிலே பயன்படுத்தினர்கள். "இலக்கியச் செய்திகள் எல்லாம் புனைந்துரை சிறிது கலந்த நூல் வழக்கில் அமைந்தவை. கல்வெட்டுச் செய்திகள் எல்லாம் புனைந்துரை கலவா உலக வழக்கில் அமைந்தவை"[48] என்ற கருத்து வலுப்பெறத் தொடங்கிய காலகட்டத்திலே பிள்ளையவர்கள் தமிழாராய்ச்சி செய்தார். பிள்ளையவர்கள், "உண்மையான தமிழுணர்ச்சிக்கும் சுதேச சரித்திர உணர்ச்சிக்கும் சிலாசாசன அறிவு இன்றியமையாதென உணர்ந்து, சாசனங்களைக் கற்கத் தொடங்கினர். சுற்றுப் பிரயாணங்களிற் பல கோயில்களைப் பார்வையிட்டும் ஆங்காங்குள்ள சிலாசாசனங்களைக் குறித்தெழுதித் தொகுத்தும் வந்தனர். சிலாசாசனங்கள் பலவற்றை அப்பாவுப்பிள்ளையைக் கொண்டு முறையாகப் பிரதி செய்வித்தனர்"[49]. 'குலோத்துங்க சோழன் கல்வெட்டு' எனும் தலைப்பிலே தாம் கண்ட கல்வெட்டொன்றின் மூலத்தையும் அதன் மொழிபெயர்ப்பையும் 'இந்தியன் அன்ரிகுவரி' என்னும் சஞ்சிகையிலே 1892-ம் ஆண்டு வெளியிட்டார்.[50] கலிங்

கத்துப்பரணியின் 'இராச பாரம்பரியம்' தரும் சோழர் பரம்பரையின் பட்டியலைக் கல்வெட்டு, செப்பேடு ஆகியனவற்றின் உதவியோடு ஆராய எடுத்துக் கொண்ட முயற்சி 'செந்தமிழ்' என்னும் சஞ்சிகையில் 1902–1903-ம் ஆண்டுகளிலே வெளிவந்த 'சோழ சக்கர வர்த்திகள்' என்னும் கட்டுரைத் தொடரிலே புலனாகின்றது. ஆயினும் பண்டைத் தமிழர் செய்திகளைத் தரும் கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியனவற்றிற் பல 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூல் வெளிவந்த காலத்திற்குப் பின்பே பிரசுரிக்கப்பட்டன.[50A] இதனாற் பிள்ளையவர்கள் சாசனங்களைச் சில செய்திகளுக்கே பயன்படுத்த முடிந்தது. பிள்ளையவர்கள் தமது கட்டுரைத் தொடருக்குப் பண்டைய இலக்கிய நூல்கள் தரும் செய்திகளையே பெருமளவிற்குப் பயன்படுத்த வேண்டிய நிலையிலிருந்தார்.

கால்ட்வெல் (R. Caldwell), சைமன் காசிச்செட்டி முதலியோரின் காலத்திலே வெளிவராத பண்டைத் தமிழரின் பண்பாடு, நாகரிகம், கலை முதலியனவற்றை உணர வாயிலாக அமையக்கூடிய இலக்கிய நூல்களிற் சில பிள்ளையவர்களின் காலத்திலே வெளிவந்தன. சி. வை. தாமோதரம்பிள்ளை 1887-ம் ஆண்டிலே கலித்தொகையை வெளியிட்டதன் மூலம் பண்டைய இலக்கியப் பதிப்பு முயற்சிகளுக்கு அடிக்கல் நாட்டினர். பத்துப்பாட்டும் புறநானூறும் முறையே 1889-ம், 1894-ம் ஆண்டுகளிலே வெளிவந்தன. பிள்ளையவர்கள் 'மதராஸ் றிவியூ' (Madras Review) என்னும் சஞ்சிகையிலே தமது கட்டுரைத் தொடரை எழுதத் தொடங்கிய காலத்தினையடுத்து, ஏழு ஆண்டுகளின் பின்பு, 1903-ம் ஆண்டிலே ஐங்குறுநூறு வெளியிடப்பெற்றது. தொல்காப்பியம் பொருளதிகாரம் உரையுடன் 1885-ம் ஆண்டிலே பிரசுரிக்கப்பட்டது.

'முச்சங்க வரலாறு' கூறும் இறையனுரகப் பொருளுரை 1883-ம் ஆண்டிலே பதிப்பிக்கப்பெற்றது. திருமயிலை சண்முகம்பிள்ளை மணிமேகலையை 1894-ம் ஆண்டிலே வெளியிட்டார். சிலப்பதிகாரம் முழுவதும் 1892-ம் ஆண்டிலே உ. வே. சாமிநாதையராற் பதிப்பிக்கப் பெற்றது. இப்பதிப்புகளிலே சிலப்பதிகாரத்தின் பிரசுரம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

மானிப்பாய் பொ. குமாரசாமி முதலியாரின் தூண்டுதலின் பேரில்[51] உ. வே. சாமிநாதையர் சிலப்பதிகாரத்தை வெளியிட்ட காலம் முதலாக, அந்நூல் தமிழ் ஆராய்ச்சியாளரிடையே செல்வாக்குப் பெற்றதாக விளங்கியது. "... சிலப்பதிகாரம் வெளிவரவே, பண்டைத் தமிழ்நாட்டின் இயல்பும், தமிழில் இருந்த கலைப் பரப்பின் சிறப்பும் யாவர்க்கும் புலப்படலாயின. 'கண்டறியாதன கண்டோம்' என்று புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் உவகைக்கடலில் மூழ்கினர். சிலப்பதிகாரம் மிக அரிய சரித்திரச் செய்திகளை உடையது. தமிழ்நாட்டு அரசனுகிய செங்குட்டுவன் வடநாடு சென்று வடவேந்தர்களை வென்று கண்ணகியின் படிமச்சிலை கொணர்ந்த செய்தி மிக்க விம்மிதத்தை உண்டாக்கியது. அன்றியும், சங்ககாலத்தை நிர்ணயிப்பதற்குச் சிலப்பதிகாரம் மிகவும் முக்கியமான ஆதாரமாக இருக்கிறது. தமிழ்நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியில் வல்ல பலருடைய கவனத்தை அந்நூல் கவர்ந்தது" என்பர் 'என் சரித்திர' ஆசிரியர்[52]. சிலப்பதிகாரத்தின் வெளியீடு தமிழ் ஆராய்ச்சியாளரிடையே ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி 'என் சரித்திர' ஆசிரியர் கூறியன ஏனைய அறிஞராலும் ஒத்துக்கொள்ளப்பட்டனவேயாம்[53]. பொ. குமாரசாமி முதலியார்[54] கொழும்பு நூதனசாலையிலே 1893-ம் ஆண்டு 'ஒக்ரோபர்' மாதம் 28 ம் தேதி நடைபெற்ற 'ரோயல் ஏசியரிக்' சங்கத்தின் (Royal Asiatic Society) கூட்டத்திலே சிலப்பதிகாரத்தின் வரலாற்று முக்கியத்து

வத்தைப் பற்றி எடுத்துரைத்து, சாமிநாதையருடைய தொண்டினைப் போற்றினர்[55]. கனகசபைப்பிள்ளையின் 'தமிழர் வரலாறு' பற்றிய கட்டுரைத் தொடருக்குச் சிலப்பதிகாரத்தின் வெளியீடு தூண்டுகோலாக அமைந்ததோடு அவருடைய ஆராய்ச்சிகளுக்கு மையமாகவும் விளங்கிற்று.

'கடைச்சங்க' த்தின் காலத்தை நிர்ணயிஞ் செய்வதற்குச் சிலப்பதிகாரச் செய்திகள் உதவுவதாகக் கனகசபைப்பிள்ளை போன்றவர்கள் கருதினர்கள். சங்கதப் பேராசிரியராகத் திகழ்ந்த எம். சேஷகிரி சாஸ்திரியார் சிலப்பதிகாரத்திலே குறிக்கப்பட்ட 'கயவாகு'[56] ஈழத்துக் 'காலக் கணிப்பேடு'களிலே (Chronicles) இடம்பெறும் முதலாம் 'கஜபாகு' என்று பெயரொற்றுமையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு துணிந்தார்[57]. சிலப்பதிகாரத்தின் பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதையரும் இதே துணிபுடையவர்[58]. பொ. குமாரசாமி தாம் எழுதிய இரு கட்டுரைகளிலே[59] 'கயவாகு' பற்றிய செய்தியை ஆதாரமாகக் கொண்டு சிலப்பதிகாரத்தின் காலத்தை நிறுவ முயன்றார். பொ. குமாரசாமியின் துணிபைத் 'தென்னிந்திய சாசனங்கள்' என்னும் தொகுதிகளை வெளியிட்ட ஹுல்ஸ் (Hultzsch) ஏற்றுக்கொள்ளவில்லை. பெயரொற்றுமையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு துணிதல் பொருந்தாதென்றும் அகச்சான்றுகள் மூலம் துணியப்பட வேண்டுமென்றும் ஹுல்ஸ் கருதினர். இவ்வாறு ஹுல்ஸ் கருதுவதற்கு ஈழத்துப் பண்டைய வரலாற்றின் காலவரன்முறை நுண்ணிதாக ஆராயப்படாமல் இருந்ததுமொரு காரணமாகும்[60]. ஆயினும் கனகசபைப்பிள்ளை முன்னையோர் போலவே கயவாகு பற்றிய செய்தியைச் சிலப்பதிகாரத்தின் காலத்தை நிறுவுவதற்கு ஒரு முக்கிய சான்றாகக் கொண்டார். கயவாகு பற்றிய செய்தியை அரண்செய்யும் வேறொரு

சான்று சிலப்பதிகாரத்திலுள்ளதாகப் பிள்ளையவர்கள் கருதினர். செங்குட்டுவன் வடநாடு சென்றகாலை, கங்கையைக் கடக்க, நூற்றுவர்கன்னர்[61] என்பவர் துணைபுரிந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. 'நூற்றுவர்கன்னர்' என்னும் தொடர் 'சதகர்ணி' என்னுஞ் சொல்லின் மொழிபெயர்ப்பு என்று பிள்ளையவர்கள் எண்ணினர்[62]. அவ்வெண்ணத்தினால் மகத சாம்ராஜ்யத்தை ஆண்ட முதலாம் சதகர்ணியே செங்குட்டுவன் காலத்தவனாதல் வேண்டுமென்று துணிந்தார். ஈழத்துக் கஜபாகு, ஆந்திரநாட்டுச் சதகர்ணி என்னும் இருவருடைய காலத்தினடிப்படையிலே செங்குட்டுவன் காலம் நிர்ணயிக்கப்பட்டது. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் 'இளங்கோவடிகள்' சேரன் செங்குட்டுவனின் தம்பியாகக் கருதப்பட்டமையாற் சிலப்பதிகாரத்தின் காலமும் துணியப்பட்டது[63]. சிலப்பதிகார காலத்தவனாகிய செங்குட்டுவன் மீது பரணர் பதிற்றுப்பத்திலிடம்பெறும் ஐந்தாம் பத்தினைப் பாடியதாகக் கருதப்பட்டதாற் 'கடைச்சங்க' காலமும் தீர்மானிக்கப்பட்டது[64]. "தமிழ் இலக்கியத்தில் 'அகஸ்ரஸ் காலம்' (Augustan Period) கி.பி.முதலாம் நூற்றாண்டேயாகும். அக்காலத்திலே 'கடைச்சங்கம்' மதுரையிலே உக்கிர பாண்டியன் அவையிலே நடைபெற்றது" என்பர் கனகசபைப்பிள்ளை[65]. எனவே கனகசபைப்பிள்ளை தமது 'தமிழர் வரலாறு' பற்றிய கட்டுரைத் தொடரிலே தாம் ஆராயப்போகும் காலத்தின் கீழெல்லையாக கி.பி.150-ம் ஆண்டினைக் கொண்டார்.

கனகசபைப்பிள்ளை தமது தமிழர் வரலாற்றின் மேலெல்லையாக கி. பி. 50 - ம் ஆண்டினைக் கொண்டுள்ளார். அவ்வாறு கொள்வதற்குக் காரணமாயிருந்தது கரிகாலன் காலம் பற்றி அவர் கொண்ட துணிபேயாகும். சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார நிகழ்ச்சிகளின் காலத்திலே

சோணாட்டை ஆண்ட மன்னன் கரிகாலன் என்று கருதி நூலாசிரியர் பெயர்சுட்டாமற் பொதுவாகச் சோழ மன்னன் என்று குறித்தவிடங்களிலெல்லாம் கரிகாலன் என்றே உரை கூறினர். எம். சேஷகிரிசாஸ்திரியார்[66] போன்றோர் உரையாசிரியர் கூற்றுகளை ஏற்றுக் கரிகாலன் காலம் செங்குட்டுவனின் காலமெனவே கொண்டனர். பொ. குமாரசாமி அவர்கள் கரிகாலன் காலம் கி. பி. முதலாம் நூற்றாண்டென்று கருதினர் [67]. அவர் அவ்வாறு கருதுவதற்குக் காரணமாயிருந்தது கரிகாலனுக்கும் செங்குட்டுவனுக்குமிடையேயுள்ள உறவு முறை பற்றிய செய்தியாகும். கரிகாலன் மகளே செங்குட்டுவனின் தாயென்ற கருத்து குமாரசாமியவர்கள் காலத்திலே தமிழறிஞர் சிலரிடம் நிலவியது. கனகசபைப்பிள்ளையும் அதே கருத்தையுடையவராகக் காணப்படுகிறார் [68]. எனவே முதலாம் கஜபாகுவின் ஆட்சிக்காலத்திலிருந்து (கி. பி. 113—125) பின்னோக்கிச் சென்று, கரிகாலன் கி. பி. 35-ம் ஆண்டளவில் அரசுகட்டிலேறினான் எனவும் பிள்ளையவர்கள் கருதினார்கள் [69].

சிலப்பதிகார காலமாகத் தாம் துணிந்த காலத்தை மையமாகக்கொண்டு பிள்ளையவர்கள் கி. பி. 50 — கி. பி. 150 உட்பட்ட காலத்துத் தமிழர் வரலாற்றினைக் கூற எடுத்துக்கொண்டார். இவ்வாறு குறுகிய கால காலகட்டமொன்றினை வகுத்தெடுத்துக் கொண்டமையாற் சேரசோழ பாண்டியர் பரம்பரைகளின் பட்டியல்களும் அவற்றிலே தரப்பட்ட ஆட்சியாண்டுகளும் அப்பட்டியல்களுக்குப் பொருந்தும் வகையிலே தரப்பட்ட உறவுமுறைபோன்ற செய்திகளும் பொருத்தமற்றனவாகக் காணப்படுகின்றன[70]. பண்டைத் தமிழ் இலக்கியத்தில் ஆங்காங்கு சுட்டப்பெற்ற வரலாற்றுப் பேர்வழிகளை எடுத்துத் தொடர்ச்சியுடைய பரம்பரைப் பட்டியல்களைத் தர, பிள்ளையவர்கள் எடுத்துக்கொண்ட

முயற்சி, முதல் முயற்சியாக அமைந்ததையொட்டிச் சிறப்படைகின்றதேயொழிய வேறு வகையிற் சிறப்புப் பெறுகின்றது என்று கூறுவதற்கில்லை. இம்முயற்சி எவ்வளவு கடினமானதென்பதை கே. என். சிவராஜ பிள்ளை எழுதிய நூல் எடுத்துரைக்கும்[71].

பண்டைத்தமிழ் இலக்கியத்தின் காலத்தை நிர்ணயிக்கப் பிள்ளையவர்கள் கஜபாகுவின் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, எடுத்துக்கொண்ட முயற்சி பின் வந்தோராற் கண்டிக்கப்பட்டபோதும் அவர் பயன் படுத்திய வேறொரு சான்று பின்வந்த ஆராய்ச்சிகளால் வலியுறுத்தப்பட்டன. அச்சான்று தமிழகத்திற்கும் மேலைத்தேயங்களுக்குமிடையே நடைபெற்ற வாணிபம் பற்றிப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தந்த செய்திகள் அந்நிய மொழிகளிலெழுந்த நூல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டமையேயாகும். "இப்பாடல்களின் தொன்மையை நிலைநாட்டப் பிறிதொரு சான்றும் உதவுகின்றது. இவற்றிற் கூறப்பட்ட தமிழ்நாட்டின் முக்கிய பேரூர்கள், துறைமுகங்கள், வெளிநாட்டு வாணிபப் பொருள்கள் பற்றிய செய்திகள் பிளினி (Pliny), தொலமி (Ptolemy) ஆகியோரின் நூல்களிலும் பெரிப்புளுஸ் (Periplus Maris Erythraei) என்னும் நூலிலும் தரப்பட்டுள்ள குறிப்புகளுடன் முற்றிலும் பொருத்தமுடையனவாயுள்ளன" என்று தோற்றுவாய் செய்த பிள்ளையவர்கள்[72] 'வெளிநாட்டு வாணிபம்' என்னும் மூன்றும் அதிகாரத்தில் அதனை விரித்துரைக்கின்றார். பிளினியும் (Pliny) 'பெரிபுளுஸ்' ஆசிரியரும் (Periplus) கி. பி. முதலாம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர்; தொலமி (Ptolemy) கி. பி. 163-ம் ஆண்டு வியோகமடைந்தார். எனவே இவர்கள் தென்னகத்தைப் பற்றித் தந்த செய்திகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முற்பட்டனவாம். இவற்றின் மூலம் தென்னகத்தோடு மேலை நாட்டினர் கொண்

டிருந்த வாணிபத்தொடர்புகள் புலனாகின்றன. மக்கிரிண்டில் (J. W. Mc Crindle), வில்லியம் வின்செண் (William Vincent) முதலியோர் தந்த முற்கிளந்த நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் அளித்த செய்திகளைப் பிள்ளையவர்கள் தமிழிலக்கியத்திலிடம்பெறும் யவனர் பற்றிய செய்திகளோடும் துறைமுகங்கள் பற்றிய செய்திகளோடும் ஒப்பிட்டு நோக்கியபோது அப்பாடல்கள் பண்டைக்காலத்திற்குரியவை என்று கருதினார். அண்மைக்காலத்திற் புதைபொருளாராய்ச்சியால் வெளிப்போந்த செய்திகள் பிள்ளையவர்கள் கொண்ட கருத்தினை வலியுறுத்துகின்றன. 'அரிக்கமேடு' என்றழைக்கப்படும் இடத்திற் கண்டெடுக்கப்பட்ட பொருள்களிற் சில கி. பி. முதலாம் நூற்றாண்டில் அவ்விடத்திலே ரோமருக்குரிய தொழிற்சாலையொன்று அமைந்திருந்ததை நிலைநாட்டுகின்றன[78].

'வெளிநாட்டு வாணிபம்' என்னும் அதிகாரத்தோடொத்த சிறப்புடையது இரண்டாமதிகாரமாகிய 'தமிழகத்தின் புவியியலமைப்பு' என்பது. பண்டைத் தமிழ் இலக்கியத்தின் காலத்தை நிர்ணயிப்பதற்கு அந்நிய நாட்டினர் எழுதிய நூல்கள் தந்த செய்திகளைப் பயன்படுத்திய பிள்ளையவர்கள், அந்நூல்களின் உதவியோடு பண்டைத் தமிழகத்தின் புவியியலமைப்பினையும் விளக்க முயன்றார். "பாண்டிய நாட்டின் எல்லைகளைப் பற்றியோ, தமிழகத்தின் ஏனைய பன்னிரு நாடுகளின் நிலப்பரப்பு, எல்லை ஆகியனவற்றைப் பற்றியோ பண்டைத் தமிழ் இலக்கியத்தில் எத்தகைய சான்றுகளும் கிட்டவில்லை. உரையாசிரியர்கள் தரும் விபரங்களோ ஒன்றற்கொன்று முரண்படுகின்றன. தமிழகத்தின் பண்டைய புவியியல் அமைப்புப் பற்றித் தமிழ் நூலாசிரியர்கள் எதுவும் தொடர்பாகத் தராத நிலையில், பெரிபுளூஸ் (Periplus) என்னும் நூலிலும் பிளினி (Pliny), தொலமி (Ptolemy) ஆகியோர் நூல்களிலும் கிடைத்த

தகவல்களைத் துணையாகக் கொண்டு யான் புதிதாக ஆராய்ச்சி செய்யவேண்டிய நிலையேற்பட்டது'' என்பர் பிள்ளையவர்கள்[74]. இவ்வதிகாரத்திலிடம்பெறும் செய்திகள் பின்வந்தோராற் சிறிது விளக்கமெய்தியபோதும் பிள்ளையவர்கள் செய்த முதல் முயற்சி போற்றற்குரியதாகும். 'தமிழகத்தின் புவியியலமைப்பு', 'வெளிநாட்டு வாணிபம்' என்னும் அதிகாரங்கள் பற்றிப் 'பண்டைக் காலத்துத் தமிழரின் சமூக வாழ்க்கை' என்னும் ஆங்கில நூலை எழுதிய எஸ். சிங்காரவேலு மேல்வருமாறு கூறுவர்: ''கனகசபைப்பிள்ளையின் நூலிற் குறிப்பிடத்தக்க பிறிதொரு சிறப்பு, அவர் தமிழ்மொழியிலும் ஏனைய இந்திய மொழிகளிலுமெழாத நூல்களை ஆதாரமாகக் கொண்டு, பண்டைத் தமிழகத்தின் புவியியலமைப்பினையும் வெளிநாட்டு வாணிபத்தையும் முதன்முதலாக நிறுவ எடுத்துக்கொண்ட முயற்சியேயாகும்''[75].

'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலின் உயிர்நாடிபோல விளங்குவது 'சமூக வாழ்க்கை' என்னும் ஒன்பதாம் அதிகாரமாகும். பண்டைத் தமிழர் பண்பாட்டினை இலக்கியச் சான்றுகள் மூலம் விளக்கப் பிள்ளையவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியிற் சிலப்பதிகாரத்தின் செல்வாக்கு சற்று அதிகமாகக் காணப்படுகின்றது.[76] ஆயினும் தம் காலத்திலே வெளிவந்திருந்த கலித்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய பண்டைய இலக்கியங்களிலிருந்தும் தமது கட்டுரைத் தொடர் வெளிவந்த காலத்திலே பிரசுரமாகாத ஐங்குறுநூற்றிலிருந்தும் செய்திகளை எடுத்துப் பிள்ளையவர்கள் தமது கருத்துக்களை விளக்க முயன்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வதிகாரத்திலே ஆட்சிமுறை, வரிகள், தமிழர் சாதி வகுப்புக்கள், ஆடையின் பாணி, மணப்

பொருள்கள், அணிகள், பெண்ணுரிமை, காதல் வாழ்க்கை, பொதுமகளிர், கலைமகளிர், திருமணங்கள், உணவு வகைகள், கேளிக்கைகள், இசை, நாடகம், கூத்து, நடிகையர், ஓவியம், சிற்பம்,மனைகள், கோட்டைகள், போர்முறை, படைவீரர் வகுப்பு, மதுரைநகர் வாழ்க்கை முதலிய செய்திகள் இடம்பெறுகின்றன[77]. நற்றிணை (1915), குறுந்தொகை (1915),பரிபாடல் (1918), அகநானூறு (1920) ஆகியன பிள்ளையவர்கள் காலத்திலே பதிப்பிக்கப்பெறவில்லை என்பதையும் ஐங்குறுநூறும் (1903) பதிற்றுப்பத்தும் (1904) அவருடைய கட்டுரைத்தொடர் வெளிவந்த காலத்தினையடுத்தே வெளிவந்தன என்பதையும் நோக்குமிடத்துப் பிள்ளையவர்கள் தமது 'சமூக வாழ்க்கை' என்னும் அதிகாரத்திற்குத் தேவையான செய்திகளைத் தொகுத்து ஆராய முடியாத சூழல் நிலவியமை புலனாகும். இவ்வதிகாரத்திலே ஐங்குறுநூற்றிலிருந்து சில செய்திகளை எடுத்தாளும் பிள்ளையவர்கள் தமது கட்டுரைத்தொடர் வெளிவந்த காலத்திலே பிரசுரமாகாத ஏனைய 'மேற்கணக்கு' நூல்களைப் பயன்படுத்தாமை கவனித்தற்குரியது[78]. எனவே பிள்ளையவர்கள் பண்டைத் தமிழர் சமூக வாழ்க்கையினைப் பூரணமான முறையிலே விளக்கியுள்ளார் என்று கூறுவதற்கில்லை. ஆயினும் பி. ரி. ஸ்ரீநிவாச அய்யங்கார், சு. வித்தியானந்தன், எஸ். சிங்காரவேலு முதலியோரின் நூல்கள்[79] நன்முறையில் வெளிவரப் பிள்ளையவர்களின் 'தமிழர் வரலாறு' சிறந்த வழிகாட்டியாக அமைந்தது என்பதை மறுப்பதற்கில்லை[80].

'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலிலிடம்பெறும் 'தமிழர் இனங்களும் அவற்றின் கிளைகளும்' என்னும் நான்காம் அதிகாரத்திற் பிள்ளையவர்கள் கூறிய கருத்துக்களிற் பல எம். ஸ்ரீநிவாச ஐயங்கார்[81] போன்றவர்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. இவ்வதிகாரத்

திலே பிள்ளையவர்கள் பண்டைத் தமிழரின் பூர்வீ கத்தைப் பற்றிய தமது கருத்துக்களைக் கூறுவர். அவருடைய கருத்துக்களை முதலிற் சுருக்கமாகக் காண்போம்: வில்லவரும் மீனவருமே தமிழகத்தின் பூர்வீகக் குடிகள். இவர்களை நாகர் என்னும் இனத்தினர் வென்று தமிழகத்தைத் தமதாக்கிக் கொண்டனர். மறவர், எயினர், ஒளியர், ஓவியர், அருவாளர், பரதவர் என்னும் வகுப்பினர் நாகர் இனத்தவரின் கிளைகள். நாகரிடமிருந்து ஆரியர் எழுத்துமுறையைக் கற்றுக்கொண்டனர். எனவேதான் சங்கத வரிவடிவு 'தேவநாகரி' என்றழைக்கப்படுகிறது. நாகரைத் தமிழர் வென்று தமிழகத்தைத் தமதாக்கிக்கொண்டனர். மங்கோலிய இனத்தைச் சேர்ந்த தமிழர் மத்திய ஆசியாவின் பீடபூமியிலிருந்து வந்து கங்கை நதிப் பள்ளத்தாக்கிலே வசித்தனர். அவர்களிலே 'தமலித்தி' (Tamalitti) என்னும் இடத்திலிருந்தவர்களே தென்னகத்திற்குப் பெருமளவில் வந்தனர். எனவே அவர்கள் தமிழர் என்றழைக்கப்பட்டனர். மாறர், திரையர், வானவர், கோசர் என்பவர் தமிழினத்தின் கிளைகளாவர். பாண்டிய அரசை மாறரும் சோழ அரசைத் திரையரும் சேர அரசை வானவரும் நிறுவினர். அவர்கள் பண்டைய 'திராவிட மொழி'யைத் திருத்தியும் செம்மைப்படுத்தியும் 'தமிழ்' என்று வழங்கும் மொழியை உருவாக்கினர். தமிழர் ழகரம் என்னும் எழுத்தினைத் திபேத்திய பீடபூமியிலிருந்து கொண்டு வந்தனர்.

முற்கிளந்த, பிள்ளையவர்களுடைய கருத்துக்களுக்குச் சொல்லாராய்ச்சி அடிப்படையாக அமைந்திருந்தது. இரஜபுதனத்திலும் கூர்ச்சரத்திலும் வாழும் பூர்வீகக் குடிகளில் இரண்டு பீலரும் (Bhils) மீனரும் (M nas) ஆவர். பிள்ளையவர்கள் அக்குடிகளின் பெயர்கள் மீனவர், வில்லவர் என்று தமிழகத்தில் வழங்கிய

பெயர்களோடு ஒலியொற்றுமையுடையனவாக இருப் பதைக் கண்டு தமிழகத்தின் பூர்வீகக் குடிகள் யாரெனத் துணிந்தார். மத்திய இந்தியாவில் வசிக்கும் பீலரும் மீனரும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள், எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பன வற்றைப் பற்றிப் பிள்ளையவர்கள் ஆராயவில்லை. 'நாகர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டவர்கள் யாவர் என் பது தெரியவில்லை. பிள்ளையவர்கள் அவர்களை ஓரினத் தவராகக் கருதிக் கூறியது பொருத்தமுடைத்தோ என்று அறிஞர் ஐயுறுவர். இவர்களிடமிருந்து ஆரியர் எழுத்து முறையைக் கற்றுக்கொண்டனர் என்று பிள்ளை யவர்கள் கூறுவதற்கு 'நாகரி' என்னும் சொல் 'நாகர்' என்பதிலிருந்து வந்ததென்று அவர் கொண்ட முடிபே காரணமாகும். இம்முடிபு பொருத்தமற்றதென்பது வரிவடிவு ஆராய்ச்சியாளரின் கருத்தாகும். 'தமிழ்' என்ற சொல் 'தமலித்தி' என்பதின் மரூஉ என்று பிள்ளையவர்கள் கொண்ட ஊகம் ஓரினத்தின் பூர்வீக ஆராய்ச்சிக்கு அடிப்படையாக இருந்தமை வியப் பாகும். திராவிட மொழிகள் பற்றிப் பிள்ளையவர்கள் கூறிய கருத்துக்கள் மொழியியல் வல்லுநரின் கருத் துக்களுக்கு முரணானவை. எனவேதான் பிள்ளையவர் கள் தமிழகத்தின் பூர்வீகம் பற்றியும் தமிழரின் பூர் வீகம் பற்றியும் கூறிய கருத்துக்கள் கண்டனங்களுக் குள்ளாயின[82].

பிள்ளையவர்களுடைய 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலிற் குறைகள் சில ஆங்காங்கே காணப்பட்டபோதும் அந் நூலே பண்டைத் தமிழரின் வரலாற்றை முதன் முறையாகப் பல கோணங்களிலிருந்தும் விளக்க எடுத்துக்கொண்ட முயற்சியாகும் என்பது குறிப் பிடத்தக்கது[83]. தற்காலத் தமிழ் ஆராய்ச்சியின் கதியை நான்கு காலப்பிரிவுகளாக வகுத்த ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் முதலாம் பகுதியின் சிறந்த

ஆராய்ச்சி நூலாகக் கால்ட்வெல் அவர்களுடைய ஒப்பியலிலக்கண நூலையும் இரண்டாம் காலப்பகுதியின் சிறந்த ஆராய்ச்சி நூலாகக் கனகசபைப்பிள்ளையின் 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலையும் குறிப்பிடுவர்[84]. "பண்டைத் தமிழ் இலக்கியத்தில் காணப்பெறும் விஷயங்களையும் வெளிநாட்டார் நூல்களிலும் இந்திய இலக்கியத்திலும் பண்டைத் தமிழரைப் பற்றியுள்ள குறிப்புக்களையும் தொகுத்து, அவைகளை நேர்மையுடனும் நுட்பத்துடனும் சரித்திரப் பாங்குடனும் பரிசீலனை செய்திருப்பது கனகசபைப்பிள்ளை செய்திருக்கும் ஆராய்ச்சியின் முக்கிய அம்சம்" என்பது 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி' பற்றி விமர்சனம் செய்யப்புகுந்த ஏ. வி. சுப்பிரமணிய அய்யரின் கூற்றாகும்[85]. தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய மு. சி. பூரணலிங்கம்பிள்ளை (1866—1947) "ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்'பற்றி மேல்வருமாறு கூறுவர்: "It was an eye-opener to many of the ancientness of Tamil Literature and Tamilian Civilisation".

பிள்ளையவர்களுடைய நூல் இந்திய உபகண்டத்தின் வரலாற்றிலே தமிழகத்தின் முக்கியத்துவத்தை ஆராய்ச்சியாளருக்கு எடுத்துக்காட்டியது;[87] தமிழாராய்ச்சியின் போக்கு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்று தமிழறிஞருக்கு வழிகாட்டியது[88]. பிள்ளையவர்கள் கண்ட நெறியையே பின்பற்றிப் பலர் ஆராய்ச்சி செய்தனர்; சிலர் அவர்கூறிய முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சி செய்தனர்.

பிள்ளையவர்களுடைய ஆராய்ச்சித்திறனைக் கண்டவர்கள் அவரைப் பெரிதும் மதித்தனர். சென்னைப் பல்கலைக்கழகம் அவரை பீ. ஏ., எம். ஏ. முதலியவற்றின் பரீட்சை அதிகாரியாக நியமனம் செய்தது. மதுரைத் தமிழ்ச் சங்கம் தனது ஆரம்பகாலத்து

ஆங்கிலத் தமிழ் வித்துவான்களில் ஒருவராகப் பிள்ளையவர்களைக் கௌரவித்ததோடமையாது 1905 ம் ஆண்டில் நிகழ்ந்த வருடாந்தக் கூட்டத்திற்கு அவரைத் தலைமை தாங்கும்படி செய்தது[89]. பிள்ளையவர்களின் தலைமையில் வாசிக்கப்பட்டதே மு. இராகவையங்காருடைய 'வேளிர் வரலாறு'.

பிள்ளையவர்கள் சோழர் வரலாறு பற்றியும் ஆராய்ச்சி செய்துவந்தார். 'இந்தியன் அன்ரிகுவரி' (Indian Antiquary) என்னும் சஞ்சிகையிலே 'தமிழ் வரலாற்று மூலங்கள்' (Tamil Historical Texts) என்ற தலைப்பிலே சோழர் வரலாற்றிற்குரிய மூன்று நூல்களையும் கல்வெட்டொன்றினையும் மொழிபெயர்த்தளித்தார்[90]. 'செந்தமிழ்' என்னும் சஞ்சிகையிலே 'சோழ சக்கரவர்த்திகள்' என்ற தொடரை 1902-1903 ஆண்டுகளிலே எழுதினர். இராஜராஜ சோழன் பற்றியும் சோழர் வெற்றி பற்றியும் இரு சிறு நூல்களையும் எழுதினர்[91]. இவற்றை நோக்கும்போது பிள்ளையவர்கள் சோழர் வரலாறு பற்றி விரிவாக எழுதவிருந்தார் என்பது புலனுகும்; அம்முயற்சி நிறைவேறவில்லை.

ஆயினும் "தமிழ் மக்களது பண்டை நாகரிகச் சிறப்பை முதல்முதலாகப் புலப்படுத்தி, தமிழிலக்கியப் பெருமையைத் தெள்ளிதின் உணர்த்தி, தமிழர் சரித்திரத்தை நன்கு விளக்கி, தமிழ்ப் பெருநூல்களைத் தேடித் திரட்டியுதவி, தமிழ் ஆராய்ச்சியையே தமது பொழுது போக்காகக் கொண்ட இந்த அருங்கலை விநோதர் தமிழன்னைக்கு ஊன்றுகோல் போலக் கைகொடுத்து உதவி அவளைத் தாங்கியெடுத்தவருள் ஒருவர் என்பதில் ஐயமென்ன?"[92].

## உசாத்துணை

1. தமிழ் வரலாறு, முற்பாகம் (எட்டாம் பதிப்பு, 1960), பக். 49

2. 'மகாவித்துவான் விசுவநாதபிள்ளை' என்ற பெயரிலே 'கறல்' விசுவநாதபிள்ளையைப் பற்றிய நூலொன்று 1949-ம் ஆண்டிலே வெளிவந்தது. அந்நூலிலே அகராதி இயற்றியது, பல மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட்டது ஆகிய செய்திகளும் கனகசபைப்பிள்ளை 'கறல்' விசுவநாத பிள்ளையின் புதல்வர் என்ற செய்தியும் இடம் பெற்றிருந்தன (ஈழகேசரி 18. 5. 1958); சு. அ. இராமசாமிப் புலவரின் தமிழ்ப்புலவர் வரிசை, பத்தாம் புத்தகத்திலிடம்பெறும் விசுவநாதபிள்ளை சரிதத்திலும் இம்மயக்கம் காணப்படுகின்றது.

3. சி. கணபதிப்பிள்ளை: இலக்கியவழி (1964), பக். 62.

4. அ. சதாசிவம்பிள்ளை: பாவலர் சரித்திர தீபகம் (1886), பக். 254.

5. ச. தனஞ்சயராசசிங்கம்: நாவலர் பணிகள் (1969), பக். 6, 16.

6. குல. சபாநாதன்: 'ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை', ஸ்ரீலங்கா, செப்ரெம்பர், 1958.

7. பாவலர் சரித்திர தீபகம் (1886), பக். 254.

8. "The Sheets as issued from the Press have had the benefit of correction, for a short time, by Mr. B. Kellogg, connected with the Dept. of Public Instruction and for most of the remainder by D. C. Visvanatha Pillai, B. A." (Preface to **A Com-**

**prehensive Tamil and English Dictionary of High and Low Tamil'** by the Rev. Miron **Win**slow, 1862).

9. "சென்னைத் துரைத்தன வாசம் இவரது கிறிஸ்து மதானுசாரக் கொள்கையைப் பலட்சயப்படுத்தி விட்டதனுற் சேற்றில் நட்ட கம்பம்போல இவரது கிறிஸ்துமத விசுவாசம் அந்திய காலத்தில் ஈடாடினது மெய்யாய்ப் பெரும் பரிதாபமே" என்பர் 1835-ம் ஆண்டிலே கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய அ. சதாசிவம்பிள்ளை (பாவலர் சரித்திர தீபகம், பக். 254).

10. நாவலர் பணிகள் (1969), பக். 2.

11. த. கைலாசபிள்ளை: ஆறுமுகநாவலர் சரித்திரம் (1919), பக். 15.

12. மு. இராமலிங்கம்: 'ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் சம்பந்தமான சில வரலாறுகள்', நாவலர் நினைவு மலர் (கா. பொ. இரத்தினம் தொகுத்தது, 1938) பக். 93.

13. பாவலர் சரித்திர தீபகம் (1886), பக். 255.

14. 'ஒரு பெயரில் இருவர், வரலாற்றில் விபரீத விளக்கம்' என்ற தலைப்பிலே ஈழகேசரி 18. 5. 58-ல் வெளிவந்த கடிதத்தை எழுதிய ஆர். என். சிவசம்பு, "முந்தியவருக்கு (கறல் விசுவநாதபிள்ளைக்கு) 5, 10 வருடம் வயதிற் குறைந்தவராயிருக்கலாம்...... (பிறந்த ஆண்டு) 1825-ம் வருடம் என்று கொள்ளலாம்" என்பர்.

15. எஸ். வையாபுரிப்பிள்ளை, "சர்வகலாசாலையிலே பீ. ஏ. பட்டம் பெற்றபின், அரசாங்கத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளர் பதவியில் இருந்தவர்" என்பர் (தமிழ்ச் சுடர் மணிகள், 1968, பக். 273).

16. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, முதற்பாகம் (மூன்றும் பதிப்பு, 1954), பக். 130

17. **Tamil Lexicon,** Introduction, p. 40 ; தமிழ்ச்சுடர் மணிகள் (1968), பக். 277

18. தமிழ்ச்சுடர்மணிகள் (1968), பக். 277

19. கா. அப்பாத்துரை மொழிபெயர்த்த 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' (1956), பக். 433

20. 'பாவலர் விருந்து - முதலாம் நாள்' காண்க.

21. 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' (1956), பக். 432

22. சூளாமணி; சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை; விரோதி கார்த்திகை (1889); சூளாமணிப் பதிப்புரை, பக். 9

23. ஏனைய இருவரும் சி. வை. தாமோதரம்பிள்ளையும் கொழும்புத்துறை தி. குமாரசாமிச் செட்டியாருமாவர். தாமோதரம்பிள்ளை அடியார்க்கு நல்லாருரையோடு கூடிய பிரதியை அளித்தார். குமாரசாமிச் செட்டியார் அடியார்க்கு நல்லாருரைப் பிரதி, மூலப் பிரதி ஆகிய இரு பிரதிகளைக் கொடுத்தார். குமாரசாமிச்செட்டியாரின் "விருப்பப்படியே தண்டபாணி விஷயமாகப் பத்து விருத்தங்களும் உத்ஸவ மூர்த்தியாகிய ஸ்ரீ முத்துக்குமாரர் விஷயமாக ஓர் ஊஞ்சலும் எச்சரிக்கையும் ஐந்து கீர்த்தனங்களும்" சாமிநாதையரால் இயற்றப்பட்டன (என் சரித்திரம், 1950, பக். 914). தாமோதரம்பிள்ளை தமது 'உயிர் நண்பர்' குமாரசாமிச் செட்டியார் பெயராலேயே வீரசோழியம், தணிகைப் புராணம், இறையனாரகப் பொருள் ஆகியனவற்றை வெளியிட்டார்.

24. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்; சென்னை: திராவிட ரத்நாகர அச்சுக்கூடம், 1889; முகவுரை, பக். 5–6.

25. தமிழ்ச்சுடர்மணிகள், "வி. கனகசபைப்பிள்ளை" (நான்காம் பதிப்பு, 1968), பக். 276.

26. தமிழ்ச்சுடர்மணிகள் (1968), பக். 298–299.

27. என்சரித்திரம் (1950), பக். 986–h

28. தமிழ்ச்சுடர்மணிகள் (1968), பக். 276.

29. **A History of Sanskrit Literature.**

30. X. S. Thaninayagam (Editor): **Tamil Studies Abroad** (1968), p. 5.

31. **A Grammar of the Sungskrit Language**. Serampore, 1804.

32. **A Grammar of the Telinga Language**. Serampore, 1814.

33. Note to the Introduction by Ellis to A. D. Campbell's **'A Grammar of the Teloogoo Language'**, 1820.

34. William Taylor's Introduction to Rottler's **'A Dictionary of the Tamil and English Languages,** Part iv, 1841.

35. **A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages.** London: Harrison, 1856.

36. **The Folk-Songs of Southern India**, Madras, 1871.

37. **Notes on Aryan and Dravidian Philology. Madras, 1884.**

38. சங்கதத்தைத் தமிழ்மொழியின் நற்றாய் என்று கருதிய பின்வந்தோரிற் குறிப்பிடத்தக்கவர் ஆர். சுவாமிநாதையர்.

39. M. Srinivasa Aiyangar : **Tamil Studies** (1914), pp. 205-206.

40. **The Oxford History of India**, 1919; **Early History of India** (1904)

41. **The Cambridge History of India**, Vol I: Ancient India, 1922.

42. இந்நூல்களின் மொழிபெயர்ப்புகள் முறையே 1886, 1893, 1900-ம் ஆண்டுகளில் வெளிவந்தன.

43. **A Text-Book of Indian History**. London 1869; **Little Raja's Primer of Indian History**. London 1893.

44. **A Political and General History of the District of Tinnevelly**. Madras, 1881.

45. **A Sketch of the Dynasties of Southern India. Madras, 1883**.

46. **Early History of the Deccan**. 1895.

47. K. A. Nilakanta Sastri : **A History of South India.** (Second Edition, 1958), p. 1

48. தி. வை. சதாசிவபண்டாரத்தார் : 'புறநானூறும் கல்வெட்டுகளும்' புறநானூற்றுச் சொற்பொழிவுகள் (தி. தெ. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மூன்றும் பதிப்பு, 1956), பக். 115.

49. தமிழ்ச்சுடர்மணிகள் (1968), பக். 277.

50. 'An Inscription of Kulottunga Chola', **Indian Antiquary**, Vol. XXI, pp. 281 - 287 (Oct. 1892)

50A. உதாரணமாக, சின்னமனூர் செப்பேடுகள் 1906-ம் ஆண்டிலும் வேள்விக்குடிச் செப்பேடுகள் 1908-ம் ஆண்டிலுமே கண்டெடுக்கப்பட்டன.

51. "இக்காலத்து மிக அருகி வழங்குகின்ற பழைய நூல்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பதிப்பித்தலில் மிக்க விருப்பமுடையனேனும் சீவகசிந்தாமணி அச்சிடப்பட்டு நிறைவேறிய காலந்தொடங்கி கொழும்புநகரத்துப் பிரபுசிகாமணியும் செந்தமிழ்ப்பாஷாபிமானியுமாகிய ஸ்ரீ பொ. குமாரசாமி முதலியாரவர்கள், ஐந்து காப்பியத்துள் இரண்டாவதாகிய சிலப்பதிகாரத்தை அடியார்க்குநல்லாருரையுடன் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்யவேண்டுமென்றும் அந்தச் செலவைத் தாம் கொடுப்பதாகவும் அடிக்கடி அன்போடு எழுதியனுப்புதலால், முந்தி அந்நூலை அவ்வுரையுடன் பதிப்பிக்க நிச்சயித்திருக்கிறேன்" (பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்; சென்னை: திராவிடரத்நாகர அச்சுக்கூடம், 1889; முகவுரை, பக். 8).

52. என்சரிதம் (1950), பக். 973 - 974

53. எஸ். வையாபுரிப்பிள்ளை : இலக்கியமணிமாலை (இரண்டாம் பதிப்பு, 1957), பக். 126.

54. மானிப்பாயைச் சேர்ந்த முதலியார் பொன்னம்பலம் அவர்களுடைய புதல்வர் குமாரசாமி; அருணசலம், இராமநாதன் ஆகியோரின் சகோதரர்; மு. இராகவையங்கார் 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' எழுதுவதற்குக் காரணமாயிருந்த ஸ்ரீகாந்தன் அவர்களுடைய தந்தை; சமாதான நீதவானுகவும் மாநகரசபை அங்கத்தவராகவும் சட்டசபை அங்கத்தவராகவும் திகழ்ந்தவர்; கனகசபைப்பிள்ளையின் காலத்திலே தமிழ் ஆராய்ச்சி செய்தவர்களிலொருவர். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை தமது 'அபிதானகோசம்' என்னும் நூலை இவரது தமிழ்த் தொண்டுகளை மதித்துச் சமர்ப்பித்துள்ளார். 'என்சரித்திர' ஆசிரியராற் போற்றப்பட்ட

ஈழத்தவர்களிலொருவர் (பக். 849, 857-858, 859, 919–920, 966, 998). 'குமாரசாமி மான்மியம்' பற்றி யாரும் எழுதியதாகத் தெரியவில்லை.

55. 'Chilappatikaram', JCBRAS vol. xiii. No. 44 (1893)

56. 'கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்' (30. 160)

57. **Essay on Tamil Literature.** இந்நூல் 1884-ம் ஆண்டிலே வெளிவந்ததாக பி. ரி. ஸ்ரீநிவாசஅய்யங்கார் தமது 'தமிழர் வரலாறு' என்னும் ஆங்கில நூலிலே (1920) கூறுவர் (பக். 372). வி. ஆர். ராமச்சந்ரதீட்சிதர் தமது Studies in Tamil Literature and History (1930) என்னும் நூலிலே இந்நூலின் பதிப்பாண்டை 1897 எனச்சுட்டுவர் (பக். 8); ஆயினும் அப்பதிப்பு முதலாம் பதிப்பா அன்றி இரண்டாம் பதிப்பா என்று குறிப்பிடவில்லை.

58. சிலப்பதிகாரம் மூலமும் அடியார்க்குநல்லாருரையும் (அரும்பதவுரையும்); சென்னை: வெள்ளைய நாடார் ஜூபிலி அச்சுக்கூடம், 1892; முகவுரை, பக். 10-11. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியனவற்றின் பதிகங்களை ஆதாரமாகக் கொண்டு இருநூலாசிரியர்களையும் சமகாலத்தவர் என்று கருதிய சாமிநாதையர் தொல்காப்பியம் செய்யுளியலிலே 'ஞகாரைமுதலா' என்னும் சூத்திரவுரையிலே நச்சினார்க்கினியர் 'சீத்தலைச்சாத்தனாராற்செய்யப்பட்ட மணிமேகலை' என்று கூறுவதைத் துணையாகக் கொண்டுமணிமேகலையாசிரியரைச் 'சங்கப்புலவர்' சீத்தலைச்சாத்தனார் எனத்துணிந்தார். சீத்தலைச்சாத்தனாரின் காலத்தவராகிய இளங்கோவடிகளும் 'சங்கப்புலவர்' என்பது ஐயரவர்கள் கண்ட முடிபு. இம்முடிபு வேறொருவகையாலும் ஐயரவர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது; சங்கப்புலவர் நக்கீரர்

இறையனாரகப் பொருளுக்கு இயற்றியவுரையிலே சிலப்பதிகாரத்திலுள்ள பாடற்பகுதிகள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளதே அது. இவ்வாறு இளங்கோவடிகளின் காலத்தைத் துணிந்த ஐயரவர்கள் தம்காலத்தவர் பெயரொற்றுமையை ஆதாரமாகக் கொண்டு துணிந்த கஜபாகு செய்தியையும் ஏற்றுக்கொண்டனர்.

59. 'Chilappatikaram', JCBRAS, Vol. xiii, No. 44 (1893); 'A half hour with two ancient Tamil Poets', JCBRAS, Vol. xiii, No. 45 (1894).

60. "With due respect to Mr. Coomarasamy's sagacity, I am not prepared to accept this view, unless the identity of the two Gajabahus is not only supported by the mere identity of the name, but proved by internal reasons, and until the chronology the earlier history of Ceylon has been subjected to a critical examination". (**S. I. I.**, Vol. II, part III, P. 378).

61. கால்கோட்காதை : 149, 163, 176

62. K. Gopalachari : **'Early History of the Andra Country'** (1941) என்னும் நூலிலே இக்கருத்தை மறுத்துரைத்துள்ளார் (பக் 35).
"Observations on the Date of Cilappatikaram" என்னும் கட்டுரையிலும் (**Gopalakrishnamachariar Commemmoration Volume**) Hemachandra Raychudry இக்கருத்தை ஏற்கவில்லை.

63. செங்குட்டுவன் காலத்திலே சிலப்பதிகாரம் இயற்றப்படவில்லை என்று முதன்முதலாகத் துணிந்தவர் திருவிதாங்கூர் சாசனத்துறைத் தலைவராக இருந்த கே. வி. சுப்பிரமணிய ஐயர்; தமது ஆங்கில நூலாகிய 'Historical Sketches of Ancient Deccan' என்

பதில் அவ்வாறு எழுதினர். (எஸ். வையாபுரிப் பிள்ளை : தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம், முதலாம் பதிப்பு, 1957, பக். 34).

64. V. Kanakasabhai : **The Tamils Eighteen Hundred Years Ago** (1904), p. 6; அ. ச. ஞானசம்பந்தன், "ஐந்தாம் பத்து", பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள் (தி. தெ. சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகம், முதலாம் பதிப்பு, 1955) பார்க்கவும்.

65. **The Tamils Eighteen Hundred Years Ago** (1904), p. 3.

66. **Essay on Tamil Literature** (1884), p. 30 Quoted by P. T. Srinivas Iyengar in **History of the Tamils** (1929), p. 372.

67. 'A half hour with two Tamil Poets', **JCBRAS**, Vol. xiii, No. 45, p. 190-203 (1894).

68. **The Tamils Eighteen Hundred Years Ago** (1904), p. 9, 65, 72, 89.
பிள்ளையவர்கள் தமது கருத்துக்கு ஆதாரமாகச் சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்துக்காட்டும் பகுதிகள் எவ்விதத்திலும் பொருந்துமாறில்லை. P. T. Srinivas Iyengar, "So far as I have searched, no poem, old or new, no commentary on any old poem, speaks of any relationship between Karikal and Senguttuvan" (**History of the Tamils**, p. 373).

69. "There is an alternative reading to the word Kayavagu in the passage of the Silappadigaram on which all this contention about the 'Gajabahu Synchronism is based. That reading is Kaaval instead of Kayavagu. There is no means of deciding which is the correct reading. If Kaaval is the correct reading, down falls to the ground all the edifice of the theories based on the Gajabahu synchronism"

(P. T. Srinivas Iyengar, **History of the Tamils**, p. 381)

70. பிள்ளையவர்களின் நூலின் ஐந்தாம், ஆறும், ஏழாம் அதிகாரங்கள் காண்க.

71. **The Chronology of the Early Tamils**, 1932.

72. **The Tamils Eighteen Hundred Years Ago** (1904), p. 4.

73. K. A. Nilakanta Sastri : **A History of South India** (Second Edition, 1958) p 113; 'Arikamedu: An Indo-Roman Trading Station on the East Coast of India', **Ancient India** No. 2 (July, 1946)

74. **The Tamils Eighteen Hundred Years Ago** (1904), p. 14

75. S. Singaravelu : **Social Life of the Tamils : The Classical Period** (1966), p. 11

76. 'சிலப்பதிகாரத்தின் கதை'யைப் பிள்ளையவர்கள் தனியே பதின்மூன்றாம் அதிகாரத்திலே தந்துள்ளார்; அவ்வாறே 'மணிமேகலையின் கதை' பன்னிரண்டாம் அதிகாரமாக விளங்குகின்றது; மணிமேகலையில் இடம்பெறும் மெய்யியற் கோட்பாடுகள் பதினான்காம் அதிகாரமாக 'அறுவகை மெய்யியற் கோட்பாடுகள்' என்ற தலைப்பின் கீழ் சுருக்கமாக அளிக்கப்பட்டுள்ளன; 'திருவள்ளுவரின் குறள்' பற்றிய செய்திகள் பத்தாமதிகாரத்தின் உள்ளடக்கமாகும்.

77. தமிழ் மக்களுடைய 'சமய வாழ்க்கை'யைத் தனியே பதினைந்தாம் அதிகாரத்திற் கூறுவர்.

78. பிள்ளையவர்கள் தமது 'தமிழ்ப்பாடல்களும் புலவர் களும்' என்னும் பதின்மூன்றும் அதிகாரத்தில் அக நானூற்றிலிருந்து வரலாற்றுக் குறிப்புக்கள் பல வற்றைப் பயன்படுத்தியுள்ளார்; ஆனால் 'சமூக வாழ்க்கை'யிலே அகநானூற்றைப் பயன்படுத்த வில்லை.

79. P. T. Srinivas Iyengar: **History of the Tamils** from the earliest times to 600 A. D., Madras: C. Coomarasawmy Naidu and sons, 1929; சு. வித்தி யானந்தன்: தமிழர் சால்பு (சங்க காலம்), கண்டி (கல்ஹின்னை): தமிழ் மன்றம். 1954;
S. Singaravelu: **Social Life of the Tamils** : The Classical Period, Kuala Lumpur: University of Malaya, 1966.

80. "Considering the fact that several of the classical Tamil literary works were not available in properly edited and printed form in his time, V. Kanakasabhai's pioneering efforts to make use of the poems (many of which still remained in palm-leaf manuscripts) for the reconstruction of early Tamil social history, are indeed highly commendable" (S. Singaravelu: **Social Life of the Tamils**, p. 11).

81. **Tamil Studies** (1914), p. 7, 13, 24-32.

82. "The bold conclusions of Mr. Kanakasabhai seem to be based on fanciful philological musings and a feverish desire to show originality" (**Tamil Studies**, p 32)

83. ஆலப்புழை பெ. சுந்தரம்பிள்ளை (1855-1897) தமிழா ராய்ச்சியிலே ஆர்வமுடையவராக இருந்தவர்.

ஆயினும் அவ்வழியிலே அதிகமாய் ஈடுபடவில்லை. சென்னைக் கிறித்தவ கல்லூரிச் சஞ்சிகையிலே 1891-ம் ஆண்டு வெளிவந்த 'திருஞானசம்பந்தர் காலம்' (The Age of Tirugnana Sambandar) என்னும் கட்டுரையே அவருக்குத் தமிழாராய்ச்சியிற் சிறப்பிடம் அளித்தது. அக்கட்டுரை பின்பு 'Some Milestones in the History of Tamil Literature' என்னும் தலைப்பிலே நூலாக வெளியிடப்பெற்றது. திருஞானசம்பந்தரின் காலத்தை ஏழாம் நூற்றுண்டென நிறுவியதன் மூலம் மேனுட்டறிஞருக்குப் பண்டைய தமிழ் இலக்கியம் எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றுண்டில் எழுந்தனவல்ல என்பதை எடுத்துக்காட்டியவர் சுந்தரம்பிள்ளை. ஆயினும் தமிழாராய்ச்சியிலே கனகசபைப்பிள்ளையுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, சுந்தரம்பிள்ளையின் பங்கு குறைவாகவே காணப்படுகின்றது.

84. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி (1959), முகவுரை, பக். 11 - 12.

85. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி (1959), முகவுரை, பக். 12 - 13.

86. **Tamil Literature** (1929), p. 355.

87. "Sundaram Pillay, like V. Kanakasabhai Pillay, was a great Tamil scholar who had laboured hard to draw the attention of Oriental scholars to the need for a proper appreciation of the place of South India in any study of the history of our country" (T. V. Mahalingam: 'Some Naga Dynasties of the Deccan' in **Professor P. Sundaram Pillai Commemmoration Volume.** 1957, p. 62)

88. மு. இராகவையங்காருடைய 'ஆராய்ச்சித் தொகுதி'க்கு முன்னுரை வழங்கிய எஸ். வையாபுரிப்பிள்ளை தமது முன்னுரையிலே மேல்வருமாறு கூறுவர்: "(இராகவையங்கார்) திரு. வி. கனக சபைப்பிள்ளையவர்கள் முதலானோருடைய நூல்களைப் பலமுறைகற்று புத்தம் புதிய ஆராய்ச்சியின் முறையையும் நன்கு தெளிந்தனர்" (இரண்டாம் பதிப்பு, 1964, பக். 10.)

89. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆரம்பகாலத்துத் தமிழ் வித்துவான் வரிசையில் ஈழத்தவரான வட்டுக் கோட்டை ஆ. அம்பலவாணநாவலர் ( — 1932), மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1858-1917), சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் (1854 - 1922), காசிவாசி சி. செந்திநாதையர் (1848 - 1924) ஆகியோருமிடம்பெறுவர்.

90. (1) Kalavali or the Battlefield, IA, 18. 258 - 265 (Sept. 1889);
    (2) The Kalingattu Parani, IA, 19. 329 - 345 (Nov. 1890);
    (3) An Inscription of Kulottunga Chola, IA, 21. 281 - 287 (Oct. 1892);
    (4) The Vikrama Cholan Ula, IA, 22. 141 - 150 (June 1893);

91. Raja Raja Chola; The Conquest of Bengal and Burma by the Tamils (M. S. Purnalingam Pillai. **Tamil Literature**, 1929, p. 355)

92. எஸ். வையாபுரிப்பிள்ளை: **தமிழ்ச்சுடர்மணிகள்** (நான்காம் பதிப்பு, 1968) பக். 281.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 26 | பிரசாகரர் | பிரசாரகர் |
| 2 | 29 | பிரசாகரர் | பிரசாரகர் |
| 3 | 22 | அமைகப்பட்டுள்ளன | அமைக்கப்பட்டுள்ளன |
| 8 | 21 | ஒரு | இரு |
| 10 | 14 | தரப்பட்டுள்ன | தரப்பட்டுள்ளன |
| 10 | 25 | பாட்டில் | பாட்டியல் |
| 12 | 1 | தீதிபதியாகவும் | நீதிபதியாகவும் |
| 15 | 1 | கண்டெத்த | கண்டெடுத்த |
| 23 | 11 | அறவியல் | அறிவியல் |
| 24 | 18 | முவேந்தர் | மூவேந்தர் |
| 26 | 14 | கடவுளல்ல | கடவுளல்லர் |
| 26 | 31 | காரணங்களிளொன்று | காரணங்களிலொன்று |
| 31 | 5 | ஒரு | இரு |
| 43 | 16 | ஒருவரல்ல | ஒருவரல்லர் |
| 49 | 5 | உத்தியோக | உத்தியோகர் |
| 52 | 24 | மோலோங்கப் | மேலோங்கப் |
| 55 | 19 | மொழியிருந்த | மொழியிலிருந்த |
| 71 | 21 | உத்தியோக | உத்தியோகர் |
| 72 | 20 | ஏற்றி | ஏற்றிய |
| 77 | 15 | சேவையில் | சேவையியல் |
| 80 | 15 | 1787 | 1788 |
| 90 | 27 | நாரதராமாயாண | நாரதராமாயண |
| 97 | 23 | புரணத்தை | புராணத்தை |
| 113 | 15 | சத்திரசேகர | சந்திரசேகர |
| 138 | 24 | 1929 | 1928 |
| 139 | 4 | 1929 | 1928 |
| 149 | 3 | கரணவாய்கை. | கரணவாய் கை. |
| 150 | 21 | டுரையிலே | கட்டுரையிலே |
| 154 | 1 | தமோதரம்பிள்ளை | தாமோதரம்பிள்ளை |
| 154 | 16 | தாமோதரம்பிள்ளை | தாமோதரம்பிள்ளை |
| 166 | 27 | பாடத்தை | பாடத்தில் |
| 169 | 25 | விபப | விபவ |
| 181 | 7 | பிள்ளையவர்கள் | பிள்ளையவர்களுக்கு |
| 197 | 17 | கருத்துக் | கருத்துத் |
| 270 | 15 | Chronclogy | Chronology of |